எம். எஸ். வசந்தகுமார்

# இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை

இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகையைப்பற்றிய
வேதாகமப் போதனை

# இயேசுகிறிஸ்துவின்
# இரண்டாவது வருகை

## வேதஆராய்ச்சியாளர் எம்.எஸ்.வசந்தகுமார் எழுதிய வேதஆராய்ச்சிப் புத்தகங்கள்

இன்பத்தின் இரகசியங்கள்
இயேசுகிறிஸ்து யார்?
வேதாகமம் தேவனுடைய வார்த்தையா?
இது ஒரு கிறிஸ்தவ குடும்பம்
மரணத்தின் மறுபக்கம்
இயேசுகிறிஸ்து இறைவனா?
கிறிஸ்தவ வாழ்வில் தேவசித்தம்
இயேசுகிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்தாரா?
திருமறை போதிக்கும் திருமணம்
புனித வேதாகமத்தின் புதுமை வரலாறு
யெகோவாவின் சாட்சிகளுக்கு கிறிஸ்தவனின் பதில்கள்
கர்த்தரின் வார்த்தைகளில் கடினமான வரிகள்
ஒரு விதவையின் விவாகம்
ஓடிப்போனவன்
ஒரு விலைமகள் விசுவாசியாகின்றாள்
மகளையே பலியிட்ட மனிதன்
விபரீதமான வீரன்
ஆத்தும தாகத்திற்கு அற்புதத் தண்ணீர்
தேவனின் பாதத்தைத் தேடிவந்த பாவை
சங்கீதங்களின் சத்தியங்கள்
கர்த்தரின் பராமரிப்பில் களிகூர்ந்திடும் பக்தன்
மனுக்குலத்திற்கான மகத்தான வெளிப்படுத்தல்
கலங்கிடும் மனதிற்கு களிப்பான மருந்து
துன்மார்க்கரின் வளமும் நீதிமானின் துயரமும்
ஒத்தாசையாயிருக்கும் ஒப்பற்ற தெய்வம்
வயோதிப காலத்திலும் வழிநடத்தும் கர்த்தர்
புண்பட்ட உள்ளங்களில் புறப்படும் உணர்வுகள்
ஆனந்தமான வாழ்வுக்கு அவசியமான வழிமுறை
சில சம்பவங்களில் சில சத்தியங்கள்
டாவின்சியின் ஓவியத்தைப்பற்றிய நாவல் உண்மைச் சரிதையா?
இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை
மரித்தோரின் ஆவிகளினால் மனிதரை ஆசீர்வதிக்க முடியுமா?
திருமறை போதிக்கும் திருமுழுக்கு
ஆபத்துக் காலத்திலும் ஆதரவளிக்கும் கர்த்தர்

# இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை

இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது
வருகையைப்பற்றிய வேதாகமப் போதனை

வேதஆராய்ச்சியாளர்
**எம்.எஸ்.வசந்தகுமார்**

TAMIL BIBLE RESEARCH CENTRE
தமிழ் வேதாகம ஆராய்ச்சி மையம்
8, Broadlands Avenue, Enfield, London, EN3 5AH

**7/170, Ayyanar Street, Gundur Burma Colony,
Airport Via, Tiruchirappalli 620 007,
Tamil Nadu, South India.**

# THE SECOND COMING OF JESUS CHRIST

Biblical Teaching on the Return of Jesus Christ
© M.S.VASANTHAKUMAR

First Srilankan Edition February 2016, 1500 Copies
Second Indian Edition August 2016, 2000 Copies
Third Edition October 2018, 2000 Copies

*Written by*

**M.S.VASANTHAKUMAR**
BTh. MA. MPhil. DMin.

*Produced and Published in India by*

**TAMIL BIBLE RESEARCH CENTRE**
8, Broadlands Avenue, Enfield, London, EN3 5AH.
Phone 0044 (0) 7814252077
Email: msvtbrc@googlemail.com
Web: tamilbibleresearchcentre.org

7/170, Ayyanar Street,
Gundur Burma Colony, Airport Via,
Tiruchirappalli 620 007, Tamil Nadu, India
Phone: 9942193486,
Email: vrkbibleteach@yahoo.com

*Printed in India by*
**BERACHAH PRINT SERVICE**
Madurai-5, Tamil Nadu, India
Cell : +91-7667990722 | Email: bpsmadurai@gmail.com

# பொருளடக்கம்


**ஆசிரியர் உரை** 06

**அறிமுக உரை**
இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை 11

**முதலாம் அத்தியாயம்** 23

உலகிலிருந்து சபை எடுத்துக்கொள்ளப்படுதல் 25

(1) உலகிலிருக்கும் சபை முதலில் எடுத்துக்கொள்ளப்படும் 26

(2) உபத்திரவ காலத்திற்கும் முன்பே சபை எடுத்துக்கொள்ளப்படும் 30

(3) உயிர்ப்பிக்கப்படும் மக்களுடன் சபை எடுத்துக்கொள்ளப்படும் 51

**இரண்டாம் அத்தியாயம்**
உலகத்தை அந்திகிறிஸ்து ஆளுகை செய்தல் 61

(1) அந்திகிறிஸ்துவின் ஆட்சிக்காலம் 64

(2) அந்திகிறிஸ்துவின் அகோரம் 71

(3) அந்திகிறிஸ்துவின் ஆலயம் 84

(4) அந்திகிறிஸ்துவின் ஆட்சியமைப்பு 87

(5) அந்திகிறிஸ்துவின் அடையாளம் 96

(6) அந்திகிறிஸ்துவின் அழிவு 101

**மூன்றாம் அத்தியாயம்**
உலகத்தை இயேசுகிறிஸ்து ஆளுகை செய்தல் 113

(1) அந்திகிறிஸ்துவின் அழிவுக்குப் பின்னர் இருக்கும் ராட்சியம் 118


(2) ஆயிரம் வருஷங்கள் அகிலத்தில் பிரத்தியட்சமாய் இருக்கும் ராட்சியம் 125

(3) அமைதியும் ஆனந்தமும் பிரியாமல் இருக்கும் ராட்சியம் 146

**முடிவுரை** 162

ஆதார நூல்கள் 165

ஆசிரியரின் நூல்கள் கிடைக்குமிடங்கள் 175



# ஆசிரியர் உரை

இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகையைப்பற்றிய இந்த புத்தகத்தின் மூன்றாவது பதிப்பை வெளியிடுவதில் மிகவும் மகிழ் வடைவதோடு, இதை சாத்தியமாக்கிய நம் தேவனை நன்றியோடு ஸ்தோத்தரிக்கின்றேன். இப்புத்தகம் இரண்டு வருஷங்களுக்கு முன்பு இலங்கையிலும் இந்தியாவிலும் வெளியிடப்பட்டபோது இயேசுகிறிஸ் துவின் இரண்டாவது வருகையைப்பற்றிய வேதாகமப் போதனையைத் தெளிவாகவும் சரியாகவும் பலர் அறிந்துகொள்வதற்குத் தேவன் கிருபையளித்திருந்தார். இதனால், பிரபலமான சில ஊழியர்களும்கூட, இப்புத்தகத்தின் மூலம் இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை யைப்பற்றி தாங்கள் அறிந்திராத பல உண்மைகளை தெளிவாக அறிந்துகொண்டதாகத் தெரிவித்தனர். இதற்கான சகல கனமும் புகழும் மகிமையும் தேவனுக்கு மாத்திரமே உரியது. ஏனெனில், அவரே இதை எழுதுவதற்கான கிருபையைக் கொடுத்தவர். நான் அவர் கரத்தில் இருக்கும் ஒரு சாதாரண எழுத்தாணி மாத்திரமே.

நான்கு வருஷ கால ஆராய்ச்சியின் பலனாய் வெளியிடப்பட்ட இந்நூல் கடந்த இரண்டு வருஷங்களாகப் பலருக்கு அதிகம் பயனுள்ளதாய் இருந்தாலும், ஒரு சில எதிரிடையான விமர்சனங்களையும் இந்நூல் சந்தித்துள்ளது. ஏனெனில், இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை யைப்பற்றிய வித்தியாசமான கருத்துகள் கிறிஸ்தவர்கள் மத்தியில் இருப்பதனால், தனி ஒரு கருத்தை மாத்திரம் வலியுறுத்தி இந்நூல் எழுதப்பட்டுள்ளதாகவும், மாற்றுக் கருத்துகளுக்கு நான் அதிகமாக இடம்கொடுக்கவில்லை என்பதும் ஒருசிலரது மனக்குறையாக இருந் தது. இதனால், ஒரு கருத்தை வலியுறுத்தி அதுவே சரியானது என்று எழுதாமல், சிலர் இப்படி நம்புகிறார்கள் ஏனையவர்கள் இப்படி நம்புகிறார்கள் என்னும் விளக்கத்துடன் மாற்றுக் கருத்துகளைக் குறிப்பிட்டிருக்கலாம் என்பது அவர்களின் எண்ணமாயிருந்தது. அதாவது, வேதாகமக் கல்லூரிகளில் வித்தியாசமான கருத்துகளை

யும் விளக்கங்களையும் கூறிவிட்டு, மாணவர்கள் தங்களது அறிவுக்கும் அனுபவத்திற்கும் சபைப் பின்னணிக்கும் ஏற்ற விதத்தில் ஒரு கருத்தைத் தெரிவு செய்துகொள்ளும் சுயாதீனம் கொடுக்கப்படுவது போல, இந்நூலிலும் இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகையைப் பற்றிய வித்தியாசமான விளக்கங்களை எழுதிவிட்டு எது சரியானது என்பதைத் தெரிவுசெய்யும் சுயாதீனத்தை வாசகர்களுக்கு கொடுத்திருக்கலாம் என்னும் சிலரது விமர்சனம் ஒரு ஆராய்ச்சியாளனுடைய மனதிற்கு ஏற்புடையது அல்ல. ஏனெனில், ஒரு ஆராய்ச்சியாளன் சகல விஷயங்களையும் ஆராய்ந்து பார்த்து, எது சரியானது என்பதைத் தீர்க்கமாக உலகுக்கு அறிவிப்பவனாகவே இருப்பான். மேலும், வேதாகமப் போதனைகளைப் பொறுத்தவரை, இப்படியும் இருக்கலாம் அப்படியும் இருக்கலாம் என்று இராமல், எது சரியானது என்பதில் கிறிஸ்தவர்களாகிய நாம் மிகவும் தெளிவாகவும் உறுதியாகவும் இருக்கவேண்டும் என்பதே வேதாகம ஆராய்ச்சியில் நான் கண்டு கொண்ட அல்லது கற்றுக்கொண்ட நடைமுறையாய் உள்ளது.

வேதாகமம் போதிக்கும் சத்தியங்கள், மாற்றுக் கருத்துகளோ முரண்பாடான விஷயங்களோ இல்லாத தனியான ஒரு கருத்தாக இருப்பதனால், வித்தியாசமான விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ள உபதேசங்களில், எக்கருத்து சரியானது என்பதை ஆராய்ந்து எழுதும்போது, மாற்றுக் கருத்துகள் தவறானவைகளாக இருப்பதை அறிந்திடலாம். எனவே, இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகையைப்பற்றி வேதாகமம் என்ன கூறுகிறது என்பதை நான்கு வருஷங்களாக ஆராய்ந்து எழுதும்போது, வித்தியாசமான விளக்கங்களில் சரியானதை வலியுறுத்தியும், மாற்றுக்கருத்துகளைத் தவறானவையாகச் சுட்டிக்காட்டியும் எழுதவேண்டிய கடமை ஒரு வேத ஆராய்ச்சியாளனுக்கு இருக்கின்றது. இதனால்தான், இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகைக்கு இரண்டாயிரம் வருஷங்களாக வித்தியாசமானதும் முரண்பாடுள்ளதுமான குழப்பமான பல விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளதனால், இவற்றில் எது சரியானது என்பதை ஆராய்ந்தறிந்து இந்நூலில் எழுதியுள்ளேன்.

என்னுடைய இத்தகைய நடைமுறைக்கு முன்னோடியாக இருப்பது மூன்றாவது சுவிசேஷத்தை எழுதிய லூக்கா என்றால் அது மிகையாகாது. அக்காலத்தில் இயேசுகிறிஸ்துவின் வாழ்வைப்பற்றி பலர்

சரித்திரம் எழுதியிருந்தாலும், அவையனைத்தையும் ஆராய்ந்து பார்த்து, சரியான சரித்திரத்தை லூக்கா எழுதியுள்ளார் (லூக்கா 1:1-4). இதைப்போலவே, இரண்டாயிரம் வருஷங்களாகக் கிறிஸ்தவ உலகில் இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகையைப்பற்றி போதிக்கப்பட்ட உபதேசங்கள் அனைத்தையும் நான்கு வருஷங்களாக வேதாகமத்தின் வெளிச்சத்தில் ஆராய்ந்து பார்த்து இந்நூலை எழுதியுள்ளேன்.


இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகையைப் பொறுத்தவரை, இந்நூலில் விளக்கப்பட்டுள்ளவிதமாக அது இரண்டு கட்டங்களில் நடைபெறும் என்பதை சில கிறிஸ்தவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. அதாவது, இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகையில் முதல் அம்சம் சபை எடுத்துக்கொள்ளப்படுதல் என்பதையும், அதன் பின்னர் ஏழு வருஷங்களுக்கு உலகில் அந்திகிறிஸ்துவினுடைய ஆட்சி நடைபெறும் என்பதையும், இவ்வாட்சியின் முடிவில் எடுத்துக்கொள்ளப்பட்ட சபை மக்களோடு இயேசுகிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்து தம்முடைய ஆயிர வருஷ ஆட்சியை ஆரம்பிப்பார் என்பதைச் சில கிறிஸ்தவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. இதனால்தான், இத்தகைய நம்பிக்கையின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ள இந்நூல் சிலரால் விமர்சிக்கப்பட்டுள்ளது. இயேசுகிறிஸ்து மறுபடியும் வருவார் என்பதை எல்லா கிறிஸ்தவர்களும் ஏற்றுக்கொண்டுள்ளபோதிலும், அவருடைய வருகையின்போது ஏற்படும் சம்பவங்கள் எவ்வாறு நடைபெறும் என்பதில் கிறிஸ்தவர்கள் வித்தியாசமான கருத்துடையவர்களாக இருக்கின்றனர். ஆனால், வேதாகமமோ, இயேசுகிறிஸ்து இப்படித்தான் வருவார் என்று தெளிவாக எல்லாவற்றையும் முன்னறிவித்துள்ளது. அவற்றையே இந்நூலில் எழுதியுள்ளேன்.

இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை கிறிஸ்தவ மார்க்கத்தின் மிகமுக்கிய போதனையாக இருந்தாலும், அதிகளவு வேதப்புரட்டு உபதேசங்கள் உருவாகுவதற்கும் இப்போதனையே காரணமாக இருந்துள்ளது. இதனால்தான், காலத்திற்குக் காலம் இயேசுகிறிஸ்துவின் மறுவருகைக்கு நாள் குறிக்கும் கிறிஸ்தவ ஜோதிடர்கள் அதிகரித்துவரும் அதேவேளை, வேதாகமத் தீர்க்கதரிசனங்களைச் சரியான விதத்தில் புரிந்துகொள்ளாமல், “அவைகள் தற்கால உலகில் நடைபெறுகின்ற அந்த சம்பவத்தில் நிறைவேறுகிறது,

இந்த சம்பவத்தில் நிறைவேறுகிறது" என்று கூறுபவர்களும் அதிகரித்து வருகின்றனர். இதனால், இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகையைப்பற்றி வேதாகமம் அறியத்தரும் சத்தியங்களை சரியான விதத்தில் அறியாதவர்களாகவே பெரும்பாலான கிறிஸ்தவர்கள் இருக்கின்றனர். இத்தகைய நிலையை ஆவியானவர் அடிக்கடி சுட்டிக்காட்டியதினாலேயே நான்கு ஆண்டு கால தீவிர வேதஆராய்ச்சியுடனும் தீர்க்கமான முடிவுடனும் இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகையைப்பற்றிய இந்த ஆராய்ச்சிப் புத்தகத்தை எழுதியுள்ளேன்.

இப்புத்தகத்தை மறுபடியுமாக வெளியிடுவதற்கு என்னை உற்சாகப் படுத்தி உதவிய அன்பானவர்களுக்கும், என்னுடைய புத்தகங்களை மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்துபவர்களுக்கும், இந்நூலின் அச்சுப் பிழைகளைத் திருத்துவதில் உதவிய இங்கிலாந்திலிருக்கும் சிந்தியா சுரேஷ் மற்றும் இலங்கையிலிருக்கும் தமயந்தி கர்ணகுமார் என்போருக்கும் என்னுடைய நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, தமிழில் இன்னும் அதிகமான வேதாகம ஆராய்ச்சிப் புத்தகங்களை எழுதி வெளியிடுவதற்குத் தேவன் என்னைப் பெலப்படுத்தும்படி ஜெபிக்கும்படியும், உங்களுக்கு ஆசீர்வாதமாயிருக்கும் என்னுடைய புத்தகங்களை மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்தும்படியும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன். தேவன் தாமே இப்புத்தகத்தின் மூலம் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மகிமையான இரண்டாவது வருகையைப்பற்றிய வேதாகம சத்தியங்களை நீங்கள் அறிந்து, அவருடைய வருகைக்கு ஆயத்தமுள்ளவர்களாகவும் அநேகரை ஆயத்தப்படுத்துகிறவர்களாகவும் இருக்கும் விதத்தில் உங்களை ஆசீர்வதிப்பாராக.

**எம்.எஸ்.வசந்தகுமார்**
லண்டன் ஒக்டோபர் 2018



## அறிமுக உரையின் சுருக்கம்

பரிசுத்த வேதாகமத்தின் மிகவும் முக்கியமான
உபதேசமாக இருப்பது இயேசுகிறிஸ்துவின்
இரண்டாவது வருகையாகும்.
இயேசுகிறிஸ்து மறுபடியும் இவ்வுலகத்திற்கு
வருவார் என்று வேதாகமம் போதித்தாலும்,
அவர் எப்பொழுது வருவார் என்பதை
வேதாகமம் நமக்கு வெளிப்படுத்தவில்லை.
இதனால், நாம் எப்பொழுதும் அவருடைய
வருகைக்குக் காத்திருப்பவர்களாகவும்,
அவருடைய வருகையை எதிர்பார்த்தவர்களாகவும்
இருக்கவேண்டும். மேலும், இயேசுகிறிஸ்துவின்
முதல் வருகையைப்பற்றி வேதாகமத்தில்
குறிப்பிடப்பட்டுள்ள சகல தீர்க்கதரிசனங்களும்
முழுமையாக நிறைவேறியுள்ளதினால்,
அவருடைய இரண்டாவது வருகையைப்பற்றிய
தீர்க்கதரிசனங்களும் நிச்சயமாய் நிறைவேறும்.
இயேசுகிறிஸ்துவின் வருகைக்கு அடையாளமாக
வேதாகமத்தில் அறிவிக்கப்பட்டுள்ள
அடையாளமான இஸ்ரேல் நாட்டைப்பற்றிய
தீர்க்கதரிசனம் 1948ம் ஆண்டு
நிறைவேறியுள்ளதினால், அவருடைய வருகை
வெகு சீக்கிரத்தில் நடைபெறும்
என்பதை நம்மால்
உறுதிப்படுத்தக்கூடியதாயுள்ளது.

## அறிமுக உரை



# இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை

கிறிஸ்தவ மார்க்கத்தின் மகிமையான நம்பிக்கையாகவும், நிச்சய மான எதிர்பார்ப்பாகவும் இருப்பது இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகையாகும். இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பு மனிதனாக இவ்வுலகத்திற்கு வந்து, ஏறக்குறைய முப்பத்து மூன்று வருஷங்க ளின் பின்னர் மரித்து உயிர்த்தெழுந்து மகிமையடைந்த நிலையில் பரலோகத்திற்குச் சென்ற இயேசுகிறிஸ்து, மறுபடியும் இவ்வுலகத் திற்கு வருவார் என்பது வேதாகமம் நமக்கு அறியத்தரும் முக்கிய மான ஒரு சத்தியமாகும். வேதாகமத்தின் இரண்டாவது பகுதியான புதிய ஏற்பாட்டில், அதிக முக்கியத்துவம் வாய்ந்த உபதேசமாக இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை உள்ளது. புதிய ஏற்பாட் டில் 318 தடவைகள் இதைப்பற்றிய குறிப்புகள் இருப்பதாகக் கணிப் பிடப்பட்டுள்ளது.[1] இது சராசரியாக 25 வசனங்களுக்கு ஒரு வசனம் என்ற அடிப்படையில் உள்ளது. வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டில், இயேசுகிறிஸ்துவைப்பற்றி முன்னறிவிக்கப்பட்ட தீர்க்கதரிசனங்களில்

[1] T.LaHaye, *Understanding Bible Prophecy for Yourself*, p. 23.

50 வீதத்திற்கும் அதிகமானவை அவருடைய இரண்டாவது வருகை யைப்பற்றிய முன்னறிவிப்புகளாகவே உள்ளன.[2] மேலும், இயேசு கிறிஸ்துவின் முதல் வருகையைவிட எட்டு மடங்கு அதிகமான குறிப்புகள் அவரது இரண்டாவது வருகையைப்பற்றி வேதாகமத்தில் உள்ளதாகவும் கணிப்பிடப்பட்டுள்ளது.[3] இதன்படி, வேதாகமத்தின் இரண்டு ஏற்பாடுகளிலும் மொத்தமாக 2400 வசனங்கள் இயேசுகிறிஸ் துவின் இரண்டாவது வருகையைப்பற்றிய குறிப்புகளாக உள்ளன.[4] எனவே, இது வேதாகமத்தின் மிகமுக்கியமான ஒரு சத்தியமாக இருப்பதை எவ்விதத்திலும் மறுக்கமுடியாதுள்ளது.

இயேசுகிறிஸ்து இவ்வுலகில் மனிதனாக வாழ்ந்த காலத்தில், தாம் மறுபடியும் இவ்வுலகத்திற்கு வருவதைப்பற்றி அறிவித்தார். மத்தேயு 24ம் அதிகாரத்தில் அவர் தமது மறுவருகையை "மனுஷகுமாரனின் வருகை" என்று குறிப்பிட்டுள்ளார்.[5] "மனுஷகுமாரன்" என்பது தானி யேல் 7ம் அதிகாரத்தை அடிப்படையாகக்கொண்ட அவரது மேசியப் பெயராகும். மத்தேயு 24ம் அதிகாரத்தில் 27, 30, 39, 44 என்னும் வசனங்களில் இயேசுகிறிஸ்து தமது இரண்டாவது வருகையைப்பற்றி முன்னறிவித்துள்ளதோடு, புதிய ஏற்பாட்டின் ஏனைய பகுதிகளில் இதைப்பற்றி நேரடியாகவும், உவமைகள் மூலமாகவும் போதித்துள் ளார். மத்தேயு 24ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இயேசுகிறிஸ்து வின் பிரசங்கமே மாற்கு 13ம் அதிகாரத்திலும் லூக்கா 21ம் அதிகா ரத்திலும் உள்ளது. யோவான் சுவிசேஷத்தில், "நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால்" என்று இயேசுகிறிஸ்து கூறுவ தும் அவர் தமது இரண்டாவது வருகையைக் குறிப்பிடும் கூற்றாகவே உள்ளது (யோவா. 21:22). இயேசுகிறிஸ்து இவ்வுலகிலிருந்து பரலோ கத்திற்குச் சென்றபோது, அவர் மறுபடியுமாக வருவார் என்னும் செய்தி தேவதூதர்கள் மூலம் அவரது சீஷர்களுக்கு அறிவிக்கப்பட் டது. அப்போஸ்தலர் 1:11ல், "உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்க ளுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ அப்படியே

[2] R.Pache, *The Return of Jesus Christ*, p. 16; H.C.Thiessen, *Lectures in Systematic Theology*, p. 337; P.Enns, *The Moody Handbook of Theology*, p. 375.
[3] G.P.Duffield & N.M.Van Cleave, *Foundations of Pentecostal Theology*, pp. 519-520; T.LaHaye, *Understanding Bible Prophecy for Yourself*, p. 23.
[4] G.R.Jeffrey, *Armageddon: Appointment with Destiny*, p. 228.

மறுபடியும் வருவார்" என்று தேவதூதர்கள் அறிவித்தார்கள். "இயேசு கிறிஸ்து பரலோகத்திற்குச் சென்றது சீஷர்களின் கண்களுக்கு முன்பாக நடைபெற்ற நிஜமான ஒரு சம்பவமாக இருந்தது போலவே, அவரது இரண்டாவது வருகையும் நிஜமான ஒரு சம்பவமாகவே இருக்கும் என்பதைத் தேவதூதரின் வார்த்தைகள் அறியத்தருகின்றன."[6] அதேசமயம், இயேசுகிறிஸ்து "நிச்சயமாய் மறுபடியும் வருவார் என்பதையும் தூதரின் வார்த்தைகள் உறுதிப்படுத்துகின்றன."[7] உண்மையில், இயேசுகிறிஸ்து தம்முடைய மக்களுக்கு கொடுத்துள்ள இறுதி வாக்குத்தத்தம் அவருடைய இரண்டாவது வருகையைப் பற்றியதாகவே உள்ளது. அதாவது, வெளிப்படுத்தல் 22:12ல் "இதோ சீக்கிரமாய் வருகிறேன்" என்றும், 22:20ல் "மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன்" என்றும் இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார்.

இயேசுகிறிஸ்து மறுபடியும் வருவார் என்பது ஆதிச் சபையின் உறுதியான நம்பிக்கையாகவும், ஆவல்மிகுந்த எதிர்பார்ப்பாகவும் இருந்தது (பிலி.3:20, 1தெச.1:10, 4:16, தீத்.2:12-13, எபி.9:28, 1யோவா.3:2, வெளி.22:20). அக்கால கிறிஸ்தவர்கள், இயேசுகிறிஸ்துவின் மறுவருகை வெகு சீக்கிரத்தில், தங்களுடைய காலத்திலேயே நடைபெறும் என்னும் நம்பிக்கையுடையவர்களாய் இருந்தபோதிலும் (யாக்.5:8,

---

[5] மத்தேயு 24ம் அதிகாரத்தில் இயேசுகிறிஸ்து கி.பி.70ல் எருசலேம் நகரத்திற்கு ஏற்பட்ட அழிவைப்பற்றியா அல்லது, உலக முடிவில் நடைபெறும் சம்பவங்களைப்பற்றியா முன்னறிவித்துள்ளார்? என்பதைப்பற்றிய சர்ச்சை வேத ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் காணப்படுகிறது. இயேசுகிறிஸ்து இவ்வதிகாரத்தில் முன்னறிவித்தவைகளில் சில விஷயங்கள் கி.பி.70ல் எருசலேம் நகரத்திற்கும் ஆலயத்திற்கும் ஏற்பட்ட அழிவில் நிறைவேறியுள்ளபோதிலும், இவ்வதிகாரம் கி.பி.70ல் நிறைவேறியவைகளை மாத்திரமல்ல, உலக முடிவில் ஏற்படும் அழிவுகளையும் முன்னறிவித்துள்ள தீர்க்கதரிசனமாகவே உள்ளது (L.Morris, *Matthew: The Pillar New Testament Commentary*, p. 593-594). ஒரு நேரத்தில் அறிவிக்கப்படும் தீர்க்கதரிசனங்களில் ஒன்றுக்கும் மேற்பட்ட நிறைவேறுதல்களும், வித்தியாசமான காலகட்டத்தில் நிறைவேறும் தீர்க்கதரிசனங்களும் இருப்பது வேதாகம தீர்க்கதரிசனங்களின் சிறப்பம்சமாகும். "இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் எருசலேம் நகரத்தின் அழிவின்போது உலக முடிவும் சம்பவிக்கும் என்னும் எண்ணத்துடன் இருந்ததினால் (மத்.24:3), இவர்களது கேள்விக்குப் பதிலளிக்கும் இயேசுகிறிஸ்து எருசலேம் அழிவின்போதும், உலக முடிவின் போதும் நடைபெறும் காரியங்களை இவ்வதிகாரத்தில் முன்னறிவித்துள்ளார் (D.A. Carson, *Matthew: The Expositor's Bible Commentary Volume 8*, p. 495).

[6] J.B.Polhill, *Acts: The New American Commentary*, p. 88.

[7] W.J.Larkin Jr., *Acts: The IVP New Testament Commentaries*, p. 43.

எபி.10:37),[8] அவர் எப்போது வருவார் என்பதை அறியாதவர்களாகவே இருந்தனர், ஏனென்றால், தாம் மறுபடியும் வருவதைப்பற்றி வாக்களித்த இயேசுகிறிஸ்து, தாம் எப்போது வருவேன் என்று ஒரு காலத்தைக் குறிப்பிட்டுச் சொல்லாமல்,[9] தமது வருகை எவரும் எதிர்பாராத

---

[8] யாக்கோபு 5:8ல் "கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே" என்றும், எபிரெயர் 10:37ல் "வருகிறவர் இன்னும் கொஞ்ச காலத்தில் வருவார், தாமதம்பண்ணார்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

[9] மத்தேயு 25:13 மற்றும் மாற்கு 13:32-33 என்னும் வசனங்களில், தமது மறுவருகையின் காலத்தைத் தாம் அறியாதிருப்பதாக இயேசுகிறிஸ்து கூறியது உண்மை என்றாலும், அவர் மானிட வரையறைகளுக்கு உட்பட்டு மனிதனாக இவ்வுலகில் வாழ்ந்த காலத்திலேயே தமது மறுவருகையின் காலத்தைப்பற்றி தமக்குத் தெரியாது என்று கூறினார் என்பதை நாம் கருத்திற்கொள்ள வேண்டியது அவசியம். உண்மையில், இயேசுகிறிஸ்துவின் மாம்சமாகுதல், தெய்வீகத் தன்மைகளைத் துறப்பதை அல்ல, மானிடத் தன்மைகளைச் சேர்ப்பதாகவே இருந்தது. அதாவது, ஆரம்பத்தில் தேவத்தன்மை உடையவராய் இருந்த இயேசுகிறிஸ்து மனிதனாகியபோது, மானிடத் தன்மைகளையும் தம்மோடு சேர்த்துக் கொண்டார். எனவே, அதன் பின்னர் அவர் இரு தன்மைகளையும் கொண்டவராகவே இருந்தார். எனினும், தேவத்தன்மைகளுடன் இருந்தவர் மானிடத் தன்மைகளைச் சேர்த்துக் கொண்டபோது, மானிடத் தன்மையின் வரையறைகளுக்குள் தேவத்தன்மையை அடக்கி வைத்திருந்தார். இதனால்தான், தேவத்தன்மையான சகலவற்றையும் அறியும் அவருடைய அறிவு, மானிடத் தன்மையான சகலவற்றையும் அறியாதிருக்கும் தன்மைக்குள் அடக்கி வைக்கப்பட்டிருந்தது. சகலவற்றையும் அறியும் ஆற்றல்மிக்க தேவத்தன்மை உடையவராய் அவர் இருந்தும் சில விஷயங்களை அறியாதிருந்தமைக்கு, குறிப்பாகத் தமது மறுவருகையின் காலத்தை அறியாதிருந்தமைக்கு இதுவே காரணமாகும். "அறியாமை மானிடத் தன்மையின் முக்கியமான ஒரு அம்சமாய் இருப்பதனால், உண்மையான மானிடத் தன்மையைத் தம்மோடு சேர்த்துக் கொண்ட இயேசுகிறிஸ்து, மனிதனாக இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் சில விஷயங்களை அறியாதவராகவே இருந்தார்" (L.Morris, *The Lord from Heaven*, pp. 46-50). ஆனால், அவர் மகிமையடைந்த நிலையில் தமது மறுவருகையின் காலத்தை அறிந்தவராகவே இருந்தார் என்பதை அப்போஸ்தலர் 1:7 அறியத் தருகின்றது. இதனால்தான், அவர் பரலோகத்திற்குச் செல்வதற்கு முன்பு, "ஆண்டவரே இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர்" என்று சீஷர்கள் கேட்டபோது, "பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல" என்று கூறினார் (அப்.1:7-8). அதேசமயம், இயேசுகிறிஸ்து மனிதனாக இவ்வுலகில் இருந்த காலத்திலும் முழுமையான தேவனாய் இருந்தார் என்பதையும் நாம் மறக்கலாகாது. எனினும், அவர் தம்முடைய தேவத்தன்மையை மானிடத் தன்மையின் வரையறைகளுக்கு உட்படுத்தி வாழ்ந்து வந்தார். இதுபற்றிய மேலதிக விளக்கத்திற்கு எனது ***யெகோவாவின் சாட்சிகளுக்கு கிறிஸ்தவனின் பதில்கள்*** மற்றும், ***இயேசுகிறிஸ்து இறைவனா?*** என்னும் நூல்களைப் பார்க்கவும்.

நேரத்தில் சடுதியாக நடைபெறும் என்றே கூறியிருந்தார். மத்தேயு 24:42ல், "உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்" என்றும், மத்தேயு 24:44ல், "நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார். ஆதலால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள்" என்றும் இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார். மேலும், மத்தேயு 25ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பத்து கன்னிகைகளைப்பற்றிய உவமையும் இவ்வுண்மையை அறியத்தருவதற்காகவே சொல்லப்பட்டது. இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை எப்போது நடைபெறும் என்பதை நாம் அறியாதவர்களாய் இருப்பதனால், நாம் எப்பொழுதும் அவருடைய வருகைக்கு ஆயத்தம் உள்ளவர்களாய் இருக்கவேண்டியது அவசியம். ஆரம்ப காலத்தில் இருந்தே இயேசுகிறிஸ்துவின் மறுவருகைக்கு நாள் குறிக்கும் கிறிஸ்தவர்கள் இருந்துள்ளனர். ஆனால், இதுவரையில் இவ்விஷயத்தில் எவரது தீர்க்கதரிசனமும் நிறைவேறவில்லை. இயேசு கிறிஸ்துவின் மறுவருகையின் காலத்தை வேதாகமம் வெளிப்படுத்தாததினால் இவ்விஷயத்தில் நாள் குறிப்பது அர்த்தமற்றதும், தேவனுடைய சித்தத்திற்கு முரணானதுமான செயலாகவே உள்ளது.

---

இயேசுகிறிஸ்து எப்பொழுது வருவார் என்பதை
நாம் அறியாதிருப்பதனால், நாம் எப்பொழுதும் அவர் வருகைக்கு
ஆயத்தமாய் இருக்கவேண்டும்

---

இயேசுகிறிஸ்துவின் வருகை வெகு சீக்கிரத்தில் நடைபெறும் என்றும் (வெளி.1:1), அவர் "இன்னும் கொஞ்ச காலத்தில் வருவார், தாமதம் பண்ணார்" (எபி.10:37), அவரது வருகை சமீபமாயிருக்கிறது" (யாக்.5:7) என்றும் வேதாகமம் கூறினாலும், இவ்வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டு இரண்டாயிரம் வருடங்களாகியும் இன்னும் இயேசுகிறிஸ்து வராமலிருப்பதனால், தற்காலத்தில் அநேகர் இயேசுகிறிஸ்துவின் மறுவருகையை மறுதலித்து வருகின்றனர். சிலர் இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகையைப்பற்றிய வேதாகமக் குறிப்புகளை எதிர்கால ராட்சியம் உலகில் ஸ்தாபிக்கப்படுவதைப்பற்றிய முன்னறிவிப்பாக ஏற்றுக் கொண்டாலும், இயேசுகிறிஸ்து அதை ஸ்தாபிக்க முடியாதவராக இரத்தசாட்சியாக மரித்துவிட்டார் என்று கூறுகின்றனர்.[10] மேலும், இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகையைப்பற்றிய தீர்க்கதரிச

[10] A.Schweitzer, *The Quest of the Historical Jesus*, pp. 368-369.

னங்கள் அனைத்தும் அவருடைய காலத்திலேயே நிறைவேறிவிட்ட தாகவே இன்று பல இறையியலாளர்கள் கருதுகின்றனர்.[11] சிலர் இரண்டாம் வருகையைப்பற்றிய முன்னறிவிப்புகளை உருவக விவர ணங்களாக விளக்குகின்றனர். அதாவது, உலகில் தீமையின் மீதான தேவனுடைய நீதியின் வெற்றியைக் குறிப்பிடும் அடையாளமாகவே வேதாகமத்தில் இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை சித்த ரிக்கப்பட்டிருப்பதாகச் சிலர் கூறுகையில்,[12] ஏனையவர்கள், அவற்றை அக்கால மக்களுடைய நம்பிக்கையை அடிப்படையாகக்கொண்ட புராணக் கதைகளாகக் கருதுகின்றனர்.[13] ஆனால், இத்தகைய விளக் கங்கள் அனைத்தும், இயேசுகிறிஸ்து மறுபடியுமாக இவ்வுலகத்திற்கு வருவதை நம்பாதவர்களின் கருத்துகளாகவே உள்ளன.

இயேசுகிறிஸ்துவின் வருகை தாமதப்படுவதற்கான காரணத்தைப் பேதுருவின் இரண்டாவது நிருபம் அறியத்தருகின்றது. தற்கால மனிதரின் மனநிலையை முன்னறிந்தவராகப் பேதுரு, “கடைசி நாட்க ளில் பரியாசக்காரர் வந்து, தங்கள் சுய இச்சையின்படியே நடந்து, அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? பிதாக்கள் நித்திரையடைந்த பின்பு சகலமும் சிருஷ்டிப்பின் தோற்ற முதல் இருந்தவிதமாயிருக்கிறதே என்று சொல்லுவார்கள்” என்று கூறுவ தோடு, “பிரியமானவர்களே, கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷம் போலவும் ஆயிரம் வருஷம் ஒருநாள் போலவும் இருக்கிறதென்கிற இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்க வேண்டாம். தாமதிக்கி றார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையாய் இருக்கிறார்” என்று அறியத்தந்துள்ளார் (2பேது.3:3-4, 3:8-9). இதிலி ருந்து, இயேசுகிறிஸ்துவின் மறுவருகை தாமதமாவதற்கான இரண்டு காரணங்களை நாம் அறிந்திடலாம். ஒன்று, நாம் காலத்தைக் கணிப் பிடும் முறைக்கும், தேவனுடைய பார்வையில் காலங்கள் இருக்கும் விதத்திற்கும் இடையில் பெரிய வித்தியாசம் உள்ளது. ஏனெனில், அவருக்கு ஒருநாள் ஆயிரம் வருஷம் போலவும், ஆயிரம் வருஷம் ஒரு நாள் போலவும் இருப்பதனால், சீக்கிரமாய் வருகிறேன் என்று

[11] C.H.Dood, *The Apostolic Preaching and Its Development*, pp. 142-149.
[12] Adolf von Harnack, *What is Christianity?* pp. 55-56.
[13] R.Bultmann, *Jesus Christ and Mythology*, p. 33.

கூறிய இயேசுகிறிஸ்துவுக்கு இதுவரையில் இரண்டாயிரம் வருஷங்கள் அல்ல, இரண்டு நாட்களே சென்றுள்ளன. எனவே, தமது மறுவருகை விரைவில் சம்பவிக்கும் என்று இயேசுகிறிஸ்து கூறியது பொய்யல்ல. இரண்டாவதாக, இயேசுகிறிஸ்துவின் மறுவருகையில் மக்களை நியா யந்தீர்ப்பதும் உள்ளடக்கப்பட்டிருப்பதனால், அவரது மறுவருகை அவரை அறியாதவர்களுக்கு அழிவாகவே இருக்கும். இதனால், பாவிகளின் அழிவை விரும்பாத தேவன்,[14] எல்லோரும் மனந்திரும்பி தம்மண்டை வருவதற்காகப் பொறுமையுடன் காத்திருப்பதனால் (1தீமோ.2:4),[15] இயேசுகிறிஸ்துவின் வருகை தாமதமாகிறது என்று பேதுரு கூறுகிறார்.

---

பாவிகளின் அழிவை விரும்பாத தேவன்,
எல்லோரும் மனந்திரும்பி தம்மண்டை வருவதற்காகப் பொறுமையுடன்
காத்திருப்பதினாலேயே இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை
இன்னும் நடைபெறாமல் இருக்கின்றது.

---

இயேசுகிறிஸ்துவின் மறுவருகை தாமதப்பட்டாலும், அவர் மறுபடியும் நிச்சயமாக இவ்வுலகத்திற்கு வருவார். வேதாகமத் தீர்க்கதரிசனங்கள் உறுதியாய் நிறைவேறும் முன்னறிவிப்புகளாய் இருப்பதனால், இயேசு கிறிஸ்து மறுபடியும் வருவார் என்று முன்னறிவிக்கும் தீர்க்கதரிசனங் களும் நிச்சயமாய் ஒருநாள் நிறைவேறும். இயேசுகிறிஸ்துவின் முதல் வருகையைப்பற்றிய தீர்க்கதரிசனங்கள் அனைத்தும் அவருடைய வாழ்வில் நிறைவேறியுள்ளதனால், அவருடைய இரண்டாவது வருகை யைப்பற்றிய தீர்க்கதரிசனங்களும் நிச்சயமாய் நிறைவேறும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

இயேசுகிறிஸ்துவின் மறுவருகைக்கான முக்கியமான அடையாளமாக அவரால் குறிப்பிடப்பட்டுள்ள விஷயம், 1948ம் ஆண்டு மே மாதம் 14ம் திகதி இஸ்ரவேல் நாடு மறுபடியுமாக உலகில் உருவாகியதைப் பற்றியதாகும். அதாவது, இயேசுகிறிஸ்து மத்தேயு 24ம் அதிகாரத் தில் முன்னறிவித்த விதமாக (மத்.24:1-2) கி.பி.70ம் ஆண்டு எருசலேம்

---

[14] "துன்மார்க்கன் சாகிறது எனக்கு எவ்வளவேனும் பிரியமோ? அவன் தன் வழிகளைவிட்டுத் திரும்பிப் பிழைப்பது அல்லவோ எனக்குப் பிரியம் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்கிறார்" என்று எசேக்கியேல் 18:23 கூறுகிறது.
[15] "எல்லா மனிதரும் இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் தேவன் சித்தமுள்ளவராய் இருக்கின்றார்" (1தீமோ.2:4).

நகரிலிருந்த தேவாலயம் உடைத்துத் தரைமட்டமாக்கப்பட்டதோடு, யூதர்கள் உலகெங்கும் சிதறடிக்கப்பட்டனர். அதன் பின்னர் 1878 வருஷங்களாக (அதாவது, 1948ம் ஆண்டுவரை) இஸ்ரவேல் என்னும் நாடு உலகில் இருக்கவில்லை. யூதர்கள் நாடற்றவர்களாக உலகெங் கும் சிதறிப்போனார்கள். ஆனால் 1948ம் ஆண்டு, மறுபடியுமாக "இஸ்ரேல்" என்னும் பெயரில் யூதர்களுடைய நாடு உருவானது. இயேசுகிறிஸ்து இதைப்பற்றி முன்னறிவிக்கும்போது பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

> அத்திமரத்தினால் ஒரு உவமையைக் கற்றுக்கொள்ளுங்கள். அதிலே இளங்கிளை தோன்றி, துளிர்விடும்போது, வசந்தகாலம் சமீபமாயிற்று என்று அறிவீர்கள். அப்படியே இவைகளை எல்லாம் நீங்கள் காணும்போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள் (மத்தேயு 24:32-33).

இயேசுகிறிஸ்து தம்முடைய இரண்டாவது வருகையைப்பற்றி முன்னறிவித்தபோது இஸ்ரவேல் நாடு மறுபடியும் உருவாகுவதைப் பற்றியும் இவ்வசனங்களில் குறிப்பிட்டுள்ளார் என்பதை, இதற்கு முன்னுள்ள வசனங்கள் அறியத்தருகின்றன. அதாவது, 30ம் 31ம் வசனங்களில் தமது மறுவருகையைப்பற்றி விளக்கிய இயேசு கிறிஸ்து, இது எப்போது நடைபெறும் என்பதை அறியத்தருவதற்காக 32ம் வசனத்தில் அத்தி மரத்தைப்பற்றிய உவமையைக் குறிப்பிட்டுள் ளார். மத்தேயு 21ம் அதிகாரத்தில் கனியற்ற அத்திமரத்தை சபிப்பதன் மூலம் இஸ்ரவேல் ராட்சியத்திற்கு ஏற்படும் அழிவை முன்னறிவித்த இயேசுகிறிஸ்து (மத்.21:18-22),[16] இவ்வசனங்களில் அத்திமரம் துளிர் விடும் உவமையின் மூலம் இஸ்ரவேல் ராட்சியம் மறுபடியும் உருவாகு வதைப்பற்றி முன்னறிவித்துள்ளதோடு,[17] இச்சம்பவம் நடைபெறும்போது தம்முடைய வருகை சமீபமாயிருக்கும் என்பதை சுட்டிக்காட்டியுள்ளார் (மத்.24:32-33). எனவே, கி.பி.70ம் ஆண்டிலிருந்து 1948ம் ஆண்டுவரை உலகில் இல்லாத இஸ்ரவேல் நாடு இப்பொழுது உலகில் இருப்பது, இயேசுகிறிஸ்துவின் வருகை சமீபமாயுள்ளதை அறியத்தரும் முக்கிய மான அடையாளமாக உள்ளது.

---

[16] எரே.8:13, நாகூ.3:12, ஓசி.9:10லும் அத்திமரம் இஸ்ரவேலை உவமிக்கின்றது.
[17] W.MacDonald, *Believer's Bible Commentary*, pp. 1295-1296.

கி.பி.70ம் ஆண்டிலிருந்து 1948ம் ஆண்டுவரை
உலகில் இல்லாத இஸ்ரவேல் நாடு இப்பொழுது உலகில் இருப்பது,
இயேசுகிறிஸ்துவின் வருகை சமீபமாயுள்ளதை நமக்கு அறியத்தரும்
முக்கியமான அடையாளமாகும்.

உலகின் முடிவில் இஸ்ரவேல் நாடு மறுபடியும் உருவாகும் என்று இயேசுகிறிஸ்து முன்னறிவித்தது மாத்திரமல்ல, உலகின் சகல ஜாதியினரும் இஸ்ரவேல் மக்களைப் பகைப்பார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார். "என் நாமத்தினிமித்தம் நீங்கள் சகல ஜனங்களாலும் பகைக்கப்படுவீர்கள்" (மத்.24:9) என்று இயேசுகிறிஸ்து முன்னறிவித்த விதமாக, தற்கால உலகில் பெரும்பாலான நாடுகள் இஸ்ரவேலுக்கு எதிராகவே உள்ளன. கடந்த நூற்றாண்டில் 6 மில்லியன் யூதர்கள் கொடூரமான முறையில் ஹிட்லரினால் கொல்லப்பட்டனர். தற்காலத்தில் இஸ்ரவேலைச் சுற்றியுள்ள நாடுகள் அதை முழுமையாக அழிப்பதற்கான வழிகளைத் தேடிவருகின்றன. ஆனாலும், உலக முடிவுவரை யூதர்கள் இருப்பார்கள் என்று இயேசுகிறிஸ்து முன்னறிவித்த விதமாக, அவர்கள் இன்றுவரை உலகில் உள்ளனர். கி.பி.70ம் ஆண்டிலிருந்து 1948ம் ஆண்டுவரை யூதர்கள் நாடற்றவர்களாக இருந்தது மட்டுமல்ல, உலகின் பல இடங்களிலும் வாழ்ந்த யூதர்கள் அழிக்கப்பட்டனர். அப்படியிருந்தும், "இவைகளெல்லாம் சம்பவிக்கு முன்னே இந்தச் சந்ததி ஒழிந்துபோகாதென்று" (மத்.24:34) இயேசுகிறிஸ்து தெரிவித்தவிதமாக இன்றுவரை யூத இனம் அழியாமல் உள்ளது. உண்மையில், தற்காலத்தில் யூதர்கள் தனியான ஒரு நாட்டினராக இருப்பது, இயேசுகிறிஸ்துவின் மறுவருகைக்கான உறுதியான அடையாளமாக உள்ளது.


இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை மிகவிரைவில் நடைபெறப் போவதனால், அவருடைய வருகையைப்பற்றி வேதாகமம் வெளிப்படுத்தியுள்ள சத்தியங்களை கிறிஸ்தவர்களாகிய நாம் அறிந்திருக்க வேண்டியது அவசியம். வேதாகம உபதேசத்தின்படி இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை இரண்டு கட்டங்களில் நடைபெறும். இதில் முதலாவது "இரகசிய வருகை" என்றும், மற்றது "பகிரங்க வருகை" என்றும் கிறிஸ்தவர்களால் அழைக்கப்படுகின்றது. இரகசிய வருகை, பகிரங்க வருகை என்னும் பெயர்கள் வேதாகமத்தில் இல்லாததினால் சில கிறிஸ்தவர்கள் இயேசுகிறிஸ்துவின் வருகை

இரண்டு கட்டங்களில் நடைபெறும் என்பதை ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால், இப்பெயர்கள் வேதாகமத்தில் இல்லாவிட்டாலும், இவற்றி னால் விளக்கப்படும் உபதேசம் வேதாகமத்தில் இருப்பதை எவ்விதத் திலும் மறுக்கமுடியாது. "திரியேகத்துவம்" (trinity) என்னும் சொல் வேதாகமத்தில் இல்லாதபோதிலும் தேவன் திரியேகராய் இருக்கின் றார் என்னும் சத்தியம் வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதைப் போலவே, இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகையைப்பற்றிய வேதாகம உபதேசத்தின்படி அவருடைய வருகை இரண்டு கட்டங்களி லேயே நடைபெறும். இதைப்பற்றி அடுத்த அத்தியாயத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகையின்போது உலகிலிருக்கும் மெய்க்கிறிஸ்தவ பக்தர்கள் அவரண்டை எடுத்துக் கொள்ளப்படுவதோடு, கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களும் உயிர்ப்பிக்கப் படுவார்கள். அதன் பின்னர் ஏழு வருஷங்களுக்கு கிறிஸ்துவுக்கு எதிரான அந்திகிறிஸ்து என்பவனுடைய ஆளுகையின் கீழ் முழு உலகமும் இருக்கும். இதுவே "உபத்திரவ காலம்" என்று அழைக்கப் படுகின்றது. அந்திகிறிஸ்துவினுடைய ஆட்சியின் முடிவில் இயேசு கிறிஸ்துவின் பகிரங்க வருகையுடன் அவருடைய ஆயிர வருஷ அரசாட்சி இவ்வுலகில் ஆரம்பமாகும். அதன் பின்னர் இவ்வுலகம் அழிக்கப்படுவதோடு, தேவனை அறியாத அவிசுவாசிகள் அனைவரும் உயிர்ப்பிக்கப்பட்டு நியாயந்தீர்க்கப்படுவார்கள். ஏனையவர்கள் தேவ னுடன் நித்தியகாலமாய் வாழ்வார்கள். வேதாகமம் அறியத்தரும் இம்மகத்தான சத்தியங்கள் இந்நூலில் விரிவாக ஆராயப்பட்டுள்ளன.



மயானத்தில் ஒரு இடத்தை அல்ல,
மத்திய வானத்தில் ஒரு மகிமையை எதிர்பார்த்தவர்களாக
நாம் வாழவேண்டும் (அலெக்சாண்டர் மக்லரென்)

# இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை



## முதலாம் அத்தியாயத்தின் சுருக்கம்

இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை
இரண்டு கட்டங்களில் நடைபெறும்
என்பதை வேதாகமம் அறியத்தருகிறது.
இயேசுகிறிஸ்து மறுபடியும் வரும்போது,
முதற்கட்டமாக உலகிலிருக்கும்
அவருடைய சபை மக்கள் உலகிலிருந்து
எடுத்துக்கொள்ளப்படுவதோடு,
அவருக்குள் மரித்த கிறிஸ்தவர்கள்
சரீரப்பிரகாரமாக உயிர்ப்பிக்கப்படுவார்கள்.
இது உலகின் இறுதி காலத்தில் வரும்
அந்திகிறிஸ்துவின் ஏழு வருஷ ஆட்சிக் காலம்
ஆரம்பமாவதற்கு முன்பு நடைபெறும்.
அதேசமயம், உயிர்ப்பிக்கப்படும் கிறிஸ்தவர்களும்,
உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்படுபவர்களும்
நியாயந்தீர்க்கப்பட்டு வெற்றியாளர்களாக
இயேசுகிறிஸ்துவோடிருப்பார்கள்.
இதற்கான வேதாகம ஆதாரங்கள்
இவ்வத்தியாயத்தில் ஆராயப்பட்டுள்ளதோடு,
இவ்வேதாகம சத்தியத்தை முரண்படுத்தும்
உபதேசங்களுக்கு வேதாகமத்தில்
எவ்வித ஆதாரங்களும் இல்லை என்பதும்
சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
வேதாகம சத்தியத்தின்படி, அந்திகிறிஸ்துவின்
ஆட்சிக்காலம் ஆரம்பமாவதற்கும் முன்பே
உலகிலிருந்து சபை எடுத்துக்கொள்ளப்படும்.

## முதலாம் அத்தியாயம்



# உலகிலிருந்து சபை எடுத்துக்கொள்ளப்படுதல்

இயேசுகிறிஸ்து மறுபடியும் இவ்வுலகத்திற்கு வரும்போது, அவருடைய சபை மக்கள் உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்படுவார்கள். தமிழ்க் கிறிஸ்தவ உலகில் "இரகசிய வருகை" என்று அழைக்கப்படும் இச்சம்பவம், ஆங்கிலத்தில் "ரெப்ச்சர்" (rapture) என்னும் சொல்லால் குறிப்பிடப்படுகின்றது. இது 1தெசலோனிக்கேயர் 4:17ல் "எடுத்துக்கொள்ளப்படுதல்" என்பதற்கு லத்தீன் மொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள *rapturo* என்னும் சொல்லிலிருந்து வந்துள்ளது. எனினும், 1தெசலோனிக்கேயர் 4:17ல் எடுத்துக்கொள்ளப்படுதல் என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள "ஹார்ப்பாட்ஸோ" (*harpazo*) என்னும் கிரேக்கச்சொல் "பலவந்தமாய் எடுத்துக்கொள்ளப்படுதல்" என்னும் அர்த்தமுடையது. இயேசுகிறிஸ்து மறுபடியும் வரும்போது, உலகிலிருக்கும் சபை மக்கள் அவரால் இவ்வுலகிலிருந்து பலவந்தமாக எடுத்துக்கொள்ளப்படுவார்கள் என்பது வேதாகமம் நமக்கு அறியத்தரும் ஒரு நற்செய்தியாகும். இதுவே இயேசுகிறிஸ்துவினுடைய இரண்டாவது வருகையின் முதலாவது அம்சமாகும்.

உலகிலிருக்கும் சபை இயேசுகிறிஸ்துவினால் எடுத்துக்கொள்ளப்பட்ட பின்னர், ஏழு வருஷங்களுக்கு "அந்திகிறிஸ்து" என்பவனுடைய ஆளுகையின் கீழ் முழு உலகமும் இருக்கும். இந்த ஏழு வருஷ கணிப்பீடு தானியேல் 9:27ஐ அடிப்படையாகக் கொண்டது. (இவ்வேழு வருஷகால அந்திகிறிஸ்துவினுடைய ஆட்சியைப்பற்றி அடுத்த அத்தியாயத்தில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது). அந்திகிறிஸ்துவின் ஆட்சிக் காலமே கிறிஸ்தவ உலகில் "உபத்திரவ காலம்" என்று அழைக்கப்படுகிறது. இதன் முடிவில், உலகிலிருந்து ஏழு வருஷங்களுக்கு முன்பு எடுத்துக்கொள்ளப்பட்ட சபை மக்களோடு உலகத்திற்கு வரும் இயேசுகிறிஸ்து, அந்திகிறிஸ்துவின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவருவதோடு, உலகில் தமது ஆயிரவருஷ ஆட்சியை ஆரம்பிப்பார். இதுவே, இயேசுகிறிஸ்துவின் "பகிரங்க வருகை" என்று தமிழில் அழைக்கப்படுகிறது. இவ்விதமாக, இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை இரண்டு கட்டங்களில் நடைபெறும் என்பதை வேதாகமம் அறியத்தருகிறது. உலகின் இறுதிக் காலத்தில் நடைபெறும் சம்பவங்களை முன்னறிவிக்கும் வேதாகமத்தின் கடைசிப் புத்தகமான வெளிப்படுத்தலில் 4ம் 5ம் அதிகாரத் தரிசனங்களில் உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்படும் சபை பரலோகத்தில் 24 மூப்பர்களாகத் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக சிங்காசனங்களில் அமர்ந்திருக்கின்றனர். அதன்பின்னர், 6 முதல் 18 வரையிலான அதிகாரங்களில் அந்திகிறிஸ்துவின் ஆட்சிக் காலமான ஏழு வருஷ உபத்திரவகால சம்பவங்கள் முன்னறிவிக்கப்பட்டுள்ளன. 19ம் அதிகாரம் இயேசுகிறிஸ்து பகிரங்கமாக இவ்வுலகத்திற்கு வந்து தமது ஆயிரவருஷ ஆட்சியை ஆரம்பிப்பதை அறியத்தருகிறது.

---

இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை இரண்டு கட்டங்களில் நடைபெறும். அதாவது, தம்முடைய சபையை உலகிலிருந்து எடுத்துக்கொள்வதற்காக வானத்திற்கு வரும் அவர், ஏழு வருடங்களின் பின்னர் எடுத்துக்கொள்ளப்பட்ட சபை மக்களோடு இப்பூமிக்கு வருவார்.

---

வேதாகமத் தீர்க்கதரிசனங்களின்படி, இயேசுகிறிஸ்துவின் மறுவருகை இரண்டு கட்டங்களில் நடைபெறும். அதாவது, தம்முடைய மக்களை உலகிலிருந்து எடுத்துக்கொள்வதற்காக வானத்திற்கு வரும் அவர், ஏழு வருடங்களின் பின் உலகிலிருக்கும் மக்களை நியாயந்தீர்ப்பதற்காக இப்பூமிக்கு வருவார். இதனால்தான், "தமது வருகைக்காகக் காத்திருக்கும் விசுவாசிகளை" உலகின் மீது வரவிருக்கும் "தேவ

கோபாக்கினையிலிருந்து இரட்சிப்பதற்காக" அவர் வருவார் என்பதை எபிரெயர் 9:28, 1தெசலோனிக்கேயர் 1:10 போன்ற வசனங்கள் அறியத்தருகையில்,[1] 2தெசலோனிக்கேயர் 1:7-8ல் "தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும் ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படுவார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையில், தமது வருகைக்குக் காத்திருப்பவர்களை இரட்சிப்பதற்காக வருவதும் (எபி.9:28, 1தெச.1:10), சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களை ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பதற்காக வருவதும் வித்தியாசமான வருகைகளாகவே உள்ளன. ஆரம்பத்தில் விசுவாசிகளைத் தம்மோடு சேர்த்துக் கொள்வதற்காக வரும் இயேசுகிறிஸ்து, ஏழு வருஷ அந்திகிறிஸ்துவின் ஆட்சியின் பின்னர், உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட பரிசுத்தவான்களோடு வருவார் (யூதா.14-15).[2] மேலும், ஆரம்பத்தில் அவர் வானத்திற்கே வருவார் (1தெச.4:16-17).[3] ஆனால், கடைசியில்

---

[1] எபிரெயர் 9:28ல் "கிறிஸ்துவும், அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால்தான், தெசலோனிக்கேய மக்கள், இனிவரும் கோபாக்கினையினின்று தங்களை நீங்கலாக்கி இரட்சிக்கும் இயேசு கிறிஸ்துவின் வருகையை எதிர்பார்த்தவர்களாக இருந்ததை 1தெசலோனிக்கேயர் 1:10 அறியத்தருகின்றது. இவ்விரு வசனங்களிலும் அவிசுவாசிகளைப் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பதை நாம் கருத்திற்கொள்ள வேண்டியது அவசியம். இயேசுகிறிஸ்துவின் வருகைக்காக காத்திருப்பவர்களை இரட்சிப்பதற்காக அவர் வருவதைப்பற்றியே இவ்வசனங்கள் அறியத்தருகின்றன (L.Morris, *Hebrews: Expositor's Bible Commentary Volume 12*, p. 93).

[2] யூதா 14-15ல் "ஆதாமுக்கு ஏழாம் தலைமுறையான ஏனோக்கும் இவர்களைக் குறித்து இதோ, எல்லாருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறதற்கும், அவர்களில் அவபக்தியுள்ளவர்கள் யாவரும் அவபக்தியாய்ச் செய்துவந்த சகல அவபக்தியான கிரியைகளினிமித்தமும், தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகளெல்லாவற்றினிமித்தமும், அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூடக் கர்த்தர் வருகிறார் என்று முன்னறிவித்தான்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[3] 1தெசலோனிக்கேயர் 4:16ல் "வானத்திலிருந்து இறங்கி வருவார்" என்பது மூலமொழியின்படி "பரலோகத்திலிருந்து இறங்கி வருவார்" என்று மொழிபெயர்க்கப்பட வேண்டும். இதனால்தான், 17ம் வசனத்தில் "நாம் ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுவோம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, எடுத்துக் கொள்ளப்படும் சபை இயேசுகிறிஸ்துவை வானத்திலேயே சந்திக்கும்.

அவர் பூமி வரைக்கும் வருவார் (சக.14:4).[4] எனவே, இயேசுகிறிஸ்து வின் இரண்டாவது வருகை இரண்டு கட்டங்களில், அதாவது முதலில் உலகிலிருக்கும் சபையை எடுத்துக்கொள்வதற்காக வானத்திற்கு வருவதாகவும் (இரகசிய வருகை), அதன் பின்னர் உலகை நியாயந் தீர்ப்பதற்காகப் பூமிக்கு வருவதாகவும் (பகிரங்க வருகை) இருக்கும் என்பது தெளிவாகின்றது. இவ்வத்தியாயத்தில், உலகிலிருக்கும் சபை மக்களை எடுத்துக்கொள்வதற்காக வரும் இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகையைப்பற்றி வேதாகமம் அறியத்தரும் சத்தியங்களை ஆராய்ந்து பார்ப்போம்.

## (1) உலகிலிருக்கும் சபை முதலில் எடுத்துக்கொள்ளப்படும்

இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகையின் முதல் கட்டத்தில், உலகிலிருக்கும் சபை எடுத்துக்கொள்ளப்படும். சில கிறிஸ்தவர்கள், இயேசுகிறிஸ்துவின் மறுவருகை இரண்டு கட்டங்களில் நடைபெறும் என்பதை ஏற்றுக்கொள்வதில்லை. இரண்டாவது வருகையின் இரண்டு நிகழ்வுகளும் ஒரே நேரத்திலேயே நடைபெறும் என்று கூறும் இவர்கள்,[5] உலகிலிருந்து சபை எடுத்துக்கொள்ளப்படுவதை அறியத் தரும் 1தெசலோனிக்கேயர் 4:17ஐ வித்தியாசமான முறையில் விளக்குகின்றனர். இவ்வசனத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

> பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக, மேகங்கள் மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருட னேகூட இருப்போம் (1தெசலோனிக்கேயர் 4:17).

இவ்வசனத்தில் "கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக" என்னும் சொற்பிர யோகம், வீட்டிற்கு (அல்லது நகரத்திற்கு) வரும் விருந்தினரை வர

[4] இயேசுகிறிஸ்து வரும்போது, மரித்த விசுவாசிகளை உயிர்ப்பித்துத் தம்மோடு கொண்டுவருவதோடு (1தெச.4:16), உயிரோடிருக்கும் விசுவாசிகள் அவருக்கு எதிர்கொண்டுபோக மேகங்கள் மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு கர்த்தரோடு என்றென்றும் இருப்பார்கள் (1தெச.4:17). ஆனால், சகரியா 14:4ல் "அந்நாளிலே அவருடைய பாதங்கள் கிழக்கே எருசலேமுக்கு எதிரே இருக்கிற ஒலிவ மலையின் மேல் நிற்கும்" என்று கூறுகிறது.

[5] A.Reese, *The Approaching Advent of Christ*, p. 18.

வேற்று வீட்டிற்குள் (அல்லது நகரத்திற்குள்) அழைத்துக்கொண்டு வருவதற்காக, வீட்டிற்கு வெளியில் அல்லது நகரத்தின் வாசலுக்குச் செல்வதைக் குறிப்பிடவே அக்காலத்தில் உபயோகிக்கப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்டும் சில வேத ஆராய்ச்சியாளர்கள், இயேசு கிறிஸ்து மறுபடியும் வரும்போது அவரை வரவேற்பதற்காக ஆகாயம் வரைக்கும் செல்லும் சபை, உடனடியாக அவரை அழைத்துக் கொண்டு பூமிக்கு வரும் என்று கூறுகின்றனர்.[6] பத்துக் கன்னியரைப் பற்றிய உவமையில், மணவாளனுடைய வருகைக்காகக் காத்திருந்த வர்கள், மணவாளன் வந்தபோது வாசல்வரை சென்று அவரை வீட்டிற்குள் அழைத்துக்கொண்டு வருவதற்கும் "எதிர்கொண்டுபோ குதல்" (மத்.25:6) என்னும் சொல்லே உபயோகிக்கப்பட்டிருப்பதனால், இயேசுகிறிஸ்துவின் வருகைக்காகக் காத்திருக்கும் சபை, அவர் பூமிக்கு வரும்போது அவரை வரவேற்பதற்காக வானத்திற்குச் சென்று, அவரை அழைத்துக்கொண்டு உடனடியாக பூமிக்கு வரும் என்பது இவர்களின் தர்க்கமாய் உள்ளது.[7]

1தெசலோனிக்கேயர் 4:17ல் "எதிர்கொண்டு போகுதல்" என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள கிரேக்கச் சொல்லுக்கு "வர வேற்பதற்காகச் செல்லுதல்" என்னும் அர்த்தம் இருப்பது உண்மை என்றாலும்,[8] இத்தகைய அர்த்தத்துடனேயே இவ்வசனத்தில் இச்சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது என்று கூறமுடியாது.[9] ஏனெனில், அக்காலத்தில் வீட்டிற்கு விருந்தினரை (அல்லது நகரத்திற்கு பிரமு கரை) அழைத்து வருவதற்கு வீட்டிலுள்ள அனைவரும் (அல்லது நகரத்திலுள்ள அனைவரும்) செல்வதில்லை. சிலர் மாத்திரமே செல் வார்கள். ஆனால், 1தெசலோனிக்கேயர் 4:17ல் உலகிலிருக்கும் சகல கிறிஸ்தவர்களும் இயேசுகிறிஸ்துவை சந்திப்பதற்காக எடுத் துக்கொள்ளப்படுகின்றனர்.[10] இவ்வசனத்தில், சபை இயேசுகிறிஸ்துவை வரவேற்பதற்காகச் செல்வதாகக் குறிப்பிடப்படவில்லை. "சபை எடுத் துக்கொள்ளப்படுவதைப்பற்றியே" இவ்வசனம் கூறுகிறது. எனவே,

[6] W.C.Thomas, *The Blessed Hope*, pp. 5-6; G.L.Green, *The Letters to the Thessalonians: The Pillar New Testament Commentary*, p.228.

[7] G.Ladd, *The Blessed Hope*, p. 91; A.A.Hoekema, *Bible and the Future*, p. 168.

[8] அப்போஸ்தலர் 28:15-16லும் இத்தகைய அர்த்தத்துடன் இச்சொல் உபயோகிக் கப்பட்டுள்ளது.

[9] R.Gundry, *The Church and the Tribulation*, pp. 104-105.

[10] S.N.Gundry, ed. *Three Views on Rapture*, p. 28.

இயேசுகிறிஸ்து வரும்போது, உலகிலிருக்கும் சபை அவரை வரவேற்பதற்காக வானத்திற்குச் செல்லும் என்று கூறமுடியாது.

1தெசலோனிக்கேயர் 4:17ல் "எடுத்துக்கொள்ளப்பட்டு" என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள "ஹார்பாட்ஸோ" (*harpazo*) என்னும் கிரேக்கச் சொல், "சடுதியானதும் பலவந்தமானதுமான செயலைக் குறிக்கின்றது."[11] அதாவது, "பலவந்தமாகப் பிடித்துச் செல்லுதல் அல்லது எடுத்துச் செல்லுதல்" என்னும் அர்த்தமுடையதாக இச்சொல் உள்ளது.[12] உண்மையில், "இயேசுகிறிஸ்து வரும்போது அவரால் உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்படுபவர்கள், தங்களால் எதிர்க்க முடியாத தேவனுடைய வல்லமையினால் ஆட்கொள்ளப்படுவார்கள்."[13] அதாவது, உலகிலிருக்கும் அவர்கள் ஒரு நொடிப் பொழுதுக்குள் பலவந்தமாக இவ்வுலகிலிருந்து வானத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள். எனவே, "சபை மக்கள் தங்களுடைய தீர்மானத்தின்படி இயேசுகிறிஸ்துவை வரவேற்பதற்காக வானத்திற்குச் செல்பவர்களாக அல்ல, இயேசுகிறிஸ்துவினால் பலவந்தமாக இவ்வுலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்படுபவர்களாகவே இருப்பார்கள்."[14] எனவே, "உலகிலிருக்கும் சபை இயேசுகிறிஸ்துவை வரவேற்று பூமிக்கு கூட்டிக்கொண்டுவருவதற்காகச் செல்லும் என்று கூறமுடியாது."[15] உண்மையில், "இயேசுகிறிஸ்துவினால் எடுத்துக்கொள்ளப்பட்டு வானத்தில் அவரைச் சந்திக்கும் சபை மக்கள், பரலோகத்தில் அவரோடு இருப்பதற்காகச் செல்லாமல் உடனடியாக மறுபடியுமாகப் பூமிக்கு வருவது அர்த்தமற்ற செயலாகவே இருக்கும்."[16] மேலும், சபை எடுத்துக்கொள்ளப்படுவதைப்பற்றி கூறும் 1தெசலோனிக்கேயர் 4:17ல் மனிதர் பூமிக்கு வருவதைப்பற்றி எதுவும் குறிப்பிடப்படாதிருப்பதும், இயேசுகிறிஸ்துவை வரவேற்பதற்காகச் சபை செல்வதாக இவ்வசனத்தை விளக்க முடியாதிருப்பதற்கான இன்னுமொரு காரணமாய் உள்ளது.[17] தமிழ் மொழிபெயர்ப்பில்

[11] L.Morris, *1&2 Thessalonians: Tyndale New Testament Commentaries*, p 94.
[12] W.Bauer, W.F.Arndt, F.W.Gingrich, and F.W.Danker, *Greek-English Lexicon of the New Testament*, p. 109.
[13] D.J.Williams, *Thessalonians: International Biblical Commentary*, pp. 84-85.
[14] S.N.Gundry, ed. *Three Views on Rapture*, p. 28.
[15] E.Best, *1&2 Thessalonians: Harper's NT Commentaries*, p. 199.
[16] G.Milligan, *1&2 Thessalonians: International Critical Commentary*, p. 61.
[17] C.A.Wanamaker, *1&2 Thessalonians: Greek Testament Commentary*, p. 175.

1தெசலோனிக்கேயர் 4:16ல் "வானத்திலிருந்து இறங்கி வருவார்" என்னும் வாக்கியம், இயேசுகிறிஸ்து அச்சமயம் பூமிக்கு வருவார் என்னும் எண்ணத்தை நமக்கு ஏற்படுத்தினாலும், மூலமொழியில் இவ்வாக்கியம் "பரலோகத்திலிருந்து இறங்கிவருவார்" என்றே உள் ளது. இதனால்தான், ஆங்கில வேதாகமத்தில் descend from heaven என்று இவ்வாக்கியத்தை சரியாக மொழிபெயர்த்துள்ளனர். அதாவது, பரலோகத்தில் இருக்கும் இயேசுகிறிஸ்து, அச்சமயம் வானத்திற்கு வருவார் என்றே இவ்வசனம் கூறுகிறது. அப்பொழுது உலகில் இருக்கும் கிறிஸ்தவர்கள் அவரை வரவேற்பதற்காக அல்ல, அவ ரோடுகூட எப்பொழுதும் இருப்பதற்காகவே உலகிலிருந்து எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.[20]

---

இயேசுகிறிஸ்து மறுபடியும் வரும்போது, உலகிலிருக்கும் அவருடைய சபை மக்கள் முதலில் எடுத்துக்கொள்ளப்படுவார்கள்.

---

உலகிலிருந்து சபை எடுத்துக்கொள்ளப்படும் "இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகையை" 1தெசலோனிக்கேயர் 4:17ஐ மட்டும் ஆதாரமா கக்கொண்டு போதிக்கமுடியாது என்னும் சிலரது தர்க்கம் அர்த்தமற் றது. இயேசுகிறிஸ்து தம்முடைய பகிரங்க வருகையைக் குறித்தே அதிகமாகப் போதித்துள்ளது உண்மை என்றாலும், யோவான் 14:3ல் அவர் தம்முடைய இரகசிய வருகையைப்பற்றியும் முன்னறிவித்துள் ளார்.[21] 1கொரிந்தியர் 15:51-52லும் இயேசுகிறிஸ்துவின் மறுவருகை யின்போது உலகிலிருக்கும் சபை மக்கள் அவரால் எடுத்துக்கொள் ளப்படுவார்கள் என்பதைப் பவுல் விபரமாகக் குறிப்பிட்டுள்ளார்.[22] எனவே, உலகிலிருந்து சபை எடுத்துக்கொள்ளப்படும் இயேசுகிறிஸ்து வின் இரகசிய வருகை, தனியொரு வசனத்தை மாத்திரம் ஆதாரமா கக்கொண்ட போதனை என்று கூறமுடியாது. இயேசுகிறிஸ்துவின்

---

[20] D.E.Hiebert, *1&2 Thessalonians: An Expositional Commentary*, p. 25. J.Walvoord, *The Thessalonian Epistles*, p. 70; R.L.Thomas, *1,2 Thessalonians: The Expositor's Bible Commentary Volume 11*, p. 279.

[21] T.LaHaye, *Understanding Bible Prophecy*, p. 41.

[22] 1கொரிந்தியர் 15:51-52ல், "இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கி றேன். நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை. ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள். நாமும் மறுரூபமாக்கப்படுவோம்" என்று பவுல் குறிப்பிட்டுள்ளார்.

வருகை இரண்டு கட்டங்களில் நடைபெறும் என்பதை தீத்து 2:13உம் அறியத்தருகிறது. இவ்வசனத்தில் கிறிஸ்தவர்களாகிய நாம் இரண்டு காரியங்களை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது:

> நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது (தீத்து 2:13).

இவ்வசனத்தில், "நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியம்" சபை உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்படுவதையும் "இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதல்" அவருடைய பகிரங்க வருகையையும் குறிக்கின்றது.[24] இதைப்போலவே 2தெசலோனிக்கேயர் 2ம் அதிகாரத்திலும் பவுல் இயேசுகிறிஸ்துவின் இரண்டு வருகைகளையும் விளக்கியுள்ளார். இதனால்தான் இவ்வதிகாரம், "சகோதரரே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வருகையையும், நாம் அவரிடத்திலே சேர்க்கப்படுவதையுங்குறித்து" என்று ஆரம்பமாகின்றது. இவ்வாக்கியத்தில் "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வருகை" அவருடைய பகிரங்க வருகையையும், "நாம் அவரிடத்தில் சேர்க்கப்படுவது" உலகிலிருக்கும் சபை அவரிடத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவதையும் குறிக்கின்றது.[25] எனவே, இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை இரண்டு கட்டங்களில் நடைபெறும் என்பதை எவ்விதத்திலும் மறுக்க முடியாதுள்ளது. இயேசுகிறிஸ்து மறுபடியும் வரும்போது, உலகிலிருக்கும் அவருடைய சபை மக்கள் முதலில் எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

## (2) உபத்திரவ காலத்திற்கும் முன்பே சபை எடுத்துக்கொள்ளப்படும்

இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை இரண்டு கட்டங்களில் நடைபெறும் என்பதை ஏற்றுக்கொள்ளாத கிறிஸ்தவர்கள், அந்திகிறிஸ்துவின் ஆட்சிக் காலமான ஏழு வருஷ உபத்திரவ காலத்தின் முடிவிலேயே இயேசுகிறிஸ்து மறுபடியும் வருவார் என்றும், இதனால்

[24/25] T.LaHaye, *Understanding Bible Prophecy*, pp. 94/95

உபத்திரவ காலத்திலும் சபை உலகத்தில் இருக்கும் என்றும் வாதிடுகின்றனர்.[26] கிறிஸ்தவ சபையானது கி.பி.1830ம் ஆண்டுவரை இத்தகையை கருத்துடனேயே இருந்துள்ளது என்பதைச் சுட்டிக் காட்டும் இவர்கள், உபத்திரவ காலத்திற்கு முன்பே சபை உலகத்தி லிருந்து எடுத்துக்கொள்ளப்படும் என்னும் கருத்து அண்மைக் காலத் திலேயே பிரபலம் அடைந்துள்ளதினால் இவ்வுபதேசம் பிழையானது என்று கூறுகின்றனர்.[28] உபத்திரவ காலத்திற்கும் முன்பே சபை உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்படும் என்னும் கருத்து 1830ம் ஆண்டிலேயே ஜே.என்.டார்பி என்பவரினால் இறையியல் உபதேசமாக அறிமுகப்படுத்தப்பட்டது உண்மை என்றாலும்,[29] இதற்கும் முற்பட்ட காலத்திலேயே இயேசுகிறிஸ்துவின் மறுவருகை இரண்டு கட்டங்க ளில் நடைபெறும் என்றும், உபத்திரவ காலத்தில் சபை உலகத்தில் இருக்காது என்றும் நம்பியவர்கள் இருந்துள்ளனர்.[30] இயேசுகிறிஸ்து வின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்த புதிய ஏற்பாட்டு ஆசிரி யர்களும், ஆதிசபை விசுவாசிகளும், சபைத் தலைவர்களும், உபத் திரவ காலத்திற்குள் தாங்கள் செல்வதைப்பற்றிய எண்ணத்துடன்

---

இயேசுகிறிஸ்துவின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்த புதிய ஏற்பாட்டு ஆசிரியர்களும், ஆதிசபை விசுவாசிகளும், சபைத் தலைவர்களும் உபத்திரவ காலத்திற்குள் தாங்கள் செல்வதைப்பற்றிய எண்ணத்துடன் இருக்கவில்லை.

---

[26] S.N.Gundry & G.L.Archer, ed., *Three Views on Rapture*, pp. 171-211.

[28] A.Reese, *The Approaching Advent of Christ*, pp. 18-19; D.Macpherson, *The Great Rapture Hoax*, p. 47; R.Cameron, *Truth About Lord's Return*, pp. 72-73.

[29] சபை உபத்திரவ காலத்திலும் உலகத்தில் இருக்கும் என்று கூறுபவர்கள் தர்க்கிப்பது போல ஜே. என். டார்பி என்பவர் பிழையான போதகங்களைப் பரப்பியவர்களிடத்திலிருந்தே இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகையைப் பற்றிய தனது இறையியல் உபதேசத்தைப் பெற்றார் என்பதில் எவ்வித உண்மையும் இல்லை (P.N.Benware, *Understanding the End Times Comprehensive Prophecy*, p. 196; J.F.Walvoord, *Rapture Question*, pp. 150-157).

[30] G.R.Jeffrey, *Apocalypse*, pp. 313-322. 1687ல் பீட்டர் ஜுரியு, 1738ல் பிலிப் டொட்ரிஜ், 1748ல் ஜோன் ஜில், 1736ல் ஜேம்ஸ் மெக்நைட் 1792ல் தோமஸ் ஸ்கொட் என்போர் எழுதிய நூல்களிலும் இத்தகைய உபதேசம் உள்ளது (G. R.Jeffrey, "Was the PreTrib Position of Rapture Seen Before John Darby" pp. 2-9). மேலும் கி.பி.4 முதல் 7 வரையிலான நூற்றாண்டுகளில் பிரபலமடைந் திருந்த "சூடோ-எப்பிராயீம்" என்னும் நூலிலும் இயேசுகிறிஸ்துவின் வருகை இரண்டு கட்டங்களில் நடைபெறும் என்றும், உபத்திரவ காலத்திற்கும் முன்பே சபை எடுத்துக்கொள்ளப்படும் என்றும் விளக்கப்பட்டுள்ளது (T.Demy & T.Ice, "The Rapture and Pseudo-Ephraem: An Early Medieval Citation" 1-13).

இருக்கவில்லை. இயேசுகிறிஸ்துவின் வருகையில் தாங்கள் உலகி லிருந்து எடுத்துக்கொள்ளப்படுவோம் என்னும் நம்பிக்கையிலேயே அவர்கள் இருந்தனர்.[31] தங்களுடைய ஆயுட்காலத்திலேயே இயேசு கிறிஸ்துவின் மறுவருகை சம்பவிக்கும் என்னும் நம்பிக்கையுடன் ஆதிகிறிஸ்தவர்கள் இருந்ததினால் (1கொரி.1:7, பிலி.3:20, 1தெச.1:10, யாக்.5:8-9),[32] தாங்கள் உபத்திரவ காலத்திற்குள் செல்வோம் என்னும் எண்ணம் அவர்களுக்கு இருந்தது என்று கூறமுடியாது.[33] மேலும், இரண்டாயிரம் வருட உலகக் கிறிஸ்தவ சபை சரித்திரத்தின் ஒவ் வொரு காலகட்டத்திலும், வேதாகமத்தின் ஒவ்வொரு உபதேசத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, அதனது போதனைகள் இறையியல் ரீதியாக முழுமையான விளக்கம் பெற்றுள்ளன. அவ்வகையில் 19ம் நூற்றாண்டிலேயே இயேசுகிறிஸ்துவினுடைய இரண்டாவது வருகையைப்பற்றிய வேதாகம உபதேசம் முழுமையானதும் விரிவான துமான முறையில் கிறிஸ்தவ சபையால் ஆராயப்பட்டுள்ளது. இதனா லேயே உபத்திரவ காலத்திற்கும் முன்பே சபை உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்படும் என்னும் உண்மை அண்மைக் காலங்களில் வலியுறுத்தப்பட்டு வந்துள்ளது. எனவே, இக்கருத்து கிறிஸ்தவ இறையியலில் புதியது என்பதை மாத்திரம் ஆதாரமாகக்கொண்டு இது தவறானது என்று கூறுவது அர்த்தமற்றது. ஏனெனில், இத்தகைய தர்க்கத்தை உபயோகித்து, கி.பி.16ம் நூற்றாண்டுவரை கிறிஸ்தவ உலகில் தெளிவாகப் போதிக்கப்படாத இரட்சிப்பைப்பற்றிய போத னையும் (அதாவது, இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதினாலேயே

[31] H.C.Thiessen, *Will the Church Pass through the Tribulation*, pp. 28-29.

[32] கொரிந்து சபை மக்களிடம் "கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வெளிப்படுவதற்குக் காத்திருக்கிறீர்கள்" (1கொரி.1:7), என்று கூறும் பவுல், பிலிப்பியரிடம், "கர்த்தராயி ருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கி றோம்" (பிலி.3:20) என்று தெரிவித்துள்ளார். தெசலோனிக்கேய சபை மக்கள் "இயேசுகிறிஸ்து பரலோகத்திலிருந்து வருவதை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர் (1தெச.1:10) "கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறது" என்றும், "இயேசு வாசற்படியில் நிற்கிறார்" என்றும் யாக்கோபு குறிப்பிட்டுள்ளார் (யாக்.5:8-9). இதைப்போலவே ஆதிசபைப் பிதாக்களான கிளமெண்ட், சைப்ரியன் என்பவர்களு டைய நூல்களிலும், இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட "டிடாக்கி" என்னும் ஆதிசபையின் போதனை நூலிலும் இயேசுகிறிஸ்துவின் வருகை தங்களுடைய ஆயுட்காலத்திலேயே நடைபெறும் என்னும் எதிர்பார்ப்புடன் கிறிஸ்தவர்கள் இருந்துள்ளதை அறிந்துகொள்கின்றோம் (A.Roberts & J. Donaldson, *The Ante-Nicene Fathers, Volume 1*, p. 11; *Volume VII*, p. 382; J.F.Silver, *The Lord's Return*, pp. 59, 67).

[33] G.H.N.Peters, *Theocratic Kingdom Volume 1*, pp. 494-496.

பாவியான மனிதன் நீதிமானாக்கப்படுகின்றான் என்னும் போதனையும்), தவறானது என்று வாதிடலாம். இப்போதனை சபையில் சீர்திருத்தம் ஏற்பட்ட 16ம் நூற்றாண்டிலேயே முழுமையாக அறியப்பட்டது. எனவே நீண்டகாலம் கிறிஸ்தவ சபையில் அறியப்படாமல் இருந்த இரண்டா வது வருகையைப்பற்றிய வேதாகம சத்தியம் தற்காலத்தில் வலியு றுத்தப்படுவதனால் இதனைத் தவறான உபதேசம் என்று எவ்விதத்தி லும் கூறமுடியாது.[34]

"உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு" (யோவா.16:33) என்று இயேசுகிறிஸ்து கூறியதினால், சபை உபத்திரவ காலத்திலும் உலகத்தில் இருக்கும் என்று வாதிடுவது அர்த்தமற்றது. ஏனெனில், இவ்வசனத்தில் உபத்திரவம் எதிர்காலத்தில் நடைபெறும் சம்பவமா கக் குறிப்பிடப்படவில்லை.[35] நிகழ்காலத்தில் கிறிஸ்தவர்கள் எதிர் நோக்கும் உபத்திரவத்தைக் குறிப்பிடவே வேதாகமத்தில் இச்சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது (மாற்.4:17, ரோ.5:3, 2கொரி.1:4). எனவே, இதை உபத்திரவ காலத்தைப்பற்றிய அறிவிப்பாக எடுத்தால், இரண் டாயிரம் வருஷங்களாக சபை உபத்திரவ காலத்தில் இருப்பதாகவே கூறவேண்டும். ஏனெனில், ஆரம்ப காலத்திலிருந்தே சபை உபத்திரவங் களைச் சந்தித்து வந்துள்ளது. வேதாகமத் தீர்க்கதரிசனங்களில் "உலக முடிவில் தீமையின் மீதான தேவனுடைய கோபாக்கினை வெளிப்படும் காலமே" உபத்திரவகாலமாக உள்ளது. உலகின் இறுதியில் தேவனை அறியாதவர்கள் எதிர்நோக்கும் இந்த கோபாக்கி னைக்கு கிறிஸ்தவர்கள் உட்படுவதில்லை என்பதே வேதாகமம் நமக்கு அறியத்தரும் நற்செய்தியாகும் (யோவா.3:36, ரோ.8:1, 1தெச. 1:10).[37] மேலும், கிறிஸ்தவ சபை ஆரம்பத்திலிருந்தே பலவிதமான உபத்திரவங்களைச் சந்தித்துள்ள போதிலும், இவற்றை சபையின் மீதான தேவகோபாக்கினை என்று கூறமுடியாது. ஏனெனில், கிறிஸ் தவ சபைக்கு வரும் உபத்திரவங்கள் சாத்தானால் கொண்டுவரப்படு பவை. ஆனால் உபத்திரவ காலத்தைப்பற்றிய தீர்க்கதரிசனங்களில்

[34] J.D.Pentecoast, *Things to Come*, p. 166.

[35] P.N.Benware, *Understanding End Times Prophecy*, p. 198.

[37] "கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை" (ரோ.8:1) என்பதனால், அவர்கள், இனிவரும் கோபாக்கினையினின்று தங்களை நீங்க லாக்கி இரட்சிக்கும் இயேசுகிறிஸ்துவின் வருகையை எதிர்பார்த்துக் கொண் டிருந்தனர் (1தெச.1:10).

(வெளி.6-18) முன்னறிவிக்கப்பட்டுள்ள உபத்திரவங்கள் சாத்தானால் கொண்டுவரப்படுபவைகள் அல்ல. இவை தேவனுடைய கோபாக்கினைக்கு உலகம் உட்படுவதைப்பற்றிய முன்னறிவிப்புகளாகும்.

---

இயேசுகிறிஸ்துவின் வருகை தேவனுடைய கோபாக்கினையிலிருந்து சபையை விடுவிக்கும் என்பதை 1தெசலோனிக்கேயர் 1:10 அறியத்தருவதனால், தேவ கோபாக்கினையாக உபத்திரவங்கள் வருவதற்கு முன்னர் சபை உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்படும்.

---

இயேசுகிறிஸ்துவின் வருகை தேவகோபாக்கினையிலிருந்து சபையை விடுவிக்கும் என்பதை 1தெசலோனிக்கேயர் 1:10 அறியத்தருவதனால், தேவகோபாக்கினையாக உபத்திரவங்கள் வருவதற்கு முன்னர் சபை உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்படும் என்பது தெளிவாகின்றது. இவ்வசனத்தில் "விடுவித்தல்" என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள "ருஹுஓமாய்" (*rhuomai*) என்னும் கிரேக்கச் சொல் வல்லமையான செயலினால் ஆபத்திலிருந்து தப்புவிக்கப்படுதல் என்னும் அர்த்தம் உடையது.[38] இதனால், "தேவ கோபாக்கினை வரும் இடத்தில் இருந்து சபை அகற்றப்படுவதைப் பற்றியே இவ்வசனம் கூறுகிறது."[39] எனவே, இயேசுகிறிஸ்துவின் வருகையின்போது சபை உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்படும் என்பது தெளிவாகின்றது. உண்மையில், "இயேசுகிறிஸ்துவினால் மீட்கப்பட்டு, நீதிமான்களாக இருக்கும் கிறிஸ்தவர்கள் தேவகோபாக்கினைக்கு உட்படுவார்கள் என்று கூறுவது அர்த்தமற்ற ஒரு தர்க்கமாகவே உள்ளது"[40]

அந்திகிறிஸ்துவின் உலகளாவிய ஆட்சிக் காலமான உபத்திரவ காலத்தைப்பற்றி முன்னறிவிக்கும்போது மத்தேயு 24:8ல், "இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம்" என்று இயேசுகிறிஸ்து குறிப்பிட்டுள்ளார். அதாவது, தற்காலத்தில் சபை எதிர்நோக்கும் துயரங்களைப்பற்றி அல்ல, குறிப்பிட்ட காலத்தில் ஆரம்பமாகும் உபத்திரவத்தைப்பற்றியே இயேசுகிறிஸ்து இவ்வசனத்தில் முன்னறிவித்துள்ளார். தானியேல் 12:1ன்படி, இது "யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக் காலமாய் உள்ளது." இயேசுகிறிஸ்து அக்காலத்தைப்பற்றிக் கூறும்போது,

---

[38] W.Arndt & F.W,Gingrich, *A Greek-English Lexicon of the NT*, p. 233.
[39] R.Showers, *Maranatha: Our Lord Come!* p. 194.
[40] J.F.Walvoord, *Rapture Question*, p. 22.

“தேவன் உலகத்தைச் சிருஷ்டித்தது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான உபத்திரவம் அந்நாட்களில் உண்டாயிருக்கும்” (மாற்.13:19) என்று தெரிவித்துள்ளார். அதாவது, “இதுவரையில் உலகில் ஏற்பட்டிராத அளவுக்கு கொடிதான உபத்திரவம் அக்காலத்தில் உலகில் இருக்கும்.”[41] இக்கொடிய உபத்திரவம் வருவதற்கு முன்னர் சபை உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்படும் என்பது வேதாகமம் அறியத்தரும் முக்கியமான ஒரு சத்தியமாகும். வெளிப்படுத்தல் 3:10ல் இதைப்பற்றி பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

> என் பொறுமையைக்குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக்கொண்டபடியினால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின் மேலெங்கும் வரப்போகிற சோதனை காலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன் (வெளிப்படுத்தல் 3:10).

சில கிறிஸ்தவர்கள் இதைப் பிலதெல்பியா சபைக்கு வரப்போகிற உபத்திரவமாக மாத்திரமே கருதுகின்றனர்.[42] ஆனால் இது “பூச்சக்கரத்தின் மேலெங்கும் வரப்போகிற சோதனை காலம்” என்று குறிப்பிடப்பட்டுள்ளதினால் தனியொரு சபைக்கு மாத்திரம் வரவிருக்கும் துயரமாக அல்ல, இறுதி காலத்தில் உலகம் முழுவதும் வரவிருக்கும் உபத்திரவமாகவே உள்ளது. மேலும், அடுத்த வசனம் இயேசுகிறிஸ்துவின் வருகையைப்பற்றியே கூறுவதனால் (வெளி.3:11), இறுதி காலத்தில் உலகம் முழுவதும் வரப்போகும் உபத்திரவ காலத்தையே இது குறிக்கின்றது என்பது தெளிவாகின்றது.[43] எனவே, இக்கொடிய உபத்திரவ காலத்திற்குள் அகப்படாதபடி சபை தப்புவிக்கப்படும். அதாவது, உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்படும் என்பதையே வெளிப்படுத்தல் 3:10 அறியத்தருகிறது. ஏனெனில், இவ்வசனத்தில் “சோதனைக் காலத்திற்குத் தப்பும்படி” என்பது மூலமொழியின் இலக்கணத்தின்படி, அக்காலத்திற்கு உட்படாதபடி தப்புவிக்கப்படுவதையே குறிக்கின்றது.[44] இதனால்தான், “சோதனைக் காலத்திற்கு

[41] L.J.Wood, *Is the Rapture Next*, p. 13.
[42] C.J.Hemer, *Letters to the Seven Churches of Asia*, pp. 164-165
[43] G.R.Osborne, *Revelation: Baker Exegetical Commentary on the New Testament,* p. 198; R.L.Thomas, *Revelation 1-7: An Exegetical Commentary,* p. 285.
[44] J.F.Walvoord, *The Revelation of Jesus Christ: A Commentary*, p. 87.

தப்பும்படி" என்பது மூலமொழியில் "சோதனைக் காலத்திற்கு உட்படா தபடி அதிலிருந்து வெளியேற்றப்படும்" என்று அர்த்தந்தரும் விதத்தில் உள்ளது.[45] மேலும், இது "பூமியில் குடியிருக்கிறவர்கள்" மீது வரவிருக்கும் உபத்திரவமே தவிர, சபைக்கு வரும் துயரம் அல்ல.[46] ஏனெனில், "பூமியில் குடியிருக்கிறவர்கள்" என்னும் சொற்பிரயோகம் வெளிப்படுத்தல் புத்தகத்தில் கிறிஸ்தவ சபையை அல்ல, தேவனை அறியாத அவிசுவாசிகளையே குறிக்கின்றது (வெளி.6:10, 8:13, 11:10, 12:12, 13:8, 13:12, 13:14, 17:1, 17:8).[47] எனவே, அவிசுவாசிக ளின்மீது தேவனுடைய கோபாக்கினை வெளிப்படும் உபத்திரவ காலத்திற்கு உட்படாதபடி சபை தப்புவிக்கப்படுவதனால், அக்காலம் ஆரம்பமாவதற்கும் முன்பே சபை மக்கள் உலகிலிருந்து எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

சபை உபத்திரவ காலத்திலும் உலகத்தில் இருக்கும் என்று நம்புகிற வர்கள், வெளிப்படுத்தல் 3:10ல் உள்ள, "சோதனை காலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன்" என்னும் வாக்கியத்தை யோவான் 17:15 உடன் தொடர்புபடுத்தி, உபத்திரவ காலத்தில் சபை தேவனால் பாதுகாக்கப்படும் என்று கூறுகின்றனர். யோவான் 17:15ல் "நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக் கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்" என்று இயேசுகிறிஸ்து தேவனி டம் ஜெபித்துள்ளதினால், சபை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளப் படாது என்றும், உபத்திரவ காலத்தில் உலகத்தின்மீது வரும் தீமையிலிருந்து சபை பாதுகாக்கப்படும் என்றும் கூறுகின்றனர்.[48] ஆனால், வெளிப்படுத்தல் 3:10ல் குறிப்பிடப்பட்டிருக்கும் சோதனைக் காலம், உலகின் இறுதியில் தேவனுடைய கோபாக்கினையாக வரும் உபத்திரவ காலமாகும். அக்காலத்தின் உபத்திரவங்களிலி ருந்து சபை பாதுகாக்கப்படுவதைப்பற்றி அல்ல, தற்காலத்தில் சபைக்கு எதிராக சாத்தான் கொண்டுவரும் தீமைகளிலிருந்து சபை மக்கள் பாதுகாக்கப்படுவதைப்பற்றியே இயேசுகிறிஸ்து யோவான்

[45] L.J.Wood, *The Bible and Future Events*, p. 77.
[46] J.D.Pentecost, *Things to Come: A Study in Biblical Eschatology*, p. 197.
[47] A.F.Johnson, *Revelation: Bible Study Commentary*, p. 60.
[48] C.J.Hemer, *The Letters to the Seven Churches of Asia in Their Local Setting*, pp. 164-165; R.H.Gundry, *The Church and the Tribulation*, pp. 55-60.

நாம் அந்திகிறிஸ்துவின் ஆட்சியையோ அல்லது உபத்திரவ காலத்தையோ அல்ல, இயேசுகிறிஸ்துவின் வருகையை எதிர்பார்த்தவர்களாகவே இருக்கவேண்டும். ஏனெனில், இவைகள் உலகத்தில் வருவதற்கும் முன்பே இயேசுகிறிஸ்து நம்மை இவ்வுலகத்திலிருந்து எடுத்துக்கொள்வார்.

17:15ல் குறிப்பிட்டுள்ளார்.[49] மேலும், யோவான் 17:15ல் சீஷர்கள் ஏற்கனவே தீமையின் மத்தியில் இருக்கின்றனர். ஆனால், வெளிப்படுத்தல் 3:10ல் குறிப்பிடப்பட்டிருக்கும் உபத்திரவம் எதிர்காலத்தில் வரவிருக்கும் தீமையாக உள்ளது.[50] எனவே, வெளிப்படுத்தல் 3:10ஐ எவ்விதத்திலும் யோவான் 17:15 உடன் தொடர்புபடுத்த முடியாது. உபத்திரவ காலத்தில் சபை பாதுகாக்கப்படும் என்று இயேசுகிறிஸ்து கூறவில்லை. எனவே, "நாம் அந்திகிறிஸ்துவின் ஆட்சியையோ அல்லது உபத்திரவ காலத்தையோ அல்ல, இயேசுகிறிஸ்துவின் வருகையை எதிர்பார்த்தவர்களாகவே இருக்கவேண்டும்."[51] ஏனெனில், இவைகள் வருவதற்கும் முன்பே இயேசுகிறிஸ்து நம்மை இவ்வுலகத்திலிருந்து எடுத்துக்கொள்வார்.

உபத்திரவ காலத்திலும் சபை உலகத்தில் இருக்கும் என்னும் நம்பிக்கையுடைய கிறிஸ்தவர்கள், வெளிப்படுத்தல் 3:10ல் உள்ள "சோதனை காலத்திற்குத் தப்பும்படி" என்னும் வாக்கியத்தை, சோதனைக்கு மத்தியில் பாதுகாக்கப்படுவதாகவே வியாக்கியானம் செய்கின்றனர்.[52] ஆனால், உபத்திரவ காலத்தில் இரட்சிக்கப்படுபவர்களும் இரத்தசாட்சிகளாக மரிப்பதாகவே வெளிப்படுத்தல் புத்தகம் கூறுகிறது. (6:9-11, 7:9-14). எனவே, உபத்திரவ காலத்தில் சபை பாதுகாக்கப்படும் என்று கூறமுடியாது.[53] மேலும், உபத்திரவ காலத்தில் இரட்சிக்கப்படுபவர்கள் சபை மக்கள் அல்ல. சபை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட பின்னர் அனுப்பப்படும் இரண்டு சாட்சிகளின் ஊழியத்தின் மூலமாக (வெளி.11:3)[54] இரட்சிக்கப்படும் இஸ்ரவேல்

[49] A.F.Johnson, *Revelation: The Expositor's Bible Commentary*, p. 454.
[50] R.L.Thomas, *Revelation 1-7: An Exegetical Commentary*, p. 285.
[51] E.W.Lutzer, *The King is Coming*, p. 32.
[52] G.R.Osborne, *Revelation: Baker Exegetical Commentary on the NT*, p. 193.
[53] R.L.Thomos, *Revelation: An Exegetical Commentary*, p. 286.
[54] இரண்டு சாட்சிகளின் ஊழியம் மூன்றரை வருஷங்களுக்கு நடைபெறும் என்பதை வெளிப்படுத்தல் 11:3 அறியத்தருகிறது.

மக்களில் 144,000 பேர் ஊழியர்களாகத் தெரிவுசெய்யப்படுவார்கள் (வெளி.7:1-8).[55] இவர்களுடைய ஊழியத்தின் மூலம் இரட்சிக்கப்படுப வர்களே இரத்தசாட்சிகளாக மரிப்பார்கள் என்று வெளிப்படுத்தல் புத்தகம் கூறுகிறது (வெளி.7:9,13-15). உபத்திரவ காலத்தில் சபை மக்கள் பாதுகாக்கப்படுவார்கள் என்று வெளிப்படுத்தல் புத்தகத்தில் குறிப்பிடப்படவில்லை. எனவே, சபை உபத்திரவ காலத்தில் பாதுகாக் கப்படும் என்று எவ்விதத்திலும் கூறமுடியாது.

அந்திகிறிஸ்துவின் ஆட்சிக்காலமான உபத்திரவ காலத்தில் தேவனு டைய கோபாக்கினை உலகத்தின் மீது வருவதற்கு முன்பே கிறிஸ்து வின் சபை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்படும் என்பதனால் தான், “தேவன் நம்மை கோபாக்கினைக்கென்று நியமிக்காமல் நம்மு டைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் இரட்சிப்படைவதற் கென்று நியமித்திருக்கிறார்” என்று 1தெசலோனிக்கேயர் 5ம் அதிகா ரத்தில் பவுல் தெரிவித்துள்ளார் (1தெச.5:9). மேலும், உலகிலிருந்து சபை எடுத்துக்கொள்ளப்படுவதைப்பற்றிய அறிவிப்பைத் தொடர்ந்து வரும் இவ்வதிகாரம், உபத்திரவ காலத்தில் தேவனுடைய கோபாக்கி னைக்கு உட்படுபவர்களையும், இதில் அகப்படாதபடி உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்படுபவர்களையும் வேறுபடுத்திக் காண்பிக்கும் விதத்தில் ஆரம்பமாகின்றது. அதாவது, இயேசுகிறிஸ்துவின் வருகை சடுதியாய் எவரும் எதிர்பாராத நேரத்தில் சம்பவிக்கும் என்பதனால், “இரவிலே திருடன் வருகிறவிதமாய்க் கர்த்தருடைய நாள் வருமென்று நீங்களே நன்றாய் அறிந்திருக்கிறீர்கள்” என்று கூறும் பவுல், “சமாதா னமும் சவுக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும்போது, கர்ப்பவ தியானவளுக்கு வேதனை வருகிறதுபோல, அழிவு சடுதியாய் அவர் கள்மேல் வரும். அவர்கள் தப்பிப்போவதில்லை” (1தெச.5:2-3) என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் இவ்வழிவு கிறிஸ்தவர்களுக்கு ஏற்படாது என்பதனால், “சகோதரரே, அந்த நாள் திருடனைப்போல உங்களைப் பிடித்துக்கொள்ளத்தக்கதாக, நீங்கள் அந்தகாரத்திலிருக்கிறவர்கள் அல்லவே. நீங்களெல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளும், பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறீர்கள். நாம் இரவுக்கும் இருளுக்கும் உள்ளா

[55] இவ்வசனங்களில் 144,000 பேர் முத்திரையிடப்படுகின்றனர். இவர்கள் தேவனுடைய ஊழியர்கள் என்பதை 3ம் வசனமும், இவர்கள் இஸ்ரவேல் மக்களின் பன்னிரு கோத்திரங்களையும் சேர்ந்தவர்கள் என்பதை 5 முதல் 8 வரையிலான வசனங்களும் அறியத்தருகின்றன.

னவர்களல்லவே" (1தெச.5:4-5) என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார். அதாவது, கிறிஸ்தவர்கள் வெளிச்சத்தின் பிள்ளைகளாய் இருப்பத னால், அந்தகாரத்திலிருக்கும் அவிசுவாசிகளின்மீது வரும் தேவனு டைய கோபாக்கினைக்கு அவர்கள் உட்படமாட்டார்கள் என்பதை இவ்வசனங்களில் பவுல் தெளிவுபடுத்தியுள்ளார்.[56] இயேசுகிறிஸ்துவின் சிலுவைப்பலி பாவத்தின்மீதான தேவதண்டனையிலிருந்து மனிதரை விடுவித்துள்ளதினால், "பாவம் போக்கும் அவருடைய சிலுவைப் பலியினால் மீட்கப்பட்ட சபை மக்கள், பாவத்தின் தண்டனையாக உலகத்தின் இறுதிகாலத்தில் வரும் உபத்திரவங்களுக்கு உட்பட மாட்டார்கள்."[57]

> உபத்திரவகாலம் வருவதற்கு முன்பே சபை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்படும் என்பதை வெளிப்படுத்தல் 3:10 அறியத்தருகிறது.

அந்திகிறிஸ்துவின் ஆட்சியான உபத்திரவ காலம் ஆரம்பமாவதற்கு முன்பே சபை எடுத்துக்கொள்ளப்படும் என்பதற்கு ஆதாரமாக 1தெச லோனிக்கேயர் 4:17 மட்டுமே உள்ளது என்னும் சில ஆராய்ச்சியா ளர்களின் கருத்து தவறாகும். உலகின் இறுதிக் காலத்தில் நடை பெறும் சம்பவங்களை முழுமையாக முன்னறிவிக்கும் வெளிப்படுத்தல் புத்தகத்தில், உபத்திரவ காலம் ஆரம்பமாவதற்கும் முன்பே சபை எடுத்துக்கொள்ளப்பட்டு பரலோகத்தில் இருப்பதை நாம் காணலாம். வெளிப்படுத்தல் 4:1ல், "இவைகளுக்குப் பின்பு சம்பவிக்க வேண்டிய வைகளை நான் உனக்குக் காண்பிப்பேன்" என்று புத்தக ஆசிரியரான யோவானுக்குச் சொல்லப்பட்டது. இவ்வசனத்தில் "இவைகளுக்குப் பின்பு" என்னும் சொற்பிரயோகம் "சபைகளுக்குப் பின்பு" அல்லது "சபை காலத்திற்குப் பின்பு" என்னும் அர்த்தத்திலேயே மூலமொழி யில் உபயோகிக்கப்பட்டுள்ளது.[59] எனவே, இவ்வசனத்தில் "இவைக ளுக்குப் பின்பு சம்பவிப்பவைகள்" என்பது "சபைகளுக்குப் பின்பு சம்பவிப்பவைகள்" ஆகும். அதாவது, சபை உலகத்திலிருந்து எடுத் துக்கொள்ளப்பட்ட பின்பு சம்பவிப்பவைகளாகும். ஏனெனில், இதற்கு முன் உள்ள அதிகாரங்களில் சபைகளைப்பற்றிய தரிசனமே யோவா னுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், நான்காம் அதிகாரத்திற்குப்

[56] S.N.Gundry, ed., *Three Views on The Rapture*, p. 31.
[57] L.J.Wood, *Is the Rapture Next?*, p. 20.
[59] W.R.Newell, *The Book of Revelation*, p. 90

பின்னர் வெளிப்படுத்தல் புத்தகத்தில் சபையைப்பற்றி நாம் வாசிப்ப தில்லை. இதனால்தான், முதல் மூன்று அதிகாரங்களிலும் பல தடவைகள் இடம்பெறும் "சபை" என்னும் சொல் 4ம் அதிகாரத்திற்குப் பின்னர் இடம்பெறவில்லை. புத்தகத்தின் முடிவுரையிலேயே மறுபடியும் இச்சொல் உள்ளது (வெளி. 22:16). இதற்குக் காரணம், 4ம் அதிகாரத் திற்குப் பின்னர் முன்னறிவிக்கப்பட்டுள்ள சம்பவங்கள் நடைபெறும் போது சபை உலகத்தில் இருப்பதில்லை.[60] மேலும், வெளிப்படுத்தல் புத்தகத்தை மூன்று பகுதிகளாகப் பிரித்துக் காண்பிக்கும் முதலாம் அதிகாரம் 19ம் வசனத்தில் "நீ கண்டவைகள்" முதலாம் அதிகாரத் தில் யோவான் கண்ட தரிசனத்தையும், "இருக்கிறவைகள்" 2ம் 3ம் அதிகாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள உலகில் இருக்கும் சபைக ளைப்பற்றிய குறிப்பாகவும், "இவைகளுக்குப் பின்பு சம்பவிப்பவை கள்" என்னும் சொற்பிரயோகம் சபைகளுக்குப் பின்பு நடப்பவைகளை, அதாவது உலகிலிருந்து சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு சம்ப விப்பவைகளையும் குறிக்கின்றது.[61] உண்மையில், வெளிப்படுத்தல் புத்தகத்தை வியாக்கியானம் செய்வதற்குத் தேவனால் கொடுக்கப்பட் டுள்ள குறிப்பாகவே இவ்வசனம் உள்ளது.[62] இதன்படி, 4ம் அதிகாரத் திற்குப் பின்னர் சபை உலகத்தில் இருப்பதில்லை என்பதை அறிந்து கொள்கின்றோம்.

உபத்திரவ காலத்திற்கு முன்பு உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்ப டும் சபை பரலோகத்தில் இருப்பதை வெளிப்படுத்தல் நான்காம் அதிகாரம் அறியத்தருகின்றது. வெளிப்படுத்தல் 4ம் 5ம் அதிகாரங்க ளில் யோவானுக்குப் பரலோகக் காட்சி தரிசனமாகக் காண்பிக்கப்படு கின்றது. பரலோகத்தில் தேவனுடைய சிங்காசனத்தைச் சுற்றி உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட சபை இருப்பதை யோவான் கண்டதைப்பற்றி வெளிப்படுத்தல் 4ம் அதிகாரம் 2 முதல் 4 வரையி லான வசனங்களில் நாம் வாசிக்கலாம். இத்தரிசனத்தில், உலகிலி ருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட சபையானது 4ம் வசனத்தில் "இருபத்து நான்கு மூப்பர்களாக" சித்தரிக்கப்பட்டுள்ளது. இதனால்தான், "அந்த

60 J.F.Walvoord, *The Revelation of Jesus Christ: A Commentary*, p. 103.

61 R.L.Thomas, "John's Apocalyptic Outline" in *Bibliotheca Sacra*. 137 (1980), pp. 338-339; R.L.Thomas, *Revelation: An Exegetical Commentary*, pp. 115-116; J.F.Walvoord, *The Revelation of Jesus Christ: A Commentary*, p. 48.

62 W.A.Criswell, *Expository Sermons on Revelation*, p. 177.

சிங்காசனத்தைச் சூழ இருபத்து நான்கு சிங்காசனங்களிருந்தன. இருபத்து நான்கு மூப்பர்கள் வெண்வஸ்திரந்தரித்து, தங்கள் சிரசுக ளில் பொன்முடி சூடி, அந்தச் சிங்காசனங்களின் மேல் உட்காா்ந்திருக் கக் கண்டேன்" என்று 4ம் வசனத்தில் யோவான் குறிப்பிட்டுள்ளாா். இவ்வசனத்தில் மூப்பா்களாக சித்தரிக்கப்பட்டுள்ளவா்கள் யாா் என்பது பற்றி வித்தியாசமான கருத்துகள் கிறிஸ்தவா்கள் மத்தியில் உள்ள போதிலும், இவா்கள் யாா் என்பதை வெளிப்படுத்தல் 5:9-10ல் இவா்கள் பாடும் பாடல் நமக்கு அறியத்தருகிறது. இருபத்து நான்கு மூப்பா்க ளும் இயேசுகிறிஸ்துவை மகிமைப்படுத்தி பின்வருமாறு பாடினாா்கள்:

> தேவரீா் புஸ்தகத்தை வாங்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராயிருக்கிறீா். ஏனெனில் நீா் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காராிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களைத் தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு, எங்கள் தேவனுக்கு முன் பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியா்களுமாக்கினீா். நாங்கள் பூமியிலே அரசாளுவோம் என்று புதிய பாட்டைப் பாடினாா்கள்" (வெளிப்படுத்தல் 5:9-10).

இப்பாடலைப் பாடுபவா்கள் பரலோகத்திலிருக்கும் உயா்மட்ட தேவதூ தா்கள் என்று சிலா் கருதுகின்றபோதிலும்,[64] தேவதூதா்களினால் இப்பாடலைப் பாடமுடியாது.[65] ஏனெனில், இப்பாடலைப் பாடுகிறவா்கள்,

[64] R.H.Mounce, *Revelation: The New International Commentary on the New Testament*, p. 135; G.R.Osborne, *Revelation: Baker Exegetical Commentary on the New Testament*, p. 229; R.L.Thomas, *Revelation 1-7: An Exegetical Comme -ntary*, p. 348; F.F.Bruce, ed., *New International Bible Commentary*, p. 1605.

[65] வேதாகமத்தின் பழைய கையெழுத்துப் பிரதிகள் சிலவற்றில் இப்பாடல் தேவதூதா்களின் பாடலாக இருப்பதுபோல மாற்றப்பட்டுள்ளது. அதாவது, இப்பாடலில் 9ம் வசனத்தில் "எங்களை" என்னும் சொல் "மக்களை" என்று மாற்றப்பட்டுள்ளது. இதன்படி "எங்களை மீட்டுக்கொண்டீா்" என்பது "மக்களை மீட்டுக்கொண்டீா்" என்று உள்ளது. இதேபோல 10ம் வசனத்தில் "எங்களை" என்பது "அவா்களை" என்று மாற்றப்பட்டுள்ளது. இதன்படி, "எங்களை ராஜாக்களும் ஆசாரியா்களுமாக்கினீா்" என்பது "அவா்களை ராஜாக்களும் ஆசாரியா்களுமாக்கினீா்" என்று உள்ளது. இதேபோல, "நாங்கள் பூமியில் அரசாளுவோம்" என்பதும் "அவா்கள் பூமியில் அரசாளுவாா்கள்" என்று உள்ளது. இயேசுகிறிஸ்து மனிதரை மீட்டுக்கொண்டதற்காகத் தேவதூதா்கள் அவரை மகிமைப்படுத்தும் விதத்தில் மாற்றப்பட்டுள்ள இப்பாடலே சாியானது என்னும் எண்ணத்தில், தற்காலத்தில் வெளிவரும் புதிய வேதாகமங்கள் இப்

இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகையின்போது உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்படும் சபையே வெளிப்படுத்தல் புத்தகத்தில் இருபத்து நான்கு மூப்பர்களாக சித்தரிக்கப்பட்டுள்ளது. ஏனெனில், ஐந்தாம் அதிகாரத்தில் இவர்கள் பாடும் பாடலை, இசேுகிறிஸ்துவின் சிலுவைப் பலியினால் மீட்கப்பட்ட சபை மக்களினால் மாத்திரமே பாடமுடியும்.

தாங்கள் இயேசுகிறிஸ்துவின் சிலுவைப்பலியினால் மீட்கப்பட்டு ராஜாக்களும் ஆசாரியர்களுமாக இருப்பதாக இப்பாடலில் குறிப்பிட்டுள்ளனர் (வெளி.5:10). இயேசுகிறிஸ்துவின் சிலுவைப்பலி மனிதர்களுடைய பாவத்திற்கான பரிகாரமாகவே செலுத்தப்பட்டது. இதனால், தூதர்களுக்கு இதில் எவ்வித நன்மையும் இல்லை. இயேசுகிறிஸ்துவின் மூலமாக மக்களுக்கு அருளப்படும் இரட்சிப்பைப்பற்றி அறிந்துகொள்ள பரலோகத்திலிருக்கும் தூதர்கள் ஆசைப்பட்டார்கள் என்பதையும் (1பேது.1:12), விழுந்துபோன தூதர்கள் தண்டனைக்காக அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் (யூதா.6) என்பதையும் வேதாகமம் அறியத் தருகின்றதே தவிர, இவர்கள் இயேசுகிறிஸ்துவினால் மீட்கப்படுவார்கள் என்று கூறவில்லை. எனவே, தாங்கள் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கப்பட்டு, ராஜாக்களும் ஆசாரியர்களுமாய் இருப்பதாக இவர்களினால் பாடமுடியாது. உண்மையில், கிறிஸ்தவர்களே இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலியினால் மீட்கப்பட்டு ராஜாக்களும் ஆசாரியர்களுமாய் இருக்கின்றனர் (வெளி.1:6, 1பேது.2:5,9).[66]

---

பாடலை மொழிபெயர்த்துள்ளன. ஆனால், நாம் உபயோகிக்கும் தமிழ் வேதாகமமும் ஆங்கிலத்தில் KJV மொழிபெயர்ப்புமே இப்பாடலைச் சரியான விதத்தில் குறிப்பிட்டுள்ளன. தற்காலத்தில் இருக்கும் நூற்றுக்கணக்கான வேதாகமத்தின் கையெழுத்துப் பிரதிகளில், சில பிரதிகளில் மாத்திரம் உள்ளதே சரியானது என்று வாதிடுவது அர்த்தமற்றது. பெரும்பாலான கையெழுத்துப் பிரதிகளில் உள்ளவிதமாக இப்பாடல், மீட்கப்பட்ட மனிதரின் பாடலாகவே உள்ளது.

[66] "நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக" (வெளி.1:6) என்றும், "ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள்... நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" (1பேது.2:5,9) என்றும் வேதம் கூறுகிறது.

எனவே, இவர்களே உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டு பரலோ கத்தில் தேவனை மகிமைப்படுத்தும் இருபத்து நான்கு மூப்பர்களாகச் சித்தரிக்கப்பட்டுள்ளனர்.[67] மேலும், தூதர்கள் ராஜாக்களாகவும் ஆசாரி யர்களாகவும் இருப்பதில்லை என்பதனாலும் இருபத்து நான்கு மூப்பர் களைத் தூதர்களாக கருதமுடியாது.

வெளிப்படுத்தல் புத்தக தரிசனங்களில் சித்தரிக்கப்பட்டிருக்கும் இருபத்து நான்கு மூப்பர்களும் தூதர்கள் என்றால், இவர்களுடைய பாடலைத் தொடர்ந்து 11ம் வசனத்தில் (வெளி.5:11ல்) தூதர்களின் பாடலைத் தனியாகக் குறிப்பிடவேண்டிய அவசியமும் யோவானுக்கு இருந்திருக்காது. மூப்பர் என்னும் சொல் தேவதூதர்களைக் குறிப்பிட பொருத்தமற்றது மாத்திரமல்ல, வேதாகமத்தில் இச்சொல் தேவதூதர் களைக் குறிப்பிட உபயோகிக்கப்படவில்லை. எனவே, இருபத்து நான்கு மூப்பர்களையும் தேவதூதர்களாகக் கருதமுடியாது. அக்கால சபைகளில் மூப்பர்களே தலைவர்களாக இருந்ததினாலும் (1பேது.5:1, 2யோவா.1:2, 3யோவா.1:1), இவர்கள் சபை மக்களைப் பிரதிநிதித் துவம் வகிப்பவர்களாக இருந்ததினாலும், யோவானுடைய தரிசனத் தில் பரலோகத்திலிருக்கும் இருபத்து நான்கு மூப்பர்களும் உலகிலி ருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட சபை மக்களைப் பிரதிநிதித்துவம் வகிப்பவர்களாகவே உள்ளனர்.[68] எனினும், இருபத்து நான்கு மூப்பர் கள் மட்டுமல்ல, நான்கு ஜீவன்களும் இப்பாடலைப் பாடுவதாக 8ம் வசனம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆனால், மூலமொழியின் இலக் கண அமைப்பு முறையின்படி இருபத்து நான்கு மூப்பர்கள் மாத்திரமே சுரமண்டலங்களையும் பொற்கலசத்தையும் பிடித்துக்கொண்டிருக்கின் றனர்.[69] பரலோகத்தில் இருக்கும் நான்கு ஜீவன்களும் இவ்விதமாக ஆசாரியப் பணியை செய்வதில்லை. எனவே 9ம் 10ம் வசனங்களி லுள்ள பாடல் இருபத்து நான்கு மூப்பர்களினால் மாத்திரம் பாடப்படும் பாடலாகவே உள்ளது.

இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகையின்போது உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்படும் சபையே வெளிப்படுத்தல் புத்தகத்தில்

---

[67] J.F.Walvoord, *The Revelation*, p. 106; H.M.Morris, *Revelation Record*, p. 87.
[68] H.M.Morris, *The Revelation Record*, p. 87. J.D.Pentecost, *Things to Come*, p. 209; W.Scott, *Exposition of the Revelation*, p. 122.
[69] R.L.Thomas, *Revelation: An Exegetical Commentary*, p. 396.

இருபத்து நான்கு மூப்பர்களாக சித்தரிக்கப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்து வெளிப்படுத்தல் 3:21ல் சபை மக்களுக்கு கொடுக்கும் வாக்குத்தத்தத்தில், "நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்தது போல, ஜெயங்கொள் ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடே கூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்" என்று குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து, ஜெயம் கொள்ளும் சபை மக்களே தேவனோடுகூட சிங்காசனத்தில் அமர்ந்திடும் ஆசீர்வாதத்தைப் பெறுவார்கள் என்பதை அறிந்துகொள்கின்றோம்.[70] இயேசுகிறிஸ்து வாக்களித்தவிதமாக, வெளிப்படுத்தல் புத்தகத்தில் ஜெயங்கொண்ட சபை மக்கள் இருபத்து நான்கு மூப்பர்களாகத் தேவனுடைய சிங்காசனத்தைச் சுற்றி சிங்காசனங்களில் அமர்ந்திருக்கின்றனர். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஆசாரியர்கள் இருபத்து நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதியிலும் ஒருவர் ஏனையவர்களைப் பிரதிநிதித்துவம் வகிப்பவர்களாக இருந்ததைப்போலவே (1நாளா.24:1-9), புதிய ஏற்பாட்டுக் காலத்தில் ஆசாரியர்களாக இருக்கும் கிறிஸ்தவர்களும் இருபத்து நான்கு மூப்பர்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டுள்ளனர்.[71]

---

உலகின் இறுதி காலத்தில் நடைபெறும் சம்பவங்களை முழுமையாக முன்னறிவிக்கும் வெளிப்படுத்தல் புத்தகத்தில், உபத்திரவ காலம் ஆரம்பமாவதற்கும் முன்பே சபை எடுத்துக்கொள்ளப்பட்டு பரலோகத்தில் இருப்பதை நான்காம் ஐந்தாம் அதிகாரங்களில் நாம் காணலாம்.

---

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் சபை மக்கள் மாத்திரமே ஆசாரியர்களாக இருப்பதனால் (1பேது.2:5-9, வெளி.1:6), வெளிப்படுத்தல் புத்தக தரிசனங்களில் சபையே இருபத்து நான்கு மூப்பர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.[72] கிறிஸ்தவ சபையானது யூதரையும் புறஜாதியாரையும் உள்ளடக்கியதாய் இருப்பதனால், இருபத்து நான்கு மூப்பர்கள் இஸ்ரவேலின் பன்னிரு கோத்திரப் பிதாக்களையும், புதிய ஏற்பாட்டின் பன்னிரு அப்போஸ்தலர்களையும் பிரதிநிதித்துவம் வகிப்பதாக சில வேத ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.[73] ஆனால், சபையில் யூதரும் புறஜாதியாரும் இருப்பது உண்மை என்றாலும், சபையில்

[70] J.D.Pentecost, *Things to Come: A Study in Biblical Eschatology*, p. 208.
[71] J.F.Walvoord, *The Revelation of Jesus Christ*, p. 106.
[72] J.D.Pentecost, *Things to Come: A Study in Biblical Eschatology*, p. 208.
[73] L.J.Wood, *Is the Rapture Next?*, p. 27; G.D.Fee, *Revelation,* p. 69.

இத்தகைய இனரீதியான வேறுபாடு முழுமையாக நீக்கப்பட்டுள்ளதி னால் (கலா.3:27-28)[74] இவ்விளக்கம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை. மேலும், இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகையின்போது, கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் மாத்திரமே உயிர்ப்பிக்கப்படுவார்கள் (1தெச.4:16-17). அச்சமயம் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் உயிர்ப்பிக்கப்படாததினால், சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இருபத்து நான்கு மூப்பர்களில் பன்னிருவர் இஸ்ரவேலின் பன்னிரு கோத்திரப் பிதாக்கள் என்றும் கூறமுடியாது.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பக்தர்களுக்குக் கொடுக்கப்பட்ட பரலோகத் தரிசனங்களில் இந்த இருபத்து நான்கு மூப்பர்களும் இருக்கவில்லை (ஏசா.6, எசே.1-10) என்பதையும் நாம் கருத்திற் கொள்ள வேண்டியது அவசியம். எனவே, உலகின் இறுதிகாலங்க ளில் நடைபெறும் சம்பவங்களை அறியத்தரும் வெளிப்படுத்தல் புத்தகத்தில் இருக்கும் இருபத்து நான்கு மூப்பர்களும் உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட சபையைப் பிரதிநிதித்துவம் வகிப்பவர்களா கவே உள்ளனர். இவர்கள் சபை மக்களாக இராவிட்டால் பழைய ஏற்பாட்டுக் கால பக்தர்களுடைய பரலோகத் தரிசனங்களிலும் இந்த இருபத்து நான்கு மூப்பர்களும் இருந்திருப்பார்கள்.

வேதாகமத்தின் ஏனைய புத்தகங்களில் வெண்வஸ்திரம் தேவதூதரின் ஆடையாக இருப்பதைச் சுட்டிக்காட்டும் வேத ஆராய்ச்சியாளர்கள், வெளிப்படுத்தலில் வெண்வஸ்திரம் தரித்துள்ள மூப்பர்கள் தேவதூதர் கள் என்று கூறுகின்றனர்.[75] தேவதூதர்கள் மானிட உருவில் மனிதர் களுக்கு காட்சியளித்தபோதே வெண்வஸ்திரத்துடன் இருந்தனர் (யோவா.20:12, மத்.28:3, மாற்.16:5, அப்.1:10). ஆனால், பரலோகத்தி லும் தூதர்கள் வெண்வஸ்திரத்துடன் இருக்கின்றார்கள் என்பதற்கு எவ்வித ஆதாரங்களும் இல்லை. ஏனெனில், வெளிப்படுத்தல் புத்தகத் தில் வெண்வஸ்திரம் பரிசுத்தவான்களின் ஆடையாகவே உள்ளது

---

[74] "உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே. யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை. அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென் றும் பெண்ணென்றுமில்லை. நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றா யிருக்கிறீர்கள்" என்று கலாத்தியர் 3:27-28ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

[75] A.F.Johnson, *Revelation: Bible Study Commentary*, p. 71.

(வெளி.3:5, 3:18, 6:11, 7:13, 19:14). எனவே, இருபத்து நான்கு மூப்பர்களும் சபை மக்களாகவே உள்ளனர். மேலும், இவர்கள் பொன்முடி சூடியவர்களாகவும் இருப்பதனால், இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கப்பட்ட இவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு வெற்றியா ளர்களாகப் பரலோகத்தில் இருக்கின்றனர்.[76] கிரேக்க மொழியில் கிரீடம் என்பதற்கு இரண்டு வித்தியாசமான வார்த்தைகள் உள்ளன. ஒன்று "டயடீம்" (*diadem*) மற்றது "ஸ்டெபானஸ்" (*stephanos*). அரசர்களின் கிரீடமே டயடீம் என்று அழைக்கப்பட்டது. விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு சூடப்படும் கிரீடம் ஸ்டெபா னஸ் ஆகும். இவ்வசனத்தில் "ஸ்டெபானஸ்" என்னும் சொல் உபயோகிக்கப்பட்டுள்ளதினால், பரலோகத்திலிருக்கும் சபை மக்கள் வெற்றியாளர்களாக சிங்காசனத்தில் அமர்ந்திருக்கின்றனர்.[77] சபையில் ஜெயம் கொள்கிறவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட வெண்வஸ்திரம், பொன்முடி, சிங்காசனம், என்பவற்றுடன் இருபத்து நான்கு மூப்பர்களும் இருப்பதனால் (வெளி.3:5, 3:11, 3:21,4:4) இவர்கள் உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட சபை மக்களாகவே உள்ளனர்.

---

ஜெயம்கொள்ளும் சபை மக்களே தேவனோடுகூட சிங்காசனத்தில் அமர்ந்திடும் ஆசீர்வாதத்தைப் பெறுவார்கள் என்று வெளிப்படுத்தல் 3:21 கூறுவதனால், நான்காம் அதிகாரத்தில் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக சிங்காசனங்களில் அமர்ந்திருக்கும் இருபத்து நான்கு மூப்பர்களும் உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட சபை மக்களாகவே இருக்கின்றனர்.

---

வெளிப்படுத்தல் புத்தக தரிசனங்களில் பரலோகத்தில் இருக்கும் இருபத்து நான்கு மூப்பர்களும் இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகை யின்போது உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட சபையைப் பிரதிநி தித்துவம் வகிப்பவர்களாக இருக்கின்றனர். இவர்கள் பரலோகத்தில் இருப்பதை அறியத்தரும் 4ம் 5ம் அதிகாரங்களில் குறிப்பிடப்பட்டிருக் கும் தரிசனத்தின் பின்பு, 6ம் அதிகாரத்திலேயே அந்திகிறிஸ்து உலகை ஆளுகை செய்ய வருவதைப்பற்றிய தரிசனம் யோவானுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, உலகின் இறுதியில் முழு உலகை யும் தன்னுடைய ஆளுகையின் கீழ் வைத்திருக்கும் அந்திகிறிஸ்து என்பவன் வருவதற்கு முன்பே உலகத்திலிருந்து சபை எடுத்துக்

[76] W.MacDonald, *Believer's Bible Commentary*, p. 2362.
[77] J.F.Walvoord, *The Revelation of Jesus Christ*, p. 106.

கொள்ளப்படும். இதைப்பற்றி தெசலோனிக்கேயருக்கு எழுதப்பட்ட இரண்டாவது நிருபத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

> அவன் தன் காலத்திலே வெளிப்படும்படிக்கு, இப்பொழுது அவனைத் தடை செய்கிறது இன்னதென்றும் அறிந்திருக்கிறீர்களே. அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியை செய்கிறது. ஆனாலும் தடைசெய்கிறவன் நடுவிலிருந்து நீக்கப்படுமுன்னே அது வெளிப்படாது. நீக்கப்படும்போது, அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான். அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம்பண்ணுவார் (2 தெச.2:6-8).

அந்திகிறிஸ்துவையே பவுல் "அக்கிரமக்காரன்" என்று இவ்வசனங்களில் குறிப்பிட்டுள்ளார். இந்த அக்கிரமக்காரன் இவ்வுலகில் வெளிப்படுவதைத் "தடைசெய்கிறவனைப்பற்றி" இவ்வசனங்கள் கூறுகின்றன. பவுல் தெசலோனிக்கேயில் இருந்தபோது இதைப்பற்றி இச்சபை மக்களுக்கு விளக்கமாகப் போதித்திருந்ததினால் (2தெச.2:5), "இப்பொழுது அவனைத் தடைசெய்கிறது இன்னதென்றும் அறிந்திருக்கிறீர்களே" என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளாரே தவிர, தடைசெய்கிறவன் யார் என்பதைக் குறிப்பிட்டுக் கூறவில்லை. எனினும், தடைசெய்கிறவன் நீக்கப்படுமுன்னே அவன் வெளிப்படமாட்டான் என்று பவுல் கூறுவதனால், அந்திகிறிஸ்து வெளிப்படுவதைத் தற்காலத்தில் ஒருவர் தடைசெய்து கொண்டிருக்கின்றார் என்பது தெளிவாகிறது. எனினும், தடைசெய்வது யார் என்று பவுல் நேரடியாகக் குறிப்பிடாததினால் கிறிஸ்தவர்கள் மத்தியில் இதுபற்றிய வித்தியாசமான கருத்துகள் உருவாகியுள்ளன. தேவனால் மாத்திரமே அந்திகிறிஸ்து வெளிப்படுவதைத் தடைசெய்ய முடியும் என்பது உண்மை என்றாலும்,[78] தற்காலத்தில் தேவனுடைய செயல்கள் அனைத்தும் அவருடைய ஆவியானவ

பரிசுத்த ஆவியானவரின் வல்லமையுடன் இயங்கும் சபை சாத்தானுக்கு எதிராகச் செயற்படுவதனால், சபை உலகத்தில் இருக்கும் வரை சாத்தானால் அந்திகிறிஸ்துவின் ஆட்சியை உலகத்தில் கொண்டுவர முடியாது. ஏனெனில், இயேசுகிறிஸ்து தெரிவித்தவிதமாக பாதாளத்தின் வாசல்களினால் சபையை மேற்கொள்ள முடியாது (மத்தேயு 16:18).

[78] D.E.Hiebert, *1&2 Thessalonians: An Expositional Commentary*, p. 337; J.MacArthur, *The MacArthur Bible Commentary*, p. 1768.

ரால் சபையின் மூலமாகவே செய்யப்படுகின்றன. எனவே, தற்காலத்தில் சபைக்குள் செயல்படும் பரிசுத்த ஆவியானவரே அந்திகிறிஸ்து வெளிப்படுவதைத் தடைசெய்கிறவராய் இருக்கின்றார் என்பதை மறுப்பதற்கில்லை.[79] பரிசுத்த ஆவியானவர் ஆதி முதல் நித்தியமானவராக இருக்கின்றபோதிலும், பெந்தெகொஸ்தே நாளில் சபை உருவானபோது விசுவாசிகளின் உள்ளத்தில் நிரந்தரமாக வாசம் செய்யும் விதத்தில் சபைக்கு அருளப்பட்டார்.[80] எனவே, சபை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்படும்போது, சபையின் மூலமாகச் செயற்படுவதை ஆவியானவர் நிறுத்திக்கொள்வதனால் அந்திகிறிஸ்து வெளிப்படுவதைத் தடுக்கும் அவருடைய செயலும் உலகில் இல்லாமற் போய்விடும். எனவே, உலகிலிருந்து சபை எடுத்துக்கொள்ளப்படும் போது அந்திகிறிஸ்து வெளிப்படுவதைத் தடைசெய்யும் வல்லமையும் நீக்கப்படும்.[81] "பரிசுத்த ஆவியானவரின் வல்லமையுடன் இயங்கும் சபை சாத்தானுக்கு எதிராகச் செயற்படுவதனால், சபை உலகத்தில் இருக்கும் வரை சாத்தானால் அந்திகிறிஸ்துவின் ஆட்சியைக் கொண்டுவர முடியாது."[82] இதனால்தான், தாம் இவ்வுலகில் கட்டும் சபையைப்

[79] T.L.Constable, *2Thessalonians: The Bible Knowledge Commentary – New Testament*, p. 719; J.D.Pentecost, *Things to Come,* p. 205.

[80] பழைய ஏற்பாட்டுக் காலத்தில் சகலருக்கும் பரிசுத்த ஆவியானவர் அருளப்படவில்லை. அக்காலத்தில் தேவனுடைய ஆசாரியர்கள், தீர்க்கதரிசிகள், நியாயாதிபதிகள், அரசர்கள், மற்றும் தேவன் தம்முடைய பணியில் எவர்களை உபயோகித்தாரோ அவர்களுக்கும் மாத்திரமே பரிசுத்த ஆவியானவர் அருளப்பட்டார். ஆனால், புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து சபையின் அங்கத்தினர்களாக இருக்கும் அனைவருக்கும் அருளப்படுகின்றார். இதைப்பற்றி பழைய ஏற்பாட்டுக் காலத்தில் முன்னறிவிக்கப்பட்ட தீர்க்கதரிசனம் (யோவே.2:28-29) பெந்தெகொஸ்தே நாளில் நிறைவேறியது (அப்.2:16-21).

[81] அந்திகிறிஸ்துவைத் தடைசெய்கிறவரைப் பவுல் அஃறிணையில் "தடைசெய்கிறது" என்று குறிப்பிட்டுள்ளதினால், இது பரிசுத்த ஆவியானவராக இருக்கமுடியாது என்று சிலர் கருதுகின்றனர். ஆனால், அடுத்த வசனத்தில் "தடைசெய்கிறவன்" என்று ஆண்பாலில் குறிப்பிடப்பட்டுள்ளது. வேதாகமத்தின் மூலமொழியில் "ஆவி" என்னும் சொல் அஃறிணையில் இருப்பதனால், பரிசுத்த ஆவியானவர் இவ்விதமாக அஃறிணையிலும், ஆண்பாலிலும் பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளார். யோவான் 14:26, 15:26, 16:13-14 போன்ற வசனங்களில் பரிசுத்த ஆவியானவர் இவ்விதமாகக் குறிப்பிடப்பட்டுள்ளார். வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் சில இடங்களில் மரியாதையாக அவர் என்று பரிசுத்த ஆவியானவரைக் குறிப்பிட்டுள்ள போதிலும், மூலமொழியில் இவ்விதமாக இல்லை. எனவே, தடைசெய்கிறது என்னும் சொல் இருப்பதனால் இது பரிசுத்த ஆவியானவர் அல்ல என்று வாதிடமுடியாது.

[82] W.W.Wiersbe, *An Expository Commentary on Thessalonians*, pp. 138-139.

“பாதாளத்தின் வாசல்கள் மேற்கொள்வதில்லை” (மத்.16:18) என்று தெரிவித்துள்ளார். அதாவது, பாதாளத்தின் அதிகாரியான சாத்தானின் வல்லமையினால் வெளிப்படும் அந்திகிறிஸ்துவினால் சபையை மேற்கொண்டு தன்னுடைய ஆட்சியை உலகில் ஏற்படுத்த முடியாது என்பதை இயேசுகிறிஸ்து சுட்டிக்காட்டியுள்ளார். எனவே, உலகிலிருந்து சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பே அந்திகிறிஸ்து வெளிப்படுவான். அந்திகிறிஸ்துவின் ஆட்சிக் காலமே உலகின் உபத்திரவ காலமாக இருப்பதனால், இந்த உபத்திரவ காலம் ஆரம்பமாவதற்கும் முன்பே உலகிலிருக்கும் சபை எடுத்துக்கொள்ளப்படும்.

அந்திகிறிஸ்து வருவதற்கும் முன்பே உலகிலிருந்து சபை எடுத்துக் கொள்ளப்படும் என்பதை வேதாகமம் தெளிவாகப் போதித்தாலும், சில கிறிஸ்தவர்கள், அந்திகிறிஸ்துவின் ஏழு வருஷ ஆட்சிக் காலமான உபத்திரவ காலத்தின் நடுப்பகுதி வரை சபை உலகத்தில் இருக்கும் என்று கருதுகின்றனர்.[83] இவர்களைப் பொறுத்தவரை ஏழு வருஷகால அந்திகிறிஸ்துவின் ஆட்சிக்காலத்தில் முதல் மூன்றரை வருஷங்களும் சபை உலகத்தில் இருக்கும். இத்தகைய கருத்துக்கு ஆதாரமாகச் சுட்டிக்காட்டப்படும் முக்கியமான வேதப் பகுதியாக தானியேல் 9:27 உள்ளது. ஆனால் இவ்வசனத்தில், “அவர் (அதாவது அந்திகிறிஸ்து) ஒரு வாரமளவும் அநேகருக்கு உடன்படிக்கையை உறுதிப்படுத்தி, அந்த வாரம் பாதி சென்றபோது பலியையும் காணிக் கையையும் ஒழியப்பண்ணுவார்” என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. இவ் வசனத்தில் “ஒரு வாரம்” நாட்களைக் கொண்ட வாரமாக அல்ல, வருஷங்களைக் கொண்ட வாரமாகவே உள்ளது. எனவே, இங்கு ஒரு வாரம் ஏழு வருஷங்களைக் குறிக்கின்றது. (இதைப்பற்றி அடுத்த அத்தியாயத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது). அந்திகிறிஸ்துவின் ஏழு வருஷகால ஆட்சியைப்பற்றி முன்னறிவிக்கும் இவ்வசனத்தில், அதன் நடுப்பகுதியில் “பலியும் காணிக்கையும் ஒழிக்கப்படும்” என்று குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர, சபை எடுத்துக்கொள்ளப்படும் என்று முன்னறிவிக்கப்படவில்லை. மேலும், இங்கு பலியும் காணிக்கையும் பழைய ஏற்பாட்டுக்கால வழிபாட்டு முறையையே குறிக்கின்றது. அந்திகிறிஸ்து இவ்வுலகை ஆட்சி செய்யும் காலத்தில் யூதர்கள்

---

[83] கிறிஸ்தவ இறையியலில் இது, மிட்டிரிபியூலேஷனல் ரெப்ச்சர் (Midtribulational Rapture) என்று அழைக்கப்படுகிறது.

எருசலேமில் ஆலயத்தைக் கட்டி, பழைய ஏற்பாட்டு முறையிலான தங்களுடைய வழிபாட்டை மறுபடியும் ஆரம்பிப்பார்கள். உலக அரசு களுடன் அந்திகிறிஸ்து செய்யும் ஒப்பந்தங்கள் (தானி.9:27) யூதர்க ளுக்கு ஆலயத்தைக் கட்டவும் அங்கு வழிபாடுகளை ஆரம்பிக்கவும் வழிவகுக்கும். ஆனால், மக்கள் தன்னை வழிபடவேண்டும் என்று அந்திகிறிஸ்து எண்ணுவதனால், தன்னுடைய ஆட்சிக்காலத்தின் நடுப்பகுதியில் யூதர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த மத சுதந்திரத்தை ரத்துச் செய்வான். தானியேல் 9:27ல் இவ்விஷயமே குறிப்பிடப்பட்டுள் ளது. இதை ஆதாரமாகக் கொண்டு, சபை உபத்திரவ காலத்தின் நடுப்பகுதியிலேயே உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்படும் என்று கூறுவது அர்த்தமற்றது.

வேதாகம சத்தியத்தின்படி, அந்திகிறிஸ்துவின் ஆட்சிக்காலமான உபத்திரவ காலம் ஆரம்பிக்கப்படுவதற்கும் முன்பே சபை உலகிலி ருந்து பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும். இதனால்தான், உபத்திரவ காலத்தைப்பற்றிய வேதப்பகுதிகள் அனைத்தும் (மத்.24, தானி.12, லூக்.21, மாற்.13, வெளி.6-18) இஸ்ரவேல் மக்களுடன் தொடர்புற்றுள்ளன. அவை எவ்விதத்திலும், கிறிஸ்தவ சபையுடன் தொடர்புபடுத்தப்படவில்லை.[84] இது "யாக்கோபுக்கு இக்கட்டுக் காலம்" (எரே.30:7) என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. உபத்திரவ காலம் தானியேலுக்கு கொடுக்கப்பட்ட எழுபது வார கால தரிசனத்தின் இறுதி வாரமாக இருப்பதனால், இதை எவ்விதத்திலும் கிறிஸ்தவ சபையுடன் தொடர்புபடுத்தமுடியாது. யூதர்கள் பாபிலோனில் சிறைப்பட் டிருந்த காலத்தில், தன்னுடைய மக்களுக்கு எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்னும் சிந்தனையுடன் ஜெபித்த தானியேலுக்கு (தானி.9:1-20) கொடுக்கப்பட்ட எழுபது வார கால தரிசனத்தில் (தானி.9:21-27) "உன் ஜனத்தின்மேலும் உன் பரிசுத்த நகரத்தின்மேலும் எழுபது வாரங்கள் செல்லும்படி குறிக்கப்பட்டிருக்கிறது" என்று அவனுக்கு சொல்லப்பட்டது (தானி.9:24). எனவே, இது யூத ஜனங்களான இஸ்ர வேல் மக்களுக்கு நடைபெறும் காரியங்களை முன்னறிவிக்கும் தரிசனமாகவே உள்ளது. இதனால்தான் இதில் முதல் 69 வாரங்க ளைப்பற்றிய தரிசனங்கள் அனைத்தும் இஸ்ரவேல் மக்களுடைய வாழ்விலும் அவர்களுடைய தலைநகரான எருசலேமிலும் ஏற்கனவே

[84] W.Kelly, *Lectures on Second Coming of the Lord Jesus Christ*, pp. 186-237.

நிறைவேறியுள்ளன. (இந்நிறைவேறுதல்களைப்பற்றி அடுத்த அத்தியா யத்தில் விளக்கப்பட்டுள்ளது). முதல் 69 வாரங்களைப்பற்றிய தரிசனங்கள் அனைத்தும் இஸ்ரவேல் மக்களுடைய வாழ்வில் நிறை வேறியுள்ளதினால், இன்னும் நிறைவேறாமல் இருக்கும் 70வது வாரகால தரிசனமும் அவர்களுடைய வாழ்விலேயே நிறைவேறும். இந்த 70வது வார கால தரிசனம் அந்திகிறிஸ்துவினுடைய ஆட்சிக் காலத்தைப்பற்றிய முன்னறிவிப்பாக இருப்பதனால், இக்காலத்திற்குள் கிறிஸ்தவ சபை செல்வதில்லை. "இயேசுகிறிஸ்துவின் ஆயிர வருஷ ஆட்சிக்கு இஸ்ரவேல் மக்களை ஆயத்தப்படுத்துவதற்காகவே அந்தி கிறிஸ்துவின் ஆட்சிக்காலமான உபத்திரவ காலம் அவர்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது."[85] ஏனெனில், இயேசுகிறிஸ்துவின் முதல் வருகையிலிருந்து இன்றுவரை அவரை வெறுத்து ஒதுக்கும் யூதர்கள், அவரை ஏற்றுக்கொள்ளும் மனநிலையை அடையவேண்டும். அந்தி கிறிஸ்துவின் ஆட்சியில் அவர்கள் உபத்திரவங்களுக்கு முகங்கொ டுக்கும்போதே அவர்கள் தங்களுடைய நிலையை உணர்ந்து இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் நிலையை அடைவார்கள்.[86] எனவே, உபத்திரவ காலத்தின் இத்தகைய நோக்கத்திற்கும் இயேசுகிறிஸ் துவைத் தெய்வமாக வழிபடும் கிறிஸ்தவ சபைக்கும் எவ்வித தொடர் பும் இல்லை. இதனால், யூதர்களில் மனமாற்றத்தைக் கொண்டு வரும் அந்திகிறிஸ்துவின் ஆட்சிக்காலமான உபத்திரவ காலத்திற் குள் கிறிஸ்தவ சபை செல்வதில்லை. இக்காலம் ஆரம்பமாவதற்கும் முன்பே சபை உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்படும். உண்மையில், இயேசுகிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் அங்கத்தினர்களாக இருப்ப வர்களுக்கு கிடைக்கும் மிகப் பெரிய ஆசீர்வாதம், அந்திகிறிஸ்துவின் ஆட்சிக் காலமான கொடூரமான உபத்திரவகாலம் வருவதற்கு முன்பே அவர்கள் உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்படுவதாகும். கிறிஸ்தவர் களாகிய நாம் இதற்காகவே காத்திருக்கின்றோம் (1தெச.1:10).

## (3) உயிர்ப்பிக்கப்படும் மக்களுடன் சபை எடுத்துக்கொள்ளப்படும்

இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகையில் உலகிலிருக்கும் சபை எடுத்துக்கொள்ளப்படும்போது, உயிருடன் உலகில் இருக்கும்

[85] J.D.Pentecost, *Things to Come: A Study in Biblical Eschatology*, pp. 170, 275.
[86] L.J.Wood, *The Bible and Future Events*, p. 57.

இயேசுகிறிஸ்துவை நிராகரித்த யூதர்கள் அவரை ஏற்றுக்கொள்ளும் விதத்தில் மனமாற்றமடைவதற்காகவே அந்திகிறிஸ்துவின் ஆட்சிக் காலமான உபத்திரவகாலம் அனுமதிக்கப்பட்டுள்ளதினால், இயேசுகிறிஸ்துவை தெய்வமாக வழிபடும் கிறிஸ்தவர்கள் அக்காலத்திற்குள் செல்வதில்லை.

கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல, கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களும் உயிர்ப் பிக்கப்படுவார்கள். உண்மையில், உலகிலிருந்து சபை எடுத்துக் கொள்ளப்படும்போது, கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களே முதலில் உயிர்ப்பிக்கப்பட்டு எடுத்துக்கொள்ளப்படுவார்கள். மரிப்பதற்கு முன்னர் இயேசுகிறிஸ்துவோடு உறவை ஏற்படுத்திக்கொண்டவர்களே கிறிஸ்து வுக்குள் மரிப்பவர்கள். இதனால், இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலம் அவருடைய சரீரமாகிய சபையின் அங்கத்தினராகியவர்கள் மாத்திரமே அவருடைய வருகையின்போது உயிர்ப்பிக்கப்படுவார்கள். “காந்தம் இரும்பை மாத்திரம் கவர்ந்து இழுப்பதுபோல, இயேசுகிறிஸ் துவுடன் உறவுள்ளவர்கள் மாத்திரமே அவர் வருகையில் அவரால் எடுத்துக்கொள்ளப்படுவார்கள்.”[87] இதனால்தான், “அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்” என்று 1கொரிந்தியர் 15:23 கூறுகிறது. 1தெசலோனிக்கேயர் 4ம் அதிகாரத்தில் பவுல் இதைப்பற்றி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

> கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத் தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முத லாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்க ளோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்வித மாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம் (1தெச.4:16-17).

இயேசுகிறிஸ்துவின் வருகையின்போது “கிறிஸ்துவுக்குள் மரித்தவர் களே முதலாவது எழுந்திருப்பார்கள்” என்று இவ்வசனங்கள் அறி யத்தருவதனால், இவ்வுயிர்த்தெழுதலில் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்த வான்கள் பங்கடைய மாட்டார்கள் என்பது தெளிவாகின்றது. மரித்தோர்

[87] E.R.Lutzer, *The King is Coming*, p. 34.

அனைவரும் உயிர்த்தெழுவார்கள் என்பது உண்மை என்றாலும், சகலரும் ஒரே நேரத்தில் உயிர்த்தெழுவார்கள் என்று வேதாகமம் கூறவில்லை. தானியேல் 12:1-2 யோவான் 5:28-29 போன்ற வசனங்கள் நீதிமான்களினதும் துன்மார்க்கரினதும் உயிர்த்தெழுதல் ஒரே நேரத்தில் நடைபெறும் என்னும் எண்ணத்தை நமக்கு ஏற்படுத்தினாலும்,[88] இவ்வசனங்கள் சகலரும் உயிர்த்தெழுவார்கள் என்பதையே அறியத்தருகின்றன. அதாவது, நீதிமான்களும் துன்மார்க்கரும் உயிர்த்தெழுவார்கள் என்று இவ்வசனங்கள் கூறினாலும், இவர்கள் அனைவரும் ஒரே நேரத்தில் உயிர்த்தெழுவார்கள் என்று இவ்வசனங்கள் கூறவில்லை. 1தெசலோனிக்கெயர் 4:16-17 அறியத்தருவதுபோல, இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகையின்போது அவருக்குள் மரித்தவர்களே முதலில் உயிர்த்தெழுவார்கள். அதன்பின்னர் ஏழு வருஷங்களுக்கு அந்திகிறிஸ்துவின் ஆட்சி நடைபெறும். இவ்வாட்சியின் முடிவில் இயேசுகிறிஸ்து தமது ஆயிர வருஷ ஆட்சியை இவ்வுலகத்தில் ஆரம்பிக்கும்போது, அந்திகிறிஸ்துவின் ஆட்சிக் காலத்தில் இரத்த சாட்சிகளாக மரித்தவர்கள் உயிர்த்தெழுவார்கள் என்பதையும், மரணமடைந்த ஏனையவர்கள் அச்சமயம் உயிர்ப்பிக்கப்பட மாட்டார்கள் என்பதையும் வெளிப்படுத்தல் 20:4-5 அறியத்தருவதோடு,[89] அவர்கள்

---

[88] தானியேல் 12:1-2ல் "உன் ஜனத்தின் புத்திரருக்காக நிற்கிற பெரிய அதிபதியாகிய மிகாவேல் அக்காலத்திலே எழும்புவான். யாதொரு ஜாதியாரும் தோன்றினதுமுதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும். அக்காலத்திலே புஸ்தகத்தில் எழுதியிருக்கிறவர்களாகக் காணப்படுகிற உன் ஜனங்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள். பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்தியஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள்" என்றும் யோவான் 5:28-29ல், "இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம். ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும். அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

[89] "அன்றியும், நான் சிங்காசனங்களைக் கண்டேன். அவைகளின்மேல் உட்கார்ந்தார்கள். நியாயத்தீர்ப்புக் கொடுக்கும்படி அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. இயேசுவைப்பற்றிய சாட்சியினிமித்தமும் தேவனுடைய வசனத்தினிமித்தமும் சிரச்சேதம் பண்ணப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களையும், மிருகத்தையாவது அதின் சொரூபத்தையாவது வணங்காமலும் தங்கள் நெற்றியிலும் தங்கள் கையிலும் அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளாமலும் இருந்தவர்களையும் கண்டேன். அவர்கள் உயிர்த்துக் கிறிஸ்துவுடனேகூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள். மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும்

ஆயிரவருஷ ஆட்சியின் முடிவிலேயே உயிர்ப்பிக்கப்படுவார்கள் என்பதை வெளிப்படுத்தல் 20:11-13 சுட்டிக்காட்டுகிறது (வெளி.20:11-13).[90] எனவே, எல்லாரும் ஒரே நேரத்தில் உயிர்ப்பிக்கப்படுவதில்லை. இயேசுகிறிஸ்துவின் வருகையில் அவருடைய சபை மக்கள் மாத்திரமே உயிர்ப்பிக்கப்படுவார்கள் என்றே வேதாகமம் கூறுகிறது.

பழைய ஏற்பாட்டுப் பக்தர்கள் அந்திகிறிஸ்துவின் ஏழுவருஷ ஆட்சிக் காலமான உபத்திரவ காலத்தின் முடிவிலேயே உயிர்த்தெழுவார்கள் என்பதை தானி.12:1-3 அறியத்தருகின்றது. தன்னுடைய இன மக்களின் எதிர்காலத்தைப்பற்றிய சிந்தனையுடனிருந்த தானியேலுக்கு (தானி.9:1-23) கொடுக்கப்பட்ட தரிசனங்களில், அவனுடைய காலத்திலிருந்து உலகின் இறுதி வரை யூத ஜனங்களான இஸ்ரவேல் மக்களுக்கு என்ன நடக்கும் என்பதை அவனுக்குக் காண்பித்த தேவன், 12ம் அதிகாரத்தின் முதல் இரண்டு வசனங்களிலும் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் எப்பொழுது உயிர்த்தெழுவார்கள் என்பதைப் பின் வருமாறு தெரிவித்துள்ளார்.

> உன் ஜனத்தின் புத்திரருக்காக நிற்கிற பெரிய அதிபதியாகிய மிகாவேல் அக்காலத்திலே எழும்புவான். யாதொரு ஜாதியாரும் தோன்றினதுமுதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக் காலம் வரும். அக்காலத்திலே புஸ்தகத்தில் எழுதியிருக்கிறவர்களாகக் காணப்படுகிற உன் ஜனங்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள். பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்திய ஜீவனுக்கும், சிலர்

---

உயிரடையவில்லை. இதுவே முதலாம் உயிர்த்தெழுதல்'' என்று வெளிப்படுத்தல் 20:4-5ல் நாம் வாசிக்கின்றோம்.

[90] வெளிப்படுத்தல் 20:11-13ல் ''பின்பு, நான் பெரிய வெள்ளைச் சிங்காசனத்தையும் அதின்மேல் வீற்றிருக்கிறவரையும் கண்டேன். அவருடைய சமுகத்திலிருந்து பூமியும் வானமும் அகன்றுபோயின. அவைகளுக்கு இடங் காணப்படவில்லை. மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக் கண்டேன். அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன. ஜீவ புஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது. அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள். சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது. மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன. யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத்தீர்ப்படைந்தார்கள்'' என்று யோவான் குறிப்பிட்டுள்ளார்.

நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள் (தானியேல் 12:1-2).

இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள "அக்காலம்" உலகின் இறுதிக் காலம் என்பதை இதற்கு முந்தின அதிகாரம் அறியத்தருகின்றது.[91] இதனால், எதிர்காலத்தில் வரும் மேசியாவின் யுகத்தைப்பற்றிய முன்னறிவிப்பாகவே யூதர்கள் இவ்வசனங்களைப் புரிந்துகொண்டிருந்த னர்.[92] மேலும், நாம் ஏற்கனவே பார்த்தபடி, முதலாம் வசனத்தில் முன்னறிவிக்கப்பட்டுள்ள "யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக் காலம்" அந்திகிறிஸ்துவின் ஆட்சிக் காலமாய் உள்ளது.[93] அக்காலத்தின் முடிவிலேயே தானியே லின் ஜனங்களான யூதர்கள் அனைவரும் அந்திகிறிஸ்துவின் ஆளு கையிலிருந்து விடுவிக்கப்படுவதோடு, "பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறவர்களாகக்" குறிப்பிடப்பட்டுள்ள மரித்தோரின் உயிர்த்தெ ழுதலும் நடைபெறும். எனினும், பழைய ஏற்பாட்டுக்கால மக்கள் அனைவரும் ஒரே நேரத்தில் உயிர்த்தெழுவதாக இவ்வசனங்கள் கூறவில்லை. வெளிப்படுத்தல் 20ம் அதிகாரம் அறியத்தருவதுபோல, நித்திய ஜீவனுக்காக எழுந்திருப்பவர்கள் இயேசுகிறிஸ்துவின் ஆயிர வருஷ ஆட்சியின் ஆரம்பத்திலும், ஏனையவர்கள் அவ்வாட்சியின் இறுதியிலும் உயிர்த்தெழுவார்கள் (வெளி.20:4-5, 11-13).[94] ஆனால், இயேசுகிறிஸ்து உலகிலிருக்கும் தம்முடைய சபை மக்களை எடுத் துக்கொள்ள வரும்போது, அவருக்குள் மரித்த கிறிஸ்தவர்கள் உயிர்ப்பிக்கப்பட்டு, அவருடன் என்றென்றும் வாழும் நிலையை அடை வார்கள்.

---

இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகையின் முதல் கட்டம், உலகிலிருக்கும் கிறிஸ்தவர்கள் எடுத்துக்கொள்ளப்படுவதாய் மாத்திரமல்ல, அவர்கள் கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களுடன் மறுபடியும் சேர்ந்திடும் ஆனந்தமான நிகழ்வாகவும் இருக்கும்.

---

கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் உயிர்ப்பிக்கப்பட்டவுடன், உலகிலி ருக்கும் மெய்க்கிறிஸ்தவர்கள் இமைப்பொழுதில் மறுரூபமாக்கப்பட்டு

91 R.A.Anderson, *Sings and Wonders*, p. 145.

92 J.J.Slotki, *Daniel – Ezra – Nehemiah*, pp. 100-101.

93 S.R.Miller, *Daniel: The New American Commentary*, p. 313.

94 S.L.Hoyt, *The Judgment Seat of Christ*, p. 29. வெளிப்படுத்தல் 20:4-5, 11-13 வசனங்கள் அடிக்குறிப்பு இலக்கம் 89லும் 90லும் உள்ளன.

உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்படுவார்கள். 1கொரிந்தியர் 15ம் அதிகாரத்தில் பவுல் இதைப்பற்றி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

> இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன். நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை. ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப் பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள். நாமும் மறுரூபமாக்கப்படுவோம் (1கொரிந் தியர் 15:51-52).

இவ்வசனத்தில் மரணத்தையே பவுல் "நித்திரை" என்று குறிப்பிட்டுள் ளார். ஏனெனில், மரணம் மானிட வாழ்வின் முடிவாய் இராமல், ஒரு தற்காலிக நிலையாக இருப்பதேயாகும். அதாவது, இரவு நித்திரை கொள்ளும் நாம் காலையில் விழித்தெழுவதுபோலவே மரிப்பவர்களும் ஒருநாள் உயிர்த்தெழுவார்கள். மரணத்தின்போது மானிட சரீரத்தின் சடப்பொருள் பகுதியும் ஆவிக்குரிய பகுதியும் பிரிவடைகிறது.[95] மனிதனில் "சடப்பொருள் பகுதி" "ஆவிக்குரிய பகுதி" என்று இரண்டு பிரதான பகுதிகள் உள்ளன. தேவன் மனிதனைச் சிருஷ்டித்தபோது, மண்ணினால் அவனுடைய சரீரத்தைச் செய்து, அதற்குத் தம்முடைய ஜீவசுவாசத்தைக் கொடுத்தார் (ஆதி.2:7). இதனால், மனிதன் சடப்பொ ருள் பகுதியையும் ஆவிக்குரிய பகுதியையும் உடையவனாக இருக் கின்றான். சடப்பொருள் பகுதியில் மானிட சரீரத்தின் மாம்சம், எலும்பு போன்றவை உள்ளன. ஆவிக்குரிய பகுதியில் ஆவியும் ஆத்துமாவும் உள்ளன (1தெச.5:23). மரணத்தின்போது, மனிதனுடைய சடப்பொருள் பகுதியான சரீரம் மண்ணுக்குச் சென்றிட (பிர.3:20, 12:7, ஆதி.3:19, சங்.146:4), ஆவிக்குரிய பகுதி தேவனிடம் செல்கின்றது (பிர.12:7, 2கொரி.5:8, பிலி.1:23, அப்.7:59). மரணத்தின்போது மானிட சரீரம் மண்ணுக்குச் செல்கின்றது என்பதை வேதாகமம் சுட்டிக்காட்டும்போது, "எல்லாம் ஒரே இடத்துக்குப் போகிறது. எல்லாம் மண்ணிலே உண்டா கிறது, எல்லாம் மண்ணுக்குத் திரும்புகிறது" என்றும் (பிர.3:20), "மனிதன் மண்ணாயிருக்கிறான். அவன் மண்ணுக்கே திரும்புவான்"

[95] H.C.Thiessen, *Lectures in Systematic Theology*, p. 337; P.Enns, *The Moody Handbook of Theology*, p. 371; L.Berkhof, *Systematic Theology*, p. 668; M.J.Erickson, *Christian Theology*, p. 1169.

என்றும் (ஆதி.3:19), "மனிதனுடைய ஆவி அவனைவிட்டுப் பிரியும் போது, அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான்" என்றும் குறிப்பிட்டுள் ளது (சங்.146:4). அதேசமயம், மரணத்தின்போது மனிதனுடைய ஆவிக்குரிய பகுதி (அதாவது ஆவியும் ஆத்துமாவும்) தேவனிடம் செல்கின்றது என்பதனால், "ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகின்றது" என்றும் (பிர.12:7) "இந்தத் தேகத்தை விட்டுக் குடிபோய் கர்த்தரிடத்தில் குடியிருக்க செல்கிறது" என்றும் (2கொரி.5:8), "தேகத்தைவிட்டுப் பிரிந்து கிறிஸ்துவுடனேகூட இருப் போம்" என்றும் வேதாகமம் கூறுகிறது (பிலி.1:23). இதனால்தான், ஸ்தேவான் மரிக்கும்போது தன்னுடைய ஆவியைப் பரலோகத்தில் இருக்கும் இயேசுகிறிஸ்துவிடம் ஒப்படைத்தான் (அப்.7:59). (மரணத் தின் பின் மனிதனுக்கு என்ன நடக்கின்றது என்பதை முழுமையாக அறிந்துகொள்ள நான் எழுதிய "மரணத்தின் மறுபக்கம்" என்னும் நூலைப் பார்க்கவும்).

---

மரணத்தின்போது மனிதனின் சடப்பொருள் பகுதியான சரீரம் மண்ணுக்குச் சென்றிட, ஆவிக்குரிய பகுதியான ஆவியும் அத்துமாவும் தேவனிடம் செல்கின்றது. மனிதனுடைய சரீரம் உயிர்த்தெழும்போது இவைகள் மறுபடியுமாக ஒன்றாக இணைக்கப்படுகின்றன.

---

இயேசுகிறிஸ்து மறுபடியும் வரும்போது அவருக்குள் மரித்தவர்கள் அவருடனே வருவார்கள் என்று 1தெசலோனிக்கேயர் 4:14 கூறுகிறது. உண்மையில், இயேசுகிறிஸ்துவிடம் இருக்கும் மரித்தோரின் ஆவியும் ஆத்துமாவும் அவற்றின் சரீரத்தோடு மறுபடியுமாகச் சேர்க்கப்படுவதன் மூலம் கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் உயிர்த்தெழுவார்கள். இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்னர் எவ்வாறு ஆவிக்குரிய சரீரத்துடன் இருந்தாரோ அதேவிதமாக இவர்களும் "ஆவிக்குரிய சரீரத்தைப்" பெறுவார்கள். இதனால்தான் "மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள். நாமும் மறுரூபமாக்கப்படுவோம்" என்று பவுல் குறிப்பிட்டுள்ளார் (1கொரி. 15:53). 1கொரிந்தியர் 15ம் அதிகாரத்தில் "மரித்தோர் எப்படி எழுந்திருப்பார்கள்? எப்படிப்பட்ட சரீரத்துடன் வருவார்கள்?" என்னும் கேள்விகளுடன் இருந்தவர்களுக்குப் பதில ளிக்கும் பவுல் (1கொரி.15:35), அவர்கள் "ஆவிக்குரிய சரீரத்துடன் எழுந்திருப்பார்கள்" என்று தெரிவித்துள்ளார் (1கொரி.15:42-49). அதா வது, "நம்முடைய அற்பமான சரீரத்தை இயேசுகிறிஸ்து தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்" (பிலி.3:21).


இதனால்தான், “இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது, அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப் போம்” என்று 1யோவான் 3:2 கூறுகிறது. ஆவிக்குரிய மகிமையின் சரீரத்துடன் உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவை அவருடைய சீஷர் கள் அடையாளம் கண்டதுபோலவே (யோவா. 20:20, 21:12) கிறிஸ் துவுக்குள் மரித்த நம்முடைய நண்பர்களையும் உறவினர்களையும் நாம் அறிந்துகொள்ளக்கூடிய விதத்தில் அவர்கள் உயிர்த்தெழுவார் கள். அதன்பின்னர், உலகிலிருக்கும் கிறிஸ்தவர்களும் உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டு இத்தகைய மகிமையின் சரீரத்திற்கு மாற்றப் படுவார்கள். எனவே, இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகையின் முதல் கட்டத்தில், உலகிலிருக்கும் கிறிஸ்தவர்கள் எடுத்துக்கொள் ளப்படுவதாய் மாத்திரமல்ல, அவர்கள் கிறிஸ்துவுக்குள் மரித்தவர்க ளுடன் மறுபடியும் சேர்ந்திடும் ஆனந்தமான நிகழ்வாகவும் இருக்கும். அதன்பின்னர், உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட கிறிஸ் தவர்களும் உயிர்ப்பிக்கப்பட்ட கிறிஸ்தவர்களும் “எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்பார்கள்” (1தெச.4:17). எனவே, இயேசுகிறிஸ்து வின் இரண்டாவது வருகையின் முதல் கட்டத்தில் அவருக்குள் இருப்பவர்கள் மகிமையின் சரீரத்துடன் அவருடன் நித்தியகாலமாய் வாழும் நிலையை அடைவார்கள். உலகிலிருக்கும் மெய்க்கிறிஸ்த வர்கள் அனைவரும் இயேசுகிறிஸ்துவிடம் சென்ற பின்னர், உலகம் முழுவதும் ஏழு வருஷங்களுக்கு கிறிஸ்துவுக்கு எதிரான ஒருவனு டைய ஆட்சியின் கீழ் இருக்கும். கிறிஸ்தவ உலகில் அந்திகிறிஸ்து என்று அழைக்கப்படும் இவனுடைய ஆட்சிக்காலத்தைப்பற்றிய வேதா கமப் போதனைகள் அடுத்த அத்தியாயத்தில் விரிவாக விளக்கப்பட் டுள்ளன.



காந்தம் இரும்பை மாத்திரம் இழுத்தெடுப்பதுபோல, இயேசுகிறிஸ்து பரலோகத்திலிருந்து வானத்திற்கு வரும்போது உலகிலிருக்கும் கிறிஸ்தவர்களும் அவருக்குள் மரித்தவர்களும் அவரிடமாய் எடுத்துக்கொள்ளப்படுவார்கள் (ஏர்வின் லூட்சர்)

# ஆதியாகமம் 15:18-21ல் ஆபிரகாமுக்கு வாக்களிக்கப்பட்ட தேசம்


ஆதியாகமம் 15:18-21ல் எகிப்தின் நதிதுவக்கி ஐபிராத்து நதி என்னும் பெரிய நதி மட்டுமுள்ள தேசத்தை உன் சந்ததிக்கு கொடுத்தேன் என்று தேவன் ஆபிரகாமுடன் வாக்குத்தத்தம் பண்ணினார். ஆனாலும் இப்படத்தில் குறிப்பிட்டுள்ளபடி இதுவரையில் இஸ்ரவேல் மக்கள் நைல் நதிமுதல் ஐபிராத்து நதிவரையுள்ள பிரதேசத்தைச் சுதந்தரிக்கவில்லை. ஆனால் இப்பிரதேசம் முழுவதும் இயேசுகிறிஸ்துவின் ஆயிர வருஷ ஆட்சிக் காலத்தில் இஸ்ரவேல் மக்களுடையதாகும். இதைப்பற்றி 131 முதல் 137 வரையிலான பக்கங்களில் விளக்கப்பட்டுள்ளது.



# இரண்டாம் அத்தியாயத்தின் சுருக்கம்

இயேசுகிறிஸ்து தம்முடைய சபை மக்களை
இவ்வுலகிலிருந்து எடுத்துக்கொண்ட பின்னர்,
அவருக்கு எதிரான உலக ஆட்சியாளன்
முழு உலகத்தையும் தன்னுடைய
ஆளுகையின் கீழ் கொண்டுவருவான்.
அந்திகிறிஸ்து என்று அழைக்கப்படும்
இவனுடைய ஆட்சிக்காலம் உலகில்
ஏழு வருஷங்களுக்கு நீடிக்கும்.
இதில் முதல் மூன்றரை வருஷங்கள்
உலகில் சமாதானம் நிலவும்.
அக்காலத்தில் யூதர்கள் எருசலேமில் தங்களுடைய
ஆலயத்தைக் கட்டி தேவனை வழிபடுவார்கள்.
ஆனால், மூன்றரை வருஷங்களின் பின்னர்
அந்திகிறிஸ்து தன்னை வழிபடும்படி மக்களை
நிர்ப்பந்திப்பதோடு, எருசலேம் ஆலயத்தில்
தன்னுடைய சிலையையும் வைப்பான்.
தன்னை வழிபடுகிறவர்களுக்கு மட்டுமே
உலகில் வாழக்கூடிய நிலையை உருவாக்குவதற்காக
அவர்களுக்குத் தன்னுடைய
முத்திரையைப் போட்டு, அவர்களால் மட்டுமே
உணவுப் பொருட்களை வாங்கக்கூடிய நிலையை
அவன் ஏற்படுத்துவான். இதனால், பெரும்பாலான மக்கள்
அந்திகிறிஸ்துவை வழிபட்டு
அவனுடைய முத்திரையைப் பெறுவார்கள்.
ஏனையவர்கள் அந்திகிறிஸ்துவினால்
துன்புறுத்தப்படுவார்கள்.
மூன்றரை வருஷங்கள் நீடிக்கும் இக்கொடிய
உபத்திரவ காலத்தை இயேசுகிறிஸ்துவின்
பகிரங்க வருகை முடிவுக்கு கொண்டுவரும்.

# இரண்டாம் அத்தியாயம்




# உலகத்தை அந்திகிறிஸ்து ஆளுகை செய்தல்

இயேசுகிறிஸ்து தம்முடைய சபை மக்களை உலகிலிருந்து எடுத்துக் கொண்ட பின்னர் உலகம் முழுவதும் "அந்திகிறிஸ்து" என்பவனுடைய ஆளுகைக்கு உட்படும். அந்திகிறிஸ்து என்பது "அன்டிகிறிஸ்டொஸ்" என்னும் கிரேக்கச் சொல்லின் தமிழ் வடிவமாகும். இதனுடைய அர்த்தம் "கிறிஸ்துவுக்கு எதிரானவன்" என்பதாகும். புதிய ஏற்பாடு எழுதப்பட்ட கிரேக்க மொழியில் ஒரு சொல்லுக்கு முன் "அன்ட்டி" (*anti*) என்னும் சொல்லைச் சேர்த்தால் "அதற்கு எதிரானது" அல்லது "அதற்குப் பதிலாய் இருப்பது" என்னும் அர்த்தங்களைக் கொடுக்கும். எனவே, "கிறிஸ்டொஸ்" (*christos*) என்னும் சொல்லுக்கு முன் "அன்ட்டி" (*anti*) என்னும் சொல் சேர்க்கப்பட்டு உருவான "அன்ட்டிகிறிஸ்டொஸ்" என்னும் சொல், கிறிஸ்துவுக்கு எதிரானது என்னும் அர்த்தத்தை மட்டுமல்ல, கிறிஸ்துவுக்குப் பதிலாய் இருப்பது என்னும் அர்த்தத்தையும் கொண்டுள்ளது.[1] எனவே, அந்திகிறிஸ்து கிறிஸ்து

[1] R.Law, *The Tests of Life: A Study of the First Epistle of St. John,* p. 132.

உலகம் முழுவதும் தன்னைக் கிறிஸ்துவாகக் காண்பிக்கும், ஆனால் கிறிஸ்துவுக்கு எதிரான ஒருவனுடைய ஆளுகையின் கீழ் இருப்பதே அந்திகிறிஸ்துவின் ஆட்சிக்காலமாய் இருக்கும்.

வுக்கு எதிரானவனாக இருப்பது மாத்திரமல்ல, கிறிஸ்துவைப்போல தான் இருப்பதாக மக்களுக்குக் காண்பிப்பவனாகவும் இருப்பான்.[2] இவன் தன்னைத் தேவனென்று காண்பிக்கிறவனாக இருப்பான் என்று 1தெசலோனிக்கேயர் 2:4ல் குறிப்பிடப்பட்டுள்ளது இதை உறுதிப்படுத்துகிறது. எனவே, முழு உலகத்திற்கும் தன்னைக் கிறிஸ்துவாகக் காண்பிக்கும், ஆனால் கிறிஸ்துவுக்கு எதிரான ஒருவனுடைய ஆளுகையின் கீழ் இருப்பதே அந்திகிறிஸ்துவின் ஆட்சிக்காலமாகும்.

"அந்திகிறிஸ்து" என்னும் சொல் வேதாகமத்தில் ஐந்து தடவைகள் மாத்திரமே வருகிறது. இவை அனைத்தும் யோவானுடைய நிருபங்களிலேயே உள்ளபோதிலும், இந்நிருபத்தில் ஒரேயொரு தடவை மாத்திரமே இச்சொல் உலகின் இறுதிகாலத்தில் வரவிருக்கும் உலக ஆட்சியாளனைக் குறிக்கின்றது (1யோவா.2:18) ஏனைய இடங்களில் யோவானுடைய காலத்தில் இருந்த வேதப்புரட்டர்களைக் குறிப்பிடும் விதத்தில் இச்சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது. தானியேலின் தரிசனங்களில் அந்திகிறிஸ்து "சிறிய கொம்பு" "பாழாக்கும் அருவருப்பு" (தானி.9:27, 12:11, மத்.24:15) என்று குறிப்பிடப்பட்டுள்ளதோடு, வெளிப்படுத்தல் புத்தகத்தில் மிருகமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளான் (வெளி. 13:1-4). பவுல் இவனைக் "கேட்டின் மகனாகிய பாவ மனுஷன்" (2தெச.2:3) என்றும் "அக்கிரமக்காரன்" (2தெச.2:8-9) என்றும் அழைத்துள்ளார்.[3] ஆனால், கிறிஸ்தவ உலகில், "அந்திகிறிஸ்து" என்பதே பிரபலமான பெயராய் உள்ளது.

[2] C.Vaughan, *1,2,3 John: Bible Study Commentary*, p. 62.

[3] தம்மைக் காட்டிக்கொடுத்த யூதாசை இயேசுகிறிஸ்து "கேட்டின் மகன்" என்று யோவான் 17:12ல் குறிப்பிட்டுள்ளதினால், சிலர் இதை 2தெசலோனிக்கேயர் 2:3உடன் தொடர்புபடுத்தி யூதாசே உயிர்பெற்று அந்திகிறிஸ்துவாக வருவான் என்று கூறுகின்றனர். ஆனால் உலகிலிருந்து சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்னர் யூதாஸ் உயிர்ப்பிக்கப்படுவான் என்று வேதாகமம் எவ்விடத்திலும் குறிப்பிடவில்லை. யூதாஸ் கேடான சிந்தை உடையவனாக இருந்ததினாலேயே இயேசுகிறிஸ்து அவனை "கேட்டின் மகன்" என்று குறிப்பிட்டுள்ளார். உண்மையில், கேடான சிந்தையுடைய அனைவரையும் இவ்விதமாக அழைக்கலாம். இதனால்தான் பவுலும் கேடான சிந்தனையுள்ள அந்திகிறிஸ்துவை "கேட்டின் மகனாகிய பாவமனுஷன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

உலக சரித்திரத்தில் இதுவரையில் எவரும் முழு உலகத்தையும் தன்னுடைய ஆட்சியின் கீழ் வைத்திராததினால், இதுவரையில் அந்திகிறிஸ்து வெளிப்படவில்லை என்பது தெளிவாகின்றது. எனினும், யோவான் தன்னுடைய முதலாவது நிருபத்தில் "அந்திகிறிஸ்து வருகிறானென்று நீங்கள் கேள்விப்பட்டபடி இப்பொழுதும் அநேக அந்திகிறிஸ்துகள் இருக்கிறார்கள்" (1யோவா.2:18) என்று குறிப்பிட்டுள்ளதினால், அந்திகிறிஸ்து ஏற்கனவே வந்துவிட்டான் என்று சிலர் எண்ணுகின்றனர். ஆனால், யோவான் தன்னுடைய காலத்தில் இருந்த வேதப்புரட்டர்களையே அந்திகிறிஸ்துகள் என்று அழைத்துள்ளார். இவர்கள் கிறிஸ்துவுக்கு எதிரானவர்களாக இருந்ததினாலேயே இவ்விதமாக அழைக்கப்பட்டுள்ளனர் (1யோவா.2:22, 4:3).[4] எனினும், அந்திகிறிஸ்து என்றொருவன் வருவதைப்பற்றி கிறிஸ்தவர்கள் அறிந்துள்ளதைச் சுட்டிக்காட்டும் யோவான், இவனையும் "இப்பொழுது இருக்கும் அந்திகிறிஸ்துகளையும்" 2:18ல் வேறுபடுத்திக் காண்பித்துள்ளதை நாம் கருத்திற்கொள்ள வேண்டும். மேலும், வரவிருக்கின்ற அந்திகிறிஸ்துவை யோவான் ஒருமையிலேயே குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து, வரவிருக்கின்ற அந்திகிறிஸ்து தனிப்பட்ட ஒரு மனிதனாக இருப்பான் என்பது தெளிவாகின்றது.[5] இந்த அந்திகிறிஸ்து, தன்னுடைய காலத்தில் இருப்பதாக யோவான் கூறவில்லை. கிறிஸ்துவுக்கு எதிரானவன் ஒருவன் (அந்தி கிறிஸ்து) வருவான் என்று அவர்கள் கேள்விப்பட்டிருந்தார்கள். அவ்விதமாக, இப்பொழுதும் கிறிஸ்துவுக்கு எதிரானவர்கள் பலர் (அநேக அந்திகிறிஸ்துகள்) இருக்கிறார்கள் என்பதையே யோவான் சுட்டிக்காட்டுகிறார். தற்காலத்திலும் கிறிஸ்துவுக்கு எதிரானவர்கள் பலர் உலகத்தில் இருந்தாலும், உலகத்தின் இறுதிகாலத்தில் முழு உலகையும் தன்னுடைய ஆளுகையின் கீழ் வைத்திருக்கும் அந்திகிறிஸ்து வருவான். எனவே, "யோவான் ஒருமையில் குறிப்பிட்டுள்ள வரவிருக்கின்ற அந்திகிறிஸ்து எதிர்கால உலக ஆட்சியாளனாகவும், இப்போது இருக்கின்ற அந்திகிறிஸ்துகள் கிறிஸ்துவுக்கு எதிரான மக்களாகவும் இருக்கின்றனர்."[6] உலகின் இறுதிகாலத்தில் முழு உலகையும் தன்னுடைய ஆளுகையின்கீழ் வைத்திருக்கும் அந்திகிறிஸ்துவைப்பற்றி வேதாகமம் வெளிப்படுத்தியுள்ள காரியங்களை இவ்வத்தியாயத்தில் ஆராய்ந்து பார்ப்போம்.

[4] J.MacArthur, *The MacArthur Bible Commentary*, p. 1955.
[5] D.E.Hiebert, *The Epistles of John: An Expositional Commentary*, p. 109.
[6] C.Vaughan, *1,2,3 John: Bible Study Commentary*, p. 62.

## (1) அந்திகிறிஸ்துவின் ஆட்சிக்காலம்

உலகிலிருந்து சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பின்னர் ஆரம்பமாகும் அந்திகிறிஸ்துவின் ஆட்சிக்காலம் ஏழு வருஷங்களுக்கு நீடிக்கும் என்று வேதாகமம் கூறுகிறது. இதில் முதல் மூன்றரை வருஷங்கள் சமாதானமாகவும் இறுதி மூன்றரை வருஷங்களும் கொடிய உபத்திர வங்கள் நிறைந்ததாகவும் இருக்கும். எனினும், இயேசுகிறிஸ்து இக்காலத்தைப்பற்றி கூறும்போது, "மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும்" (மத்.24:21) என்று குறிப்பிட்டுள்ளதினால், ஏழு வருஷ அந்திகிறிஸ்துவின் ஆட்சிக்காலத்தையும் கிறிஸ்தவர்கள் "உபத்திரவகாலம்" என்றே அழைக்கின்றனர். ஆனால் இயேசு கிறிஸ்து, அந்திகிறிஸ்துவின் ஆட்சிக்காலத்தின் இறுதி மூன்றரை வருஷங்களை மட்டுமே உபத்திரவகாலம் என்று குறிப்பிட்டுள்ளார். ஏனெனில், தானியேல் குறிப்பிட்டுள்ள பாழாக்கும் அருவருப்பு ஆலயத் தில் நிற்கும்பொழுதே தாம் குறிப்பிடும் உபத்திரவங்கள் உலகத்தில் ஏற்படும் என்றே இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார் (மத்.24:15). மத்தேயு 24ம் அதிகாரத்திலும், மாற்கு 13ம் அதிகாரத்திலும், வெளிப்ப டுத்தல் புத்தகத்தில் 6 முதல் 18 வரையிலான அதிகாரங்களிலும் அந்திகிறிஸ்துவின் ஆட்சிக்கால சம்பவங்கள் முன்னறிவிக்கப்பட்டுள் ளன. இது ஏழு வருஷ காலத்திற்கு நீடிக்கும் என்பது தானியேல் 9:27ல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

> அவர் ஒரு வாரமளவும் அநேகருக்கு உடன்படிக்கையை உறு திப்படுத்தி, அந்த வாரம் பாதி சென்றபோது பலியையும் காணிக்கையையும் ஒழியப்பண்ணுவார். அருவருப்பான செட்டை களோடே பாழாக்குகிறவன் வந்து இறங்குவான், நிர்ணயிக்கப் பட்டிருக்கிற நிர்மூலம் பாழாக்குகிறவன்மேல் தீருமட்டும் சொரியும் (தானியேல் 9:27)

தானியேலுக்கு கொடுக்கப்பட்ட "எழுபது வாரங்களைப்பற்றிய தரிச னத்தின்" (தானி.9:24-27) "கடைசி வாரத்தைப்பற்றிய" குறிப்பே அந்திகிறிஸ்துவின் ஆட்சிக் காலத்தைப்பற்றிய முன்னறிவிப்பாகும். இவ்வசனத்தில் இக்காலம் "ஒரு வாரம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், "எழுபது வாரங்கள்" என்பது மூலமொழியில் "ஏழு எழுபது

கள்" என்றே உள்ளது. இதற்குக் காரணம், இத்தரிசனத்தின் வாரங்கள் "நாட்களைக் கொண்ட வாரங்களாக" அல்ல, "வருஷங்களைக் கொண்ட வாரங்களாக" இருப்பதேயாகும். ஏனெனில், யூதர்கள் மத்தியில் நாட்களைக் கொண்ட வாரக் கணிப்பீட்டு முறையும் வருஷங்களைக் கொண்ட வாரக் கணிப்பீட்டு முறையும் இருந்தது.[7] இதனால்தான், தானியேலின் புத்தகத்தில் நாட்களைக் கொண்ட வாரங்கள், "வாரங்களாகிய நாட்கள்" என்று வேறுபடுத்திக் காண்பிக்கப்பட்டுள்ளன (தானி.10:2-3). மேலும், தானியேல் வருஷங்களைப்பற்றிய சிந்தனையுடன் இருந்ததினால் (தானி.9:2) வருஷங்களின் அடிப்படையிலேயே அவர் எழுபது வாரங்களையும் குறிப்பிட்டுள்ளார்.[8] எனவே, தானியேலின் எழுபது வாரத்தரிசனத்தில் ஒரு வாரம் ஏழு வருஷங்களாகவே உள்ளது. இதை நாட்களைக் கொண்ட வாரங்களாக எடுத்தால், எழுபது வாரங்களில் 490 நாட்கள் (அதாவது, ஏறக்குறைய

[7] S.R.Miller, *Daniel: The New American Commentary*, p. 258; S.R.Driver, *Daniel: Cambridge Bible Commentary*, p. 135.

[8] J.D.Pentecost, *Daniel: The Bible Knowledge Commentary – OT*, p. 1361. சில வேதஆராய்ச்சியாளர்கள், இந்த எழுபது வாரங்களையும் கி.பி.முதலாம் நூற்றாண்டில் முடிவடையும் நீண்ட காலப்பகுதியைக் குறிப்பிடும் உருவகமாகக் கருதுகின்றனர் (E.J.Young, *The Prophecy of Daniel*, pp. 220-221; R.J.Rushdoony, *Thy Kingdom Come*, pp. 65-66). சிலர், இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை வரை நீடிக்கும் காலப்பகுதிக்கான உருவகமாக விளக்குகின்றனர் (C.F.Keil, *Biblical Commentary on the Book of Daniel*, pp. 336-337, 373-374; H.C.Leupold, *Exposition of Daniel*, pp. 417-418). ஆனால், இக்காலப் பகுதி எப்பொழுது ஆரம்பமாகின்றது என்பதில் இவர்கள் வித்தியாசமான கருத்துடையவர்களாக இருக்கின்றனர் (C.Boutflower, *In and Around the Book of Daniel*, pp. 168-170; D.H.Lurie, "A New Interpretation of Daniel's 'Sevens' and the Chronology of the Seventy 'Sevens'" in *Journal of the Evangelical Theological Society*. 33 (1990), pp. 303-309). இத்தீர்க்கதரிசனத்தின் முதல் 69 வாரமும் சொல்லர்த்தமாக 483 வருஷ கால இடைவெளியில் நிறைவேறியுள்ளதினால், இக்காலப்பகுதியை உருவகமாக வியாக்கியானம் செய்யமுடியாது. மேலும், இத்தரிசனத்தில் எழுபது வாரங்கள் மூன்று காலப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருப்பதும், இதை உருவகமாக விளக்க முடியாதிருப்பதற்கான இன்னுமொரு காரணமாய் உள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக, எழுபதாவது வாரம் சொல்லர்த்தமான ஏழு வருஷங்கள் என்பதை வெளிப்படுத்தல் புத்தகம் நேரடியாகவே அறியத்தருவதனால், எழுபது வாரங்களும் வருஷங்களைக் கொண்ட சொல்லர்த்தமான எழுபது வாரங்களாகவே உள்ளன (S.R.Miller, *Daniel: The New American Commentary*, p. 258). முதல் 69 வாரங்களும் சொல்லர்த்தமாக நிறைவேறியுள்ளதினால், கடைசி வாரமான 70வது வாரமும் சொல்லர்த்தமாகவே நிறைவேறும் (J.D. Pentecost, *Things to Come: A Study in Biblical Eschatology*, p. 239).

தானியேலின் எழுபது வாரத் தரிசனத்தில் 69வது வாரத்திற்குப் பின்னர் நடைபெற்ற சம்பவங்கள் 70வது வாரத்திற்கு முன்பு நடைபெறுபவைகளாக இருப்பதனால், அதாவது 69வது வாரத்திற்கும் 70வது வாரத்திற்கும் இடையில் நடைபெற்றுள்ளதனால், இவ்விரு வாரங்களுக்கும் இடையில் கால இடைவெளி இருக்கின்றது.

ஒன்றரை வருஷங்கள்) மாத்திரமே இருக்கும். ஆனால், இத்தரிசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவங்கள் நிறைவேறுவதற்கு இவ்வளவு நாட்கள் போதாது.[10] மேலும், எழுபது வாரத் தரிசனத்தில், 25ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முதல் 69 வாரங்களைப்பற்றிய தரிசனம், நெகேமியா முதல்[11] இயேசுகிறிஸ்து வரையிலான காலப் பகுதியில், குறிப்பாக 483 வருஷ கால இடைவெளியில் முழுமையாக நிறைவேறியுள்ளது.[12] ஆனால், அதன் பின்னர் நடைபெறும் இரண்டு சம்பவங்கள் எப்பொழுது நடைபெறும் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லாமல், இவைகள் 69 வாரத்திற்குப் பின்னர் நடைபெறும் என்று 26ம் வசனத்தில் முன்னறிவிக்கப்பட்டுள்ளது. அதேசமயம், இவை 27ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 70வது வாரச் சம்பவங்களுக்கு முன்பு நடைபெறுகின்றவைகளாக உள்ளன. எனவே, இத்தரிசனத்தில்,

[10] சில வேதஆராய்ச்சியாளர்கள் இக்காலப்பகுதியை 70 வருஷங்களாகவே கருதுகின்றனர் (J.A.Montgomery, *Daniel: A Critical and Exegetical Commentary*, pp. 391-392). ஆனால் இது தவறாகும். ஏனெனில், இத்தீர்க்க தரிசனத்தில் சொல்லப்பட்டவைகள் 70 வருஷங்களில் அல்ல, இதுவரையில் நிறைவேறியுள்ள 69 வார சம்பவங்களும் 483 வருஷ கால இடைவெளியிலேயே நடைபெற்றுள்ளன.

[11] எழுபது வாரங்கள் "எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக் கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்பட்டதில்" இருந்து ஆரம்பமாகின்றது (தானி.9:25). இது நெகேமியாவின் காலத்தில் கி.மு.444ல் நடைபெற்றது (நெகே.2:1-8).

[12] A.J.McClain, *Daniel's Prophecy of the Seventy Weeks*, 5. இத்தரிசனத்தின் முதலாவது விஷயம் எருசலேமை மறுபடியும் கட்டுவதற்கான கட்டளை பிறப்பிக்கப்படுவதாகும் (தானி.9:25). இது கி.மு.444ல் நடைபெற்றது (நெகே.2:1-8). இதிலிருந்து பிரபுவாகிய மேசியா வெளிப்படுவதற்கு ஏழு வாரமும் 62 வாரமும் செல்லும். எனவே, மொத்தம் 69 வாரங்கள். இதன் பின்னர் மேசியா சங்கரிக்கப்படுவார். மேசியா வெளிப்படுவது அவருடைய இறுதி எருசலேம் பவனியாகும். இச்சம்பவத்திலேயே இயேசுகிறிஸ்து தம்மை மேசியாவாக யூதர்களுக்கு வெளிப்படுத்தினார். இது கி.பி.33ல் நடைபெற்றது. எனவே, கி.மு 444 இலிருந்து கி.பி.33 வரை 69 வாரங்கள், அதாவது 483 வருஷங்கள் உள்ளன. இது யூதர்களுடைய நாட்காட்டியின்படி 360 நாட்கள் கொண்ட வருஷத்தின்படியான கணிப்பீடாகும் (J.D.Pentecost, *Daniel: The Bible Knowledge Commentary – Old Testament*, p. 1363).

69வது வாரத்திற்கும் 70வது வாரத்திற்கும் இடையில் கால இடைவெளி இருப்பது தெளிவாகின்றது. இதனால்தான், 70வது வார சம்பவங்கள் முன்னறிவிக்கப்படுவதற்கு முன்னர், 69வது வாரத்திற்குப் பின்னர் ஆனால், 70வது வாரத்திற்கு முன்னர் நடைபெறும் இரண்டு சம்பவங்கள் 26ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. அதாவது, மேசியா சங்கரிக்கப்படுவதும் (இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணமும்) எருசலேம் நகரம் அழிக்கப்படுவதும் "அந்த 69 வாரங்களுக்குப் பின்பு" நடைபெறுவதாகவே முன்னறிவிக்கப்பட்டுள்ளது.[13] எனவே, இவ்விரு சம்பவங்களும் 70வது வாரத்தில் நடைபெறுபவை அல்ல. இவ்விரு சம்பவங்களுக்குப் பின்னர் யூதர்கள் உலகெங்கும் சிதறடிக்கப்பட்டு 1948ம் ஆண்டு வரை நாடற்றவர்களாக இருந்ததினால், இக்காலத்தைப்பற்றி எதுவும் தானியேலுக்கு வெளிப்படுத்தப்படவில்லை.[14] இதனால், 69வது வாரத்திற்கும் 70வது வாரத்திற்கும் இடையில் கால இடைவெளி உள்ளது.[15] உண்மையில், 69வது

70 வாரங்களைப்பற்றிய தானியேலின் தரிசனத்தில்
69வது வாரத்திற்கும் 70வது வாரத்திற்கும் இடைப்பட்ட காலமே சபைக் காலமாகும். இக்காலம் முடிவடையும்போது, உலகிலிருந்து சபை எடுத்துக்கொள்ளப்படும். அதன் பின்பு 70வது வாரத்தைப்பற்றிய தரிசனம் நிறைவேறும். இதுவே அந்திகிறிஸ்துவின் ஆட்சிக்காலமாகும்

[13] 69 வாரங்களுக்குப் பின்னர் நடைபெறும் சம்பவமாகவே மேசியா சங்கரிக்கப்படுதல் உள்ளது (தானி.9:26). இது இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணத்தைப் பற்றிய முன்னறிவிப்பாகும். இதைப்போலவே, "நகரமும் பரிசுத்த ஸ்தலமும் அழிக்கப்படுதல்" கிபி.70ல் ரோமர்களினால் எருசலேம் நகரமும் ஆலயமும் அழிக்கப்பட்டதைப்பற்றிய தீர்க்கதரிசனமாகும் (J.F.Walvoord, *Daniel: The Key to Prophetic Revelation*, p. 216, 230; S.R.Miller, *Daniel Commentary*, p. 269).

[14] தானியேலுக்கு கொடுக்கப்பட்ட தரிசனம் யூதர்களையும் அவர்களுடைய புனித நகரமான எருசலேமையும் பற்றியது. "உன் ஜனம்" "உன் பரிசுத்த நகரம்" என்னும் சொற்பிரயோகங்கள் (தானி.9:24) இதை அறியத்தருகின்றன. சில வேத ஆராய்ச்சியாளர்கள் இச்சொற்பிரயோகங்களை "ஆவிக்குரிய இஸ்ரவேலான சபையாகவும்" "பரலோக எருசலேமாகவும்" வியாக்கியானம் செய்வது தவறாகும். "பரிசுத்த நகரம்" எருசலேம் நகரத்தையே குறிப்பதை நெகேமியா 11:1, 11:18, ஏசாயா 48:2, 52:11, மத்தேயு 4:5, 27:53 வெளிப்படுத்தல் 11:2 என்னும் வசனங்கள் அறியத்தருகின்றன. மேலும், தன்னுடைய ஜனத்துக்கும் நகரத்துக்கும் என்ன சம்பவிக்கும் என்னும் சிந்தனையுடன் ஜெபித்த தானியேலுக்கு கொடுக்கப்பட்ட பதிலாகவே இத்தரிசனம் இருப்பதனால், இது யூதர்களுடன் சம்பந்தப்பட்ட தீர்க்கதரிசனமாகவே உள்ளது. இதனால்தான், 69வது வாரத்திற்கும் 70வது வாரத்திற்கும் இடைப்பட்ட புறஜாதியாரின் காலமான சபைக் காலத்தைப்பற்றி இத்தரிசனத்தில் எதுவும் சொல்லப்படவில்லை.

[15] S.R.Miller, *Daniel: The New American Commentary*, p. 269.

வாரத்திற்கும் 70வது வாரத்திற்கும் இடைப்பட்ட காலமே சபைக் காலமாகும்.[16] இக்காலம் முடிவடையும்போது அதாவது, உலகிலிருந்து சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு 70வது வாரத்தைப்பற்றிய தரிசனம் நிறைவேறும்.

தானியேலுக்கு கொடுக்கப்பட்ட 70 வார கால தரிசனத்தின் கடைசி வாரம் அந்திகிறிஸ்துவின் ஆட்சிக் காலத்தைப்பற்றிய முன்னறிவிப்பா கும். எனினும், 27ம் வசனத்தின் ஆரம்பத்தில் வரும் "அவர்" யார் என்பதுபற்றி கிறிஸ்தவர்கள் மத்தியில் கருத்துமுரண்பாடுகள் உள் ளன. ஆனால், இதற்கு முன் உள்ள வசனத்துடன் ஒப்பிடும்போது, 27ம் வசனத்தின் "அவர்" 26ம் வசனத்திலுள்ள "வரப்போகிற பிரபு" என்பது தெளிவாகின்றது.[17] 26ம் வசனத்தில் முன்னறிவிக்கப்பட்ட வரப்போகிற பிரபு எருசலேம் நகரத்தையும் ஆலயத்தையும் கி.பி.70ல் அழித்த ரோம சக்கரவர்த்தியாகும். தானியேலின் தரிசனங்களில் சபைக் காலத்தைப்பற்றிய வெளிப்படுத்தல் கொடுக்கப்படாததினால், உலகின் இறுதிக்காலத்தில் வரவிருக்கும் அந்திகிறிஸ்துவின் ராட்சி யம் ரோம ராட்சியத்துடன் தொடர்புபடுத்தப்பட்ட விதத்தில் முன்னறி விக்கப்பட்டுள்ளது.[18] இதனால், 69வது வாரத்திற்கும் 70வது வாரத்திற்

---

[16] இச்சபைக் காலத்தைப்பற்றி இயேசுகிறிஸ்து முன்னறிவிக்கும்போது, "இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்" (மத்.16:18) என்றும், "வீடு கட்டு கிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்குத் தலைக் கல்லாயிற்று" (மத்.21:42) என்றும் குறிப்பிட்டுள்ளதோடு, "ஆகையினால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்கு கொடுக்கப்படும்" (மத்.21:43) என்று யூதர்களிடம் தெரிவித்துள் ளார். தானியேலுக்கு வெளிப்படுத்தப்பட்ட 70 வார கால தரிசனம் யூதர்களையும் எருசலேம் நகரத்தையும் பற்றியது என்பதனால் (தானி.9:16,24), தேவனுடைய ராஜ்யம் யூதர்களிடமிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத் தரும் புறஜாதியாரிடம் கொடுக்கப்பட்டுள்ள சபைக் காலத்தில் நடைபெறும் விஷயங்கள் எதுவும் தானியேலுக்கு அறிவிக்கப்படவில்லை (J.D.Pentecost, *Daniel: The Bible Knowledge Commentary – Old Testament*, pp. 1363-1364). பழைய ஏற்பாட்டுப் பக்தர்கள் அறிந்திராத இரகசியமாகவே சபை இருந்தது. ஏனெனில், இச்சத்தியம் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளுக்கு வெளிப்படுத்தப்படவில்லை (ரோ.16:25-26, எபே.3:3-6, 3:10-11 J.D.Pentecost, *Things to Come: A Study in Biblical Eschatology*, pp. 195-196).

[17] G.L.Archer, *Daniel: Expositors Bible Commentary*, p. 116.

[18] S.R.Miller, *Daniel: The New American Commentary*, p. 270; H.K.LaRondelle, "The Middle Ages Within the Scope of Apocalyptic Prophecy" in *Journal of the Evangelical Theological Society*. 32(1898), pp. 345-354.

கும் இடையிலுள்ள கால இடைவெளியை நாம் கருத்திற்கொண்டவர்களாக இத்தரிசனங்களைப் புரிந்துகொள்ளவேண்டும். இக்கால இடைவெளியைக் கருத்திற்கொள்ளாதவர்கள் "வரப்போகும் பிரபு" இயேசுகிறிஸ்து என்று கூறுவதோடு, 70வது வாரத் தரிசனமும் இயேசுகிறிஸ்துவின் முதல் வருகையில் நிறைவேறியதாகக் கருதுகின்றனர்.[19] தமிழில் வேதாகமத்தை மொழிபெயர்த்தவர்களும் இத்தகைய நம்பிக்கை உடையவர்களாக இருந்ததினால், வரப்போகிற பிரபுவை "அவர்" என்று மரியாதையாகக் குறிப்பிட்டுள்ளனர். ஆனால், 26ம் வசனத்தில் வரப்போகும் பிரபுவும் இயேசுகிறிஸ்துவும் வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளனர். இவ்வசனத்தில் இயேசுகிறிஸ்து "மேசியா" என்றே அழைக்கப்பட்டுள்ளார். வரப்போகும் பிரபு இயேசுகிறிஸ்து என்றால், 26ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அவருடைய ஜனங்கள் எருசலேம் நகரத்தையும் ஆலயத்தையும் அழித்துப்போட்டார்கள் என்று கூறுவது அர்த்தமற்றது. இயேசுகிறிஸ்துவின் ஜனங்கள் அல்ல, ரோம சக்கரவர்த்தியின் ஜனங்களே எருசலேம் நகரத்தையும் ஆலயத்தையும் கி.பி.70ல் அழித்தனர். எனவே 26ம் வசனத்தில் "வரப்போகும் பிரபு" ரோம சக்கரவர்த்தியாகவும், 27ம் வசனத்தில் "அவர்" அந்திகிறிஸ்துவாகவும் இருக்கின்றனர்.

---

அந்திகிறிஸ்து உலகத்தின் ஆட்சியைக் கைப்பற்றும்போது, யுத்தங்களின் மூலமாக அல்ல, சமாதான ஒப்பந்தங்கள் மூலம் சகல நாடுகளையும் தன்னுடைய ஆளுகையின் கீழ் கொண்டுவருவான்.

---

வரப்போகும் பிரபுவாகிய அந்திகிறிஸ்து ஆரம்பத்தில் அநேகருக்கு உடன்படிக்கையை உறுதிப்படுத்துவதாக 27ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.[20] அதாவது, அந்திகிறிஸ்து உலகத்தின் ஆட்சியைக் கைப்பற்றும்போது, யுத்தங்களின் மூலமாக உலகத்தை ஆக்கிரமிப்பதில்லை. அவன் சமாதான ஒப்பந்தங்கள் மூலம் சகல நாடுகளையும்

---

[19] S.Olyott, *Daniel: Welwyn Bible Commentary*, p. 124; E.J.Young, *The Prophecy of Daniel*, p. 209; P.Mauro, *The Seventy Weeks and the Great Tribulation*, p. 81.

[20] வரப்போகும் பிரபுவை இயேசுகிறிஸ்துவாகக் கருதுபவர்கள், இயேசுகிறிஸ்துவே உடன்படிக்கை செய்பவர் என்றும், இது அவருடைய சிலுவை மரணத்தின் மூலம் மக்களுக்கு கிடைக்கும் இரட்சிப்பைப்பற்றிய உடன்படிக்கை என்றும் கூறுகின்றனர் (E.J.Young, *The Prophecy of Daniel*, pp. 208,213). ஆனால், இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் உடன்படிக்கை ஏழு வருஷ காலத்திற்குச் செய்யப்படுவதாகும். இயேசுகிறிஸ்து இவ்விதமாக ஏழு வருஷ காலத்திற்கு எந்த உடன்படிக்கையும் செய்யவில்லை. அவருடைய உடன்படிக்கை நித்தியமானது (S.R.Miller, *Daniel: American Commentary*, p. 270).

தன்னுடைய ஆளுகையின் கீழ் கொண்டுவருவான். எனினும், இங்கு "உடன்படிக்கை" என்பதற்கு உபயோகிக்கப்பட்டுள்ள "காபார்" (*gabar*) என்னும் வழக்கத்திற்கு மாறான எபிரேயச் சொல், "அதிக பலமுள்ள ஒருவரால் பலவந்தமாகக் கொண்டுவரப்படும் ஒப்பந்தத் தையே குறிக்கின்றது."[21] எனவே, அந்திகிறிஸ்துவின் வல்லமை அவனுடன் ஒப்பந்தம் செய்வதைத் தவிர்க்கமுடியாத நிலைக்கு உலக நாடுகளை பலவந்தப்படுத்தும்.[22] அந்திகிறிஸ்து யுத்தமின்றி தன்னுடைய உலக ராட்சியத்தை ஸ்தாபிப்பதினாலேயே "வெள் ளைக் குதிரையில் வருபவனாகவும், அம்பில்லாத வில்லைப் பிடித்தி ருப்பவனாகவும்" வெளிப்படுத்தல் 6:2ல் சித்தரிக்கப்பட்டுள்ளதோடு, அவன் "ஜெயிக்கிறவனாகவும் ஜெயிப்பவனாகவும்" புறப்பட்டான் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது (வெளி.6:2).[23] ரோம கலாசாரத்தில் அரசர்களும் தளபதிகளும் வெற்றியாளர்களாகச் செல்லும்போது வெள்ளைக் குதிரையில் சவாரி செய்வது வழக்கம்.[24] எனவே, வெள் ளைக் குதிரையில் வரும் அந்திகிறிஸ்து வெற்றியாளனாக முழு உலகையும் தன்னுடைய ஆளுகையின் கீழ் கொண்டுவருவான்.[25] அவன் தன்னுடைய கையில் வில்லை வைத்திருந்தாலும் மூலமொழி யின்படி அதில் அம்பு இல்லை (வெளி.6:2). அதாவது அவன் யுத்தம்

---

[21] J.Baldwin, *Daniel: Tyndale Old Testament Commentary*, p. 171.

[22] பெரும்பாலான வேதஆராய்ச்சியாளர்கள் அந்திகிறிஸ்து யூதர்களுடனேயே ஒப்பந்தம் செய்வான் என்று கருதுகின்றனர் (S.R.Miller, *Daniel: The New American Commentary*, p. 271; L.Wood, *A Commentary on Daniel*, p. 259; J.D.Pentecost, *Daniel: The Bible Knowledge Commentary – Old Testament*, pp. 1363-1364). சிலர் இதை அவிசுவாசிகளான யூதர்களுடன் செய்யப்படும் ஒப்பந்தமாகவும் (J.F.Walvoord, *Daniel: The Key to Prophetic Revelation*, p. 234), ஏனையவர்கள் யூதர்களின் உயர்மட்டக் குழுவுடன் செய்யப்படும் ஒப்பந் தமாகவும் இதை மட்டுப்படுத்தியுள்ளனர் (J.A.Montgomery, *Daniel: A Critical and Exegetical Commentary*, p. 385). இவ்வசனத்தில் "அவன் அநேகருடன்" ஒப்பந்தம் செய்வதாகக் குறிப்பிடப்பட்டிருப்பதனால் இதைத் தனியொரு நாட்டுடனான ஒப்பந்தமாகக் கருதமுடியாது.

[23] M.Rissi, "The Rider on the White Horse: A Study of Revelation 6:1-2" in *Interpretation*. 33 (1964), pp. 407-418; D.K.K.Wong, "The First Horseman of Revelation 6" in *Bibliotheca Sacra*. 153 (1966), pp. 212-226; A.F.Johnson, *Revelation: The Expositor's Bible Commentary Volume 12*, p. 473) .

[24] J.F.Walvoord, *Revelation: The Bible Knowledge Commentary – NT*, p. 946.

[25] F.A.Tatford, *Prophecy's Last Word*, p. 86; J.F.Walvoord, *The Revelation of Jesus Christ: A Commentary*, pp. 128-129; J.MacArthur, *Expositional Commentary on Revelation*, p. 137.

இயேசுகிறிஸ்து தம்முடைய சபை மக்களை உலகிலிருந்து எடுத்துக்கொண்ட பின்னர் ஆரம்பமாகும் அந்திகிறிஸ்துவின் ஆட்சி இவ்வுலகத்தில் ஏழு வருஷங்களுக்கு நீடிக்கும்.

செய்யக்கூடியவனாக (வில்லுடன்) இருந்தாலும், அவனுக்கு கிடைக்கும் வெற்றி யுத்தமில்லாமல் கிடைக்கும் வெற்றியாக இருப்பதினாலேயே அவனுடைய கையிலிருக்கும் வில்லில் அம்பு இல்லை.[26] சமாதான ஒப்பந்தங்கள் மூலம் அந்திகிறிஸ்து வெற்றியாளனாக முழு உலகையும் தன்னுடைய ஆளுகையின் கீழ் கொண்டுவருவான்.[27] இதனால்தான், அவன் "ஒரு வாரமளவும் (அதாவது ஏழு வருஷங்களுக்கு) அநேகருக்கு உடன்படிக்கையை உறுதிப்படுத்துவான்" என்று தானியேலுக்கு அறிவிக்கப்பட்டது. எனவே, அவனுடைய ஆட்சி ஏழு வருஷங்களுக்கு இவ்வுலகில் இருக்கும்.

## (2) அந்திகிறிஸ்துவின் அகோரம்

அந்திகிறிஸ்து அமைதியான முறையில் தன்னுடைய ஆட்சியை ஆரம்பித்தாலும், மூன்றரை வருஷங்களின் பின்னர் அவன் தன்னுடைய அகோரமான சுயரூபத்தைக் காட்டத் தொடங்குவான். இதனால்தான், "அந்த வாரம் பாதி சென்றபோது பலியையும் காணிக்கையையும் ஒழியப்பண்ணுவான். அருவருப்பான செட்டைகளோடே பாழாக்குகிறவன் வந்து இறங்குவான்" என்றும் தானியேல் 9:27ல் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, அந்திகிறிஸ்து யூதர்களுடன் செய்திருந்த ஒப்பந்தத்தை முறித்து, மூன்றரை வருஷ காலமாக அவர்களுக்கு கொடுக்

[26] J.F.Walvoord, *Revelation: The Bible Knowledge Commentary – NT*, p. 947.
[27] R.L.Thomas, *Revelation 1-7: An Exegetical Commentary*, p. 423. வெளிப்படுத்தல் 19:11ல் இயேசுகிறிஸ்து வெள்ளைக் குதிரையில் வருபவராகச் சித்தரிக்கப்பட்டுள்ளதினால், 6:2லும் இயேசுகிறிஸ்துவே வெள்ளைக் குதிரையில் வருகின்றார் என்று சிலர் கருதுகின்றனர் (W.Hendriksen, *More than Conquerors: An Interpretation of the Book of Revelation*, pp. 93-96; Milligan, *The Book of Revelation*, p. 89). ஆனால், வெளிப்படுத்தல் 6ம் அதிகாரம், உபத்திரவ காலத்தின் ஆரம்பமாக இருப்பதனால், அக்காலத்தில் இயேசுகிறிஸ்து உலகுக்கு வருவதாகக் கூறமுடியாது. அவர் உபத்திரவ காலத்தின் முடிவிலேயே உலகத்திற்கு வருவார். இதனால்தான் அக்காலத்தில் அவர் வெற்றியாளராக வெள்ளைக் குதிரையில் வருபவராக 19ம் அதிகாரத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளார் (J.F.Walvoord, *The Revelation of Jesus Christ: A Commentary,* p. 126).
[29] S.R.Miller, *Daniel: The New American Commentary*, p. 273.

கப்பட்டிருந்த மதவழிபாட்டுச் சுதந்திரத்தை நீக்கி, தன்னை தெய்வ மாக வழிபடும்படி மக்களை நிர்ப்பந்திப்பான். இதற்காக அவன் யூதர்களுடைய ஆலயத்தின் வழிபாட்டு முறைகளான பலிகளையும் காணிக்கைகளையும் நிறுத்தி ஆலயத்தைப் பாழாக்குவான். தானியேலின் தரிசனத்தில் அந்திகிறிஸ்துவின் "அருவருப்பான செட்டைகள்" அவனுடைய செயல்களை வர்ணிக்கும் விவரணமாயுள்ளது.[29] அதாவது, பறவைகள் செட்டையை விரிக்கும்போது அவைகள் நீண்டு விரிவதுபோல, ஆலயத்தைப் பாழாக்கும் அவனுடைய செயல்களும் ஆலயம் முழுவதும் பரவும் என்பதை அவனுடைய செட்டைகள் உவமிக்கின்றன.[30] அக்காலத்தில் "அன்றாட பலி நீக்கப்பட்டு பாழாக்கும் அருவருப்பு ஸ்தாபிக்கப்படும்" என்று தானியேல் 12:11லும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, யூதர்களின் ஆலய வழிபாட்டுமுறையைத் தடைசெய்யும் அந்திகிறிஸ்து, அவர்களைத் தன்னை வழிபட வைப்பதற்காக ஆலயத்தில் தெய்வம்போல உட்கார்ந்திருப்பான் (2தெச.2:4). அதுமாத்திரமல்ல, அவன் ஆலயத்தில் இருக்க முடியாத நேரங்களில் அவனுக்குப் பதிலாக அவனுடைய சிலை ஆலயத்தில் வைக்கப்பட்டிருக்கும் (வெளி.13:14-15). இதுவே "பாழாக்கும் அருவ

[30] சில வேதாகம மொழிபெயர்ப்புகள், செட்டைகளை "ஆலயத்தின் செட்டைகளாகக்" குறிப்பிட்டுள்ளன. இதனால், பாழாக்கும் அருவருப்பு "ஆலயத்தின் செட்டையின்மீது" அதாவது, "ஆலயத்தின் உப்பரிகையின்" மீது வைக்கப்படும் என்று சிலர் இவ்வசனத்திற்கு விளக்கம் கொடுத்துள்ளனர் (E.J.Young, *The Prophecy of Daniel*, p. 128; J.F.Walvoord, *Daniel: The Key to Prophetic Revelation*, p. 236). ஆனால், இவ்வசனத்தில் ஆலயம் என்ற சொல் மூலமொழியில் இல்லை. செட்டைகள், பாழாக்கும் அருவருப்பினுடையதாகவே உள்ளன (G.L.Archer, *Daniel: The Expositor's Bible Commentary Volume 7*, p. 118). அதுமட்டுமல்ல, ஆலயத்தைப் பாழாக்கும் அருவருப்பான அந்திகிறிஸ்துவின் சிலை ஆலயத்தின் உப்பரிகையில் அல்ல, ஆலயத்தின் பரிசுத்த ஸ்தலத்திற்கு உள்ளேயே வைக்கப்படும் (மத்.24:15). எனினும், அந்திகிறிஸ்து மனிதனாக இருப்பதனால் அவனுக்கு செட்டைகள் இருக்கும் என்று நாம் கருதலாகாது. செட்டைகள் அவனுடைய தன்மையை அல்லது செயலை விளக்கும் உருவகமாகவே உள்ளன. இதனால்தான், ஆங்கிலத்தில் KJV மொழிபெயர்ப்பில், "அருவருப்பின் பரம்பலினால் அதைப் பாழாக்குவான்" என்னும் அர்த்தத்தில் இவ்வாக்கியம் for the overspreading of abominations he shall make it desolate என்றுள்ளது. ஆனால் NIV மொழிபெயர்ப்பின் 1984ம் ஆண்டு பதிப்பில் "ஆலயத்தின் சிறகில் பாழாக்கும் அருவருப்பை அவன் ஸ்தாபிப்பான்" என்று அர்த்தம் தரும் விதத்தில் on a wing of the temple he will set up an abomination that causes desolation என்றுள்ளது. நாம் உபயோகிக்கும் தமிழ் வேதாகமத்தின் மொழிபெயர்ப்பைப் போலவே NASB வேதாகமத்தில் and upon the wing of abomi -nations shall come one that maketh desolate என்றுள்ளது.

ருப்பு" அதாவது, ஆலயத்தைப் பாழாக்கும் அருவருப்பு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அக்காலத்தில் மக்கள் அந்திகிறிஸ்துவை தெய்வமாக வழிபடுவதற்கு நிர்ப்பந்திக்கப்படுவதனால், இதை மறுக்கும் யூதர்கள் அவனால் துன்புறுத்தப்படுவார்கள். இதனால்தான், தானியேல் குறிப்பிட்டுள்ள பாழாக்கும் அருவருப்பான அந்திகிறிஸ்துவை "ஆலயத்தின் பரிசுத்த ஸ்தலத்தில் காணும்போது, யூதேயாவில் இருப்பவர்களை அங்கிருந்து ஓடிப்போகும்படி" இயேசுகிறிஸ்து அறிவுறுத்தியுள்ளார் (மத்.24:15-20). ஏனெனில், "உலகமுண்டானது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும்" (மத்.24:21) என்று அவர் தெரிவித்துள்ளார். எனவே, அந்திகிறிஸ்து ஆலயத்தைப் பாழாக்கும்போதே இயேசுகிறிஸ்து குறிப்பிடும் உபத்திரவங்கள் ஆரம்பமாகும் என்பது தெளிவாகின்றது. தானியேல் 7ம் அதிகாரத்திலுள்ள தரிசனத்தில் இத்துயர காலம் மூன்றரை வருஷங்களுக்கு இருக்கும் என்பது, யூதர்களுடைய கணிப்பீட்டு முறையின்படி பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

> உன்னதமானவருக்கு விரோதமான வார்த்தைகளைப் பேசி உன்னதமானவருடைய பரிசுத்தவான்களை ஒடுக்கி, காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான். அவர்கள் ஒரு காலமும் காலங்களும் அரைக்காலமும் செல்லுமட்டும் அவன் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவார்கள் (தானியேல் 7:25).

இவ்வசனத்தில் "ஒரு காலமும் காலங்களும் அரைக்காலமும்" என்பது யூதர்களுடைய காலக்கணிப்பீட்டு முறையின்படி, "ஒரு காலம்" ஒரு வருஷத்தையும், "காலங்கள்" இரண்டு வருஷங்களையும் "அரைக் காலம்" ஆறு மாதங்களையும் குறிக்கின்றது.[31] எனவே, இது மூன்றரை வருஷங்களாகும். இச்சொற்பிரயோகம் வெளிப்படுத்தல் 12:14லும் உள்ளது. ஆனால், வெளிப்படுத்தல் 12:6ல் இக்காலம் 1260 நாட்கள் என்றும், வெளிப்படுத்தல் 11:2லும், 13:5லும் 42 மாதங்கள் என்றும்

---

அந்திகிறிஸ்து தன்னுடைய ஆட்சிக்காலத்தின் நடுப்பகுதியில் எருசலேம் ஆலயத்தைப் பாழாக்கும் போதே உலகிலிருக்கும் மக்களுக்கு கடுமையான உபத்திரவங்கள் ஏற்படத் தொடங்கும்

---

[31] J.D.Pentecost, *Daniel: The Bible Knowledge Commentary – OT*, p. 1354.

குறிப்பிடப்பட்டுள்ளது. யூதர்களுடைய 30 நாட்கள் கொண்ட மாதத்தின்படி 1260 நாட்கள் 42 மாதங்களாகவும், மூன்றரை வருஷங்களாகவும் உள்ளது.[33] அந்திகிறிஸ்து யூதர்களுடன் செய்திருந்த ஒப்பந்தத்தை முறித்து, அவர்களுடைய மதவழிபாட்டை நிறுத்தி, தன்னை வழிபட மக்களை நிர்ப்பந்திப்பது அவனுடைய ஆட்சியின் நடுப்பகுதியில் நடைபெறும் என்பதைத் தானியேல் 12:11லும் நாம் வாசிக்கலாம். இவ்வசனத்தில் "அன்றாட பலி நீக்கப்பட்டு பாழாக்கும் அருவருப்பு ஸ்தாபிக்கப்படுங்கால முதல் ஆயிரத்திருநூற்றுத்தொண்ணூறு நாள் செல்லும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வசனத்தில் "முப்பது நாட்கள்" அதிகமாக உள்ளது அநேகருக்கு குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆனால், அடுத்த வசனத்தையும் நாம் கருத்திற் கொள்ளும்போது, அந்திகிறிஸ்துவின் ஆட்சியை முடிவுக்கு கொண்டு வரும் இயேசுகிறிஸ்து, மக்களை நியாயந்தீர்த்து தம்முடைய ஆயிர வருஷ ஆட்சியை ஆரம்பிக்கும் நாள் வரைக்குமான காலக்கணிப்பீடாக தானியேல் 12:11ல் 1290 நாட்கள் இருப்பதை அறிந்திடலாம்.[34] எனினும், தானியேல் 9:27 அறியத்தருவதுபோல, தன்னுடைய ஆட்சிக் காலத்தின் நடுப்பகுதியில் அந்திகிறிஸ்து யூதர்களுடனான

[33] A.J.McClain, *Daniel's Prophecy of the Seventy Weeks*, pp. 6-7. சில வேத ஆராய்ச்சியாளர்கள் "ஒரு காலமும் காலங்களும் அரைக்காலமும்" என்னும் சொற்பிரயோகத்தை நீண்ட காலப்பகுதிக்கான அடையாளமாகக் கருதுகின்றனர் (C.F.Keil, *Biblical Commentary on the Book of Daniel*, pp. 242-244; E.J.Young, *The Prophecy of Daniel*, pp. 161-162). ஆனால், தானியேலின் தரிசனங்களிலும் வெளிப்படுத்தல் புத்தகத்திலும் இச்சொற்பிரயோகத்திற்குப் பதிலாக உபயோகிக்கப்பட்டுள்ள "42 மாதங்களும், 1260 நாட்களும்" யூதர்களுடைய 30 நாட்கள் கொண்ட மாதக் கணிப்பீட்டின்படி மூன்றரை வருஷங்களைக் குறிப்பதனால், இச்சொற்பிரயோகமும் மூன்றரை வருஷங்களாகவே உள்ளது (J.A.Montgomery, *Daniel: International Critical Commentary*, p. 312; A.Lacocque, *The Book of Daniel*, p. 154; G.L.Archer, *Daniel: The Expositor's Bible Commentary*, p. 94; S.R.Miller, *Daniel: The New American Commentary*, p. 215).

[34] J.F.Walvoord, *Daniel: The Key to Prophetic Revelation*, pp. 295-296. இவ்வசனத்தில், 1335 நாள்மட்டும் காத்திருந்து சேருகிறவன் பாக்கியவான்" என்று, இன்னும் 45 நாட்கள் மேலதிகமாகச் சேர்க்கப்பட்டுள்ளன. அந்திகிறிஸ்து நரகத்திற்குத் தள்ளப்பட்ட பின்னர், உலக மக்கள் நியாயந்தீர்க்கப்படுவதும், சிதறியிருக்கும் இஸ்ரவேல் மக்கள் ஒன்றுசேர்க்கப்படுவதும் நடைபெறும் (மத்.25:31-46, எசே.20:34-38), இச்சம்பவங்கள் நடைபெறும்போது அழிவிலிருந்து தப்புபவர்களே 1335 நாள்மட்டும் காத்திருந்து சேருகிறவர்கள் என்று தானியேல் 12:12ல் குறிப்பிடப்பட்டுள்ளனர். இவர்கள் பாக்கியவான்களாக இருப்பதற்குக் காரணம், இவர்கள் அழிவிலிருந்து தப்புவது மாத்திரமல்ல, இயேசுகிறிஸ்துவின் ஆயிர வருஷ ஆட்சிக்கு உட்படுபவர்களாகவும் இருப்பதேயாகும்.

ஒப்பந்தத்தை முறிப்பதனால், முதல் மூன்றரை வருஷங்களும் சமாதானமாக இருக்கும் அவனுடைய ஆட்சியின் இறுதி மூன்றரை வருஷங்களும் கடும் உபத்திரவங்களினால் நிறைந்திருக்கும்.

அந்திகிறிஸ்துவின் ஆட்சிக் காலத்தின் முதல் மூன்றரை வருஷங்களும் சமாதானமாகவும், இறுதி மூன்றரை வருஷங்களும் உபத்திரவமானதாகவும் இருக்கும்.

அந்திகிறிஸ்து யூதருடன் செய்திருந்த ஒப்பந்தத்தை முறித்து, அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த மதச் சுதந்திரத்தை நீக்கிய பின்னர், அவன் அவர்களைத் துன்புறுத்தத் தொடங்குவான். அவன், "உன்னதமானவருக்கு விரோதமான வார்த்தைகளைப் பேசி உன்னதமானவருடைய பரிசுத்தவான்களை ஒடுக்கி காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான்" என்று தானியேல் 7:25 கூறுகிறது. "உன்னதமானவருக்கு விரோதமாகப் பேசுதல்" என்பது தேவனைத் தூஷிப்பதாகும். "42 மாதங்கள், அதாவது மூன்றரை வருஷங்கள் அந்திகிறிஸ்து தேவனைத் தூஷிப்பான் என்றும், அவன் தேவனுடைய நாமத்தையும், அவருடைய வாசஸ்தலத்தையும் பரலோகத்தில் வாசமாயிருக்கிறவர்களையும் தூஷிப்பான்" என்றும் வெளிப்படுத்தல் 13:5-6ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், மக்கள் தன்னை வழிபடவேண்டும் என்று அந்திகிறிஸ்து நிர்ப்பந்திப்பதும், தன்னைத் தேவனாகக் காண்பிப்பதும் (2தெச.2:4, வெளி.13:8, 13:12)[35] தேவனுடைய அதிகாரத்திற்கு எதிராகப் பேசுவதும் தேவதூஷணமாகவே உள்ளது.[36] தேவனைத் தூஷிக்கும் அந்திகிறிஸ்து, "காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான்" என்றும் தானியேல் 7:25ல் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, கிறிஸ்தவத்துடனும் யூதமார்க்கத்துடனும் சம்பந்தப்பட்ட விடுமுறை காலங்களையும், தேவவழிபாட்டுடன் சம்பந்தப்பட்ட கட்டளைகளையும் அவன் மாற்றுவான்.[37] இத்தகைய செயல்கள் மூலம் மக்கள் தன்னை தெய்வமாக வழிபடுவதற்கு அந்திகிறிஸ்து நிர்ப்பந்திப்பான்.

தேவனுக்கு எதிராகச் செயற்படும் அந்திகிறிஸ்து "உன்னதமானவருடைய பரிசுத்தவான்களை" ஒடுக்குவான் என்றும் தானியேல் 9:25

[35] S.R.Miller, *Daniel: The New American Commentary*, p. 214; R.L.Thomas, *Revelation 8-22: An Exegetical Commentary*, p. 161.
[36] J.D.Pentecost, *Daniel: The Bible Knowledge Commentary – OT*, p. 1354.
[37] J.A.Montgomery, *Daniel: International Critical Commentary*, p. 311.

கூறுகிறது. அந்திகிறிஸ்துவின் ஆட்சிக் காலத்தில் உலகில் இருக்கும் இப்பரிசுத்தவான்கள் யார் என்பது பற்றி வேதஆராய்ச்சியாளர்கள் மத்தியில் கருத்து முரண்பாடுகள் உள்ளன. உபத்திரவ காலத்திலும் கிறிஸ்தவ சபை உலகத்தில் இருக்கும் என்று எண்ணும் ஆராய்ச்சியா ளர்கள், இவர்களைச் சபை மக்களாகவே கருதுகின்றனர்.[38] ஆனால் நாம் ஏற்கனவே பார்த்தபடி, அந்திகிறிஸ்து வருவதற்கும் முன்பே உலகிலிருந்து சபை எடுத்துக்கொள்ளப்படுவதனால், இவர்களைச் சபை மக்களாகக் கருதமுடியாது. இதனால் சிலர் இவர்களை இஸ்ர வேல் மக்களாக மட்டுப்படுத்தியுள்ளனர்.[39] ஆனால், இஸ்ரவேல் மக்கள் மட்டுமல்ல, உலகின் சகல இனத்திலும் மக்கள் அந்திகிறிஸ்துவினால் துன்புறுத்தப்படுவார்கள் (வெளி.7:9-14). தானியேல் 7:25ன்படி இவர்கள் "உன்னதமானவரின் பரிசுத்தவான்களாக" இருப்பதனால் அந்திகிறிஸ் துவின் ஆட்சிக் காலத்திலும் மக்கள் இரட்சிக்கப்படுவார்கள் என்பதை அறிந்துகொள்கின்றோம். இவர்கள், அந்திகிறிஸ்துவை தெய்வமாக ஏற்றுக்கொள்ள மறுப்பதனால் அவனால் துன்புறுத்தப்பட்டு மரணமடை வார்கள் (வெளி.13:15).

அந்திகிறிஸ்துவின் காலத்தில் இரட்சிக்கப்படுபவர்களே அவனால் துன்புறுத்தப்படுவார்கள் என்றால், உலகிலிருந்து சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்னர் எப்படி மக்கள் இரட்சிக்கப்படுவார்கள் என்று நாம் கேட்கலாம். ஆனால், உலகிலிருந்து சபை எடுத்துக்கொள்ளப் பட்ட பின்னர், தேவன் தம்முடைய இரண்டு சாட்சிகளை உலகத்திற்கு அனுப்புவார்.[40] இவர்கள் 1260 நாட்கள் (மூன்றரை வருஷங்கள்)

---

[38] R.C.H.Lenski, *The Interpretation of St.John's Revelation*, p. 261.

[39] J.D.Pentecost, *Daniel: The Bible Knowledge Commentary – OT*, p. 1354.

[40] தேவனால் அனுப்பப்படும் இரண்டு சாட்சிகளும் யார் என்பதைப்பற்றி கிறிஸ்தவர்கள் மத்தியில் கருத்துமுரண்பாடுகள் உள்ளன. சிலர் இவர்களை ஏனோக்கும் எலியாவும் என்று கருதுகின்றனர் (J.M.Lundquist & S.D.Ricks, *By Study and Also By Faith*, pp. 252-265; R.Govett, *The Apocalypse*, pp. 225-250). மற்றவர்கள், இவர்கள் மோசேயும் எலியாவும் என்று கூறுகின்றனர். இரண்டு சாட்சிகளுடைய ஊழியத்தைப்பற்றி வெளிப்படுத்தல் 11:3-6ல் முன்னறி விக்கப்பட்டுள்ள விஷயங்கள், மோசேக்கும் எலியாவுக்குமே பொருத்தமானவை களாக உள்ளன. அதாவது, சகலவிதமான வாதைகளையும் கொண்டுவருவதும், தண்ணீரை இரத்தமாக மாற்றுவதும் மோசேயின் பணியையும், அக்கினியைக் கொண்டுவருவதும் மழையை நிறுத்துவதும் எலியாவின் பணியையுமே ஒத்திருக்கிறது (யாத்.7:14-11:10, 1ராஜா.17:1, 2ராஜா.1:10, யாக்.5:17, வெளி.13:5-6). மேலும், இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகையில் அவர் எவ்விதமாய்

இஸ்ரவேல் மக்களுக்குத் தேவனுடைய வார்த்தையை அறிவிப்பார்கள் (வெளி.11:3). இவர்களுடைய ஊழியம் அந்திகிறிஸ்துவின் சமாதானமான முதல் மூன்றரை வருஷ காலத்திலேயே நடைபெறும்.[41] இவர்களுடைய ஊழிய காலத்தின் முடிவிலேயே (அதாவது மூன்றரை வருஷங்களின் பின்பே) இவர்கள் அந்திகிறிஸ்துவினால் கொல்லப்படுவதனால் (வெளி.11:3-11), இவர்களுடைய ஊழியத்தை இறுதி மூன்றரை வருஷங்களில் நடைபெறுவதாகக் கருதமுடியாது. ஏனெனில், அக்காலத்தில் இயேசுகிறிஸ்துவின் பகிரங்க வருகை நடைபெறும் என்பதனால், இவர்களைக் கொல்லக்கூடிய நிலையில் அந்திகிறிஸ்து இருக்கமாட்டான். அதுமட்டுமல்ல, இவர்களுடைய மரணத்திற்குப்

---

இருப்பார் என்பதை முன்னறிவித்த மறுரூபமலையில், அவருடன் மோசேயும் எலியாவும் தோன்றியதும் (மத்.17:1-5), தேவனால் அனுப்பப்படும் இரண்டு சாட்சிகளாகவும் இவர்களே இருப்பார்கள் என்பதை உறுதிப்படுத்துகிறது. யூதர்களின் பாரம்பரியத்தின்படி, மோசேயும் எலியாவுமே பழைய ஏற்பாட்டைப் பிரதிநிதித்துவம் வகிக்கின்றார்கள். இரண்டு சாட்சிகளின் ஊழியம் இஸ்ரவேல் மக்களுக்கானது என்பதனால், அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தேவசெய்தியாளர்களாக மோசேயும் எலியாவுமே அவர்களிடத்திற்கு அனுப்பப்படுவார்கள். மோசேயும் எலியாவும் மறுபடியும் வருவார்கள் என்பதை உபாகமம் 18:15-18, மல்கியா 4:5 முன்னறிவித்துள்ளது (R.L.Thomas, *Revelation 8-22: An Exegetical Commentary*, p. 88; J.B.Smith, *A Revelation of Jesus Christ*, pp. 169-170; I.M.Haldeman, *Synopsis of the Book of Revelation*, p. 13). சில வேத ஆராய்ச்சியாளர்கள், மோசேயையும் எலியாவையும்போல செயல்படும் இருவரைத் தேவன் அனுப்புவார் என்று கருதுகின்றனர் (G.R.Osborne, *Revelation: Baker Exegetical Commentary on the New Testament*, p. 435; J.F.Walvoord, *The Revelation of Jesus Christ*, p. 179). ஆனால், யூதர்கள் மத்தியில் உண்மையான மோசேயும் எலியாவுமே வருவார்கள் என்னும் நம்பிக்கை இருப்பதனால் (யோவா.1:21 உபா.18:15-18, மல்.4:5), கடைசி காலத்தில் இஸ்ரவேல் மக்களை இரட்சிப்புக்குள் கொண்டுவருவதற்காகத் தேவன் மோசேயையும் எலியாவையுமே அவர்களிடத்தில் அனுப்புவார். ஒரு தரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனிதருக்கு நியமிக்கப்பட்டுள்ளதினால் (எபி.9:27), மரணத்தைக் காணாத ஏனோக்கு (ஆதி.5:24) மரிப்பதற்காக மறுபடியும் இவ்வுலகத்திற்கு வரவேண்டும் என்று கருதுபவர்களே, வரவிருக்கும் இரண்டு சாட்சிகளில் ஒருவர் ஏனோக்கு என்று கூறுகின்றனர் (எலியாவும் இதேவிதமாகவே பரலோகத்திற்குச் சென்றார் (2ராஜா.2:11). ஆனால், மனிதர் அனைவரும் கட்டாயம் மரிக்கவேண்டும் என்பதற்கு விதிவிலக்கும் உள்ளது. இதனால்தான், இயேசுகிறிஸ்து மறுபடியும் வரும்போது எடுத்துக்கொள்ளப்படும் சபைமக்கள் மரணத்தைக் காணாமல் மறுரூபமாக்கப்பட்ட நிலையில் இயேசுகிறிஸ்துவோடு செல்வார்கள் (1தெச.4:17). எனவே, மரிப்பதற்காக ஏனோக்கு மறுபடியும் இவ்வுலகுக்கு வரவேண்டும் என்று கூறுவது அர்த்தமற்றது.

[41] J.C.Whitcomb, *Daniel: Everyman's Bible Commentary*, p. 134.

பின்னர் நடைபெறும் பல சம்பவங்கள் வெளிப்படுத்தல் 11ம் அதிகாரத்தில் முன்னறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, அந்திகிறிஸ்துவின் ஆட்சியின் முதல் மூன்றரை வருஷ காலத்தில் தேவனால் அனுப்பப்படும் இரண்டு சாட்சிகளின் ஊழியம் இஸ்ரவேல் மக்களில் திரளானவர்களை இரட்சிப்புக்குள் கொண்டுவரும். இவர்களே அந்திகிறிஸ்துவினால் துன்புறுத்தப்படும் “உன்னதமானவருடைய பரிசுத்தவான்கள்” என்று குறிப்பிடப்பட்டுள்ளனர்.

---

அந்திகிறிஸ்துவின் ஆட்சியின் முதல் மூன்றரை வருஷ காலத்தில் தேவனால் அனுப்பப்படும் இரண்டு சாட்சிகளின் ஊழியம் இஸ்ரவேல் மக்களில் திரளானவர்களை இரட்சிப்புக்குள் கொண்டுவரும். இதில் 144000 பேர் உலகெங்கும் ஊழியர்களாகப் பணிபுரிவார்கள்.

---

தேவனால் அனுப்பப்படும் இரண்டு சாட்சிகளின் ஊழியத்தினால் இரட்சிக்கப்படும் இஸ்ரவேல் மக்களில் 144000 பேர் உலகெங்கும் சென்று சுவிசேஷத்தை அறிவிப்பார்கள். வெளிப்படுத்தல் 7ம் அதிகாரத்தில் முத்திரை போடப்படும் இந்த 144000பேரும் யார் என்பதைப் பற்றி கிறிஸ்தவர்கள் மத்தியில் பல்வேறுவிதமான கருத்துகள் உள்ளபோதிலும், இவர்கள் “தேவனுடைய ஊழியர்கள்” என்பதை வெளிப்படுத்தல் 7:3உம், “இவர்கள் இஸ்ரவேல் மக்கள்” என்பதை வெளிப்படுத்தல் 7:4-8உம் நேரடியாகவே அறியத்தருகின்றன. இவர்களுடைய ஊழியத்தினால் உலகின் சகல இனத்திலும் திரளான மக்கள் இரட்சிக்கப்படுவார்கள் (வெளி.7:9). ஆனால், இவர்கள் அனைவரும் அந்திகிறிஸ்துவினால் துன்புறுத்தப்பட்டு கொல்லப்படுவார்கள். இதனால்தான் மரணத்தின் பின் பரலோகத்தில் இருக்கும் “இவர்கள், மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்” என்று வெளிப்படுத்தல் 7:14ல் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, அந்திகிறிஸ்துவின் காலத்தில் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து இரட்சிக்கப்படுபவர்கள் அனைவரும் துன்புறுத்தப்பட்டு கொல்லப்படும் அளவுக்கு அந்திகிறிஸ்து கொடூரமானவனாக இருப்பான். இதனாலேயே வெளிப்படுத்தல் புத்தகத்தில் இவன் மிருகமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளான் (வெளி. 13:1).

அந்திகிறிஸ்து ஆரம்பத்தில் சமாதானமான முறையில் தன்னுடைய ஆட்சியை ஆரம்பிக்கிறவனாக வெள்ளைக் குதிரையில் வெற்றியாளனாக வருவதை வெளிப்படுத்தல் 6ம் அதிகாரத்தில் யோவான்

அந்திகிறிஸ்து ஆரம்பத்தில் சமாதானமான முறையில் தன்னுடைய ஆட்சியை ஆரம்பிக்கிறவனாக வெள்ளைக் குதிரையில் வெற்றியாளனாக வருவதை வெளிப்படுத்தல் 6ம் அதிகாரத்தில் யோவான் கண்டாலும், அதன் பின்னர் வித்தியாசமான தன்மைகளுடன் வித்தியாசமான நிறமுள்ள குதிரைகளில் அந்திகிறிஸ்து வருவதையும் யோவான் கண்டார்

கண்டாலும், அதனைத் தொடர்ந்து இன்னும் மூன்று குதிரைகள் வருவதும், அவை வேறு நிறங்களில் இருப்பதும் அவருக்கு காண்பிக் கப்பட்டது (வெளி.6:1-8). உண்மையில், அந்திகிறிஸ்துவின் வித்தியாச மான தன்மைகளே நான்கு வித்தியாசமான நிறமுள்ள குதிரைகளில் வருபவர்கள் மூலம் காண்பிக்கப்பட்டுள்ளது. யோவானுடைய தரிசனத் தில், உலகின் இறுதிகாலச் சம்பவங்கள் எழுதப்பட்டுள்ள தேவனு டைய கரத்திலிருக்கும் புத்தகத்தின் முத்திரைகளை இயேசுகிறிஸ்து உடைக்கும்போது, அந்திகிறிஸ்துவின் காலத்தில் நடைபெறும் சம்ப வங்கள் யோவானுக்கு காண்பிக்கப்பட்டன (வெளி.5:1-7, 6:1-17).[44] புத்தகத்தின் முதலாவது முத்திரையை இயேசுகிறிஸ்து உடைத்த போது, அந்திகிறிஸ்து வெள்ளைக் குதிரையில் வெற்றியாளனாக வருவதை யோவான் கண்டார் (வெளி.6:1-2). ஆனால், புத்தகத்தின் இரண்டாவது முத்திரையை இயேசுகிறிஸ்து உடைத்தபோது, "சிவப் பான வேறொரு குதிரை புறப்பட்டது. அதின் மேல் ஏறியிருந்தவ னுக்கு பூமியிலுள்ளவர்கள் ஒருவரையொருவர் கொலைசெய்யத்தக்க

[44] தேவனுடைய கரத்திலிருக்கும் ஏழு முத்திரைகளையுடைய புத்தகம் (வெளி. 5:1) உலகின் இறுதிகாலத்தில் நடைபெறும் சம்பவங்களைக் கொண்டுள்ளதி னால் (A.F.Johnson, *Revelation: The Expositor's Bible Commentary*, pp. 466-467, 472), இதில் எழுதப்பட்டுள்ளவைகளைக் கடந்தகாலத்தில் நடைபெற்றவைக ளாகவோ, அல்லது நிகழ்காலத்தில் நடக்கின்றவைகளாகவோ வியாக்கியானம் செய்ய முடியாது. வெளிப்படுத்தல் புத்தகத்தின் 4ம் 5ம் அதிகாரத் தரிசனம், "இவைகளுக்குப் பின்பு சம்பவிக்கவேண்டியவைகள்" என்று குறிப்பிடப்பட்டுள்ள தினால், நாம் ஏற்கனவே பார்த்தவிதமாக "இவைகளுக்குப் பின்பு சம்பவிக்க வேண்டியவைகள்" என்பது, இதற்கும் முன்னுள்ள 2ம் 3ம் அதிகாரங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் "சபைகளுக்குப் பின்பு சம்பவிக்கவேண்டியவைகளா கவே" உள்ளன. உலகிலிருக்கும் சபை பரலோகத்தில் இருப்பதை 4ம் அதி காரத்தில் பார்க்கின்றோம். எனவே, 6ம் அதிகாரத்தில் காண்பிக்கப்பட்டுள்ள தரிசனங்கள், உலகிலிருந்து சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு நடைபெறுகிற வைகளாகவே உள்ளன. எனவே, முத்திரைகள் உடைக்கப்படும்போது நடை பெறும் சம்பவங்கள் தற்காலத்திலோ அல்லது கடந்த காலத்திலோ நடைபெற் றவைகள் அல்ல (J.F.Walvoord, *Revelation: The Bible Knowledge Commentary – New Testament*, p. 946).

தாகச் சமாதானத்தைப் பூமியிலிருந்தெடுத்துப் போடும்படியான அதிகாரம் கொடுக்கப்பட்டது. ஒரு பெரிய பட்டயமும் அவனுக்குக் கொடுக்கப்பட்டது" (வெளி.6:3-4). முதலாவது முத்திரை உடைக்கப்பட்ட போது வெள்ளைக் குதிரையில் வந்த அந்திகிறிஸ்து இப்பொழுது சிவப்புக் குதிரையில் வருகின்றான். ஆரம்பத்தில் அம்பில்லாத வில்லை வைத்திருந்தவன் இப்பொழுது கையில் பட்டயத்தை வைத்திருக்கின்றான். ஆரம்பத்தில் உலகம் முழுவதும் ஒப்பந்தங்கள் மூலம் சமாதானத்தைக் கொண்டுவந்தவன் (தானி.9:27), இப்பொழுது சமாதானத்தை உலகிலிருந்து எடுத்துப் போடுகிறவனாக இருக்கின்றான். எனவே, தானியேல் 9:27ல் முன்னறிவிக்கப்பட்ட விதமாக, தன்னுடைய ஆட்சிக்காலத்தின் நடுப்பகுதியில் யூதர்களுடன் செய்த சமாதான ஒப்பந்தத்தை முறித்துப்போட்டு அவர்களைத் துன்புறுத்துகிறவனாக அந்திகிறிஸ்து மாறுவான். இதைப்போலவே, யோவான் கண்ட மூன்றாம் நான்காம் குதிரைகளும், அந்திகிறிஸ்துவின் ஆட்சிக்காலத்தின் மோசமடையும் நிலைமையை அறியத்தருகின்றன. மூன்றாம் முத்திரை உடைக்கப்பட்டபோது, "கறுப்புக் குதிரையில் வரும் அந்திகிறிஸ்துவின் கையில் ஒரு தராசு இருந்தது" (வெளி.6:5). இவனைப்பற்றி சொல்லப்பட்டுள்ள விஷயங்கள், அந்திகிறிஸ்துவின் காலத்தில் ஏற்படும் உணவுப் பற்றாக்குறையையும் பஞ்சத்தையும் சுட்டிக்காட்டுகின்றன (வெளி.6:6).[45] இயேசுகிறிஸ்து நான்காம் முத்திரையை உடைத்தபோது, "மங்கின நிறமுள்ள குதிரையில் மரணத்தைக் கொண்டுவருபவனாக" அந்திகிறிஸ்து வந்தான் (வெளி.6:7-8). அப்பொழுது உலகில் வாழும் மக்களில் காற்பங்கினர் கொல்லப்பட்

[45] கையில் தராசுடன் கறுப்புக் குதிரையில் அந்திகிறிஸ்து வரும்போது (வெளி.6:5), "ஒரு பணத்துக்கு ஒரு படி கோதுமை என்றும், ஒரு பணத்துக்கு மூன்று படி வாற்கோதுமையென்றும், எண்ணெயையும் திராட்சரசத்தையும் சேதப்படுத்தாதே என்றும் நான்கு ஜீவன்களின் மத்தியிலிருந்து உண்டான சத்தத்தைக் கேட்டேன்" என்று யோவான் குறிப்பிட்டுள்ளார் (வெளி.6:6). இவ்வசனத்தில் "ஒரு பணம்" என்பது அக்காலத்தில் கொடுக்கப்பட்ட ஒரு நாள் சம்பளத்தைக் குறிக்கின்றது. இப்பணத்தில் வாங்கப்படும் ஒரு படி கோதுமை ஒரு நேர உணவுக்கே போதுமானது. இதனால், அப்பணத்தில் மூன்று நேர உணவுக்கு வாற்கோதுமையை வாங்கினாலும், எண்ணெயையும் திராட்சை ரசத்தையும் வாங்குவதற்கு மக்களிடம் பணம் இருக்காது. உணவுப் பஞ்சம் காரணமாக பொருட்களின் விலைகள் அதிகரிக்கும் அக்காலத்தில், மக்களால் அத்தியாவசியப் பொருட்களைக்கூட வாங்கமுடியாத நிலைமை ஏற்படும் (J.F.Walvoord, *Revelation: The Bible Knowledge Commentary – New Testament*, p. 948).

டனர் (வெளி.6:8).[46] யோவான் கண்ட இந்த நான்கு குதிரைகளும் அந்திகிறிஸ்துவின் நான்கு விதமான தன்மைகளை அறியத்தரு கின்றன.[47] அந்திகிறிஸ்து ஆரம்பத்தில் உலகில் சமாதானத்தைக் கொண்டுவருபவனாக இருந்தாலும், மூன்றரை வருஷங்களின் பின்னர் சமாதானம் இல்லாத நிலையும், பஞ்சமும், மரணமும் ஏற்படும். அக்கா லத்தின் நிலையைப்பற்றி மத்தேயு 24ம் அதிகாரத்தில் இயேசு கிறிஸ்து பின்வருமாறு அறிவித்துள்ளார்:

> ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங் கள். ஏனெனில், அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக் கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள். யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளை யும் கேள்விப்படுவீர்கள். கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள். இவைகளெல்லாம் சம்பவிக்கவேண்டியதே. ஆனாலும், முடிவு உடனே வராது. ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத் துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும். பஞ்சங்களும், கொள்ளை நோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில்

---

[46] நான்காம் முத்திரை உடைக்கப்பட்டபோது தான் கண்ட காட்சியை எழுதும் யோவான், "நான் பார்த்தபோது, இதோ, மங்கின நிறமுள்ள ஒரு குதிரையைக் கண்டேன். அதின்மேல் ஏறியிருந்தவனுக்கு மரணம் என்று பெயர். பாதாளம் அவன்பின் சென்றது. பட்டயத்தினாலும், பஞ்சத்தினாலும், சாவினாலும், பூமியின் துஷ்ட மிருகங்களினாலும், பூமியின் காற்பங்கிலுள்ளவர்களைக் கொலை செய்யும்படியான அதிகாரம் அவைகளுக்குக் கொடுக்கப்பட்டது" (வெளி.6:8) என்று குறிப்பிட்டுள்ளார்.

[47] காலத்துக்குக் காலம் சிலர், இம்முத்திரைகள் உடைக்கப்பட்டுவிட்டதாகக் கூறுவது வழக்கம். ஆனால் இவர்களுடைய விளக்கங்கள் ஒன்றுக்கொன்று முரண்பாடானவைகளாகவே உள்ளன. அண்மைக்காலத்தில், நான்காவது முத் திரை எகிப்தில் நடைபெற்ற யுத்தமொன்றில் உடைக்கப்பட்டு மங்கின நிறக் குதிரை சென்றதாகச் சிலர் கற்பனை செய்துள்ளனர். இது உண்மை என்றால், முதல் மூன்று முத்திரைகளும் எப்போது உடைக்கப்பட்டன என்று இவர்கள் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும். அதுமட்டுமல்ல, நான்காம் முத்திரை உடைக் கப்படும்போது பூமியில் குடியிருப்பவர்களில் காற்பங்கினர் பட்டயத்தினாலும், பஞ்சத்தினாலும், சாவினாலும், பூமியின் துஷ்ட மிருகங்களினாலும் கொல்லப்ப டுவார்கள் என்று வெளிப்படுத்தல் 6:8ல் முன்னறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதுவரையில் இவ்விதமாக பூமியின் காற்பங்கினர் கொல்லப்படவில்லை. எனவே, நான்காம் முத்திரை உடைக்கப்பட்டாயிற்று என்று கூறமுடியாது. மேலும், வெளிப்படுத்தல் புத்தகத்தில் 4ம் அதிகாரத்திற்குப் பின்னர் உள்ளவை அனைத்தும், உலகிலிருந்து சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பின்னர் நடை பெறுபவைகள் என்பதை நாம் ஒருபோதும் மறக்கலாகாது.

உண்டாகும். இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம். அப்பொழுது, உங்களை உபத்திரவங்களுக்கு ஒப்புக்கொடுத்து, உங்களைக் கொலை செய்வார்கள். என் நாமத்தினிமித்தம் நீங்கள் சகல ஜனங்களாலும் பகைக்கப்படுவீர்கள். அப்பொழுது, அநேகர் இடறலடைந்து, ஒருவரையொருவர் காட்டிக் கொடுத்து, ஒருவரையொருவர் பகைப்பார்கள். அநேகங் கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள். அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்து போகும் (மத்தேயு 24:4-12).

இயேசுகிறிஸ்து இங்கு குறிப்பிட்டுள்ளவைகளே மாற்கு 13ம் அதிகாரத்திலும் லூக்கா 21ம் அதிகாரத்திலும் உள்ளன. எனினும் இவைகள் "உம்முடைய வருகைக்கும் உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன?" (மத்.24:3) என்னும் சீஷர்களின் கேள்விக்கான பதிலாகச் சொல்லப்பட்டவை என்பதை நாம் கருத்திற்கொள்ளவேண்டும். மேலும், தானியேல் முன்னறிவித்த பாழாக்கும் அருவருப்பான அந்திகிறிஸ்து ஆலயத்தில் இருப்பதும், அக்காலத்தில் நடைபெறும் என்பதையும் இயேசுகிறிஸ்து இவ்வதிகாரத்தில் சுட்டிக்காட்டியுள்ளதினால் (மத். 24:15), அவர் குறிப்பிட்டுள்ளவைகள் அந்திகிறிஸ்துவின் ஆட்சிக்காலத்தில், குறிப்பாக அவன் யூதர்களுடன் செய்த ஒப்பந்தத்தை முறித்து அவர்களைத் துன்புறுத்தும் காலத்திலேயே ஆரம்பமாகும். இதனாலேயே இத்துயரங்களைப்பற்றி கூறும்போது, "இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம்" என்று இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார் (மத்.24:8). அந்திகிறிஸ்துவின் ஆட்சியின் நடுப்பகுதியில் ஆரம்பமாகும் துயரங்கள் மூன்றரை வருஷங்களுக்கு இருக்கும். இதனால்தான், வெளிப்படுத்தல் 12ம் அதிகாரத்தில் இஸ்ரவேல் ராட்சியமாகச் சித்தரிக்கப்பட்டிருக்கும் பெண் (வெளி.12:1),[48] இயேசு

[48] வெளிப்படுத்தல் 12:1ல் சூரியனை அணிந்திருக்கும் கர்ப்பவதியான பெண், இயேசுகிறிஸ்துவின் பூலோகத் தாயான மரியாளைக் குறிப்பதாகச் சிலர் கருதுகின்றனர் (D.Chilton, *Days of Vengeance*, pp. 298-299). ஆனால், சபையின் மத்திய காலத்திலேயே மரியாளைப் பரலோகத்தின் ராணியாகக் கிறிஸ்தவர்கள் கருதத்தொடங்கினார்கள். ஆதி சபைப் பிதாக்களில் எவரும் இப்பெண்ணை மரியாளாக வியாக்கியானம் செய்யவில்லை (G.A.Krodel, *Revelation: The Augsburg Commentary on the New Testament*, p. 238). வெளிப்படுத்தல் புத்தகம் உலகின் இறுதிகாலத்தில் நடைபெறும் சம்பவங்களையே அறியத்தருவதனால், இப்பெண்ணை முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த மரியாள் என்று கூறமுடியாது.

கிறிஸ்து மத்தேயு 24:16ல் குறிப்பிட்ட விதமாக வனாந்திரத்திற்கு ஓடிப்போய் (மத்.24:16) அங்கே 1260 நாட்கள், அதாவது மூன்றரை வருஷங்கள் இருப்பதைக் காண்கின்றோம் (வெளி.12:6, 12:14).[49] அதேசமயம், அக்காலத்தில் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கும் ஏனைய இனத்தவர்களும்[50] சாத்தானால் துன்புறுத்தப்படுவார்கள்

---

இவள் உபத்திரவகாலத்தின் இறுதிப்பகுதியில் வாழ்பவளாகவே இவ்வதிகாரத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளாள் (வெளி.12:6, 12:14). மேலும், இப்பெண்ணை மரியாளாக விளக்கினால், 17ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இவளுடைய சந்ததியான மற்றவர்கள் யார் என்னும் கேள்விக்கு எவ்வித பதிலும் கொடுக்க முடியாது (A. F.Johnson, *Revelation: The Expositor's Bible Comentary Volume 12*, p. 513). உண்மையில், இப்பெண்ணைப்பற்றி சொல்லப்பட்ட விஷயங்கள் இஸ்ரவேல் ராட்சியத்திற்கே பொருத்தமானவைகளாக உள்ளன (L.Morris, *Revelation: Tyndale New Testament Commentary*, p. 152). இஸ்ரவேல் ராட்சியத்தின் முற்பிதாக்களே சூரிய, சந்திர, மற்றும் பன்னிரு நட்சத்திரங்களாகப் பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளனர் (ஆதி.37:9-11). மேலும், இஸ்ரவேல் ராட்சியமே கர்ப்பவேதனைப்படுகிற பெண்ணாகப் பழைய ஏற்பாட்டில் சித்தரிக்கப்பட்டுள்ளாள் (ஏசா.26:17-18, 66:7-8, எரே.4:31, 13:21, மீகா.4:10, 5:3). அந்திகிறிஸ்துவின் காலத்தில் இஸ்ரவேல் மக்களுக்கு ஏற்படும் உபத்திரவங்களையே இப்பெண்ணின் கர்ப்பவேதனை குறிக்கின்றது (J.F.Walvoord, *Revelation: The Bible Knowledge Commentary – New Testament*, p. 958). இப்பெண் பெறுகின்ற பிள்ளை இயேசுகிறிஸ்து என்பது உண்மை என்றாலும் (வெளி.12:5), இது இயேசுகிறிஸ்து மரியாளின் மகனாகப் பிறந்ததைக் குறிப்பிடவில்லை (R.H. Mounce, *Revelation: The New International Commentary on the New Testament*, p. 231). அவர் இஸ்ரவேல் ராட்சியத்திலிருந்து ராஜாவாக வருவதையே 5ம் வசனம் அறியத்தருகிறது (R.L.Thomas, *Revelation 8-22: An Exegetical Commentary*, p. 125; A.T.Robertson, *Word Pictures in the New Testament Volume 6*, p. 390). இப்பெண்ணுக்குப் பிறக்கும் ஆண்பிள்ளை இருப்புக்கோலால் ஆளுகை செய்வது சங்கீதம் 2:9ன் நிறைவேறுதலாயுள்ளது. பிள்ளை பிறந்த உடனேயே அது தேவனிடத்திற்கும், அவருடைய சிங்காசனத்திற்கும் எடுத்துக்கொள்ளப்படுவது, இயேசுகிறிஸ்து ராஜாவாக வருவதை அறியத்தருகின்றது.

[49] வெளிப்படுத்தல் 12:6ல் இஸ்ரவேலை அடையாளப்படுத்தும் "ஸ்திரீயானவள் வனாந்தரத்திற்கு ஓடிப்போனாள். அங்கே ஆயிரத்திருநூற்றறுபது நாளளவும் அவளைப் போஷிப்பதற்காகத் தேவனால் ஆயத்தமாக்கப்பட்ட இடம் அவளுக்கு உண்டாயிருந்தது" என்றும், 12:14ல் "ஸ்திரீயானவள் அந்தப் பாம்பின் முகத்திற்கு விலகி, ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமுமாகப் போஷிக்கப்படத்தக்கதாய் வனாந்தரத்திலுள்ள தன் இடத்திற்குப் பறந்துபோகும்படி பெருங்கழுகின் இரண்டு சிறகுகள் அவளுக்குக் கொடுக்கப்பட்டது" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வசனங்களில் 1260 நாட்களும், ஒரு காலமும் காலங்களும், அரைக் காலமும் மூன்றரை வருஷங்களையே குறிக்கின்றது.

[50] அந்திகிறிஸ்துவின் காலத்திலும் மக்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து இரட்சிக்கப்படுவார்கள் என்பது இந்நூலின் 76 முதல் 78 வரையிலான பக்கங்களில் விளக்கப்பட்டுள்ளது.

என்பதையும் வெளிப்படுத்தல் 12ம் அதிகாரம் அறியத்தருகிறது (வெளி.12:17). உண்மையில், இவர்கள் அக்காலத்தில் இரத்த சாட்சி களாக மரிப்பார்கள் (வெளி.6:9,11).[51] எனவே, அந்திகிறிஸ்துவின் ஆட்சிக் காலத்தில் இறுதி மூன்றரை வருஷங்களும் இஸ்ரவேல் மக்களுக்கும், இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பவர்களுக்கும் மிகுந்த உபத்திரவம் ஏற்படும்.

---

அந்திகிறிஸ்துவின் ஆட்சிக் காலத்தில் யூதர்கள் மறுபடியும் தங்களுடைய ஆலயத்தைக் கட்டி பழைய ஏற்பாட்டுக் கால வழிபாடுகளை ஆரம்பித்தாலும், மூன்றரை வருஷங்களின் பின்னர் அது அந்திகிறிஸ்துவின் ஆலயமாகிவிடும்.

---

அந்திகிறிஸ்துவின் ஆட்சிக்காலத்தின் இறுதி மூன்றரை வருஷங்க ளும் இஸ்ரவேல் மக்களுக்கும் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கும் புறஜாதியாருக்கும் மட்டுமல்ல, உலகத்தின்மீது தேவனுடைய கோபாக்கினை வெளிப்படுவதன் மூலமாக உலகிலிருக்கிற அனைவ ருக்குமே அது உபத்திரவ காலமாகவே இருக்கும். நாம் ஏற்கனவே பார்த்தவிதமாக, அந்திகிறிஸ்துவின் வித்தியாசமான தன்மைகளைக் காண்பிக்கும் நான்கு நிறக்குதிரைகளில், முதலாவது குதிரை உல கில் சமாதானத்தைக் கொண்டுவருவதாக இருந்தாலும் அதன் பின்னர் வரும் மூன்று குதிரைகளும் பஞ்சத்தையும், யுத்தத்தையும் மரணத்தை யும் கொண்டுவருபவைகளாகவே உள்ளன.

## (3) அந்திகிறிஸ்துவின் ஆலயம்

உலகிலிருந்து சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு ஏழு வருஷங்க ளுக்கு நீடிக்கும் அந்திகிறிஸ்துவின் ஆட்சிக்காலத்தின் நடுப்பகுதியில் அவன் "பலியையும் காணிக்கையையும் ஒழியப்பண்ணுவான்" (தானி. 9:27) என்றும், "அன்றாட பலி நீக்கப்பட்டு பாழாக்கும் அருவருப்பு ஸ்தாபிக்கப்படும்" (தானி.12:11) என்றும் தானியேலின் தரிசனங்கள்

---

[51] வெளிப்படுத்தல் 6:9ம் 11ம் வசனங்களில், "அவர் ஐந்தாம் முத்திரையை உடைத்தபோது, தேவவசனத்தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்த மும் கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களைப் பலிபீடத்தின்கீழே கண் டேன். அன்றியும், அவர்கள் தங்களைப்போலக் கொலை செய்யப்படப் போகிற வர்களாகிய தங்கள் உடன் பணிவிடைக்காரரும் தங்கள் சகோதரருமானவர் களின் தொகை நிறைவாகுமளவும் இன்னுங்கொஞ்சக்காலம் இளைப்பாற வேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அறியத்தருகின்றன. இதில் குறிப்பிடப்பட்டுள்ள "பலியும் காணிக்கை யும்" பழைய ஏற்பாட்டுக்கால ஆலய வழிபாட்டின் சிறப்பம்சங்களாகும். இவைகளை அந்திகிறிஸ்து ஒழியப்பண்ணுவான் என்றால் அவனு டைய காலத்தில் எருசலேம் நகரத்தில் ஆலயம் மறுபடியும் கட்டப் பட்டிருக்கும் என்பது தெளிவாகின்றது. ஏனென்றால், ஆலயம் இல் லாத நிலையில் யூதர்களினால் பலிகளைச் செலுத்த முடியாது. எனினும், இவ்வாலயம் அந்திகிறிஸ்துவினுடைய ஆட்சியின் நடுப்பகு தியில் அவனுடைய ஆலயமாகிவிடும்.

இயேசுகிறிஸ்துவின் காலத்தில் எருசலேம் நகரில் இருந்த ஆலயம், அவர் முன்னறிவித்தபடியே (மத்.24:1-2) கி.பி.70ல் தரைமட்டமாக்கப் பட்டு, இன்றுவரை யூதர்கள் ஆலயம் இல்லாத மக்களாக இருக்கின்ற னர்.[54] ஆனால், அந்திகிறிஸ்துவின் ஆட்சிக்காலத்தில் எருசலேம் நகரத்தில் யூதர்களுக்கு ஒரு ஆலயம் இருக்கும் என்பதை வெளிப்ப டுத்தல் 11ம் அதிகாரம் அறியத்தருகின்றது. இதனால்தான் ஆலயத் தையும், பலிபீடத்தையும், அங்கு தொழுதுகொள்ள வருகிறவர்களை யும் அளந்து பார்க்கும்படி யோவானுக்கு அறிவுறுத்தல் கொடுக்கப் பட்டுள்ளது (வெளி.11:1-2).[55] உண்மையில், அந்திகிறிஸ்துவின் ஆட்சி சமாதான ஒப்பந்தங்கள் மூலம் ஆரம்பமாவதனால், அவனுடைய ஆட்சியின் ஆரம்ப காலத்தில் யூதர்கள் எருசலேமில் மறுபடியுமாக தங்களுக்கு ஒரு ஆலயத்தைக் கட்டி பழைய ஏற்பாட்டு முறையி லான வழிபாட்டை ஆரம்பிப்பார்கள்.[56] ஆனால், எருசலேம் நகரத்தில் தேவனுடைய ஆலயம் இருந்த இடத்தில் தற்பொழுது இஸ்லாமியர்க ளின் இரண்டாவது முக்கிய மசூதி இருப்பதனால், அங்கு யூதர்களி னால் எப்படி ஆலயத்தைக் கட்டமுடியும் என்பது அநேகருடைய உள்ளத்தில் இருக்கும் கேள்வியாகும். எனினும், புதைபொருள்

---

[52] J.D.Pentecost, *Daniel: The Bible Knowledge Commentary – OT*, p. 1364.

[53] J.C.Whitcomb, *Daniel: Everyman's Bible Commentary*, p. 134.

[54] மத்தேயு 24:1-2ல், "இயேசு தேவாலயத்தை விட்டுப் புறப்பட்டுப்போகையில், அவருடைய சீஷர்கள் தேவாலயத்தின் கட்டிடங்களை அவருக்குக் காண்பிக்க அவரிடத்தில் வந்தார்கள். இயேசு அவர்களை நோக்கி: இவைகளையெல்லாம் பார்க்கிறீர்களே, இவ்விடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப்போகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லு கிறேன் என்றார்."

[56] J.F.Walvoord, *Revelation: The Bible Knowledge Commentary – New Testament*, p. 955; J.C.Whitcomb, *Daniel: Everyman's Bible Commentary*, p. 134.

ஆராய்ச்சியாளர்களின் கண்டுபிடிப்புகளின்படி, ஆரம்பத்தில் சாலொமோன் கட்டிய ஆலயம் இருந்த இடத்தில் இஸ்லாமிய மசூதி கட்டப்படவில்லை. அதற்குச் சற்று தொலைவிலேயே மசூதி உள்ளது.[57] சாலொமோன் கட்டிய ஆலயம் இருந்த இடத்திலேயே யூதர்கள் மறுபடியுமாகத் தங்களுடைய ஆலயத்தைக் கட்டுவார்கள் என்பதனால், தற்பொழுது எருசலேமில் இருக்கும் மசூதி உடைக்கப்படாமலேயே அந்திகிறிஸ்துவின் அனுமதியுடன் யூதர்களினால் தங்களுடைய ஆலயத்தைக் கட்டக்கூடியதாய் இருக்கும். இதற்கான ஆயத்தங்களை அவர்கள் இப்பொழுதே செய்துவருகின்றனர்.[58]

யூதர்கள் எருசலேமில் ஆலயத்தைக் கட்டி தேவனை வழிபடுவதற்கு அந்திகிறிஸ்து அனுமதி கொடுத்தாலும், அவன் தன்னுடைய ஆட்சிக் காலத்தின் நடுப்பகுதியில், அதாவது மூன்றரை வருஷங்களின் பின்னர் அவர்களுடன் செய்த ஒப்பந்தத்தை முறிக்கும் விதத்தில் எருசலேம் ஆலயத்தின் பலிகளையும் காணிக்கையையும் நிறுத்துவான் (தானி. 9:27, 12:11). இதற்குக் காரணம், மக்கள் தன்னை தெய்வமாக வழிபடவேண்டும் என்னும் அவனுடைய எண்ணமேயாகும். இதனால்தான், பலியும் காணிக்கையும் நிறுத்தப்பட்டவுடன் "அருவருப்பான செட்டைகளோடே பாழாக்குகிறவன் வந்து இறங்குவான்" (தானி.9:27) என்றும், "பாழாக்கும் அருவருப்பு ஸ்தாபிக்கப்படும்" (தானி.12:11) என்றும் தானியேலின் தரிசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்து இதைப்பற்றி விளக்கும்போது, "பாழாக்குகிற அருவருப்பைக் குறித்து தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே. வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன். நீங்கள் அதைப் பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கக் காணும்போது" என்று குறிப்பிட்டுள்ளார் (மத்.24:15). அதாவது, தானியேல் குறிப்பிட்டுள்ள "பாழாக்கும் அருவருப்பான" அந்திகிறிஸ்து ஆலயத்தின் பரிசுத்த ஸ்தலத்தில் இருப்பான் என்று முன்னறிவித்துள்ளார். "அவன் எதிர்த்து நிற்கிறவனாயும், தேவனென்னப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன்

[57] A.S.Kaufman, "New Light Upon Zion, The Plan and Precise Location of the Second Temple," in *Ariel*, No. 43, 1977; A.S.Kaufman, "Where The Ancient Temple of Jerusalem Stood," in *Biblical Archaeological Review*, Vol IX No. 2, March/April, 1983.

[58] R.N.Ostling, "Time for a New Temple?" in *Time*. 16 October 1989, p. 64-65.

போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனா யும் இருப்பான்" (2தெச.2:4). அந்திகிறிஸ்து இவ்வுலகத்தை ஆளுகை செய்யும் காலத்தில், மக்கள் அவனைத் தெய்வமாக வழிபடுவார்கள் என்பதையும் அவனுக்கு ஒரு சிலை செய்யப்படும் என்பதையும் வெளிப்படுத்தல் 13:11-15 அறியத்தருகின்றது.[59] இச்சிலை எருசலேம் ஆலயத்தின் பரிசுத்த ஸ்தலத்தில் வைக்கப்படும். இதுவே ஆலயத் தைப் பாழாக்குகிற அருவருப்பாகும்.[60] எனவே, அந்திகிறிஸ்துவின் ஆட்சிக்காலத்தில் யூதர்கள் மறுபடியும் தங்களுடைய ஆலயத்தைக் கட்டி பழைய ஏற்பாட்டுக்கால வழிபாடுகளை ஆரம்பித்தாலும், மூன் றரை வருஷங்களின் பின் அது அந்திகிறிஸ்துவின் ஆலயமாகிவிடும்.

## (4) அந்திகிறிஸ்துவின் ஆட்சியமைப்பு

உலகிலிருந்து சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பின்னர் ஏழு வருஷங்க ளுக்கு நீடிக்கும் அந்திகிறிஸ்துவின் ஆட்சிக்காலத்தில், முழு உலக மும் பத்துத் தலைவர்களின் (அதாவது ராட்சியங்களின்) நிர்வாகத்தின் கீழ் இருக்கும்.[61] தானியேலின் தரிசனங்களிலும், வெளிப்படுத்தல் புத்தகத்திலும் இந்த பத்து ராட்சியங்களின் தலைவர்களான ராஜாக்க

---

[59] "பின்பு, வேறொரு மிருகம் (அதாவது அந்திகிறிஸ்துவின் ஆட்சிக் காலத்தில் இருக்கும் கள்ளத்தீர்க்கதரிசி) பூமியிலிருந்து எழும்பக் கண்டேன். அது ஒரு ஆட்டுக்குட்டிக்கு ஒப்பாக இரண்டு கொம்புகளையுடையதாயிருந்தது (அதாவது இயேசுவைப்போல இருந்தது). வலுசர்ப்பத்தைப்போலப் பேசினது (அதாவது சாத்தானைப்போல பேசியது). அது முந்தின மிருகத்தின் (அதாவது வெளி. 13:1ல் வரும் அந்திகிறிஸ்துவின்) அதிகாரம் முழுவதையும் அதின் முன்பாக நடப்பித்து, சாவுக்கேதுவான காயம் ஆறச்சொஸ்தமடைந்த முந்தின மிருகத்தை (அந்திகிறிஸ்துவை) பூமியும் அதின் குடிகளும் வணங்கும்படி செய்தது. அன்றியும், அது மனுஷருக்கு முன்பாக வானத்திலிருந்து பூமியின்மேல் அக் கினியை இறங்கப்பண்ணத்தக்கதாகப் பெரிய அற்புதங்களை நடப்பித்து, மிருகத்தின் முன்பாக அந்த அற்புதங்களைச் செய்யும்படி தனக்குக் கொடுக்கப் பட்ட சத்துவத்தினாலே பூமியின் குடிகளை மோசம்போக்கி, பட்டயத்தினாலே காயப்பட்டுப் பிழைத்த மிருகத்திற்கு (வெளி.13:3) ஒரு சொரூபம் பண்ணவேண்டு மென்று பூமியின் குடிகளுக்குச் சொல்லிற்று. மேலும், அம்மிருகத்தின் சொரூபம் பேசத்தக்கதாகவும், மிருகத்தின் சொரூபத்தை வணங்காத யாவரையும் கொலை செய்யத்தக்கதாகவும், மிருகத்தின் சொரூபத்திற்கு ஆவியைக் கொடுக்கும்படி அதற்குச் சத்துவங்கொடுக்கப்பட்டது" என்று வெளிப்படுத்தல் 13:11-15ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

[60] J.D.Pentecost, *Daniel: The Bible Knowledge Commentary – OT*, p. 1374.

[61] S.R.Miller, *Daniel: The New American Commentary*, pp. 98-99.

உலகிலிருந்து சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பின்னர் ஏழு வருஷங்களுக்கு நீடிக்கும் அந்திகிறிஸ்துவின் ஆட்சிக்காலத்தில், முழு உலகமும் பத்து ராட்சியங்களின் நிர்வாகத்தின் கீழ் இருக்கும்.

ளைப்பற்றி முன்னறிவிக்கப்பட்டுள்ளது. தானியேலின் புத்தகத்தில் பாபிலோனிய அரசன் நேபுகாத்நேச்சார் கண்ட பெரிய சிலையின் பாதங்களின் பத்து விரல்களும் இந்த பத்து ராட்சியங்களின் தலைவர் களைப்பற்றிய ஆரம்ப தரிசனமாகும். இத்தரிசனத்தைப்பற்றி தானி யேல் 2ம் அதிகாரத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

> ராஜாவே, நீர் ஒரு பெரிய சிலையைக் கண்டீர். அந்தப் பெரிய சிலை மிகுந்த பிரகாசமுள்ளதாயிருந்தது. அது உமக்கு எதிரே நின்றது. அதின் ரூபம் பயங்கரமாயிருந்தது. அந்தச் சிலையின் தலை பசும் பொன்னும், அதின் மார்பும் அதின் புயங்களும் வெள்ளியும், அதின் வயிறும் அதின் தொடையும் வெண்கலமும், அதின் கால்கள் இரும்பும், அதின் பாதங்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாயிருந்தது. நீர் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, கைகளால் பெயர்க்கப்படாத ஒரு கல் பெயர்ந்து உருண்டுவந்தது. அது அந்தச் சிலையை இரும்பும் களிமண்ணுமாகிய அதின் பாதங்களில் மோதி, அவைகளை நொறுக்கிப் போட்டது. அப்பொழுது அந்த இரும்பும் களிமண்ணும் வெண்கலமும் வெள்ளியும் பொன்னும் ஏகமாய் நொறுங்குண்டு, கோடை காலத்தில் போரடிக்கிற களத்திலிருந்து பறந்துபோகிற பதரைப் போலாயிற்று. அவைக ளுக்கு ஒரு இடமும் கிடையாதபடி காற்று அவைகளை அடித்துக்கொண்டு போயிற்று. சிலையை மோதின கல்லோ வென்றால், ஒரு பெரிய பர்வதமாகி பூமியையெல்லாம் நிரப் பிற்று (தானியேல் 2:31-35).

தானியேலின் காலத்தில் இருந்த பாபிலோன் ராட்சியத்திற்குப் பின்னர் உலகில் வரும் ஐந்து ராட்சியங்களின் விபரத்தை அறியத்தரும் இத்தரிசனத்தில், "பசும்பொன்னினாலான தலை" (தானி.2:32) கி.மு.626 முதல் கி.மு.539 வரை இருந்த பாபிலோன் ராட்சியத்தைக் குறிக்கின் றது. இதனால்தான், "பொன்னான அந்தத் தலை நீரே" (தானி.2:38) என்று தானியேல் பாபிலோனிய அரசனிடம் தெரிவித்தான். ஆனால்,

கி.மு.539ல் மேதியாவும் பெர்சியாவும் பாபிலோனிய ராட்சியத்தைக் கைப்பற்றி கி.மு.330 வரை பெரியதோர் ராட்சியமாக இருந்தது. நேபுகாத்நேச்சார் கண்ட சிலையில் இது "வெள்ளியினாலான மார்பும் புயமுமாக" இருந்தது (தானி.2:32, 2:39அ). "உமக்குப் பிறகு உமக்குக் கீழ்த்தரமான வேறொரு ராட்சியம் தோன்றும்" என்று தானியேல் இவ்விராட்சியத்தைப்பற்றி பாபிலோனிய அரசனிடம் தெரிவித்தான் (தானி.2:39அ). 5ம் அதிகாரத்தில், பாபிலோனிய ராட்சியம் மேதியருக்கும் பெர்சியருக்கும் கொடுக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது கி.மு.539ல் நிறைவேறியது (தானி.5:28). இதன்பின்பு, "பூமியையெல்லாம் ஆண்டுகொள்ளும் வெண்கலமான மூன்றாம் ராட்சியம் தோன்றும்" (தானி.2:39ஆ) என்றும் தானியேல் குறிப்பிட்டுள்ளான். இதன்படி, கிமு.334ற்கும் 330ற்கும் இடைப்பட்ட காலத்தில் மகா அலெக்சாண்டர் மேதிய பெர்சிய ராட்சியத்தைக் கைப்பற்றியதோடு, தன்னுடைய ராட்சியத்தைக் கிழக்குப் பக்கமாக வட இந்தியா வரை விஸ்தரித்திருந்தான். இத்தரிசனத்தில் "வெண்கலத்தினாலாகிய சிலையின் வயிறும் தொடையும்" அலெக்சாண்டரின் கிரேக்க ராட்சியத்தைக் குறிக்கின்றது (தானி.2:32, 2:39:ஆ). மேதியரும் பெர்சியரும் ஆண்ட ராட்சியம் கிரேக்க ராட்சியத்தினால் ஆக்கிரமிக்கப்படும் என்பது 8ம் அதிகாரத் தரிசனத்தில் முன்னறிவிக்கப்பட்டுள்ளது (தானி.8:20-21). கி.மு.63ல் ரோமர்கள் கிரேக்க ராட்சியத்தைக் கைப்பற்றினார்கள். சிலையின் கால்கள் இந்த நான்காவது ராட்சியத்தைக் குறிக்கின்றது (தானி.2:33, 2:40). முதல் மூன்று ராட்சியங்களைப்போல நான்காவது ராட்சியத்தின் பெயர் தானியேலின் புத்தகத்தில் குறிப்பிடப்படாவிட்டாலும், இவ்விராட்சியத்தைப் பற்றி 40ம் வசனத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விஷயங்கள் கிரேக்க ராட்சியத்திற்குப் பின்னர் வந்த ரோம ராட்சியத்திற்கே பொருத்தமானவைகளாக உள்ளன.[64] ஆனால், இந்த நான்கு ராட்சியங்களுக்குப் பின்னர் வரவேண்டிய ஐந்தாவது ராட்சியமான, பாதங்களையும் விரல்களையும் குறிப்பிடும் ராட்சியம் (தானி. 2:33ஆ, 2:41-43) இன்னும் வரவில்லை. முதல் நான்கு ராட்சியங்களையும் போலல்லாது இவ்விராட்சியத்தில் பத்து ராஜாக்கள் இருப்பார்கள்

உலக சரித்திரத்தில் இதுவரையில் பத்து ராஜாக்கள் ஒன்றாக இருந்து
ஒரு ராட்சியத்தை ஆளுகை செய்ததில்லை என்பதனால், தானியேல்
இரண்டாம் அதிகாரத்திலுள்ள சிலையைப்பற்றிய தரிசனத்தின்
இறுதிப்பகுதி இதுவரையில் நிறைவேறாத தீர்க்கதரிசனமாகவே உள்ளது

[64] H.C.Leupold, *Exposition of Daniel*, p. 119.

என்பதை “அந்த ராஜாக்களின் நாட்களிலே” (தானி.2:44) என்னும் வாக்கியம் அறியத்தருகிறது. எனவே, பாதங்களின் பத்து விரல்களும் இந்த ராட்சியத்தின் ராஜாக்களாக இருக்கின்றனர். உலக சரித்திரத்தில் இதுவரையில் பத்து ராஜாக்கள் ஒன்றாக இருந்து ஒரு ராட்சியத்தை ஆளுகை செய்ததில்லை என்பதனால், சிலையைப் பற்றிய தரிசனத்தின் இறுதிப்பகுதி இதுவரையில் நிறைவேறாத தீர்க்க தரிசனமாகவே உள்ளது.[65] அதேசமயம், அந்திகிறிஸ்துவின் ஆட்சிக் காலத்தைப்பற்றிய ஏனைய தரிசனங்கள், இந்த பத்து விரல்களும், அந்திகிறிஸ்துவோடு சேர்ந்து உலகை ஆளுகை செய்யும் பத்து ராஜாக்கள் என்பதை அறியத்தருகின்றன (தானி.7:24, வெளி.13:1, 17:12).[66]

பாபிலோனிய அரசன் கண்ட சிலையைப்பற்றிய தரிசனத்தில், “கைகளினால் பெயர்க்கப்படாத ஒரு கல் பெயர்ந்து உருண்டு வந்து, அந்தச் சிலையை இரும்பும் களிமண்ணுமாகிய அதின் பாதங்களில் மோதி அவைகளை நொருக்கிப்போட்டது (தானி.2:34). வேதாகம மொழிவழக்கில் கல் இயேசுகிறிஸ்துவைக் குறிப்பிடும் உருவகமாய் உள்ளது (சங்.118:22, ஏசா.8:14, 28:16, 1பேது.2:6-8),[67] மேலும், இது மானிட கைகளினால் பெயர்க்கப்படாத கல்லாக இருப்பதும் இதை உறுதிப்படுத்துகிறது.[68] இக்கல், “சிலையின் பாதங்களில் மோதி அவைகளை நொறுக்கிப்போட்டது” என்னும் வாக்கியம், பாதங்களால் குறிப்பிடப்படும் ராட்சியத்தின் அழிவு இயேசுகிறிஸ்துவினால் கொண்டுவரப்படும் அழிவாக இருக்கும் என்பதை அறியத்தருகின்றது. இதற்கு முன் இருந்த நான்கு ராட்சியங்களும், மனிதர்களினாலேயே அழிக்கப்பட்டன. எனவே, இயேசுகிறிஸ்துவினால் அழிக்கப்படும் ராட்சியம் உலகின் இறுதி காலத்தில் இருக்கும் அந்திகிறிஸ்துவின் ராட்சியமாகவே உள்ளது. இதில் பத்து ராஜாக்கள் இருப்பதனால், அந்திகிறிஸ்துவின் ஆட்சியானது பத்து ராஜாக்களின் நிர்வாகத்தின் கீழ் இருக்கும் என்பதும் தெளிவாகின்றது. மேலும், சிலையின் பாதங்களில் மோதி அவைகளை நொறுக்கிப்போடும் கல், “ஒரு பெரிய பர்வதமாகி பூமியை எல்லாம் நிரப்பிற்று” என்றும் 35ம் வச

[65] J.F.Walvoord, *Daniel: The Key to Prophetic Revelation*, p. 72.
[66] S.R.Miller, *Daniel: The New American Commentary*, p. 98.
[67] J.D.Pentecost, *Daniel: The Bible Knowledge Commentary – OT*, p. 1336.
[68] S.R.Miller, *Daniel: The New American Commentary*, p. 100.

னத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. பத்து ராஜாக்களின் நிர்வாகத்தின் கீழ் இருக்கும் அந்திகிறிஸ்துவின் ராட்சியத்தை முழுமையாக அழிக்கும் இயேசுகிறிஸ்து, தமது ராட்சியத்தை இவ்வுலகில் ஸ்தாபிப்பதை இது முன்னறிவிக்கின்றது. இது "என்றென்றைக்கும் அழியாத ராட்சியமாய் இருக்கும் என்பதை 44ம் வசனம் அறியத்தருகின்றது.

---

தற்பொழுது உலகிலிருக்கும் நாடுகள் பத்து உலக ராட்சியங்களாக இணைக்கப்படும். இத்தகைய ஒரு இணைவே ஐரோப்பிய ஒன்றியம். இதைப்போல இன்னும் ஒன்பது அமைப்புகள் உருவாகி உலகில் பத்து ராட்சியங்கள் இருக்கும் காலத்தில் அந்திகிறிஸ்து வெளிப்படுவான்.

---

அந்திகிறிஸ்துவின் ஆட்சிக் காலத்தில் முழு உலகமும் பத்து ராஜாக்களின் நிர்வாகத்தின் கீழ் இருக்கும் என்பதைத் தானியேல் 7ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தரிசனமும் அறியத்தருகிறது. இதுவும், பாபிலோனிய ராட்சியத்திற்குப் பின்னர் உலகில் வரும் ராட்சியங்களைப்பற்றிய முன்னறிவிப்பாகவே உள்ளது. இத்தரிசனத்தில் தானியேல் நான்கு மிருகங்களையும் (தானி.7:3-8), நீண்ட ஆயுசுள்ளவராகக் குறிப்பிடப்பட்டிருக்கும் தேவனையும் (தானி.7:9-10), அவருக்கு அருகில் வரும் மனுஷகுமாரனுடைய சாயலுக்கு ஒப்பான ஒருவராகச் சித்தரிக்கப்பட்டிருக்கும் இயேசுகிறிஸ்துவையும் (தானி.7:13-14) கண்டார். தானியேல் கண்ட "நான்கு மிருகங்களும் பூமியிலிருந்து எழும்புகிற நான்கு ராஜாக்கள்" என்பதை 17ம் வசனம் அறியத்தருகிறது. இதில் முதலாவது மிருகம் பாபிலோனிய ராட்சியத்தையும்,[71] இரண்டாவது மிருகம் மேதிய பெர்சிய ராட்சியத்தையும்,[72]

---

[71] தானியேல் கண்ட முதலாவது மிருகம் சிங்கத்தைப்போல இருந்தாலும் அதற்கு கழுகைப் போன்ற செட்டைகளும் இருந்தன (தானி.7:3-4). வேதாகமத்தில் சிங்கமும் கழுகும் பாபிலோன் ராட்சியத்தைக் குறிப்பிடும் அடையாளங்களாக இருப்பது (எரே.4:7, 4:13, எசே.17:3) இவ்விடத்திற்கு பொருத்தமான ஒப்பீடாக உள்ளது. இம்மிருகத்தின் செட்டைகள் பிடுங்கப்படுவது, பாபிலோனிய அரசன் நேபுகாத்நேச்சாருக்கு ஏற்பட்ட இழிவான நிலையையும் (தானி.4:31-33), இம்மிருகம் இரண்டு கால்களில் நின்று மனித இதயத்தைப் பெற்றுக் கொண்டது, பாபிலோனிய அரசனுடைய மிருக குணம் நீங்கி அவன் மனிதாபிமானம் உள்ளவனாக மாறியதையும் அறியத்தருகின்றது.

[72] இரண்டாவது மிருகம் கரடியைப் போல இருந்தது (தானி.7:5). இது பாபிலோனிய ராட்சியத்துக்கு அடுத்து வந்த மேதிய பெர்சிய ராட்சியத்தைக் குறிக்கின்றது. இவ்விரு அரசுகளும் கூட்டாக ஆளுகை செய்தாலும், இவற்றில் பெர்சியா மேதியாவை விட அதிக பலமுள்ளதாக இருந்தது. இதனால்தான், இவ்விராட்சியத்தைக் குறிக்கும் மிருகம் ஒரு பக்கமாகச் சாய்ந்திருந்தது. இம்மிருகத்தின்

மூன்றாவது மிருகம் கிரேக்க ராட்சியத்தையும்,[73] நான்காவது மிருகம் ரோம ராட்சியத்தையும் குறிக்கின்றது.[74] இத்தரிசனத்தில் நான்காவது மிருகத்தைப்பற்றி அதிக விபரங்கள் உள்ளன. இம்மிருகம் உலகிலுள்ள எந்த மிருகத்தைப் போலவும் இராமல் மிகவும் பயங்கரமானதாய் இருந்ததோடு, அதன் தலையில் பத்து கொம்புகளும் அவற்றுக்கு நடுவில் ஒரு சிறிய கொம்பும் இருந்தது (தானி.7:7-8). இதன் விபரங்களை அறிய தானியேல் ஆர்வம் உள்ளவனாக இருந்ததினால் (தானி.7:19-20) இதைப்பற்றி அவனுக்கு பின்வருமாறு சொல்லப்பட்டது:

> நாலாம் மிருகம் பூமியிலே உண்டாகும் நாலாம் ராஜ்யமாம். அது எல்லா ராஜ்யங்களைப் பார்க்கிலும் வேறாயிருந்து, பூமியை எல்லாம் பட்சித்து, அதை மிதித்து, அதை நொறுக்கிப் போடும். அந்தப் பத்துக் கொம்புகள் என்னவென்றால், அந்த ராஜ்யத்திலே எழும்பும் பத்து ராஜாக்களாம். அவர்களுக்குப் பின்பு வேறொருவன் எழும்புவான். அவன் முந்தினவர்களைப் பார்க்கிலும் வேறாயிருந்து, மூன்று ராஜாக்களைத் தாழ்த்திப் போட்டு, உன்னதமானவருக்கு விரோதமாக வார்த்தைகளைப் பேசி, உன்னதமானவருடைய பரிசுத்தவான்களை ஒடுக்கி, காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான். அவர்கள் ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமும் செல்லுமட்டும் அவன் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவார்கள். ஆனாலும் நியாயசங்கம் உட்காரும். அப்பொழுது முடிவுபரியந்தம்

வாயிலுள்ள மூன்று விலா எலும்புகளும், இவ்விராட்சியம் கைப்பற்றிய மூன்று ராட்சியங்களான பாபிலோன், லிதியா, எகிப்து என்பவற்றைக் குறிக்கின்றன

[73] மூன்றாவது மிருகம் சிவிங்கியைப் போன்ற மிருகமாயிருந்தது. கிரேக்க ராட்சியத்தைக் குறிப்பிடும் இம்மிருகத்திற்கு நான்கு சிறகுகளும் நான்கு தலைகளும் இருப்பது, இவ்விராட்சியம் மகா அலெக்சாண்டருடைய மரணத்திற்குப் பின்னர் நான்காகப் பிரிவடைந்ததை முன்னறிவிக்கின்றது.

[74] நான்காவது மிருகம் இருப்புப் பற்களுடையதாயிருந்து, நொறுக்கிப் பட்சித்து மீதியானதைத் தன் கால்களால் மிதித்துப்போட்டது (தானி.7:7). ரோமர்கள் தங்களுடைய ராட்சியத்தின் எல்லைகளை விஸ்தரிக்கும்போது, கைப்பற்றப்படும் நாடுகளிலுள்ள மக்களை ஆயிரக்கணக்கில் கொல்லவும், ஏனையவர்களை அடிமைகளாக விற்கவும் செய்தனர். இதற்கு முன்னிருந்த ராட்சியங்கள் இவ்விதமாகச் செய்யவில்லை. இதனால் இம்மிருகம் ஏனையவற்றைவிட வித்தியாசமானதாக இருப்பதோடு, ரோம ராட்சியத்தின் தன்மையை சரியாக விளக்கும் விவரணமாகவும் உள்ளது (J.F.Walvoord, *Daniel: The Key to Prophetic Revelation*, p. 161).

> அவனைச் சங்கரிக்கும்படியாகவும் அழிக்கும்படியாகவும் அவனுடைய ஆளுகையை நீக்கிப்போடுவார்கள். வானத்தின் கீழெங்குமுள்ள ராஜ்யங்களின் ராஜரிகமும் ஆளுகையும் மகத்துவமும் உன்னதமானவருடைய பரிசுத்தவான்களாகிய ஜனங்களுக்குக் கொடுக்கப்படும். அவருடைய ராஜ்யம் நித்திய ராஜ்யம். சகல கர்த்தத்துவங்களும் அவரைச் சேவித்து, அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும் (தானி.7:23-27).

தானியேலின் தரிசனத்தில் வரும் நான்காவது மிருகம் ரோம ராட்சியத்தைக் குறித்தாலும், இதில் சொல்லப்பட்ட சகல காரியங்களும் ரோம ராட்சியத்தின் ஆறு நூற்றாண்டு கால சரித்திரத்தில் நிறைவேறவில்லை. குறிப்பாக, இம்மிருகம் "பூமியை எல்லாம் பட்சித்தது" (தானி.7:23) என்னும் குறிப்பு, இம்மிருகத்தின் ராட்சியம் முழு உலகையும் ஆக்கிரமிப்பதாக இருக்கும் என்பதை அறியத்தருகிறது.[75] வெளிப்படுத்தல் 13:7 இதை உறுதிப்படுத்தும் விதத்தில், "ஒவ்வொரு கோத்திரத்தின்மேலும், பாஷைக்காரர்மேலும், ஜாதிகள்மேலும் அதற்கு அதிகாரங்கொடுக்கப்பட்டது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் ரோம ராட்சியம் முழு உலகையும் தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கவில்லை. மேலும், "இம்மிருகத்தின் ராட்சியம் அழிக்கப்பட்டு, உன்னதமானவருடைய பரிசுத்தவான்களுக்கு கொடுக்கப்படும்" "உன்னதமானவருடைய ராட்சியம் நித்தியமானது" (தானி. 7:18, 7:25-27) என்னும் அறிவிப்புகள், இவ்விராட்சியம் இயேசுகிறிஸ்துவினால் அழிக்கப்பட்டு அவர் இப்பூமியைத் தம்முடைய பரிசுத்தவான்களோடு ஆளுகை செய்வார் என்பதையே அறியத்தருவதனால், இத்தரிசனத்தில் இதுவரையில் நிறைவேறாத பகுதிகள் அனைத்தும் உலகின் இறுதி காலத்தைப்பற்றிய முன்னறிவிப்புகளாகவே உள்ளன. சிறிய கொம்பான அந்திகிறிஸ்து பரிசுத்தவான்களைத் தாக்கும் "ஒரு காலமும் காலங்களும் அரைக் காலமும்" அந்திகிறிஸ்துவின் ஏழு வருஷ ஆட்சிக்காலத்தின் இறுதி அரைப்பகுதியான மூன்றரை வருஷ காலத்தையே குறிப்பதும், இம்மிருகம் அந்திகிறிஸ்துவின் ராட்சியத்தை முன்னறிவிக்கின்றது என்பதற்கான இன்னுமொரு ஆதாரமாக உள்ளது. உண்மையில், அந்திகிறிஸ்துவின் ராட்சியமே உலகின் இறுதி ராட்சியமாக இருக்கும்.

---

[75] J.D.Pentecost, *Daniel: The Bible Knowledge Commentary*, p. 1353.

மிருகத்தின் பத்து கொம்புகளும் இவ்விராட்சியத்தில் எழும்பும் பத்து ராஜாக்களாக இருக்கின்றனர் (தானி.7:24). பாபிலோனிய அரசன் கண்ட சிலையில் பத்து பாத விரல்களாக உள்ள பத்து ராஜாக்களும் ரோம ராட்சிய காலத்தில் இராதது போலவே, இம்மிருகத்தின் பத்து கொம்புகளாக உள்ள பத்து ராஜாக்களும் (தானி.7:14) ரோம ராட்சியத்தில் இருக்கவில்லை. உண்மையில், சிலையைப்பற்றிய தரிசனத்தில் பத்து பாதவிரல்களாகக் குறிப்பிடப்பட்டிருந்த பத்து ராஜாக்களுமே இங்கு பத்து கொம்புகளாகச் சித்தரிக்கப்பட்டுள்ளனர். எனவே, இந்த பத்து கொம்புகளும் அந்திகிறிஸ்துவின் காலத்தில் உலகில் இருக்கும் பத்து ராட்சியங்களாக உள்ளன. மேலும், நான்காவது மிருகத்தின் தலையில் பத்து கொம்புகள் மாத்திரமல்ல, இவற்றுக்கு மத்தியில் ஒரு சிறிய கொம்பும் இருந்தது. இது "பத்து கொம்புகளுக்கு நடுவில் எழும்பிற்று" (தானி.7:8), என்றும், இது "மற்ற கொம்புகளைவிட வித்தியாசமாக இருந்தது" (தானி.7:24) என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த "சிறிய கொம்பு" அந்திகிறிஸ்துவாக இருக்கின்றான்.[77] இவன் "உன்னதமானவருக்கு விரோதமாகப் பேசுகிறவனாகவும், பரிசுத்தவான்களை ஒடுக்குகிறவனாகவும், காலங்களையும் பிரமாணங்களையும் (அதாவது மதவழிபாட்டுக் காலங்களையும், கட்டளைகளையும்) மாற்றுகிறவனாகவும் இருப்பான்" என்னும் விவரணம், அந்திகிறிஸ்துவுக்கே பொருத்தமானதாக உள்ளது (2தெச.2:4, தானி.9:27). இச்சிறிய கொம்பு மிருகத்தின் பத்து கொம்புகளுக்கு மத்தியில் இருப்பதனால், அந்திகிறிஸ்துவினுடைய ஆட்சிக்காலம் இவனுடன் சேர்ந்து உலகை ஆளுகை செய்யும் பத்து ராட்சியங்களின் நிர்வாகத்தின் கீழ் இருக்கும் என்பதை அறியத்தருகிறது. எனினும், பத்து ராட்சியங்களையும்விட அந்திகிறிஸ்து அதிக வல்லமையுள்ளவ

[77] L.J.Wood, *The Bible and Future Events*, pp. 98-100. தானியேல் 8ஆம் அதிகாரத் தரிசனத்திலும் சிறிய கொம்பு இருப்பதனால் 7ஆம் அதிகாரச் சிறிய கொம்பும் இதுவும் ஒருவனையே குறிப்பதாகச் சிலர் கருதுகின்றனர். ஆனால், 8ஆம் அதிகாரத்தில் சிறிய கொம்பு கிரேக்க ராட்சியத்தில் வரும் அரசனைக் குறிப்பதனால், 7ஆம் அதிகாரத்திலுள்ள 4ம் மிருகம் கிரேக்க ராட்சியத்தையே குறிக்கின்றது என்று சிலர் கருத முற்பட்டுள்ளனர். இரண்டு அதிகாரத் தரிசனங்களிலும் சிறிய கொம்பு இருந்தாலும், 8ஆம் அதிகாரத்தில் கொம்பு கிரேக்க அரசனைக் குறித்தாலும் 7ஆம் அதிகாரத்தில் கிரேக்க அரசனைக் குறிப்பிடவில்லை. ஏனென்றால், 8ஆம் அதிகாரத்தில் 3ஆவது ராட்சியத்திலிருந்து சிறிய கொம்பு வருகிறது. ஆனால் 7ஆம் அதிகாரத்தில் 4ஆம் மிருகத்திலிருந்தே சிறிய கொம்பு வருகிறது (G.L.Archer, *A Survey of Old Testament Introduction*, p. 384).

னாக இருப்பான். இதனால்தான், தானியேலின் தரிசனத்தில் சிறிய கொம்பான அந்திகிறிஸ்து மூன்று கொம்புகளைத் தாழ்த்திப்போட்டது (தானி.7:24). அதுமட்டுமல்ல, மூன்று ராட்சியங்கள் பலவந்தமாக அந்திகிறிஸ்துவினால் ஆக்கிரமிக்கப்படுவதைக் காணும் ஏனைய ஏழு ராட்சியத் தலைவர்களும் அந்திகிறிஸ்துவுக்குத் தங்களுடைய ராட்சியத்தின் ஆளுகையைக் கொடுப்பார்கள்.[79]

தானியேலின் தரிசனத்தில் மட்டுமல்ல, வெளிப்படுத்தல் புத்தகத்திலும், அந்திகிறிஸ்துவின் ஆட்சிக் காலத்தில் பத்து ராட்சியங்கள் உலகத் தில் இருக்கும் என்பதை அறியத்தருகிறது. வெளிப்படுத்தல் புத்தகத் தில் மிருகமாகச் சித்தரிக்கப்பட்டிருக்கும் அந்திகிறிஸ்துவுக்கு ஏழு தலைகளும் பத்து கொம்புகளும் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது (வெளி.13:1). அதுமாத்திரமல்ல, இந்தப் பத்து கொம்புகளும் பத்து ராஜாக்கள் என்பதையும், இன்னும் ராட்சியம் பெறாமல் இருக்கும் இவர்கள் மிருகத்துடனே ஒரு மணி நேரமளவும் ராஜாக்கள்போல அதிகாரம் பெறுவார்கள் என்பதையும் வெளிப்படுத்தல் புத்தகம் அறியத்தருகிறது (வெளி.17:12). தானியேலின் தரிசனத்திலும், வெளிப் படுத்தல் புத்தகத்திலும் பத்து கொம்புகளைப்பற்றி குறிப்பிடப்பட்டுள்ள விஷயம் அந்திகிறிஸ்துவின் ஆளுகைக்கு முன்னர் பத்து கொம்புக ளாகச் சித்தரிக்கப்பட்டுள்ள பத்து ராட்சியங்களும் உலகத்தில் இருக்கும். இதனால்தான் தானியேலின் தரிசனத்தில் பத்து கொம்புக ளுள்ள மிருகத்தின் தலையில் அப்பத்து கொம்புகளுக்கு மத்தியில் சிறிய கொம்பு ஒன்று எழும்பியது (தானி.7:8). அதாவது சிறிய கொம்பு வருவதற்கும் முன்பே பத்துக் கொம்புகளும் இருந்தன. இதைப்போலவே வெளிப்படுத்தல் 13ம் அதிகாரத்தில் சமுத்திரத்திலி ருந்து எழும்பி வரும் மிருகத்தின் சரீரத்தில் முதலில் தென்படுவது அதன் பத்து கொம்புகளே (வெளி.13:1). எனவே, தற்பொழுது உலகிலி ருக்கும் நூற்றுக்கணக்கான நாடுகள் பத்து உலக ராட்சியங்களாக இணைக்கப்படும். இத்தகைய ஒரு இணைவை நாம் ஐரோப்பிய ஒன்றியத்தில் பார்க்கின்றோம். இதைப்போல இன்னும் ஒன்பது அமைப் புகள் உலகில் உருவாகும். இவ்வாறு உலக நாடுகள் அனைத்தும் பத்து ராட்சியங்களாகிய பின்னர் அந்திகிறிஸ்து வெளிப்படுவான். இந்த பத்து ராட்சியங்களும் “ஒரே யோசனையுள்ளவைகளாய் தங்கள்

[79] S.R.Miller, *Daniel: The New American Commentary*, p. 213.

வல்லமையையும் அதிகாரத்தையும் மிருகத்திற்கு (அந்திகிறிஸ் துவுக்கு) கொடுப்பார்கள்" (வெளி.17:13). ஆனால், இவர்களில் மூவர் அந்திகிறிஸ்துவை எதிர்ப்பதினால் அவனால் அழிக்கப்படுவார்கள் என்பதைத் தானியேல் 7:24 அறியத்தருகிறது. இதனால் ஏனைய ஏழு ராட்சியங்களும் அந்திகிறிஸ்துவுக்குக் கீழ்ப்பட்டிருக்கும்.[80]

---

தற்காலத்தில் இருக்கும் ஐரோப்பிய ஒன்றியம் பத்து ராட்சியங்களில் ஒரு ராட்சியமாகவே உள்ளது. இதைப்போல இன்னும் ஒன்பது அமைப்புகள் உலகில் உருவாகும் போதே உலகில் பத்து ராட்சியங்கள் இருக்கும்

---

பெரும்பாலான கிறிஸ்தவர்கள், ஐரோப்பிய ஒன்றியமே இறுதி காலத் தில் முழு உலகையும் ஆட்சி செய்யும் என்றும், இதிலிருந்தே அந் திகிறிஸ்து எழும்புவான் என்றும் கருதுகின்றனர். இதில் பத்து நாடுகள் அங்கத்தினர்களாக சேரும் வரை இக்கருத்து பிரபல்யம் பெற்றிருந்தது. ஆனால் தற்போது இதில் இருபதிற்கும் அதிகமான நாடுகள் உள்ளன. எதிர்காலத்தில் இன்னும் சில நாடுகள் இதில் சேர்வதற்கு உள்ளன. எனவே ஐரோப்பிய ஒன்றியத்தைப் பத்து ராட்சியங்களாகக் கருதமுடியாது.[81] பத்து ராட்சியங்களில் ஒரு ராட்சிய மாகவே ஐரோப்பிய ஒன்றியம் உள்ளது. இதைப்போல இன்னும் ஒன்பது அமைப்புகள் உலகில் உருவாகும். அப்பொழுது உலக நாடுகள் அனைத்தும் பத்து ராட்சியங்களாக இருக்கும். இப்பத்து ராட்சியங்களும் தங்களுடைய அதிகாரத்தையும் வல்லமையையும் அந்திகிறிஸ்துவுக்கு கொடுப்பதனால் (வெளி. 17:13), அவன் முழு உலகையும் தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பான். இத்த கைய நிலை இதுவரையில் உலகில் ஏற்படாததினால், அந்திகிறிஸ் துவின் ஆட்சி ஏற்கனவே வந்துவிட்டது என்றோ, அல்லது இப்பொழுது அவனுடைய ஆட்சி நடைபெறுகிறது என்றோ கூறமுடியாது.

## (5) அந்திகிறிஸ்துவின் அடையாளம்

அந்திகிறிஸ்துவின் ஆட்சிக்காலத்தில் மக்கள் அவனைத் தெய்வமாக வழிபட நிர்ப்பந்திக்கப்படுவது மாத்திரமல்ல, ஒவ்வொருவரும் தங்களு டைய வலது கைகளில் அல்லது நெற்றிகளில் அவனுடைய அடை யாளத்தைப் பதிக்கவேண்டியவர்களாகவும் இருப்பார்கள். அக்காலத்

[80] S.R.Miller, *Daniel: The New American Commentary*, pp. 213-214.

[81] P.Patterson, *Revelation: The New American Commentary*, p. 275; K.O.Gangel, *Daniel: Holman Old Testament Commentary*, p. 61.

தில் அந்திகிறிஸ்துவினுடைய முத்திரையைத் தங்கள் கைகளில் அல்லது நெற்றிகளில் பெறாதவர்களினால் கடைகளில் பொருட்களை வாங்கவும் விற்கவும் முடியாத நிலை ஏற்படும் என்பதை வெளிப்படுத் தல் 13:16-17 அறியத்தருகிறது.[82] இம்முத்திரையைப்பற்றி வெளிப்ப டுத்தல் புத்தகத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

> இதிலே ஞானம் விளங்கும். அந்த மிருகத்தின் இலக்கத்தைப் புத்தியுடையவன் கணக்குப் பார்க்கக்கடவன். அது மனுஷனு டைய இலக்கமாயிருக்கிறது. அதினுடைய இலக்கம் அறு நூற்றறுபத்தாறு (வெளிப்படுத்தல் 13:18).

கிறிஸ்தவ உலகில் அந்திகிறிஸ்துவின் அடையாளமான 666 என் னும் இலக்கத்தைப்பற்றி பல்வேறு விதமான கருத்துகள் உள்ளன. அதாவது, இவ்விலக்கம் யாரைக் குறிக்கின்றது அல்லது எதை அடையாளப்படுத்துகிறது என்னும் சர்ச்சை முடிவில்லாத தொடர் கதையாக நீண்டுகொண்டே செல்கிறது. தற்காலத்தில் கிறிஸ்துவுக்கு எதிரானவர்களும், சாத்தானை வழிபடுபவர்களும், தாங்கள் கிறிஸ்து வுக்கு எதிரானவர்கள் என்பதை வெளிப்படையாகக் காண்பிப்பதற்காக 666ஐ உபயோகித்து வருகின்றனர். இதனால்தான் சிலருடைய வீடுகளில் அல்லது வாகனங்களில், அல்லது அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களில் இவ்விலக்கத்தை நாம் பார்க்கின்றோம். இதனால் இப்பொழுதே உலகின் இறுதி காலத்தில் வரவிருக்கும் அந்திகிறிஸ்து வந்துவிட்டான் என்று நாம் எண்ணலாகாது. இதைப்போ லவே, தொடரிலக்கங்களில் 666 வரும்போதும் அதை அந்திகிறிஸ்து வுடன் தொடர்புபடுத்தக் கூடாது.

சில வேத ஆராய்ச்சியாளர்கள் கி.பி.முதலாம் நூற்றாண்டில் கிறிஸ்த வர்களைக் கொடூரமான முறைகளில் துன்புறுத்திய "நீரோ" என்னும்

---

[82] வெளிப்படுத்தல் 13:16-17ல் "அது (அதாவது பூமியிலிருந்து வரும் மிருக மாகச் சித்தரிக்கப்பட்டிருக்கும் கள்ளத்தீர்க்கதரிசி – வெளி.13:11) சிறியோர், பெரியோர், ஐசுவரியவான்கள், தரித்திரர், சுயாதீனர், அடிமைகள், இவர்கள் யாவரும் தங்கள் தங்கள் வலதுகைகளிலாவது நெற்றிகளிலாவது ஒரு முத்திரையைப் பெறும்படிக்கும், அந்த மிருகத்தின் முத்திரையையாவது அதின் நாமத்தையாவது அதின் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக் கொள்ளுகிற வன் தவிர வேறொருவனும் கொள்ளவும் விற்கவுங் கூடாதபடிக்கும் செய்தது" என்பதை அறியத்தருகிறது.

அறுநூற்று அறுபத்தாறு எதிர்கால உலக ஆட்சியாளனான அந்திகிறிஸ்துவின் அடையாளமாக இருப்பதனால், இது கடந்த காலத்தில் இருந்த அரசர்களினதோ போப்பாண்டவர்களினதோ இல்லையென்றால் தற்காலத்தில் இருக்கும் ஆட்சியாளர்களினதோ இலக்கம் அல்ல.

ரோம அரசனைக் குறிப்பிடும் அடையாளமாக 666 இருப்பதாகக் கருதுகின்றனர்.[83] புராதன மொழிகளில் இலக்கங்களுக்குப் பதிலாக அரிச்சுவடியின் எழுத்துகள் உபயோகிக்கப்பட்டதினால்,[84] அரசர்களின் பெயரிலுள்ள எழுத்துகளுக்கு உள்ள இலக்கங்களின் கூட்டுத் தொகை 666ஆக வரும்போது அவர்களை அந்திகிறிஸ்துகளாக சில வேத ஆராய்ச்சியாளர்கள் சித்தரித்துள்ளனர். நீரோ மன்னனைப் பொறுத்தவரை, லத்தீன் மொழியில் எழுதப்பட்ட இவ்வரசனின் கிரேக்க மொழிப் பெயரை எபிரேய மொழியில் 666 வரும் விதத்தில் எழுதியே அவனை அந்திகிறிஸ்துவாக சில வேதஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஆனால், இது நீரோவை அந்திகிறிஸ்துவாகக் காண்பிப்பதற்காக உருவாக்கப்பட்ட விளக்கமாக இருக்கின்றதே தவிர, வெளிப்படுத்தல் புத்தகத்தில் முன்னறிவிக்கப்பட்டுள்ள அந்திகிறிஸ்து நீரோ அல்ல. ஏனெனில், நீரோ மன்னனின் கிரேக்க மொழிப் பெயரை வித்தியாசமான முறையில் எபிரேய மொழியில் எழுதி 666ஐக் கொண்டுவருவது சரியான வேதவிளக்கமுறை அல்ல.[85] வழக்கமாக எபிரேய மொழியில் நீரோவின் பெயர் எழுதப்படும் முறையில் அவனுடைய பெயரின் எழுத்துகளின் இலக்கங்களின் கூட்டுத்தொகை 676 ஆகவே உள்ளது.[86] மேலும், நீரோ அரசனாக இருந்த காலத்தில் எவரும் அவனுடன் இவ்விலக்கத்தைத் தொடர்புபடுத்தவில்லை.[87] அதுமாத்திரமல்ல, ஆதி சபைப் பிதாக்களில் எவரும் நீரோவை இவ்விலக்கத்துடன் தொடர்புபடுத்தி அவனை அந்திகிறிஸ்துவாகக் குறிப்பிடவில்லை.[88] இதைப்போலவே, ஏனைய ரோம அரசர்களையும்

[83] R.Bauckham, *The Climax of Prophecy: Studies on the Book of Revelation*, p. 389-407; D.E.Aune, *Revelation: Word Biblical Commentary Vol 52*, p. 770.

[84] W.G.Rutherford, *First Greek Grammar*, pp. 143-145; A.E.Cowley, *Gesenius' Hebrew Grammar*, p. 30.

[85] R.H.Mounce, *Revelation: New International Commentary on the N T*, p. 262.

[86] G.R.Osborne, *Revelation: Baker Exegetical Commentary on the NT*, p.520.

[87] L.Morris, *Revelation: Tyndale New Testament Commentary*, p. 169.

[88] ஆதிசபைப் பிதாக்களில் முதற் தடவையாக 666ஐ மனிதப் பெயர்களுடன் தொடர்புபடுத்திய இரேனியஸ், ஹிப்போலிட்டஸ் என்பவர்கள் குறிப்பிட்டுள்ள மூன்று பெயர்களில் நீரோவின் பெயர் இல்லை (Irenaeus, *Contra Haereses*.

அந்திகிறிஸ்துகளாகக் காண்பிப்பதற்கு 666ஐ அவர்களுடைய பெயர்களுக்குள் சில வேதஆராய்ச்சியாளர்கள் புகுத்தியுள்ளனர்.[89] சிலர் "கலிகுலா" என்னும் ரோம அரசனை அந்திகிறிஸ்துவாகக் காண்பிப்பதற்காக 666ஐ 616ஆகவும் மாற்றியுள்ளனர்.[90] இதனால்தான் வேதாகமத்தின் சில பழைய கையெழுத்துப் பிரதிகளில் மிருகத்தின் இலக்கம் 616 என்று மாற்றப்பட்டுள்ளது. ஆனால், அந்திகிறிஸ்து ஏற்கனவே இருந்த ரோம ராட்சியத்தின் அரசர்கள் அல்ல என்பதனால் இவர்களுடைய விளக்கங்கள் வேதத்தை மாற்றி, அல்லது ரோம அரசர்களின் பெயரின் உச்சரிப்பு முறையை மாற்றி, அல்லது இன்னுமொரு மொழியில் எழுதி உருவாக்கப்பட்டுள்ள தவறான விளக்கங்களாகவே உள்ளன. இதைப்போலவே சபை சீர்திருத்த காலத்தில் போப்பாண்டவர்களின் பெயர்களிலும் தவறான முறைகளில் இவ்விலக்கம் புகுத்தப்பட்டது. மிருகத்தின் இலக்கமான 666 எதிர்கால உலக ஆட்சியாளனான அந்திகிறிஸ்துவின் அடையாளமாக இருப்பதனால் இதைக் கடந்த காலத்தில் இருந்த அரசர்களினதோ போப்பாண்டவர்களினதோ இல்லையென்றால் தற்காலத்தில் இருக்கும் ஆட்சியாளர்களினதோ இலக்கமாக விளக்க முடியாது.[91]

தற்காலத்தில் சில கிறிஸ்தவர்கள் இணையதளத்தின் (இன்டர்நெட்) முகவரியான www என்பதை 666 என்று கூறுகின்றனர். எபிரேய மொழியில் ஆறாவது எழுத்து, "வவ்" என்னும் ஓசையுடன் இருப்பதனால்,[92] இதை ஆங்கிலத்தில் w என்னும் எழுத்துடன் தொடர்புபடுத்தி மூன்று தடவைகள் இவ்வெழுத்தைக் குறிப்பிடும் போது அது www

5.30.3). "நீரோ மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்து அந்திகிறிஸ்துவாக வருவான். இல்லையென்றால் அவன் நீரோவின் மறுஅவதாரமாக இருப்பான்" (I.T.Beckwith, *The Apocalypse of John*, pp. 400-408) என்னும் சிலரின் விளக்கம் வெறும் கற்பனையாக மாத்திரமே உள்ளது.

89 R.L.Thomas, *Revelation 8-22: An Exegetical Commentary*, p. 185.

90 R.C.H .Lenski, *The Interpretation of St.John's Revelation*, p. 417.

91 H.Alford, *The Greek Testament Volume 4*, p. 683; G.E.Ladd, *A Commentary on the Revelation of John*, p. 187.

92 119ம் சங்கீதத்தில் 41ம் வசனத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள தலைப்பைப் பார்க்கவும். இச்சங்கீதம் 22 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதோடு, ஒவ்வொரு பகுதிக்கும் எபிரேய மொழி அரிச்சுவடியின் எழுத்துகள் தலைப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளதோடு, அத்தலைப்புகளின் கீழ் உள்ள எட்டு வசனங்களும் அத்தலைப்பிலுள்ள எழுத்தை ஆரம்ப எழுத்தாகக் கொண்டுள்ள சொல்லில் ஆரம்பமாகும் விதத்தில் மூலமொழியில் எழுதப்பட்டுள்ளது.

என்று வருவதனால், தற்காலத்தில் இவ்விதமாகக் குறிப்பிடப்படும் இணையதள முகவரியின் ஆரம்ப எழுத்துகளே அந்திகிறிஸ்துவின் அடையாளம் என்று கூறுகின்றனர். இது உண்மை என்றால் இப்பொழுதே அந்திகிறிஸ்து உலகிலிருந்து ஆட்சி செய்கின் றான் என்றும், உணவுப்பொருள் விநியோகத்தை இதன் மூலம் தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கிறான் என்றும் கூற வேண்டும். ஏனெனில், அந்திகிறிஸ்துவின் ஆட்சிக்காலத்தில் மக்க ளுக்கு 666 என்னும் முத்திரை போடப்படுவதன் காரணம், அவர்கள் அன்றாட உணவுப் பொருட்களை வாங்குவதையும் விற்பதையும் கட்டுப்படுத்துவதாகும். ஆனால் இணையதளம் இத்தகைய வேலை யைச் செய்வதில்லை. உண்மையில், எபிரேய அரிச்சுவடியின் ஆறா வது எழுத்தை "வவ்" என்று உச்சரித்தாலும் அதற்கு இணையான ஆங்கில எழுத்து w அல்ல v ஆகும். எனவே, இதை எவ்விதத்திலும் இணையதளத்துடன் தொடர்புபடுத்த முடியாது. மேலும், கிரேக்க மொழியில் எழுதப்பட்ட வெளிப்படுத்தல் புத்தகத்தின் இலக்கத்தைப் புரிந்துகொள்ள எபிரேய மற்றும் ஆங்கில மொழி எழுத்துகளை அடிப்படையாகக்கொண்டு விளக்குவது சரியான செயல்முறை அல்ல.

---

அந்திகிறிஸ்து தன்னை எந்த அளவுக்கு தெய்வமாகக் காண்பித்தாலும் அவன் மனிதனே என்பதை வலியுறுதித்திக் காண்பிக்கும் விதத்தில் மனிதனைக் குறிப்பிடும் ஆறு என்னும் இலக்கம் மூன்று தடவைகள் அவனுடைய முத்திரையில் உள்ளது.

---

அந்திகிறிஸ்துவின் அடையாளமாக உள்ள 666 மனிதர்களினால் புரிந்துகொள்ள முடியாத மர்மமான இலக்கம் அல்ல. இந்த இலக்கம் யாருடையது என்பதை மனித அறிவினால் கண்டுபிடிக்கமுடியும் என்றே வெளிப்படுத்தல் 13:18ல் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால்தான், "இதிலே ஞானம் விளங்கும்" என்றும், "அந்த மிருகத்தின் இலக்கத் தைப் புத்தியுள்ளவன் கணக்குப் பார்க்கக்கடவன்" என்றும் இவ்வசனம் கூறுகிறது. அதாவது, இந்த இலக்கத்தைப்பற்றி அறிவுபூர்வமாக சிந்திக்கும்போது இதைப்பற்றி அறிந்துகொள்ளலாம் என்றே இவ்வச னம் கூறுகிறது. மேலும், இது மனிதனுடைய இலக்கம் என்பதையும் இவ்வசனம் அறியத்தருகிறது. யூதர்களுடைய மொழிவழக்கில் 6 மனிதனைக் குறிப்பிடும் இலக்கமாய் உள்ளது. அந்திகிறிஸ்து தன்னை தெய்வமாகக் காண்பித்தாலும் அவன் மனிதன் என்பதை அவனுடைய இலக்கம் சுட்டிக்காட்டுகிறது. உண்மையில், அந்தி

கிறிஸ்துவை தெய்வமாக ஏற்றுக்கொண்டு அவனை வழிபடுபவர்களே அவனுடைய முத்திரையைத் தரித்துக் கொள்வார்கள். ஆனால், அவர்கள் அம்முத்திரையின் இலக்கத்தைப்பற்றி அறிவுபூர்வமாகச் சிந்தித்துப் பார்த்தால் அந்திகிறிஸ்து தெய்வம் அல்ல அவன் மனி தன் என்பதை அறிந்துகொள்வார்கள். இதனால்தான் "அந்த மிருகத் தின் இலக்கத்தைப் புத்தியுள்ளவன் கணக்குப் பார்க்கக்கடவன். அது மனுஷனுடைய இலக்கமாயிருக்கிறது" என்று 18ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. யூதர்களுடைய மொழிவழக்கில் 6 மனிதனு டைய இலக்கம் என்றால் அந்திகிறிஸ்துவின் முத்திரையாக இவ்வி லக்கம் மூன்று தடவைகள் எதற்காகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்று நாம் கேட்கலாம். யூதர்களுடைய மொழிவழக்கில் ஒரு காரியத்தை வலியுறுத்திச் சொல்வதற்கு அதை இரண்டு அல்லது மூன்று தட வைகள் சொல்வது வழக்கம். உதாரணத்திற்குத் தேவன் பரிசுத்தர் என்பதை வலியுறுத்திச் சொல்வதற்கு, அவர் "பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர்" என்று மூன்று தடவைகள் சொல்வதை ஏசாயாவின் தரிசனத்தில் நாம் பார்க்கலாம் (ஏசா.6:3). இதைப்போலவே, இயேசு கிறிஸ்துவின் கூற்றுகளில் "மெய்யாகவே மெய்யாகவே நான் உங்க ளுக்குச் சொல்கிறேன்" என்னும் வாக்கியம் பல தடவைகள் உள் ளது. எனவே, அந்திகிறிஸ்து தன்னை எந்த அளவுக்கு தெய்வமாகக் காண்பித்தாலும் அவன் மனிதனே என்பதை வலியுறுதித்திக் காண் பிக்கும் விதத்தில் மனிதனைக் குறிப்பிடும் 6 என்னும் இலக்கம் மூன்று தடவைகள் அவனுடைய முத்திரையில் உள்ளது.[93]

## (6) அந்திகிறிஸ்துவின் அழிவு

இயேசுகிறிஸ்துவின் சபை மக்கள் உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப் பட்ட பின்பு ஆரம்பமாகும் அந்திகிறிஸ்துவின் உலகளாவிய ஆட்சி, ஏழு வருஷங்களின் பின்னர் ஒரு நொடிப்பொழுதில் முழுமையாக இயேசுகிறிஸ்துவினால் அழிக்கப்படும். அந்திகிறிஸ்து பத்து ராட்சியங் களின் அணுசரனையுடனும், சாத்தானின் வல்லமையுடனும், வெளிப் படுத்தல் 13ம் அதிகாரத்தில் பூமியிலிருந்து வரும் மிருகமாக உருவ

[93] J.F.Walvoord, *Revelation: The Bible Knowledge Commentary – New Testament*, p. 963; P.Patterson, *Revelation: The New American Commentary*, p. 282; J.F.Walvoord, *The Revelation of Jesus Christ*, p. 210; R.Pache, *The Return of Jesus Christ*, p. 86.

கிக்கப்பட்டிருக்கும் கள்ளத் தீர்க்கதரிசியின் உதவியுடனும் முழு உலகத்தையும் தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருந்தாலும், இயேசுகிறிஸ்து அவனைத் “தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம்பண்ணு வார்” என்பதை 2தெசலோனிக்கேயர் 2:8 அறியத்தருகிறது. அந்தி கிறிஸ்துவின் அழிவைப்பற்றி பல தீர்க்கதரிசனங்கள் வேதாகமத்தில் உள்ளன. நாம் ஏற்கனவே பார்த்த உலக ராட்சியங்களைப்பற்றிய தானியேலின் தரிசனங்களில், உலகின் இறுதி ராட்சியமான அந்தி கிறிஸ்துவின் ராட்சியம் இயேசுகிறிஸ்துவின் வருகையின்போது அழிக் கப்படும் என்பதை, “கைகளினால் பெயர்க்கப்படாத கல் சிலையின் பாதங்களில் மோதி அதை முழுமையாக நொறுக்கிப் போட்டது” அறியத்தருகிறது (தானி.2:34-35,2:44). நாம் ஏற்கனவே பார்த்தபடி, இத்தரிசனத்தில் சிலையின் பாதங்கள் அந்திகிறிஸ்துவின் ராட்சியத் தையும், அதன்மீது மோதி முழு சிலையையும் நொறுக்கிப்போடும் கல் இயேசுகிறிஸ்துவையும் குறிக்கின்றது. அதாவது, இயேசுகிறிஸ் துவின் வருகை அந்திகிறிஸ்துவையும் அவனுடைய ராட்சியத்தையும் முழுமையாக அழித்துவிடும் என்பதையே இத்தரிசனம் அறியத் தருகிறது. இதைப்போலவே, நான்கு மிருகங்களைப்பற்றிய தரிசனத்தி லும் (தானி.7), தேவன் உலகத்தை நியாயந்தீர்க்க ஆரம்பிக்கும்போது (தானி.7:9-10),[99] அந்திகிறிஸ்துவின் ராட்சியத்தைச் சித்தரிக்கும் மிருகம் கொல்லப்பட்டு (தானி.7:11).[100] அவனுடைய ராட்சியமும் அழிக்கப்படுவதைக் காண்கின்றோம் (தானி.7:26).[101] தானியேலின்

---

[99] இத்தரிசனத்தில் தேவன் உலகத்தை நியாயந்தீர்க்க ஆயத்தமாய் இருப்பதினாலேயே அவர் அமர்ந்திருக்கும் சிங்காசனம் அக்கினி ஜுவாலையும் அதின் சக்கரங்கள் எரிகிற நெருப்புமாயிருந்தன (தானி.7:9). அக்கினி நியாயத்தீர்ப் பைக் குறிப்பிடும் அடையாளமாக இருப்பதனால், தேவன் அமர்ந்திருக்கும் சிங்காசனமும் அக்கினி ஜுவாலையாய் உள்ளது. “அக்கினி நதி அவர் சமுகத்திலிருந்து புறப்பட்டு ஓடினது” (தானி.7:10) என்பது, அவரிடமிருந்து நியாயத்தீர்ப்பு புறப்பட்டுச் செல்வதைக் குறிக்கின்றது (S.R.Miller, *Daniel: The New American Commentary*, p. 205).

[100] தானியேல் 7:11ல், “அப்பொழுது நான் பார்த்தேன். நான் பார்த்துக்கொண்டிருக் கையில் அந்தக் கொம்பு பெருமையான பேச்சுகளைப் பேசினதினிமித்தம் அந்த மிருகம் கொலைசெய்யப்பட்டது. அதின் உடல் அழிக்கப்பட்டு, எரிகிற அக்கினிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[101] “ஆனாலும் நியாயசங்கம் உட்காரும். அப்பொழுது முடிவுபரியந்தம் அவனைச் சங்கரிக்கும்படியாகவும் அழிக்கும்படியாகவும் அவனுடைய ஆளுகையை நீக்கிப்போடுவார்கள்” என்று தானியேல்7:26 கூறுகிறது.

தரிசனங்களில் காண்பிக்கப்பட்ட அந்திகிறிஸ்துவின் அழிவு, இயேசு கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வரும்போது நடைபெறும் என்பதை வெளிப் படுத்தல் புத்தகம் அறியத்தருகிறது. இயேசுகிறிஸ்து மறுபடியும் இவ்வுலகத்திற்கு வரும்போது, “அந்திகிறிஸ்துவையும் அவனுடைய ராட்சியத்தையும் அழிக்கும் ராஜாதி ராஜாவான யுத்தவீரராக வரு வார்.”[102] இதனால்தான், வெளிப்படுத்தல் 19ம் அதிகாரத்தில் இயேசு கிறிஸ்துவின் வருகை பின்வருமாறு யோவானுக்கு காண்பிக்கப்பட் டது:

> பின்பு, பரலோகம் திறந்திருக்கக் கண்டேன். இதோ, ஒரு வெள்ளைக் குதிரை காணப்பட்டது, அதின்மேல் ஏறியிருந்தவர் உண்மையும் சத்தியமுமுள்ளவரென்னப்பட்டவர். அவர் நீதி யாய் நியாயந்தீர்த்து யுத்தம்பண்ணுகிறார். அவருடைய கண் கள் அக்கினி ஜுவாலையைப் போலிருந்தன, அவருடைய சிரசின்மேல் அநேக கிரீடங்கள் இருந்தன. அவருக்கேயன்றி வேறொருவருக்குந் தெரியாத ஒரு நாமமும் எழுதியிருந்தது. இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தைத் தரித்திருந்தார். அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பதே (வெளி. 19:11-13).

இயேசுகிறிஸ்து பரலோகத்தில் இருந்து பூமிக்கு வரப்போவதனால், அவருடைய வருகையைத் தரிசனத்தில் பார்க்கும் யோவான், பரலோ கம் திறந்திருப்பதைக் கண்டார் (வெளி.19:11). மேலும், பரலோகத்திலி ருந்து வருபவர் இயேசுகிறிஸ்து என்பதை உறுதிப்படுத்துவதற்காக “அவருடைய பெயர் தேவனுடைய வார்த்தை” என்று 13ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. யோவானுடைய சுவிசேஷத்திலும் இப்பெயர் இயேசுகிறிஸ்துவுக்கு உபயோகிக்கப்பட்டுள்ளது (யோவா.1:1, 1:14). அக்காலத்தில் யுத்தத்தில் வெற்றியீட்டிய, அல்லது புதிய பிரதேசங் களை ஆக்கிரமிக்க வரும் அரசர்கள் தங்களுடைய ஆதரவாளர்கள் பின்தொடர வெள்ளைக் குதிரையில் வருவதுபோல இயேசுகிறிஸ்து வையும் வெள்ளைக் குதிரையில் வருகிறவராக யோவான் கண்டார். வெளிப்படுத்தல் 6:2ல் அந்திகிறிஸ்துவும் வெள்ளைக் குதிரையிலேயே வந்தான். அச்சமயம், அவன் வெற்றியாளனாக, உலக ராட்சியங்கள் அனைத்தையும் தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருபவனாக இருந்தான். ஆனால் இப்பொழுது இயேசுகிறிஸ்து முழு உலகத்தை

[102] R.L.Thomas, *Revelation 8-22: An Exegetical Commentary*, pp. 382, 384.

யும் ஆளுகை செய்யும் ராஜாவாக வருகின்றார். எனினும், "அவர் உலகத்தை நியாயந்தீர்ப்பதற்காக வருகிறவராகவே இப்பகுதியில் சித்தரிக்கப்பட்டுள்ளார்."[3] இயேசுகிறிஸ்து "உண்மையும் சத்தியமும் உள்ளவராக இருப்பதனால்" அதாவது, அவர் தம்முடைய தன்மைக்கும் பணிக்கும் உண்மை உள்ளவராகவும், நிஜமானவராகவும் இருப்பதனால், அவர் "நீதியாய் உலகத்தை நியாயந்தீர்ப்பவராக இருப்பார்" என்பதும் 11ம் வசனத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.[5] தேவனே உலகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார் என்பது உண்மை என்றாலும் (சங்.7:11, 9:4, 9:8, 50:6, 67:4, 72:2, 96:13, 98:9, ஏசா.11:4), அவர் இயேசுகிறிஸ்துவின் மூலமே இதைச் செய்வார் (அப்.17:31, ரோ.2:16, யோவா.5:27).[6] எனினும், இயேசுகிறிஸ்துவின் நியாயத்தீர்ப்பு யுத்தமாக, அதாவது அவர் "நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம்பண்ணுவார்" என்று இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது நமக்கு குழப்பத்தை ஏற்படுத்தலாம். ஆனால், இயேசுகிறிஸ்து மறுபடியும் இவ்வுலகத்திற்கு வரும்போது அந்திகிறிஸ்துவும் அவனைச் சேர்ந்தவர்களும் அவருடன் போரிடுவதற்காகச் செல்வதனால் (வெளி.19:19) அவர்களை நியாயந்தீர்க்கும் அவருடைய செயல் யுத்தமாகவே இருக்கும்.[7] அதாவது, தம்மை எதிர்த்துப் போரிட வரும் அந்திகிறிஸ்துவையும் அவனைச் சேர்ந்தவர்களையும் இயேசுகிறிஸ்து யுத்தத்தில் அழித்துவிடுவார். வெளிப்படுத்தல் 17:14ல் "இவர்கள் (அந்திகிறிஸ்துவும் அவனைச் சேர்ந்தவர்களும்) ஆட்டுக்குட்டியானவருடனே (இயேசுகிறிஸ்துவுடனே) யுத்தம் பண்ணுவார்கள். ஆட்டுக்குட்டியானவர் கர்த்தாதி கர்த்தரும் ராஜாதி ராஜாவுமாயிருக்கிறபடியால் அவர்களை ஜெயிப்

[3] P.Patterson, *Revelation: The New American Commentary*, p. 346.

[5] G.R.Osborne, *Revelation: Baker Exegetical Commentary on the NT*, p. 680.

[6] "ஒரு நாளைக் குறித்திருக்கிறார் அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார். அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார்" (அப்.17:31) என்று கூறும் பவுல், "என் சுவிசேஷத்தின்படியே, தேவன் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு மனுஷருடைய அந்தரங்கங்களைக் குறித்து நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் நாளிலே இது விளங்கும்" (ரோ.2:16) என்று குறிப்பிட்டுள்ளார். "அவர் மனுஷகுமாரனாயிருக்கிறபடியால், (அதாவது மேசியாவாய் இருக்கிறபடியால்) நியாயத்தீர்ப்புச் செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்திருக்கிறார் என்பதை யோவான் 5:27 அறியத்தருகிறது. மனுஷகுமாரன் என்பது தானியேல் 7ம் அதிகாரத்தை அடிப்படையாகக்கொண்டு இயேசுகிறிஸ்துவுக்கு கொடுக்கப்பட்டுள்ள மேசியப் பெயராகும்.

[7] G.R.Osborne, *Revelation: Baker Exegetical Commentary on the NT*, p. 680.

பார்'' என்பதை அறியத்தருகிறது. அந்திகிறிஸ்து தேவனுடைய பரிசுத்தவான்களோடு (அதாவது உபத்திரவ காலத்தில் இரட்சிக்கப் படுபவர்களோடு) யுத்தம்பண்ணி அவர்களை மேற்கொண்டாலும் (வெளி. 11:7, 13:4, 13:7, 16:14), அவனால் இயேசுகிறிஸ்துவோடு போரிட்டு ஜெயிக்க முடியாது.

இயேசுகிறிஸ்து இவ்வுலகத்தை நியாயந்தீர்க்கும்போது அதில் எவ் வித தவறும் இருப்பதில்லை என்பதை அறியத்தருவதற்காக, "அவரு டைய கண்கள் அக்கினி ஜுவாலையைப் போலிருந்தன'' என்று 12ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது (வெளி.19:12). வெளிப்படுத்தல் 1:14லும், 2:18லும் இயேசுகிறிஸ்துவின் கண்கள் இவ்விதமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. அக்கினி சகலவற்றையும் எரித்துவிடுவது போல, இயேசுகிறிஸ்துவின் பார்வை சகலவற்றையும் ஊடுருவிச் செல்வதாக உள்ளது. அதாவது, அவர் சகலத்தையும் அறியும் ஆற்றலுடையவராக இருக்கின்றார். அவருடைய பார்வைக்கு எதுவும் மறைவாக இருப்பதில்லை. இதனால், அவருடைய நியாயத்தீர்ப்பு சரியானதாக இருக்கும்.[9] "அவருடைய சிரசின்மேல் அநேக கிரீடங்கள் இருந்தன'' என்னும் குறிப்பு (வெளி.19:12) அவர் உலகத்தின் சகல ராட்சியங்களையும் ஆளுகை செய்யும் ராஜாவாக வருவதை அறியத் தருகின்றது.[10] மேலும், அவர் தேவனாக இருப்பதனால், மனிதரால் முழுமையாக அவரை அறிந்துகொள்ள முடியாது என்பதை அறியத் தருவதற்காக, "அவருக்கேயன்றி வேறொருவருக்கும் தெரியாத ஒரு நாமமும் எழுதியிருக்கிறது'' என்றும் யோவான் குறிப்பிட்டுள்ளார் (வெளி.19:12).[11] மேலும், இயேசுகிறிஸ்து நியாயாதிபதியாக வந்தாலும்

---

[9] R.L.Thomas, *Revelation 8-22: An Exegetical Commentary*, p. 385.

[10] வெளிப்படுத்தல் புத்தகத்தில் சாத்தானை உருவகிக்கும் வலுசர்ப்பத்தின் ஏழு தலைகளிலும் ஒவ்வொரு கிரீடம் இருந்தது (வெளி.12:3). இதைப்போலவே அந்திகிறிஸ்துவை உருவகிக்கும் மிருகத்தின் பத்து தலைகளிலும் ஒவ்வொரு கிரீடம் இருந்தது (வெளி.13:1). ஆனால், இயேசுகிறிஸ்துவின் ஒரு தலையில் பல கிரீடங்கள் உள்ளன. ஏனெனில், அவருடைய ராஜரீக அதிகாரமும் வல் லமையும் சாத்தான் அந்திகிறிஸ்து என்பவர்களின் அதிகாரத்தைவிட மேலான தாக உள்ளதோடு, அவர் உலகிலுள்ள சகல நாடுகளையும் ஆளுகை செய் யும் அதிகாரம் உடையவராகவும் இருக்கின்றார் (R.L.Thomas, *Revelation 8-22: An Exegetical Commentary*, p. 385; A.T.Robertson, *Word Pictures in the New Testament Volume 6*, pp. 451-452)

[11] L.Morris, *Revelation: Tyndale New Testament Commentary*, p. 223; J.F.Walvoord, *Revelation: The Bible Knowledge Commentary – NT*, p. 976.

அவர் இரட்சகர் என்பதையும் அறியத்தரும் விதத்தில் "இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தை அவர் தரித்திருந்தார்" (வெளி.19:13).[12] எனினும், அவர் அருளும் இரட்சிப்பைப் பெறுவதற்கு நாம் இப்பொழுதே அவரை விசுவாசித்து ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில், அவர் மறுபடியும் வரும்போது இரட்சகராக அல்ல, நியாயாதிபதியாகவே வருவார்.

---

இயேசுகிறிஸ்து அந்திகிறிஸ்துவையும் அவனுடைய ராட்சியத்தையும் அழிப்பதற்காக ராஜாதிராஜாவாக பரலோகத்திலிருந்து வரும்போது, ஏழு வருஷங்களுக்கு முன்பு உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட சபைமக்களும் அவரோடு வருவார்கள்.

---

இயேசுகிறிஸ்து அந்திகிறிஸ்துவையும் அவனுடைய ராட்சியத்தையும் அழிப்பதற்காக ராஜாதிராஜாவாக பரலோகத்திலிருந்து வரும்போது, ஏழு வருஷங்களுக்கு முன்பு உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட சபைமக்களும் அவரோடு வருவார்கள். "பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்கள்" என்பதனால் (1கொரி.6:2-3), இயேசுகிறிஸ்து உலகத்தை நியாயந்தீர்ப்பதற்காக வரும்போது அவர்களும் அவரோடு வருவார்கள் (யூதா.14-15). இயேசுகிறிஸ்துவின் வருகையைத் தரிசனத்தில் காணும் யோவான் இதைப்பற்றி தொடர்ந்து எழுதும்போது வெளிப்படுத்தல் 19:14-16ல் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

> பரலோகத்திலுள்ள சேனைகள் வெண்மையும் சுத்தமுமான மெல்லிய வஸ்திரந்தரித்தவர்களாய், வெள்ளைக் குதிரைகளின் மேல் ஏறி, அவருக்குப் பின் சென்றார்கள். புறஜாதிகளை வெட்டும்படிக்கு அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகிறது. இருப்புக்கோலால் அவர்களை அரசாளுவார். அவர் சர்வவல்லமையுள்ள தேவனுடைய உக்கிர கோபமாகிய மதுவுள்ள ஆலையை மிதிக்கிறார். ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தர் என்னும் நாமம் அவருடைய வஸ்திரத்தின் மேலும் அவருடைய தொடையின்மேலும் எழுதப்பட்டிருந்தது.

இயேசுகிறிஸ்து மறுபடியும் வரும்போது வெள்ளைக் குதிரைகளில் அவரைப் பின் தொடர்ந்து வரும் "பரலோகத்திலுள்ள சேனைகள்"

---

[12] A.F.Johnson, *Revelation: The Expositor's Bible Commentary Volume 12*, p. 574. R.H.Charles, *Revelation: International Critical Commentary Vol. 2*, p. 133.

யார் என்பதைப்பற்றி வேத ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் கருத்து முரண்பாடுகள் உள்ளன. சிலர் இவர்களைத் தேவதூதர்களாகக் கருதுகின்றனர். பழைய ஏற்பாட்டில் தேவதூதர்களே பரலோகச் சேனையாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர் (ஆதி.32:1-2, யோசு.5:13-15, 2ராஜா.6:17, சங்.103:20-21, 148:2). அதுமாத்திரமல்ல, இவர்கள் தேவ தண்டனையை மக்களுக்கு கொடுப்பவர்களாகவும் செயல்பட் டுள்ளனர் (யோவே.2:11). புதிய ஏற்பாட்டிலும், இயேசுகிறிஸ்துவின் வருகையின் போது தூதர்களும் அவரோடு இப்பூமிக்கு வருவார்கள் என்று முன்னறிவிக்கப்பட்டுள்ளது (மத்.13:41, 16:27, 24:30-31, 25:31, மாற்.8:38, லூக்.9:26, 1தெ.3:13, 2தெச.1:8). ஆனால், வெளிப்படுத்தல் 17:14ல் இயேசுகிறிஸ்து அந்திகிறிஸ்துவோடு யுத்தம் செய்யும்போது அவரோடு இருப்பவர்கள் "அழைக்கப்பட்டவர்களும் தெரிந்துகொள்ளப் பட்டவர்களும் உண்மையுள்ளவர்களுமாய் இருக்கிறார்கள்" என்பத னால், இவர்கள் உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட பரிசுத்தவான் களாகவே உள்ளனர். மேலும், "கர்த்தர் வரும்போது அவரோடே கூட எல்லாப் பரிசுத்தவான்களும் வருவார்கள்" என்று சகரியா 14:5லும், அவர் உலகத்தை நியாயந்தீர்க்க வரும்போது "ஆயிரமாயிர மான தமது பரிசுத்தவான்களோடே வருவார்" என்று யூதா 14லும் முன்னறிவிக்கப்பட்டுள்ளதும் இதை உறுதிப்படுத்துகிறது. எனவே, இயேசுகிறிஸ்து அந்திகிறிஸ்துவையும் அவனைச் சேர்ந்தவர்களையும் அழிப்பதற்காக வரும்போது அவரோடு வரும் "பரலோகச் சேனையில்" தேவதூதர்கள் மாத்திரமல்ல, உலகிலிருந்து ஏழு வருஷங்களுக்கு முன் எடுத்துக்கொள்ளப்பட்ட சபை மக்களும் இருப்பார்கள்.[13]

பரலோக சேனை பின்தொடர வெற்றியாளராக இயேசுகிறிஸ்து இவ்வுலகத்திற்கு வரும்போது அந்திகிறிஸ்துவையும் அவனைச் சேர்ந்தவர்களையும் அவர் எவ்விதமாக அழிப்பார் என்பதை அறியத்த ருவதற்காகப் 15ம் வசனத்தில் மூன்று காரியங்கள் உதாரணங்களா கக் குறிப்பிடப்பட்டுள்ளன. எனினும் இவைகள், இயேசுகிறிஸ்து கொடுக்கும் நியாயத்தீர்ப்பைப்பற்றி பழைய ஏற்பாட்டில் முன்னறிவிக் கப்பட்ட விஷயங்களாகவே உள்ளன (ஏசா.11:3-4, சங்.2:9, ஏசா.63:6).[14]

---

[13] G.R.Osborne, *Revelation: Baker Exegetical Commentary on the New Testament*, p. 684. A.F.Johnson, *Revelation: The Expositor's Bible Commentary*, p. 575.

[14] இயேசுகிறிஸ்து புறஜாதியாரைத் தாக்குவதற்காக அவருடைய வாயிலிருந்து புறப்படும் பட்டயம் ஏசாயா 11:3-4லும், இருப்புக்கோலால் அவர் செய்யும்

முதலாவதாக, “புறஜாதிகளை வெட்டும்படிக்கு அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுவதை” யோவான் கண்டார் (வெளி.19:15). வெளிப்படுத்தல் புத்தகத்தில் பல தடவைகள் இத்தகைய விவரணம் உள்ளது (வெளி.1:16, 2:12, 2:16, 19:15, 19:21). இயேசுகிறிஸ்து யுத்தத்தின் மூலமே அந்திகிறிஸ்துவையும் அவனைச் சேர்ந்தவர்களையும் அழிப்பதனால் (வெளி.11, 19:19) அவருடைய வாயில் இருக்கும் பட்டயத்தைச் சிலர் சொல்லர்த்தமாக விளக்கியுள்ளனர்.[15] ஆனால், இதைப்பற்றி முன்னறிவிக்கும் ஏசாயாவும் பவுலும், “அவர் தமது வாயின் சுவாசத்தால் துன்மார்க்கரைச் சங்கரிப்பார்” (ஏசா.11:4) என்றும், அந்திகிறிஸ்துவைத் “தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழிப்பார்” (2தெச.2:8) என்றும் குறிப்பிட்டுள்ளனர். பட்டயத்தைச் சொல்லர்த்தமாக எடுக்கவேண்டும் என்றால், அது அவர் வாயில் அல்ல, கரத்திலேயே இருக்கவேண்டும்.[16] இயேசுகிறிஸ்துவின் வார்த்தைக்கு இருக்கும் வல்லமையே இங்கு கூர்மையான பட்டயமாக உவமிக்கப்பட்டுள்ளது.[17] அந்திகிறிஸ்துவைச் சேர்ந்தவர்கள் இயேசு கிறிஸ்துவின் வாயிலிருந்து வரும் வார்த்தையினால் அழிந்து போவார்கள் என்பதையே, அவர்கள் அவருடைய “வாயிலிருந்து புறப்பட்ட பட்டயத்தால் கொல்லப்பட்டார்கள்” (வெளி.19:21) என்று யோவான் குறிப்பிட்டுள்ளார்.[18] இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள் வல்லமையும் செயல்திறனும் கொண்டவை என்பதனால், அவர் சொல்லும்போது காரியங்கள் நடைபெறும். “அவர் தமது வாயின் வார்த்தையினால் அந்திகிறிஸ்துவின்மீது ஜெயம் பெறுபவராக இருப்பார்.”[19] அதாவது, “அவர்கள் கொல்லப்படுவார்களாக” என்று இயேசுகிறிஸ்து சொல்லும்போது, அனைவரும் உடனடியாக மரித்துவிடுவார்கள். ஏனெனில் “அவர் சொல்ல ஆகும். அவர் கட்டளையிட நிற்கும்.” (சங்.33:9).

இரண்டாவதாக, “அவர் இருப்புக் கோலால் அவர்களை அரசாளுவார்” (வெளி.19:15) என்று யோவான் குறிப்பிட்டுள்ளார். எனினும் இந்த ஆளுகை அவர்களை அழிக்கும் செயலாகவே இருக்கும். ஏனெனில்,

---

ஆளுகை சங்கீதம் 2:9லும், திராட்சை ஆலையை மிதிக்கும் செயல்முறை ஏசாயா 63:1-6லும் முன்னறிவிக்கப்பட்டுள்ளது.

[15] R.L.Thomas, *Revelation 8-22: An Exegetical Commentary*, p. 389.

[16] A.F.Johnson, *Revelation: The Expositor's Bible Commentary*, pp. 428, 575.

[17] R.H.Mounce, *Revelation: New International Commentary on the NT*, p. 355.

[18] D.E.Aune, *Revelation: Word Biblical Commentary Volume 52*, p. 1067

[19] A.F.Johnson, *Revelation: The Expositor's Bible Commentary Vol. 12*, p. 575.

இவ்விஷயம் இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகையை முன்னறி விக்கும் 2ம் சங்கீதத்தில் "இருப்புக் கோலால் அவர்களை நொறுக்கி குயக்கலத்தைப்போல் அவர்களை உடைத்துப் போடுவீர்" என்று தேவன் இயேசுகிறிஸ்துவிடம் தெரிவித்துள்ளார் (சங்.2:7,9). உண்மை யில், "இருப்புக் கோலால் ஆளுகை செய்தல்" என்னும் சொற்பிரயோ கம் "அடக்குமுறை ஆட்சியை" அல்ல, "கடுமையான முறையில் அழிக்கும் செயலைக்" குறிப்பிடும் விவரணமாகவே உள்ளது.[20] எனவே, இயேசுகிறிஸ்து அந்திகிறிஸ்துவையும் அவனைச் சேர்ந்தவர்க ளையும் அழிக்கும் செயல் மிகவும் கொடூரமானதாகவே இருக்கும். இதை நாம் சரியான விதத்தில் அறிந்துகொள்வதற்காக மூன்றாவது உதாரணமாக திராட்சைப் பழரச ஆலையைக் குறிப்பிடும் யோவான், "அவர் சர்வவல்லமையுள்ள தேவனுடைய உக்கிர கோபமாகிய மதுவுள்ள ஆலையை மிதிக்கிறார்" என்பதை சுட்டிக்காட்டுகிறார் (வெளி.19:15). அக்காலத்தில் திராட்சைப் பழத்திலிருந்து ரசத்தை எடுப்பதற்காக அவற்றை ஆலைகளில் போட்டு மிதிப்பார்கள். இதைப் போல அந்திகிறிஸ்துவும் அவனைச் சேர்ந்தவர்களும் "தேவனுடைய கோபாக்கினை என்னும் ஆலையில்" (வெளி.14:19), சரீரத்திலிருக்கும் இரத்தம் முழுவதும் வெளியே வரும் வரை கடுமையான முறையில் நசுக்கப்பட்டு அழிக்கப்படுவார்கள். இவர்களுடைய அழிவு எப்படி இருக்கும் என்பதைப் 19ம் அதிகாரத்தின் இறுதி வசனங்களில் யோவான் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

> பின்பு, மிருகமும் பூமியின் ராஜாக்களும் அவர்களுடைய சேனைகளும், குதிரையின்மேல் ஏறியிருக்கிறவரோடும் அவரு டைய சேனையோடும் யுத்தம்பண்ணும்படிக்குக் கூடிவரக் கண் டேன். அப்பொழுது மிருகம் பிடிக்கப்பட்டது. மிருகத்தின் முன்பாகச் செய்த அற்புதங்களால் அதின் முத்திரையைத் தரித்தவர்களையும் அதின் சொரூபத்தை வணங்கினவர்களை யும் மோசம்போக்கின கள்ளத்தீர்க்கதரிசியுங்கூடப் பிடிக்கப்பட் டான். இருவரும் கந்தகம் எரிகிற அக்கினிக் கடலிலே உயி ரோடே தள்ளப்பட்டார்கள். மற்றவர்கள் குதிரையின்மேல் ஏறின வருடைய வாயிலிருந்து புறப்படுகிற பட்டயத்தால் கொல்லப்

[20] H.Alford, *The Greek Testament Volume 4*, p. 578; R.L.Thomas, *Revelation 8-22: An Exegetical Commentary*, p. 389; R.H.Mounce, *Revelation: The New International Commentary on the New Testament*, p. 355.

பட்டார்கள். அவர்களுடைய மாம்சத்தினால் பறவைகள் யாவும் திருப்தியடைந்தன (வெளிப்படுத்தல் 19:19-21).

இயேசுகிறிஸ்து மறுபடியும் இவ்வுலகத்திற்கு வரும்போது, அந்தி கிறிஸ்துவும் அவனைச் சேர்ந்தவர்களும் அவரை அழிப்பதற்காக அவரோடு போரிடச் செல்வார்கள் (வெளி.19:19). இதற்காக அவன் ஏற்கனவே உலகிலுள்ள சகல படைகளையும் "அர்மகெதோன்" என்னும் இடத்தில் ஆயத்தமாக வைத்திருப்பான் (வெளி.16:12-16).[21] இதுவே சங்கீதம் 2:1-3ல் முன்னறிவிக்கப்பட்டுள்ள உலகின் கடைசி யுத்தமாகும்.[22] உலகின் சகல ராஜாக்களும் முழு ராணுவமும் எதிராக வந்தாலும், இயேசுகிறிஸ்து அவர்கள் அனைவரையும் ஒரு நொடிப்பொழுதில் அழித்து விடுவார். அந்திகிறிஸ்துவையும் அவனுக்கு உதவியாக இருந்த கள்ளத் தீர்க்கதரிசியையும் (வெளி.13:11) பிடித்து நரகத்தில் போடுவார். இதனால்தான், இவர்கள் "இருவரும் கந்தகம் எரிகிற அக்கினிக் கடலிலே உயிரோடே தள்ளப்பட்டார்கள்" என்று 20ம் வசனத்தின் இறுதிப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இயேசுகிறிஸ்துவை அழிப்பதற்காக அவரோடு போரிடவந்த உலகின் முழு ராணுவமும் கொல்லப்பட்டு, அவர்களுடைய சரீரம் பறவைகளுக்குப் பெரும் விருந்தாகக் கொடுக்கப்படும் (வெளி.19:20). இதற்காகப் பறவைகளுக்கு சிறப்பான அழைப்பும் 17ம் 18ம் வசனங்க

---

இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை அவருக்கு எதிராக இருக்கும் அனைவருக்கும் அழிவைக் கொண்டுவரும் ஆபத்தான சம்பவமாகவே இருக்கும். இயேசுகிறிஸ்து தம்மை எதிர்க்கும் அனைவரையும் அழித்து உலகில் தம்முடைய ராட்சியத்தை ஸ்தாபிப்பார்.

---

[21] "அர்மகெதோன்" என்பது "ஹார்மெகெதொன்" (*Harmagedon*) என்னும் கிரேக்கச் சொல்லின் தமிழ் வடிவமாகும். இது இஸ்ரவேல் நாட்டின் வடபகுதியில் எஸ்ட்ரலோன் (Esdraelon) அல்லது ஜெஸ்ரேல் (Jezreel) என்னும் சம வெளியில் உள்ள "மெகிதோ" என்னும் புராதன நகரம் இருந்த பிரதேசத்தைக் குறிக்கின்றது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இவ்விடத்தில் பல யுத்தங்கள் நடைபெற்றுள்ளன (நியாயா.4-5, 7, 1சாமு.31, 2ராஜா.23:29-30). எனினும், இவ்விடம், தேவனுடைய ஜனங்களை ஒடுக்கிய அரசர்கள் தோல்வியடைந்த இடமாகவும் (நியாயா.5:19-21), கள்ளத்தீர்க்கதரிசிகள் அழிந்துபோன இடமாகவும் (1ராஜா.18:40), தவறாக வழிநடத்தப்பட்ட அரசன் மரித்த இடமாகவும் (2ராஜா.23:29-30, 2நாளா.35:20-25) உள்ளது. இதனால், இயேசுகிறிஸ்துவை யுத்தத்தில் அழிக்கவரும் உலகின் சகல ராஜாக்களும் அழிந்துபோவதற்கு ஏற்ற இடமாக இது உள்ளது

[22] P.E.Hughes, *Revelation: The Pillar New Testament Commentary*, p. 177.

ளில் கொடுக்கப்பட்டுள்ளது.[24] அந்திகிறிஸ்துவுக்கும் அவனுக்கு உதவியாக இருந்த கள்ளத்தீர்க்கதரிசிக்கும் கொடுக்கப்படும் தண்டனைக்கும், இவர்களோடு சேர்ந்து இயேசுகிறிஸ்துவை அழிப்பதற்காக வரும் ராணுவத்தினருக்கு கிடைக்கும் தண்டனைக்கும் இடையிலுள்ள ஒரேயொரு வித்தியாசம், அந்திகிறிஸ்துவும் கள்ளத்தீர்க்கதரிசியும் மரித்து தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு முகங்கொடுக்காமல் உடனடியாக உயிரோடே நரகத்திற்குத் தள்ளப்படுவார்கள். ஆனால் மற்றவர்கள் சரீரப்பிரகாரமாக மரித்து, பின்னர் தேவனுடைய நியாயத்தீர்ப்பை சந்திப்பார்கள். வெளிப்படுத்தல் 20:11-15ல் குறிப்பிடப்பட்டிருக்கும் இந்நியாயத்தீர்ப்பு, இயேசுகிறிஸ்துவின் ஆயிரவருஷ அரசாட்சிக்குப் பின்னர் நடைபெறும். எனவே இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை அவருக்கு எதிராக இருக்கும் அனைவருக்கும் அழிவைக் கொண்டுவரும் ஆபத்தான சம்பவமாகவே இருக்கும். இயேசுகிறிஸ்து தம்மை எதிர்க்கும் அனைவரையும் அழித்து உலகில் தம்முடைய ராட்சியத்தை ஸ்தாபிப்பார். இது ஆயிரம் வருஷங்களுக்கு நீடிக்கும். இதைப்பற்றி அடுத்த அத்தியாயத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.




அந்திகிறிஸ்துவின் ஆட்சியையும் அதற்கான ஆதாரங்களையும் ஆராய்கிறவர்களாக அல்ல, அண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தமாகிறவர்களாக நாம் இருக்கவேண்டும்.

[24] இதைப்பற்றி யோவான் கண்ட தரிசனத்தை எழுதும்போது அவர், "பின்பு ஒரு தூதன் சூரியனில் நிற்கக்கண்டேன். அவன் வானத்தின் மத்தியில் பறக்கிற சகல பறவைகளையும் பார்த்து: நீங்கள் ராஜாக்களின் மாம்சத்தையும், சேனைத் தலைவர்களின் மாம்சத்தையும், பலவான்களின் மாம்சத்தையும், குதிரைகளின் மாம்சத்தையும், அவைகளின்மேல் ஏறியிருக்கிறவர்களின் மாம்சத்தையும், சுயாதீனர் அடிமைகள், சிறியோர் பெரியோர், இவர்களெல்லாருடைய மாம்சத்தையும் பட்சிக்கும்படிக்கு, மகாதேவன் கொடுக்கும் விருந்துக்குக் கூடிவாருங்கள் என்று மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டான்" என்று வெளிப்படுத்தல் 19:17-18ல் குறிப்பிட்டுள்ளார்.

## மூன்றாம் அத்தியாயத்தின் சுருக்கம்

அந்திகிறிஸ்துவின் ஆட்சியை
முடிவுக்குக் கொண்டுவரும் இயேசுகிறிஸ்து
எடுத்துக்கொள்ளப்பட்ட சபை மக்களோடும்,
உபத்திரவ கால பரிசுத்தவான்களோடும்,
பழைய ஏற்பாட்டுப் பக்தர்களோடும்
எருசலேமைத் தலைநகராகக்கொண்டு
இவ்வுலகில் ஆயிரம் வருஷங்கள்
ஆளுகை செய்வார்.
அந்திகிறிஸ்துவின் ஆட்சிக் காலத்தின் முடிவில்
மரணமடையாமல் இருக்கும் மக்கள்
அவருடைய ஆளுகைக்கு உட்பட்டவர்களாக
இருப்பார்கள். அக்காலத்தில் பூமியானது
பாவத்தின் சாபங்கள் அனைத்திலிருந்தும்
விடுவிக்கப்பட்டு, பாவம் உலகத்தில்
பிரவேசிப்பதற்கு முன்னர் இருந்த நிலையில்
காணப்படும். மக்கள் நீண்ட ஆயுள்
உள்ளவர்களாக இருப்பார்கள்.
பூமி பூங்காவனம் போல இருக்கும்.
உலகில் முழுமையான சமாதானம் நிலவும்.
மனிதரும் ஏனைய உயிரினங்களும் நோவாவின்
காலத்துக்கு முற்பட்ட நிலையில் இருப்பார்கள்.
சாத்தான் கட்டப்பட்ட நிலையில் இருப்பான்.
ஆயிர வருஷ ஆட்சியின் பின்னர்
இவ்வுலகம் முழுமையாக அழிக்கப்படுவதோடு,
அவிசுவாசிகள் அனைவரும் நியாயந்தீர்க்கப்படுவார்கள்.
அதன்பின்னர் புதிய வானமும் புதிய பூமியும்
சிருஷ்டிக்கப்படும்.

# மூன்றாம் அத்தியாயம்



# உலகத்தை இயேசுகிறிஸ்து ஆளுகை செய்தல்

உலகின் இறுதிகாலத்தில் ஏழு வருஷங்களுக்கு நீடிக்கும் அந்தி கிறிஸ்துவின் ஆட்சியை முடிவுக்கு கொண்டுவரும் இயேசுகிறிஸ்து, அதன் பின்னர், எருசலேமைத் தலைநகராகக்கொண்டு முழு உலகத்தையும் ஆயிரம் வருஷங்களுக்கு ஆளுகை செய்வார். இயேசு கிறிஸ்துவின் இரண்டாவது வருகையின் சிறப்பம்சம் இதுவேயாகும். வெளிப்படுத்தல் 20ம் அதிகாரத்தில் மகிமையான இந்த ஆயிர வருஷ ஆட்சிக் காலத்தைப்பற்றி ஆறு தடவைகள் குறிப்பிடப்பட்டுள்ளது (வெளி.20:2-7). சில வேத ஆராய்ச்சியாளர்கள் இந்த ஆயிரம் வருஷத்தை சொல்லர்த்தமாக எடுப்பதில்லை. நீண்ட காலப் பகுதியைக் குறிப்பிடும் அடையாளமாகவே “ஆயிரம் வருஷம்” என்னும் சொற்பிரயோகம் இவ்வதிகாரத்தில் இருப்பதாக இவர்கள் கருதுகின்றனர். ஆனால், வெளிப்படுத்தல் புத்தகத்தில் பல உருவக விவரணங்கள் இருப்பது உண்மை என்றாலும், வருஷங்கள் மாதங்கள் போன்ற கால அளவீடுகள் இப்புத்தகத்தில் சொல்லர்த்தமாகவே

> கி.பி.4ம் நூற்றாண்டு வரை கிறிஸ்தவ சபையின் தலைவர்கள் வெளிப்படுத்தல் 20ம் அதிகாரத்தில் முன்னறிவிக்கப்பட்டுள்ள ஆயிரம் வருஷத்தை சொல்லர்த்தமாகவே வியாக்கியானம் செய்து வந்தனர்.

குறிப்பிடப்பட்டுள்ளன.[1] உதாரணத்திற்கு 42 மாதங்கள், 1260 நாட்கள் (வெளி.13:5, 12:6) என்னும் சொற்பிரயோகங்கள் சொல்லர்த்தமான மாதங்களையும் நாட்களையுமே குறிக்கின்றன. எனவே, இவற்றை உருவக விவரணம் என்று கூறமுடியாது. இதேவிதமாகவே "ஆயிரம் வருஷமும்" சொல்லர்த்தமாகவே உள்ளது. இது நீண்ட காலப் பகுதிக்கான உருவகம் என்றால், "வருஷம்" என்னும் சொல்லை உபயோகிக்கத் தேவையில்லை. இவ்வதிகாரத்தில் ஆயிரம் வருஷத் தைப்பற்றி ஆறு தடவைகள் குறிப்பிடப்பட்டிருப்பதனால் இது சொல்லர்த்தமான ஆயிரம் வருஷத்தைப்பற்றிய குறிப்பாக இருப்பதை எவ்விதத்திலும் மறுக்க முடியாதுள்ளது.[2] மேலும், ஆயிர வருஷ ஆட்சிக்கு முன்பும், அதன் பின்பும் நடைபெறும் சம்பவங்களும் இவ்வதிகாரத்தில் முன்னறிவிக்கப்பட்டுள்ளதினால், இது சொல்லர்த்த மான ஆயிர வருஷ காலப் பகுதியாகவே உள்ளது. இயேசுகிறிஸ்து தாவீதின் சிங்காசனத்தை மறுபடியும் ஸ்தாபித்து முழு உலகையும் ஆளுகை செய்வார் என்று பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் முன்னறிவித்திருந்தனர் (ஏசா.9:7, ஆமோ.9:12, எரே.23:5). இந்த

[1] வெளிப்படுத்தல் 20ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் "ஆயிரம் வருஷங்கள்" சொல்லர்த்தமான ஆயிரம் வருஷங்கள் அல்ல என்று கருதுபவர்கள், இது "முழுமையான காலத்தைக் குறிக்கும் அடையாளம்" என்றும், இது எவ்வளவு காலத்தைக் கொண்டுள்ளது என்பது தேவனுக்கு மட்டுமே தெரியும்" என்றும் கூறுகின்றனர் (W.Cox, *Amillennialism Today*, p. 4). இவர்கள் இதை இயேசுகிறிஸ்துவின் முதல் வருகைக்கும் இரண்டாவது வருகைக்கும் இடைப்பட்ட காலத்திற்கான உருவகமாகக் கருதுவதோடு, தற்காலத்தில் இயேசு கிறிஸ்து விசுவாசியின் உள்ளத்தில் அல்லது சபையில் இருந்து ஆளுகை செய்வதே வெளிப்படுத்தல் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் இயேசுகிறிஸ்துவின் ஆயிர வருஷ ஆட்சி என்று கூறுகின்றனர் ( A.Hoekema, *The Bible and the Future*, p. 227; W.Hendriksen, *More Than Conquerors, An Interpretation of the Book of Revelation*, p. 185). கிறிஸ்தவ இறையியலில் இவ்வுபதேசம் "ஏமில்லேனியலிசம்" (Amillennialism) என்று அழைக்கப்படுகிறது. ஆயிரவருஷ ஆட்சி இல்லை என்பதே இப்பெயரின் அர்த்தமாகும். வெளிப்படுத்தல் புத்தகத்தை ஏழு பகுதிகளாகப் பிரிக்கும் இவர்கள், ஒவ்வொரு பகுதியும், இயேசு கிறிஸ்துவின் இரண்டு வருகைகளுக்கும் இடைப்பட்ட காலத்தின் சரித்திரத்தை வித்தியாசமான முறைகளில் முன்னறிவித்துள்ளதாகக் கூறுகின்றனர் (M.J. Erickson, *Contemporary Options in Eschatology*, p. 83).

[2] P.N.Benware, *Understanding the End Times Comprehensive Prophecy*, p. 114.

ஆட்சி ஆயிரம் வருஷங்களுக்கு இவ்வுலகில் இருக்கும் என்பதை வெளிப்படுத்தல் 20ம் அதிகாரம் அறியத்தருகின்றது.

கி.பி.4ம் நூற்றாண்டு வரை கிறிஸ்தவ சபையின் தலைவர்கள் வெளிப்படுத்தல் 20ம் அதிகாரத்தில் முன்னறிவிக்கப்பட்டுள்ள ஆயிரம் வருஷத்தை சொல்லர்த்தமாகவே வியாக்கியானம் செய்து வந்தனர். இயேசுகிறிஸ்துவின் ஆயிர வருஷ ஆட்சியை விசுவாசிக்காதவர்கள் உண்மையான கிறிஸ்தவர்கள் அல்ல என்று 2ம் நூற்றாண்டைச் சேர்ந்த சபைத் தலைவரான "ஜஸ்டின் மாட்டர்" (Justin Martyr கி.பி.100-165) என்பவர் கருதினார். இஸ்ரவேல் ராட்சியத்தின் எதிர்கால ஆசீர்வாதங்களைப்பற்றி பழைய ஏற்பாட்டில் முன்னறிவிக்கப்பட்ட தீர்க்கதரிசனங்களை சொல்லர்த்தமாக விளக்கிய ஜஸ்டின் மாட்டர், இவை இயேசுகிறிஸ்துவின் ஆயிர வருஷ ஆட்சியில் நிறைவேறும் என்று போதித்தார். இன்னுமொரு சபைத் தலைவரான இரேனியஸ் (Irenaeus கி.பி. 130-200) என்பவர், இயேசுகிறிஸ்துவின் வெற்றியா னது வரவிருக்கும் உலகத்திற்கு மட்டுமல்ல இவ்வுலகத்திற்கும் உரியது என்பதனால், அவரது ராஜரீக ஆளுகை பரலோகத்தில் மட்டுமல்ல இவ்வுலகிலும் இருக்கும் என்று போதித்தார்.[4] மேலும், வெளிப்படுத்தல் புத்தக விஷயங்களை அறிந்திராத யூதர்கள், புதிய ஏற்பாடு எழுதப்படுவதற்கும் முன்பே, பழைய ஏற்பாட்டை மாத்திரம் ஆதாரமாகக்கொண்டு, மேசியா இவ்வுலகத்தை ஆயிரம் வருஷங்க ளுக்கு ஆளுகை செய்வார் என்னும் நம்பிக்கையுடையவர்களாக இருந்தனர். மேசியாவின் ஆட்சி இவ்வுலகில் ஆயிரம் வருஷங்களுக்கு இருக்கும் என்பதை அறிந்துகொள்வதற்கு யூதர்களுக்கு பழைய ஏற்பாடு மாத்திரம் போதுமானதாக இருந்தது.[5]

உண்மையில், கி.பி.4ம் நூற்றாண்டில் ஆயிரம் வருஷ ஆட்சியைப் பற்றிய வேதத்திற்கு முரணான கருத்துகள் உருவாகியதினாலேயே பலர் இவ்வுபதேசத்தை சொல்லர்த்தமாக ஏற்றுக்கொள்ள மறுத்தனர். அதன் பின்னர், ஒகஸ்டீன் (கி.பி.354-430) என்னும் சபைத் தலைவரின் போதனையே சபையில் அதிக செல்வாக்கு செலுத்தியது. இதற்கும் முற்பட்ட காலத்தில், பர்னபாவின் நிருபத்தில் இத்தகைய உபதேசத் தின் தன்மைகள் இருந்துள்ளன. ஒகஸ்டீனுக்கு முற்பட்ட காலத்தில்

[4] A.J.Visser, "A Bird's-Eye View of Ancient Christian Eschatology" pp. 8-11.
[5] R.Pache, *The Return of Jesus Christ*, p. 188.

அலெக்சாந்திரியாவைச் சேர்ந்த சபைத் தலைவர் ஒரிகன் (கி.பி.185-254) என்பவர், இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகையைப் பற்றி வித்தியாசமான கருத்துடையவராக இருந்தார். கி.பி. நான்காம் நூற்றாண்டில், "டொனாட்டிஸ்ட்" (Donatist) என்று அழைக்கப்படும் வேதப்புரட்டு உபதேசத்தைப் பின்பற்றிய ஆபிரிக்காவைச் சேர்ந்த "டைகோனியஸ்" (Tyconius) என்பவர், அதுவரை காலமும் சபையில் இருந்த உபதேசத்திற்கு முரணான விதத்தில் இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகையைப்பற்றி போதித்தார்.[7] டைகோனியஸ்சின் உபதேசம் ஒகஸ்டீனைக் கவர்ந்ததினால், (டொனாட்டிஸ்ட் என்னும் போதனையை பிழையான வேதப்புரட்டாக அவர் கருதியபோதிலும்), ஆயிர வருஷ ஆட்சி எதிர்காலத்தில் வரும் என்று எதிர்பார்ப்பது தவறு என்றும், அது ஏற்கனவே இயேசுகிறிஸ்துவின் முதல் வருகை யின் போதே வந்து விட்டது என்றும் போதிக்கத் தொடங்கினார்.[8] இதனால், அதன் பின்னர் கி.பி.17ம் நூற்றாண்டு வரை ஆயிர வருஷ ஆட்சியைப்பற்றிய ஒகஸ்டீனுடைய உபதேசமே கிறிஸ்தவ உலகில் அதிக செல்வாக்கு செலுத்தும் போதனையாய் இருந்தது.[9]

---

வெளிப்படுத்தல் புத்தக விஷயங்களை அறிந்திராத யூதர்கள், புதிய ஏற்பாடு எழுதப்படுவதற்கும் முன்பே, பழைய ஏற்பாட்டை மாத்திரம் ஆதாரமாகக்கொண்டு, மேசியா இவ்வுலகத்தை ஆயிரம் வருஷங்களுக்கு ஆளுகை செய்வார் என்னும் நம்பிக்கையுடையவர்களாக இருந்தனர்.

---

இயேசுகிறிஸ்து முதல் தடவையாக இவ்வுலகத்திற்கு வந்தபோது, அவரது ஆயிர வருஷ ஆட்சி ஆரம்பமாகியது என்று போதித்த ஒகஸ்டீன், மாற்கு 3:27ஐ ஆதாரமாகக்கொண்டு, அச்சமயம் வெளிப்ப டுத்தல் 20:2ல் குறிப்பிட்டுள்ளபடி சாத்தான் ஆயிரம் வருஷத்திற்கு கட்டப்பட்டு விட்டான் என்றும், ஆயிர வருஷ ஆட்சியின் முடிவில் இயேசுகிறிஸ்து வரும் வரை அவன் கட்டப்பட்ட நிலையிலேயே இருப்பான் என்றும் போதித்தார் (வெளி.20:7). ஒகஸ்டீனைப் பொறுத்த வரை, மாற்கு 3:27ல் குறிப்பிடப்பட்டுள்ள "வல்லமையான மனிதன்" சாத்தான். "அவனிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட பொருட்கள்" அவனது ஆதிக்கத்தின் கீழ் இருந்த மக்கள். இயேசுகிறிஸ்து சாத்தானைத் தம்முடைய முதல் வருகையின்போது கட்டிப் போட்டு,

[7] M.J.Erickson, *Christian Theology*, p. 1206.
[8] R.Showers, *There Really Is a Difference*, p. 133.
[9] H.Bietenhard, "The Millennial Hope in the Early Church" pp. 28-29

அவனது ஆதிக்கத்தின் கீழ் இருந்த மக்களை மீட்டுள்ளார் என்பதே ஒகஸ்டீன் இவ்வசனத்திற்கு கொடுத்துள்ள விளக்கமாகும்.[10] ஆனால், பிசாசுகளின் தலைவனின் உதவியினாலேயே இயேசுகிறிஸ்து மனித ருக்குள் இருந்த பிசாசுகளைத் துரத்துகிறார் என்னும் வேதபாரகரின் குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கும்போது, தாம் பிசாசுக்கு எதிரானவர் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகவே மாற்கு 3:27ல் "பலவானை முந்திக் கட்டினாலொழிய ஒருவனும் பலவானுடைய வீட்டுக்குள் புகுந்து அவன் உடைமைகளைக் கொள்ளையிடக் கூடாது. கட்டினா னேயாகில் அவன் வீட்டைக் கொள்ளையிடுவான்" என்று கூறினார் (மாற்.3:22-27). இயேசுகிறிஸ்துவின் இக்கூற்று ஒரு உவமை என்பதை 23ம் வசனம் அறியத்தருகிறது. இயேசுகிறிஸ்துவின் உவமைகள் உதாரணக் கதைகளாக இருப்பதனால், இதில் உள்ள ஒவ்வொரு விஷயத்துக்கும் அர்த்தங்களைக் கொடுக்க முடியாது. உண்மையில், தாம் சாத்தானுக்கு எதிரானவராகவும், அவனைவிட அதிக வல்லமை உள்ளவராகவும் இருப்பதினாலேயே, தம்மால் மனிதனுக்குள் இருந்த பிசாசைத் துரத்தக்கூடியதாய் இருந்தது என்பதையே 23 முதல் 27 வரையிலான வசனங்களில் உள்ள உவமைகள் மூலம் இயேசு கிறிஸ்து சுட்டிக்காட்டியுள்ளார். இதனால்தான், "இயேசுகிறிஸ்து எப்போது சாத்தானைக் கட்டினார் என்று மாற்கு 3:27ல் குறிப்பிடப்பட வில்லை."[11] மேலும், சாத்தான் தற்காலத்தில் கட்டப்பட்டவனாக இருப்பதாக வேதாகமம் கூறவில்லை. தற்காலத்தில் அவன் கிறிஸ்தவ சபைக்கு எதிராகச் செயற்படுகிறவனாகவும் (1தெச.2:18), "எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித் திரிகிறவனாகவுமே" இருக்கின்றான் (1பேது,5:8). அதுமாத்திரமல்ல, அவன் உலகத்தைத் தன் கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருப்பவனாகவும் (1யோவா.5:19, யோவா.14:30),[12] பரலோகம் வரை சென்றுவரக் கூடியவனாகவும் இருக்கின்றான் (யோபு.1:6, 2:1, வெளி.12:10).[13] சாத்தான் தற்காலத்தில்

---

[10] Augustine, *Sermon* 259.2.

[11] R.H.Stein, *Mark: Baker Exegetical Commentary on the NT*, pp. 184-185.

[12] இதனால்தான், "உலகமுழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது" என்று கூறும் வேதாகமம் (1யோவா.5:19), அவனை "இவ்வுலகத்தின் அதிபதி" (யோவா. 14:30) என்றும் வர்ணித்துள்ளது

[13] பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பக்தன் யோபுவைக் குற்றம் சாட்டுவதற்காகப் பரலோகத்திற்கு சென்றது போலவே (யோபு.1:6, 2:1) தற்காலத்திலும் கிறிஸ்த வர்களைப்பற்றி குற்றஞ்சாட்டுவதற்காக சாத்தான் பரலோகத்திற்குச் செல்கிறவ னாகவே இருக்கின்றான் (வெளி.12:10).

பூமியில் மட்டுமல்ல, ஆகாய மண்டலத்திலும் செயல்படுகிறவனாக இருப்பதனால் "ஆகாயத்து அதிகாரப் பிரபு" என்று அவன் எபேசியர் 2:2ல் வர்ணிக்கப்பட்டுள்ளான். வெளிப்படுத்தல் 20:2ன்படி, இயேசு கிறிஸ்துவின் ஆயிர வருஷ ஆட்சிக்காலத்திலேயே சாத்தான் கட்டப் பட்டவனாக இருப்பான். மேலும், இயேசுகிறிஸ்துவின் ஆயிர வருஷ ஆட்சியின்போது, "அந்திகிறிஸ்துவின் ஆட்சிக் காலத்தில் இரத்த சாட்சிகளாக மரித்தவர்கள் உயிர்ப்பிக்கப்பட்டு இயேசுகிறிஸ்துவோடு ஆளுகை செய்வார்கள்" என்று வெளிப்படுத்தல் 20:4 அறியத்தருகின் றது. மரித்தோர் உயிர்த்தெழுந்து இயேசுகிறிஸ்துவுடன் ஆளுகை செய்வது அவருடைய வருகையின் பின்னர் நடைபெறும் காரியமாக இருப்பதனால், அவருடைய ஆயிர வருஷ ஆட்சி தற்காலத்தில் நடைபெறுவதாகக் கூறுவது அர்த்தமற்றது. எனவே, இயேசுகிறிஸ்து வின் முதல் வருகையின்போதே அவருடைய ஆயிர வருஷ ஆட்சி ஆரம்பமாகிவிட்டது என்று கூறமுடியாது. இவ்வத்தியாயத்தில், இயேசு கிறிஸ்துவின் ஆயிர வருஷ ஆட்சியைப்பற்றிய வேதாகம சத்தியங் களை ஆராய்ந்து பார்ப்போம்.

## (1) அந்திகிறிஸ்துவின் அழிவுக்குப் பின்னர் இருக்கும் ராட்சியம்

இயேசுகிறிஸ்து மறுபடியுமாக இவ்வுலகத்திற்கு வரும்போது, அந்தி கிறிஸ்துவினுடைய ராட்சியம் அழிக்கப்பட்டு, அவருடைய ராட்சியம் இவ்வுலகில் ஸ்தாபிக்கப்படும் என்று வேதாகமத் தீர்க்கதரிசனங்கள் அறியத்தருகின்றன. இயேசுகிறிஸ்துவின் முதல் வருகையைப்பற்றி முன்னறிவிக்கப்பட்ட காரியங்கள் அனைத்தும் முழுமையாகவும் சொல்லர்த்தமாகவும் நிறைவேறியதுபோலவே, அவருடைய இரண்டா வது வருகையைப்பற்றிய தீர்க்கதரிசனங்களும் சொல்லர்த்தமாகவும் முழுமையாகவும் நிறைவேறும். அவருடைய இரண்டாவது வருகை யின் முதல் கட்டமாக உலகிலிருக்கும் அவருடைய சபையின் மக்கள் எடுத்துக்கொள்ளப்படுவார்கள் என்றும், அதன் பின்பு ஏழு வருஷங்களுக்கு இயேசுகிறிஸ்துவுக்கு எதிரான அந்திகிறிஸ்துவின்

---

இயேசுகிறிஸ்து பகிரங்கமாக இவ்வுலகத்திற்கு வரும்போது, அந்திகிறிஸ்துவையும் அவனுடைய ராட்சியத்தையும் அழித்துத் தம்முடைய ஆயிர வருஷ ஆட்சியை இவ்வுலகில் ஆரம்பிப்பார்.

---

ஆட்சி நடைபெறும் என்றும் இந்நூலின் முதலிரு அத்தியாயங்களிலும் அறிந்துகொண்டோம். இயேசுகிறிஸ்து பகிரங்கமாக இவ்வுலகத்திற்கு வரும்போது, அந்திகிறிஸ்துவையும் அவனுடைய ராட்சியத்தையும் அழித்துத் தம்முடைய ராட்சியத்தை இவ்வுலகில் ஸ்தாபிப்பார். எனவே, இயேசுகிறிஸ்துவின் ஆயிர வருஷ ஆட்சியானது அந்தி கிறிஸ்துவின் அழிவுக்குப் பின்னர் உலகில் இருக்கும் ராட்சியமாய் உள்ளது.[14]

உலக ராட்சியங்களைப்பற்றிய தானியேலின் தரிசனங்களில், அந்தி கிறிஸ்துவின் ராட்சியத்தை முழுமையாக அழிக்கும் இயேசுகிறிஸ்து தம்முடைய உலகளாவிய ராட்சியத்தை ஸ்தாபிப்பார் என்பதை அறியத்தரும் விதத்தில், "அந்திகிறிஸ்துவின் ராட்சியத்தை அடையா ளப்படுத்தும் சிலையின் பாதங்களில்" மோதி அதை முழுமையாக நொறுக்கிப்போடும் "மானிட கைகளால் பெயர்க்கப்படாத ஒரு கல் பெரிய பர்வதமாகி பூமியையெல்லாம் நிரப்பிற்று" (தானி.2:34-35). நாம் ஏற்கனவே பார்த்தபடி இந்தக் கல் இயேசுகிறிஸ்துவை அடையா ளப்படுத்துவதோடு (சங்.118:22, ஏசா.8:14, 28:16, 1பேது.2:6-8),[15] அவருடைய ராட்சியம் முழு உலகையும் உள்ளடக்கியதாய் இருக் கும் என்பதையும் அறியத்தருவதற்காய் அது பூமியையெல்லாம் நிரப்பிற்று.[16] மேலும், உலக ராட்சியங்கள் இருக்கும் இப்பூமியிலேயே இயேசுகிறிஸ்துவின் ராட்சியம் இருக்கும் என்பதை அறியத்தருவதற் காகவே இக்கல் உலக ராட்சியங்கள் இருந்த பூமியை முழுமையாக நிரப்புவது தானியேலுக்கு காண்பிக்கப்பட்டது.[17] எனவே, இவ்வுலகில் ஸ்தாபிக்கப்படும் ராட்சியத்தைப்பற்றியே தானியேல் குறிப்பிட்டுள் ளார்.[18] இயேசுகிறிஸ்துவின் உலகளாவிய ராட்சியத்தைக் குறிப்பிடும் கல்லைப்பற்றி விளக்கும்போது தானியேல் பின்வருமாறு முன்னறிவித் துள்ளான்:

> அந்த ராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப் பண்ணு

[14] H.C.Thiessen, *Lectures in Systematic Theology*, p. 396.
[15] J.D.Pentecost, *Daniel: The Bible Knowledge Commentary – OT*, p. 1336.
[16] J.F.Walvoord, *Daniel: The Key to Prophetic Revelation*, p. 76.
[17] R.Pache, *The Return of Jesus Christ*, p. 190.
[18] J.A.Montgomery, *Daniel: A Critical and Exegetical Commentary*, p. 178.

வார். அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை. ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து, உருண்டுவந்து, இரும்பையும் வெண்கலத்தையும் களிமண்ணையும் வெள்ளியையும் பொன்னையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும் (தானியேல் 2:44).

இவ்வசனம் "அந்த ராஜாக்களின் நாட்களிலே" என்று ஆரம்பமாவதற்குக் காரணம், நாம் கடந்த அத்தியாயத்தில் பார்த்தவிதமாக, அந்திகிறிஸ்து இவ்வுலகை ஆளுகை செய்யும்போது உலக நாடுகள் பத்து ராட்சியங்களாக இருப்பதேயாகும். "அக்காலத்தில்" அதாவது, உலகில் பத்து ராட்சியங்கள் இருக்கும் காலத்தில்,[19] "பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராட்சியத்தை எழும்பப் பண்ணுவார்" என்று தானியேல் இவ்வசனத்தில் முன்னறிவித்துள்ளான். இதுவே தேவன் இவ்வுலகத்தில் ஏற்படுத்தும் இயேசுகிறிஸ்துவின் ராட்சியம்.[20] ஏற்கனவே இருந்த ராட்சியங்கள் அனைத்தும் அழிந்தன. ஆனால், இயேசுகிறிஸ்துவின் ராட்சியம் என்றென்றும் நிலைத்திருக்கும். இதனால்தான், அந்த ராட்சியம் "வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை." அதாவது, வேறு எவரும் இவ்விராட்சியத்தைக் கைப்பற்றுவதோ அழிப்பதோ இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இயேசுகிறிஸ்து மறுபடியும் இந்த உலகத்திற்கு வரும்போது அவர் உலகிலிருக்கும் சகல ராட்சியங்களையும், அதாவது அந்திகிறிஸ்துவையும் அவனோடு இணைந்துள்ள பத்து ராட்சியங்களையும் அழித்துத் தம்முடைய ராட்சியத்தை இவ்வுலகில் ஸ்தாபிப்பார். தானியேல் 2ம் அதிகாரத் தரிசனம் மறுபடியுமாக 7ம் அதிகாரத்தில் மேலதிகமான விளக்கத்துடன் (ஆனால், வித்தியாசமான உருவங்களுடன்) காண்பிக்கப்பட்டபோது, உலகின் இறுதியில் அந்திகிறிஸ்துவின் ராட்சியம் முழுமையாக அழிக்கப்பட்டபின் இயேசுகிறிஸ்துவின் ராட்சியம் இவ்வுலகில் இருக்கும் என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இத்தரிசனத்தில், அந்திகிறிஸ்துவின் ராட்சியத்திற்குப் பின்னர் தேவன் சிங்காசனத்தில் வீற்றிருப்பதைத் தானியேல் கண்டான் (தானி.7:9-10). இத்தரிசனத்தில்,

[19] J.W.Pentecost, *Daniel: The Bible Knowledge Commentary – OT*, p. 1336.
[20] S.R.Miller, *Daniel: The New American Commentary*, p. 100.

தேவன் நித்தியமானவர் என்னும் அர்த்தத்தில் "நீண்ட ஆயுசுள்ளவர்" என்று குறிப்பிடப்பட்டுள்ளார்.[21] அவர் சிங்காசனத்தில் இருப்பதைக் கண்டவுடன் அந்திகிறிஸ்துவாகச் சித்தரிக்கப்பட்டுள்ள மிருகம் கொல்லப்படுவது தானியேலுக்குக் காண்பிக்கப்பட்டது (தானி.7:11). அதன் பின்னர் "மனுஷகுமாரனுடைய சாயலுக்கு ஒப்பானவராகக்" குறிப்பிடப்பட்டிருக்கும் இயேசுகிறிஸ்து தேவனுடைய சிங்காசனத் திடம் வருவதோடு,[22] உலகின் சகல இன மக்களும் அவருடைய ஆளுகைக்கு உட்படுகின்றனர். எனவே, அந்திகிறிஸ்து அழிக்கப்பட்ட பின்பே இயேசுகிறிஸ்துவின் ராட்சியம் உலகில் ஸ்தாபிக்கப்படும். தானியேல் தான் கண்ட தரிசனத்தைப்பற்றி பின்வருமாறு குறிப்பிட் டுள்ளான்:

> இராத்தரிசனங்களிலே நான் பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ, மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார். அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து, அவர் சமீபத்தில் கொண்டுவரப்பட்டார். சகல ஜனங்க ளும் ஜாதியாரும் பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி, அவருக்குக் கர்த்தத்துவமும் மகிமையும் ராஜரீகமும் கொடுக் கப்பட்டது. அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத் துவமும், அவருடைய ராஜ்யம் அழியாததுமாய் இருக்கும் (தானியேல் 7:13-14).

இயேசுகிறிஸ்து உலகிலுள்ள சகல ஜாதியினரையும் ஆளுகை செய்யும் அதிகாரம் உடையவராக இருப்பார் என்பதையும், அவரு டைய ராட்சியம் நித்தியமானது என்பதையும் இவ்வசனங்கள் அறியத் தருகின்றன. தானியேலின் தரிசனத்தில், "மனுஷகுமாரனுடைய

[22] தானியேல் புத்தகத்திலுள்ள மனுஷகுமாரன் என்னும் சொல் மேசியாவைக் குறிப்பிடும் விவரணமாகவே யூதர்களினால் அறியப்பட்டிருந்தது (W.Horbury, "The Messianic Associations of 'The Son of Man'" in *Journal of Theological Studies*. 36 (1985), pp. 34-55). அக்கால யூதமத நூல்களில் மனுஷகுமாரன் என்னும் சொல், மேசியாவைக் குறிப்பிடும் பெயராகவே உள்ளது (A.Jeffery, *Daniel: Interpreter's Bible Commentary*, p. 461; J.J.Slotki, *A Commentary on Daniel*, p. 60). மாற்கு 14:61-62ல் தாம் மேசியா (அதாவது கிறிஸ்து) என்பதைக் குறிப்பிட மனுஷகுமாரன் என்னும் பெயரை இயேசுகிறிஸ்து உபயோகித்தபோது, அவர் தம்மைத் தேவன் என்று கூறுவதாகவே அவரை விசாரித்த பிரதான ஆசாரியன் புரிந்துகொண்டான்.

சாயலான" இயேசுகிறிஸ்து சிங்காசனத்தில் வீற்றிருக்கும் "நீண்ட ஆயுசுள்ளவரான" தேவனிடம் வரும்போது, அவருக்கு "கர்த்தத்துவமும் மகிமையும் ராஜரீகமும் கொடுக்கப்படுவது" அவர் இவ்வுலகின் ராஜாவாக மூடிசூட்டப்படுவதாக உள்ளது.[23] ஏனெனில், இயேசு கிறிஸ்துவுக்கு ராட்சியம் கொடுக்கப்படுவதற்காகவே அவர் தேவனுக்கு அருகில் கொண்டுவரப்படுகிறார். எனினும், உலகிலுள்ள ராட்சியங்கள் அழிக்கப்பட்ட பின்பே இயேசுகிறிஸ்துவுக்கு ராட்சியம் கொடுக்கப்படுகின்றது (தானி.7:11-12, 7:17, 7:23, 7:26).[24] மேலும், "சகல ஜனங்களும் பாஷைக்காரரும் அவரை சேவிப்பார்கள்" என்பதனால் அவருடைய ராட்சியம் உலகளாவியது என்பதையும் இத்தரிசனம் அறியத்தருகிறது. உலகிலிருந்த ஏனைய ராட்சியங்கள் குறிப்பிட்ட காலம் மாத்திரமே இருக்கும் என்பதனால், இயேசுகிறிஸ்துவின் ராட்சியம் இவற்றைவிட வித்தியாசமானது என்பதை அறியத்தருவதற்காக இது நித்தியமானது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, இது அழியாத ராட்சியம். இந்த ராட்சியம் ஆயிரம் வருஷங்களுக்கு இவ்வுலகத்தில் இருக்கும் என்பதை வெளிப்படுத்தல் 20ம் அதிகாரம் அறியத்தருகிறது (வெளி.20:4-6).[25]

---

அந்திகிறிஸ்துவின் உலகளாவிய ராட்சியம் அழிக்கப்பட்ட பின்னர் இயேசுகிறிஸ்து இவ்வுலகத்தை ஆயிரம் வருஷங்கள் ஆளுகை செய்வார். அதன் பின்னர் இயேசுகிறிஸ்துவின் இவ்வுலக ராட்சியம் தேவனுடைய நித்திய ஆளுகையுடன் இணைக்கப்படும்.

---

இயேசுகிறிஸ்துவின் ராட்சியம் அழியாதது, அது நித்தியமானது என்றால், அதை எப்படி ஆயிரம் வருஷங்களுக்கு மட்டுப்படுத்த முடியும் என்பது சிலரது கேள்வியாயுள்ளது. வெளிப்படுத்தல் 20ம் அதிகாரத்தில் ஆயிரம் வருஷம் நீண்டகாலப் பகுதிக்கான உருவகம் என்று இவர்கள் எண்ணுவதற்கு இத்தகைய கேள்வியும் ஒரு காரணமாக உள்ளது.[26] இயேசுகிறிஸ்துவின் ஆயிர வருஷ ஆட்சி அவருடைய ராட்சியம் நித்தியமானது என்பதை முரண்படுத்துவதாக இவர்கள் கருதுகின்றனர்.[27] ஆனால், வேதாகம சத்தியத்தின்படி, இயேசு கிறிஸ்து இவ்வுலகில் ஆயிரம் வருஷங்கள் ஆளுகை செய்த பின்னர்

[23] S.R.Miller, *Daniel: The New American Commentary*, p. 207.
[24] R.D.Culver, *Daniel and the Latter Days*, p. 138.
[25] J.F.Walvoord, *Daniel: The Key to Prophetic Revelation,* p. 167.
[26] E.J.Young, *The Prophecy of Daniel*, p. 157.
[27] J.Calvin, *Institutes of the Christian Religion Volume 2*, pp. 250-251.

தம்முடைய ராட்சியத்தைப் பிதாவிடம் ஒப்புக்கொடுப்பார்.[28] இதனால் அவருடைய ராட்சியம் தொடர்ந்தும் நித்தியகாலமாக இருக்கும். இதைப்பற்றி 1கொரிந்தியர் 15ம் அதிகாரம் பின்வருமாறு கூறுகிறது:

> ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து. பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அதன்பின்பு முடிவு உண்டாகும். அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார் (1கொரிந்தியர் 15:22-24).

இயேசுகிறிஸ்துவின் வருகையில் "அவருடையவர்கள்" அதாவது, "அவருக்குள் மரித்தவர்கள்" உயிர்ப்பிக்கப்பட்ட பின்னர் முடிவு உண்டாகும். அப்பொழுது "இயேசுகிறிஸ்து ராட்சியத்தைத் தேவனிடம் ஒப்புக்கொடுப்பார்" என்று இவ்வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது நமக்குக் குழப்பத்தை ஏற்படுத்தலாம். ஏனெனில், வேதாகம சத்தியத்தின்படி, இயேசுகிறிஸ்துவின் வருகையின்போது முதலில் அவருக்குள் மரித்தவர்கள் உயிர்ப்பிக்கப்படுவதோடு, அச்சமயம் உலகில் உயிரோடு இருக்கும் கிறிஸ்தவர்களும் மறுரூபமாக்கப்பட்டு எடுத்துக்கொள்ளப்படுவார்கள் (1தெச.4:14-17). அதன்பின்னர் அந்திகிறிஸ்து ஏழு வருஷங்களுக்கு உலகத்தைத் தன் ஆளுகையின் கீழ் வைத்திருப்பான் (வெளி.6-18). அதன் முடிவில் இயேசுகிறிஸ்து ஆயிரம் வருஷங்கள் இவ்வுலகில் ஆட்சி செய்த பின்பே ராட்சியத்தைத் தேவனுக்கு ஒப்புக்கொடுப்பார். ஆனால் பவுல் இவ்வசனங்களில், இயேசுகிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் உயிர்த்தெழுந்தவுடன் முடிவு உண்டாகும். அப்பொழுது ராட்சியம் தேவனிடம் ஒப்புக்கொடுக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளார். இதற்குக் காரணம், 1கொரிந்தியர் 15ம் அதிகாரத்தில் பவுல் கிறிஸ்தவர்களின் உயிர்த்தெழுதலைப் பற்றியே தர்க்கரீதியாக எழுதுவதனால், தன்னுடைய விளக்கத்திற்கு அவசியமற்ற காரியங்களை அவர் இவ்வசனங்களில் குறிப்பிடவில்லை.[29] எனினும், இயேசுகிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் உயிர்த்

[28] R.L.Saucy, *The Case for Progressive Dispensationalism*, p. 288.
[29] G.D.Fee, *1Corinthians: New International Commentary,* pp.752-753.

தெழுந்த பின்னர் "முடிவு உண்டாகும்" என்று பவுல் கூறும்போது, இதில், உலகின் இறுதிகால சம்பவங்களான அந்திகிறிஸ்துவின் ஆட்சியும் இயேசுகிறிஸ்துவின் ஆயிர வருஷ ஆட்சியும் உள்ளடக் கப்பட்டுள்ளதை மறுப்பதற்கில்லை. ஏனெனில், இவை உலகின் இறுதிகால சம்பவங்களாகும்.[30] இயேசுகிறிஸ்து இவ்வுலகத்தை ஆயி ரம் வருஷங்கள் ஆளுகை செய்த பின்னர், தம்முடைய ராட்சியத்தைத் தேவனிடம் ஒப்புக்கொடுப்பதினாலேயே வெளிப்படுத்தல் புத்தகத்தில், அந்திகிறிஸ்துவின் ஆளுகையின் பின்பு இவ்வுலக ராட்சியங்கள் இயேசுகிறிஸ்துவினுடையதாக மாத்திரமல்ல, தேவனுடைய ராட்சிய மாகவும் மாறும் என்று பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

> ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான். அப்பொழுது உலகத்தின் ராட்சியங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்து வுக்குமுரிய ராட்சியங்களாகின. அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார் என்னும் கெம்பீர சத்தங்கள் வானத் தில் உண்டாயின (வெளிப்படுத்தல் 11:15).

இயேசுகிறிஸ்து தம்முடைய ராட்சியத்தைத் தேவனிடம் கொடுத்த பின்னர், அவர் ராட்சியமற்றவராக இருப்பார் என்று நாம் கருதலாகாது. வேதாகமம் அறியத்தருவதுபோல, அவருடைய ராட்சியம் நித்திய மான ராட்சியம். அது முடிவற்ற ராட்சியம் (2சாமு.7:16, 1நாளா.17:14, ஏசா.9:7, சங்.89:36-37, தானி.7:14, 7:18, எபி.1:8, வெளி.11:15, 22:3). அந்திகிறிஸ்துவின் உலகளாவிய ராட்சியம் அழிக்கப்பட்ட பின்னர் இயேசுகிறிஸ்து இவ்வுலகத்தை ஆயிரம் வருஷங்கள் ஆளுகை செய்வார். அதன் பின்னர் இயேசுகிறிஸ்துவின் இவ்வுலக ராட்சியம் தேவனுடைய நித்திய ஆளுகையுடன் இணைக்கப்படும்.[31] இதுவே "புதிய வானம் புதிய பூமி" என்று வெளிப்படுத்தல் 21ம் 22ம் அதி காரங்களில் விபரிக்கப்பட்டுள்ளது. அதாவது, நாம் வாழும் இவ்வுலகம் அழிக்கப்பட்டு (வெளி.21: 1, 2பேது.3:10-13), இயேசுகிறிஸ்துவை வழிபடுபவர்கள் நித்தியகாலமாக வாசம் செய்யும் பரலோகமாக புதிய வானமும் புதிய பூமியும் இருக்கும். "இயேசுகிறிஸ்துவினால்

[30] W.H.Mare, *1Corinthians: The Expositor's Bible Commentary*, pp. 285-286; J.MacArthur, *The MacArthur Bible Commentary*, pp. 1606-1607.

[31] L.J.Wood, *The Bible and Future Events*, p. 167; R.L.Thomas, *Revelation 8-22: An Exegetical Commentary*, p. 107.

இவ்வுலகில் ஸ்தாபிக்கப்படும் உலகளாவிய ராட்சியம் ஆயிரம் வருஷங்களின் பின்னர் தேவனால் சிருஷ்டிக்கப்படும் புதிய உலகில் தொடர்ந்து நித்தியகாலமாக இருக்கும்."[32]

## (2) ஆயிரம் வருஷங்கள் அகிலத்தில் பிரத்தியட்சமாய் இருக்கும் ராட்சியம்

வேதாகமத் தீர்க்கதரிசனங்களின்படி, இயேசுகிறிஸ்துவின் ஆயிர வருஷ ஆட்சியானது இவ்வுலகில் பிரத்தியட்சமாய் இருக்கும். அதாவது, இயேசுகிறிஸ்து எருசலேம் நகரிலிருந்து முழு உலகத்தையும் ஆயிரம் வருஷங்களுக்கு ஆளுகை செய்வார். இயேசுகிறிஸ்துவின் முதல் வருகையைப்பற்றிய தீர்க்கதரிசனங்கள் அனைத்தும் சொல்லர்த்தமாக அவருடைய வாழ்வில் நிறைவேறியுள்ளதினால், அவருடைய இரண்டாவது வருகையைப்பற்றிய தீர்க்கதரிசனங்களும் சொல்லர்த்தமாகவே நிறைவேறும். இதனால், இயேசுகிறிஸ்துவின் இவ்வுலக ஆயிர வருஷ ஆட்சியை மறுதலிப்பவர்கள் இதை ஆவிக்குரியபிரகாரமாக வியாக்கியானம் செய்யவேண்டும் என்று கூறுவது அர்த்தமற்றது. ஏனெனில், பெரும்பாலான வேதப் பகுதிகளில் இயேசுகிறிஸ்துவின் இரண்டு வருகைகளைப்பற்றிய தீர்க்கதரிசனங்களும் ஒன்றாகச் சேர்த்தே முன்னறிவிக்கப்பட்டுள்ளன.[33] எனவே, ஒரு தீர்க்கதரிசனத்தின் ஒரு பகுதியை சொல்லர்த்தமாகவும், மறுபகுதியை ஆவிக்குரிய பிரகாரமாகவும் விளக்குவது அர்த்தமற்றது. ஒன்றில், நாம் முழு தீர்க்கதரிசனத்தையும் ஆவிக்குரிய பிரகாரமாக விளக்கவேண்டும் அல்லது முழுவதையும் சொல்லர்த்தமாக விளக்கவேண்டும். எனவே, "தேவனுடைய நியாயத்தீர்ப்பாக இவ்வுலகத்திற்கு வரவிருக்கும் தண்டனைகளைப் பற்றிய முன்னறிவிப்புகளை சொல்லர்த்தமாக

---

[32] D.K.Campbell & J.L.Townsend, *The Coming Millennial Kingdom*, p. 139.

[33] இதனால்தான், நாசரேத் ஊரிலிருந்த ஜெபாலயத்தில் ஏசாயா தீர்க்கதரிசியினுடைய புத்தகத்தை வாசித்த இயேசுகிறிஸ்து, குறிப்பிட்ட ஒரு இடத்தில் வாசிப்பதை நிறுத்தி, உங்கள் காதுகள் கேட்க இந்த வேதவாக்கியம் இன்றைய தினம் நிறைவேறியது என்றார் (லூக்.4:16-21). ஏனெனில், அவர் வாசிப்பதை நிறுத்திய இடத்தில் தொடர்ந்துவரும் வாக்கியம் அவருடைய இரண்டாவது வருகையைப்பற்றிய முன்னறிவிப்பாகும். அதாவது ஏசாயா 61:1-2ஐ வாசித்த இயேசுகிறிஸ்து 2ம் வசனத்தின் நடுப்பகுதியில் வாசிப்பதை நிறுத்தியுள்ளார். இதைப்போலவே, பெரும்பாலான தீர்க்கதரிசனங்களில் இயேசுகிறிஸ்துவின் இரண்டு வருகைகளும் ஒரே நேரத்தில் முன்னறிவிக்கப்பட்டுள்ளன.

இயேசுகிறிஸ்துவின் முதல் வருகையைப்பற்றிய தீர்க்கதரிசனங்கள் அனைத்தும் சொல்லர்த்தமாக அவருடைய வாழ்வில் நிறைவேறியுள்ளதினால், அவருடைய இரண்டாவது வருகையைப்பற்றிய தீர்க்கதரிசனங்களும் சொல்லர்த்தமாகவே நிறைவேறும். முதல் வருகையைப்பற்றிய தீர்க்கதரிசனங்களை சொல்லர்த்தமாக விளக்கிவிட்டு இரண்டாவது வருகையைப்பற்றியவற்றை ஆவிக்குரியபிரகாரமாக வியாக்கியானம் செய்வது தவறாகும்.

வியாக்கியானம் செய்துவிட்டு, இவ்வுலகத்திற்கு வரவிருக்கும் ஆசீர்வாதமான இயேசுகிறிஸ்துவின் ஆயிர வருஷ ஆட்சியைப்பற்றிய தீர்க்கதரிசனங்களை ஆவிக்குரிய பிரகாரமாக விளக்கவேண்டும் என்று கூறுவது அர்த்தமற்றது."[34] இயேசுகிறிஸ்துவின் வருகையைப் பற்றிய தீர்க்கதரிசனங்களில் முதல் பகுதி அவருடைய முதல் வருகையில் சொல்லர்த்தமாக நிறைவேறி உள்ளதினால், அதன் மறுபகுதியும் சொல்லர்த்தமாகவே அவருடைய இரண்டாவது வருகையில் நிறைவேறும் என்பதை மறுப்பதற்கில்லை. உதாரணத்திற்கு ஏசாயா 9ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தீர்க்கதரிசனத்தைப் பார்ப்போம். இவ்வதிகாரத்தில் இயேசுகிறிஸ்துவின் வருகையைப்பற்றி பின்வருமாறு முன்னறிவிக்கப்பட்டுள்ளது.

> நமக்கு ஒரு பாலகன் பிறந்தார். நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார். கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும். அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமை உள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப் பிரபு என்னப்படும். தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி, அதை இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும் நீதியினாலும் நிலைப்படுத்தும்படிக்கு, அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை. சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும் (ஏசாயா 9:6-7).

இயேசுகிறிஸ்துவின் வருகையைப்பற்றிய இத்தீர்க்கதரிசனத்தில், "நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்" என்று ஆரம்பமாகும் ஆறாவது வசனம், அவருடைய முதல் வருகையில் நிறைவேறியுள்ளதை நாம்

[34] R.Pache, *The Return of Jesus Christ*, pp. 187-188.

அறிவோம். ஏனெனில் இத்தீர்க்கதரிசனம், "ஒரு கன்னிகை கர்ப்பவதி யாகி குமாரனைப் பெறுவதைப்பற்றிய (ஏசா.7:14) ஏசாயாவின் முன்னைய தீர்க்கதரிசனத்துடன் தொடர்புற்றுள்ளது.[35] மேலும், "அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப் பிரபு" என்னும் பெயர்கள் தாவீதின் வம்சத்தில் வந்த எந்த ஒரு அரசனுக்கும் பொருத்தமானவைகள் அல்ல. உண்மையில், தேவனை மாத்திரமே இவ்விதமாக அழைக்கமுடியும்.[37] ஏனெனில், இவை மேசியாவைக் குறிப்பிடும் பெயர்களாக உள்ளன.[38] ஆனால், பாலகனாகப் பிறந்த மேசியாவாகிய இயேசுகிறிஸ்து, 7ம் வசனத்தில் முன்னறிவிக்கப்பட்டவிதமாக, "தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய ராட்சியத்தையும் திடப்படுத்தி அதை என்றென்றைக்கும் நிலைப்படுத்தும் செயலைத்" தம்முடைய முதல் வருகையில் செய்யவில்லை. இது அவருடைய இரண்டாவது வருகையிலேயே நடைபெறும் என்பதை வேதாகமத்தின் ஏனைய பகுதிகள் அறியத் தருகின்றன. எனினும், அவர் பாலகனாகப் பிறந்தது அவருடைய முதல் வருகையில் சொல்லர்த்தமாக நிறைவேறியது போலவே, அவர் "தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய ராட்சியத்தையும் திடப்படுத்தி அதை என்றென்றைக்கும் நிலைப்படுத்தும்" செயலும் அவருடைய இரண்டாவது வருகையில் சொல்லர்த்தமாகவே நிறைவேறும். அதாவது, அவர் தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருந்து இவ்வுலகை ஆயிரம் வருஷங்களுக்கு ஆட்சி செய்வார். இயேசுகிறிஸ்துவின் பிறப்பைப்பற்றி தேவதூதன் மரியாளிடம் அறிவித்தபோதும் இதைப்பற்றி பின்வருமாறு தெரிவித்துள்ளான்:

> இதோ நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. அவர் பெரியவராயிருப்பார். உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார். கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்கு கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றைக்கும் அரசாளுவார். அவருடைய ராட்சியத்துக்கு முடிவிராது (லூக். 1:31-33).

தேவதூதனின் வார்த்தைகளில் "தாவீதின் சிங்காசனம் அவருக்கு கொடுக்கப்படும்" "அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றைக்கும்

[35] J.N.Oswalt, *Isaiah 1-39: New International Commentary on the OT*, p. 247.

அரசாளுவார்" "அவருடைய ராட்சியத்துக்கு முடிவிராது" என்னும் அறிவிப்புகள், இயேசுகிறிஸ்துவின் முதல் வருகையில் நிறைவேற வில்லை. ஏனெனில், அவர் முதல் தடவை இவ்வுலகத்திற்கு வந்த போது ராஜாவாக அல்ல, சாதாரண மனிதனாகவே வாழ்ந்தார். ஆனால், "இதோ நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய். அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக" (லூக்.1:31) என்று தேவதூதன் அறிவித் தவிதமாக, "கன்னிப் பெண்ணாக இருந்த மரியாள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று அவருக்கு இயேசு என்று பெயரிட்டாள்" (மத்.1:18-25). எனவே, இத்தீர்க்கதரிசனத்தின் நிறைவேறாத பகுதியும், நிறைவேறிய பகுதியைப் போலவே சொல்லர்த்தமாகவே நிறைவேறும். அதாவது, தேவதூதன் அறிவித்தவிதமாக இயேசுகிறிஸ்து தமது முதல் வருகையில் ஒரு கன்னிப் பெண் கர்ப்பவதியாகியதன் மூலம் குழந்தையாக இவ்வுலகத்திற்கு வந்ததுபோலவே, அவர் மறுபடியும் இவ்வுலகத்திற்கு வரும்போது தேவதூதன் அறிவித்தவிதமாக தாவீ தின் சிங்காசனத்திலிருந்து முழு உலகையும் ஆளுகை செய்வார்.

---

இயேசுகிறிஸ்து மறுபடியும் வரும்போது, இரட்சகராக அல்ல,
இராஜாவாகவே வருவார். எனவே, அவரது இரண்டாவது
வருகையின்போது அவருடைய ராட்சியம் இவ்வுலகில் ஸ்தாபிக்கப்படும்.

---

இயேசுகிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில், தாம் உலக ராட்சியத்தை ஸ்தாபிக்க வரவில்லை என்று தெரிவித்ததினால் (யோவா.18:36),[41] அவர் இவ்வுலகை ஆளுகை செய்யமாட்டார் என்று சிலர் கருதுகின்றனர். ஆனால், அவர் முதல் தடவை இவ்வுலகத்திற்கு வந்தபோது உலகத்தை ஆட்சிசெய்வதற்காக அல்ல, உலகத்தை இரட்சிப்பதற்காகவே வந்தார் (யோவா.3:17).[42] இதற்காக அவர் மனிதர் களுடைய பாவங்களைத் தம்மீது சுமந்தவராக சிலுவையில் மரிக்க வேண்டியதாயிருந்தது. அவருடைய முதல் வருகையின் நோக்கம்

---

[37] L.Rignell, "A Study of Isaiah 9:2-7" in *Literary Quarterly*. 7 (1995),pp.31-35.
[38] J.N.Oswalt, *Isaiah 1-39: The New International Commentary,* p. 245.
[41] யோவான் 18:36ல், "என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே. இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்வி டத்திற்குரியதல்ல" என்று இயேசுகிறிஸ்து பிலாத்துவிடம் தெரிவித்தார்.
[42] "உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற் காகவே அவரை அனுப்பினார்" என்பதை யோவான் 3:17 அறியத்தருகிறது.

இதுவேயாகும் (மத்.20:28, மாற்.10:45, 1தீமோ.1:15).[43] இதனால்தான், என்னுடைய ராட்சியம் இவ்வுலகத்துக்குரியதல்ல என்று அவர் தம்மு டைய முதல் வருகையின்போது தெரிவித்தார் (யோவா.18:36). ஆனால், இயேசுகிறிஸ்து மறுபடியும் வரும்போது, இரட்சகராக அல்ல, இராஜாவாகவே வருவார். எனவே, அவரது இரண்டாவது வருகையின் போது அவருடைய ராட்சியம் இவ்வுலகில் ஸ்தாபிக்கப்படும். "தேவன் தாவீதுடன் செய்த உடன்படிக்கையின்படி, அதாவது அவனுடைய ராட்சியம் நித்தியமானதாய் இருக்கும் என்னும் தேவனுடைய வாக்குத் தத்தத்தின்படி (2சாமு.7:11-16, சங்.89:3-4, சங்.89:20-37), தாவீதின் வம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்து (மத்.1:1) இவ்வுலகில் தம்முடைய ராட்சியத்தை ஸ்தாபிப்பார்."[44] அவர் இதைப்பற்றி பின்வருமாறு முன்னறிவித்துள்ளார்:

> மனுஷகுமாரன் தமது மகிமைபொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத் தின்மேல் வீற்றிருப்பார் (மத்தேயு 25:31).

இயேசுகிறிஸ்து மறுபடியும் இவ்வுலகத்திற்கு வரும்போது, உலகிலி ருக்கும் மக்கள் அனைவரும் அவரைப் பார்க்கக்கூடிய விதத்தில் அவர் பகிரங்கமாக (வெளி.1:7) எருசலேம் நகருக்கு கிழக்கில் உள்ள ஒலிவ மலைக்கு வருவார் (சக.14:4). இயேசுகிறிஸ்து தமது முதல் வருகையின்போது இம்மலையிலிருந்தே பரலோகத்திற்குச் சென்றார் (அப்.1:9-12). அவருடைய பாதங்கள் ஒலிவ மலையில் படும்போது, அம்மலை இரண்டாகப் பிளந்து பெரியதோர் பள்ளத்தாக்கு அம்மலையின் நடுவில் ஏற்படும். சகரியா தீர்க்கதரிசியின் மூலம் இவ்விஷயம் பின்வருமாறு முன்னறிவிக்கப்பட்டுள்ளது:

> அந்நாளிலே அவருடைய பாதங்கள் கிழக்கே எருசலேமுக்கு எதிரே இருக்கிற ஒலிவ மலையின் மேல் நிற்கும். அப்பொழுது

---

[43] இயேசுகிறிஸ்து இதைப்பற்றி தெரிவிக்கும்போது, மத்தேயு 20:28லும், மாற்கு 10:45லும், "அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" என்று குறிப்பிட்டுள்ளார். "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமானது" என்று 1தீமோத்தேயு 1:15 கூறுகிறது.

[44] H.C.Thiessen, *Lectures in Systematic Theology*, p. 396.

மகா பெரிய பள்ளத்தாக்கு உண்டாகும்படி ஒலிவ மலை தன் நடுமையத்திலே கிழக்கு மேற்காய் எதிராகப் பிளந்து போம். அதினாலே ஒரு பாதி வடபக்கத்திலும் ஒரு பாதி தென் பக்கத்திலும் சாயும் (சகரியா 14:4).

இவ்வசனத்தில் "அந்நாளிலே" என்பது, முதலாம் வசனத்தில் குறிப் பிடப்பட்டுள்ள "கர்த்தருடைய நாளையே" குறிக்கின்றது. இது இயேசு கிறிஸ்து உலகத்தை நியாயந்தீர்க்க வரும் நாளாகும். அந்நாளில் "என் தேவனாகிய கர்த்தர் வருவார்" என்று சகரியா அடுத்த வசனத் தில் குறிப்பிட்டுள்ளார் (சக.14:5). அதுமாத்திரமல்ல, 9ம் வசனத்தில் "அப்பொழுது கர்த்தர் பூமியின் மீதெங்கும் ராஜாவாயிருப்பார்" என்ப தையும் சகரியா சுட்டிக்காட்டியுள்ளார். எனவே, இயேசுகிறிஸ்து இவ்வுலகத்துக்கு வரும்போது அவர் எருசலேமிலிருந்து முழு உல கையும் ஆட்சி செய்வார் என்பது தெளிவாகின்றது. அவருடைய ஆட்சிக்காலத்தில் எருசலேம் நகரம் பூகோளரீதியான மாற்றங்களுக்கு உட்படும் என்பதையும் சகரியா முன்னறிவித்துள்ளார். அதாவது, எருசலேம் நகரத்திலிருந்து மேற்கே மத்தியதரைக் கடலுக்கும், கிழக்கே சாக்கடலுக்கும் செல்லும் விதத்தில் இரண்டு நதிகளும் உருவாகும் (சக.14:8). மேலும், யூதேயாவின் வட எல்லையான "கேபா" (யோசு.21:17) என்னுமிடத்திலிருந்து, எருசலேம் நகருக்கு 35 மைல்கள் தெற்கில் உள்ள "ரிம்மோன்" என்னுமிடம் வரைக்கும் யூதா கோத்திரத்துக்கு கொடுக்கப்பட்ட பிரதேசம் முழுவதும் சமபூமி யாக மாற்றப்படுவதோடு, எருசலேம் நகரம் உயரமாக்கப்படும் (சக. 14:10).[45] சகரியா தீர்க்கதரிசியின் மூலம் இவ்விஷயங்கள் பின்வரு மாறு முன்னறிவிக்கப்பட்டுள்ளன:

அந்நாளிலே ஜீவதண்ணீர்கள் எருசலேமிலிருந்து புறப்பட்டு, பாதி கிழக்குச் சமுத்திரத்துக்கும், பாதி மேற்குச் சமுத்திரத் துக்கும் போய், மாரி காலத்துக்கும் கோடை காலத்துக்கும் இருக்கும். அப்பொழுது கர்த்தர் பூமியின் மீதெங்கும் ராஜாவாயி ருப்பார். அந்நாளில் ஒரே கர்த்தர் இருப்பார், அவருடைய நாமமும் ஒன்றாயிருக்கும். தேசமெல்லாம் கேபா தொடங்கி எருசலேமுக்குத் தெற்கே இருக்கிற ரிம்மோன் வரைக்கும்

[45] F.D.Lindsey, *Zechariah: The Bible Knowledge Commentary – Old Testament*, pp. 1570-1571.

சமபூமியாகத் திருத்தப்படும். எருசலேமோ உயர்ந்ததாகி, தன் ஸ்தானத்திலே பென்யமீன் வாசல் தொடங்கி முதல் வாசலென் கிற ஸ்தலமட்டும் கோடிவாசல் வரைக்கும், அனானெயேல் கோபுரம் துவக்கி ராஜாவின் திராட்சை ஆலைகள் மட்டும் குடியேற்றப்பட்டிருக்கும். அதிலே ஜனங்கள் வாசம்பண்ணுவார் கள். இனிச் சங்கரிப்பில்லாமல் எருசலேம் சுகமாய்த் தங்கியி ருக்கும் (சகரியா 14:8-11).

இயேசுகிறிஸ்து எருசலேமிலிருந்து உலகத்தை ஆளும் காலத்தில் தேவன் ஆபிரகாமுக்கு வாக்களித்த தேசத்தை இஸ்ரவேல் மக்கள் முழுமையாக சுதந்தரித்துக் கொள்வார்கள். தேவன் ஆபிரகாமோடு உடன்படிக்கை செய்தபோது, "எகிப்தின் நதி துவக்கி, ஐபிராத்து நதி என்னும் பெரிய நதி மட்டுமுள்ள பிரதேசத்தை அவனுடைய சந்ததிக்கு கொடுப்பதாக வாக்களித்தார்" (ஆதி.15:18-21). தற்காலத் தில் இஸ்ரவேல், லெபனான், சிரியா என்னும் நாடுகள் இருக்கும் பிரதேசமும், பாலஸ்தீனியர்கள் ஆக்கிரமித்துள்ள இடங்களும், யோர் தான், ஈராக், சீனாய் தீபகற்பம் என்பவற்றின் சில பகுதிகளையும் உள்ளடக்கியதாக தேவன் ஆபிரகாமுக்கு வாக்களித்த தேசம் உள்ளது.[46] (இத்தேசத்தின் வரைபடம் 59ம் பக்கத்தில் உள்ளது). யோசுவாவின் காலத்தில் ஆபிரகாமின் சந்ததியினர் தேவன் வாக்க ளித்த தேசத்தை சுதந்தரித்தாலும், தேவன் ஆபிரகாமுக்கு வாக்க ளித்த முழு பிரதேசமும் அக்காலத்தில் அவர்களுடையதாய் இருக்க வில்லை. இதைப்போலவே, தாவீதினுடைய காலத்தில் இஸ்ரவேல் நாட்டின் எல்லைகள் விஸ்தரிக்கப்பட்டாலும், அக்காலத்திலும் தேவன் ஆபிரகாமுக்கு வாக்களித்த தேசங்கள் முழுமையாக இஸ்ரவேல் மக்களுடையதாக இருக்கவில்லை. எனவே, தேவன் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்தம் இன்னும் முழுமையாக நிறைவேறாம லேயே உள்ளது. தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நிச்சயமாய் நிறைவேறும் என்பதனால், ஆபிரகாமின் சந்ததியாரான இஸ்ரவேல் மக்கள் நிச்சயமாகத் தங்களுடைய முற்பிதாக்களுக்குத் தேவன் வாக்களித்த தேசத்தை ஒரு நாள் முழுமையாக சுதந்தரித்துக் கொள்வார்கள். வேதாகமத் தீர்க்கதரிசனங்களின்படி, இயேசுகிறிஸ்து இவ்வுலகை ஆளும் காலத்தில் தேவன் ஆபிரகாமுக்கு வாக்களித்த

[46] C.R.Swindoll & R.B.Zuck, *Understanding Christian Theology*, p. 1357.

தேசத்தை அவனுடைய சந்ததியார் முழுமையாக சுதந்தரித்துக் கொள்வார்கள்.[47] அக்காலத்தில் இத்தேசம் எவ்வாறு இஸ்ரவேலின் பன்னிரு கோத்திரங்களுக்கும் பங்கிடப்படும் என்பதை எசேக்கியேல் 48ம் அதிகாரம் அறியத்தருகின்றது.

இயேசுகிறிஸ்துவின் ஆயிர வருஷ ஆட்சியை சொல்லர்த்தமாக ஏற்றுக்கொள்ள மறுப்பவர்கள், தேவன் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்தம் நிபந்தனைக்கு உட்பட்டது என்றும், அவைகள் தற்காலத்தில் கிறிஸ்தவ சபையில் ஆவிக்குரிய பிரகாரம் நிறைவேறி வருகின்றன என்றும் கூறுகின்றனர்.[49] அதாவது, யோசுவா தாவீது என்போரது காலத்தில் ஆபிரகாமினுடைய சந்ததியினர் வாக்குத்தத்த தேசத்தில் எவ்வளவு பிரதேசங்களைக் கைப்பற்றினார்களோ அவ்வளவும் அவர்களுடையதாய் இருந்தது என்றும், அவர்கள் இன்னும் அதிக பிரதேசங்களைக் கைப்பற்ற யுத்தம் செய்திருந்தால் அவர்களால் இன்னும் அதிக பிரதேசங்களைக் கைப்பற்றியிருக்க முடியும் என்றும் இவர்கள் கருதுகின்றனர். ஆனால், தேவன் ஆபிரகாமுக்கு கொடுத்த சில வாக்குத்தத்தங்கள் நிபந்தனைக்கு உட்பட்டதாக இருந்தாலும், அவர் அவனுடன் செய்த உடன்படிக்கை எவ்வித நிபந்தனையும் அற்றதாகவே இருந்தது. உண்மையில், தேவன் ஆபிரகாமை அழைத்தபோது ஆரம்பத்தில் அவனுக்கு கொடுத்த வாக்குத்தத்தங்களே நிபந்தனைக்கு உட்பட்டவைகளாய் உள்ளன (ஆதி.12:1-3).[50] ஏனெனில், தேவன் வாக்களித்தவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு அவன் தன்னுடைய சொந்த நாட்டையும் இனத்தவரையும்

[47] D.K.Campbell, *Joshua: The Bible Knowledge Commentary – OT*, p. 328.

[49] O.T.Allis, *Prophecy and the Church*, pp. 31-36, 56-58; L.Berkhof, *Systematic Theology*, pp. 295-297; L.Boettner, *The Millennium*, p. 318.

[50] ஆதியாகமம் 12:1ல், "கர்த்தர் ஆபிராமை நோக்கி, நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்கு காண்பிக்கும் தேசத்துக்குப் போ" என்று கட்டளையிட்டார். சில வேத ஆராய்ச்சியாளர்கள் இதில் எவ்வித நிபந்தனையும் இல்லை என்று கருதுகின்றனர் (C.Ryrie, *The Basis of Premillennial Faith*, p. 54; C.L. Rogers, "The Covenant with Abraham and Its Historical Setting" in *Bibliotheca Sacra*. 127 (1970), p. 252). ஆனால், ஆபிரகாம் தன்னுடைய சொந்த நாட்டையும் இனத்தவரையும் விட்டுப் புறப்பட்டுச் செல்வது, தேவன் 2ம் 3ம் வசனங்களில் குறிப்பிட்டுள்ள ஆசீர்வாதங்களை அவன் பெற்றுக்கொள்வதற்கான நிபந்தனையாகவே உள்ளது (D.K.Campbell & J.L.Townsend, *The Coming Millennial Kingdom*, p. 37).

இயேசுகிறிஸ்து எருசலேமிலிருந்து உலகத்தை ஆளும் காலத்தில் ஆதியாகமம் 15:18-21ல் தேவன் ஆபிரகாமுக்கு வாக்களித்த தேசத்தை இஸ்ரவேல் மக்கள் முழுமையாக சுதந்தரித்துக் கொள்வார்கள்.

விட்டுத், தேவன் காண்பிக்கும் தேசத்திற்குப் போகவேண்டியவனாய் இருந்தான் (ஆதி.12:1). ஆனால், அவன் தன் சொந்த நாட்டைவிட்டு தேவன் காண்பித்த தேசத்தில் இருந்தபோது தேவன் அவனுக்கு கொடுத்த வாக்குத்தத்தமும் (ஆதி.17:4-7), அவனுடன் செய்த உடன் படிக்கையும் எவ்வித நிபந்தனையும் அற்றதாகவே உள்ளது. ஏனெனில், ஆதியாகமம் 15ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் உடன்படிக்கையைத் தேவன் ஆபிரகாமுடன் செய்தபோது, ஆபிரகாம் அயர்ந்த நித்திரையில் இருந்தான் (ஆதி.15:12). இவ்வுடன்படிக்கையிலேயே எகிப்தின் நதி முதல் ஐபிராத்து நதி வரைக்கும் உள்ள பிரதேசத்தை அவனுடைய சந்ததிக்கு கொடுப்பதாக தேவன் வாக்களித்தார் (ஆதி.15:18-21).[51] இது எவ்வித நிபந்தனையும் அற்ற ஒரு வாக்குத்தத்தமாக இருப்பதனாலும், இதுவரையில் முழுமையாக நிறைவேறாமல் இருப்பதனாலும், இயேசுகிறிஸ்துவின் ஆயிரவருஷ

[51] ஆதியாகமம் 15ம் அதிகாரத்தில் தேவன் ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கை, அக்காலத்தில் உயர்ந்தவர் தாழ்ந்தவருடன் செய்யும் ஒப்பந்த முறையில் உள்ளது. இத்தகைய ஒப்பந்தத்தில் உயர்ந்தவர் கொடுக்கும் வாக்குறுதிகளைத் தாழ்ந்தவர் பெற்றுக்கொள்வதற்கு, உயர்ந்தவர் விதிக்கும் நிபந்தனைகளுக்குத் தாழ்ந்தவர் கட்டுப்படவேண்டியிருக்கும். ஆனால் தேவன் ஆபிரகாமுடன் உடன் படிக்கை செய்யும்போது நிபந்தனைகள் எதையும் அவனிடம் கூறவில்லை. அச்சமயம் ஆபிரகாம் அயர்ந்த நித்திரையில் இருந்தான். மேலும், அக்காலத்தில் ஒப்பந்தங்கள் செய்யும் நபர்கள், துண்டிக்கப்பட்ட மிருகத்தின் சரீரத்துக்கு ஊடாக நடந்துசெல்வது-வழக்கம். ஒப்பந்தத்தில் அல்லது உடன்படிக்கையில் சொல்லப்பட்ட காரியங்களைச் செய்யாவிட்டால் என்னுடைய சரீரமும் இவ்வாறு துண்டிக்கப்படட்டும் என்பதை அவர்கள் சொல்லும் முறையாக இது இருந்தது. தேவன் ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கையிலும், ஆபிரகாம் கிடாரியையும், வெள்ளாட்டையும் ஆட்டுக்கடாவையும் நடுவாகத் துண்டித்து, அவற்றை ஒன்றுக் கொன்று எதிராக வைத்தான் (ஆதி.15:9-11). அதன்பின்பு, ஆபிரகாமுக்கு நித்திரை வந்தது (ஆதி.15:12). இதனால் தேவன் மாத்திரமே துண்டிக்கப்பட்ட மிருகங்களுக்கு ஊடாக அக்கினி ஜுவாலையாகக் கடந்து சென்றார் (ஆதி. 15:17). இதனால், தேவன் ஆபிரகாமுக்கு வாக்களித்த விதமாக எகிப்தின் நதி முதல் ஐபிராத்து நதிவரையுமுள்ள பிரதேசத்தை ஆபிரகாமின் சந்ததியாருக்கு கொடுக்க வேண்டியவராக இருக்கின்றார் (D.R.Hillers, *Covenant: The History of a Biblical Idea*, p. 103; M.Weinfeld, "The Covenant of Grant in the Old Testament and in the Ancient Near East" in *Journal of the American Oriental Society*. 90 (1970), p 196.

ஆட்சியிலேயே இவ்வாக்குத்தத்தம் நிறைவேறும்.[52] உண்மையில், "தேவன் ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கை, அவனுடைய சந்ததிக்கு கொடுக்கப்பட்ட நிலத்திற்கான உயிலாக உள்ளது."[53] இதனால், இது ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் தேவன் கொடுக்கும் "நித்திய சுதந்திரமாகக்" குறிப்பிடப்பட்டுள்ளது (ஆதி.17:8, 17:13, 17:19, 1நாளா.16:17, சங்.105:10). எனவே, இஸ்ரவேல் மக்கள் வேதாகம காலத்தில் கானான் தேசத்தில் இருந்தபோது தேவன் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்தம் முழுமையாக நிறைவேறி விட்டது என்று கூறமுடியாது. அக்காலத்தில் இவ்வாக்குத்தத்தம் பகுதியளவில் நிறைவேறியிருந்தாலும்கூட, இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகையின் பின்பே ஆபிரகாமின் சந்ததியினர் இவ்வாக்குத்தத்தத்தை முழுமையாக சுதந்தரிப்பார்கள்.

தற்காலத்தில் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து சபையின் அங்கத்தினர்களாக இருப்பவர்கள் ஆபிரகாமின் சந்ததியாராக இருக்கின்றார்கள் (கலா.3:29) என்பது உண்மை என்றாலும், தேவன் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்தங்கள் அனைத்தும் தற்கால சபைக்குள்ளேயே நிறைவேறுகின்றன என்று கூறமுடியாது. ஏனெனில், ஆபிரகாமுக்குப் பல வாக்குத்தத்தங்கள் கொடுக்கப்பட்டன. இவற்றில் ஒன்று, அவனுடைய சந்ததிக்குக் கொடுக்கப்படும் தேசத்தைப் பற்றியது. ஏனையவை அவனுடைய தனிப்பட்ட வாழ்வுக்கும், அவனுடைய சந்ததிக்கும், முழு உலகத்தினருக்கும் கொடுக்கப்பட்டவைகளாகும். ஆபிரகாமைப் "பெரிய ஜாதியாக்குவதும், அவனை ஆசீர்வதிப்பதும், அவனுடைய பெயரைப் பெருமைப்படுத்துவதும், அவனை ஆசீர்வதிப்பவர்களை ஆசீர்வதிப்பதும்" (ஆதி.12:2-3அ) நிலத்தைக் கொடுப்பதும் (ஆதி.12:7) தேவன் ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் கொடுத்த வாக்குத்தத்தங்களாகும். ஆனால், "பூமியிலுள்ள வம்சங்

[52] ஆதியாகமம் 15ம் அதிகாரத்தில் தேவன் குறிப்பிடும் தேசத்தை ஆபிரகாமின் சந்ததிக்கு கொடுப்பதாக அவர் வாக்களிக்கும்போது, அதுவரை காலமும் இதைப்பற்றி கூறும்போது உபயோகித்த சொல்லைக் குறிப்பிடாமல் வித்தியாசமான ஒரு சொல்லைத் தேவன் உபயோகிப்பதை மூலமொழியில் நாம் பார்க்கலாம். இதற்குக் காரணம், அதுவரையில் வெறும் வாக்குத்தத்தமாக இருந்ததைத் தேவன் உடன்படிக்கையின் மூலம் தாம் குறிப்பிடும் தேசத்தை ஆபிரகாமுடைய சந்ததிக்கு எழுதி வைத்துள்ளார், அல்லது உரிமை மாற்றம் செய்துள்ளார். (D.K.Campbell & J.L.Townsend, *The Coming Millennial Kingdom*, pp. 41-42).

[53] J.W.Pentecost, *Things to Come: A Study in Biblical Eschatology*, p. 73.

கள் எல்லாம் அவனுக்குள் ஆசீர்வதிக்கப்படும்" (ஆதி.12:3ஆ) என்பது புறஜாதியாருக்கு கொடுக்கப்பட்ட ஆசீர்வாதமாகும்.[54] இவ்வாசீர்வாதமே ஆபிரகாமின் வம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவின் மூலம் புறஜாதியாருக்குத் தற்காலத்தில் சபையில் கிடைப்பதாகப் புதிய ஏற்பாடு கூறுகிறது (கலா.3:16). அதாவது, இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலம் நாம் "ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறோம்" (கலா.3:29) என்று பவுல் கூறும்போது, தேவன் ஆபிரகாமுக்கு வாக்களித்த சகல ஆசீர்வாதங்களும் தற்கால சபை மக்களுக்கு கிடைக்கின்றன என்று கூறவில்லை. ஏனெனில், பெரிய ஜாதியாகுவதும், பெருமைப்படுத்தப்படுவதும், தேசத்தை சுதந்தரிப்பதும் சபை மக்களான கிறிஸ்தவர்களுக்கு கிடைக்கும் ஆசீர்வாதங்கள் அல்ல. உண்மையில், உலகின் பெரும்பாலான நாடுகளில் கிறிஸ்தவர்கள் பெரிய ஜாதியாக அல்ல சிறுபான்மையினராகவே இருக்கின்றனர்.[55] கிறிஸ்தவ நாடுகள் என்று அழைக்கப்படும் நாடுகளிலும் மெய்க்கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே உள்ளது. மேலும், கிறிஸ்தவர்கள் பெருமைப்படுத்தப்பட்டவர்களாக அல்ல சிறுமையானவர்களாகவே உலகத்தினால் கருதப்படுகிறார்கள்.[56] இவ்வுலகில் கிறிஸ்தவர்கள் அந்நியர்களும் பரதேசிகளாகவுமே இருப்பதனால் (1பேது. 2:11) அவர்கள் தேசத்தை சுதந்தரிப்பவர்கள் என்று கூறமுடியாது. உண்மையில், நம்முடைய குடியிருப்பு பரலோகத்திலேயே இருக்கின்றது (பிலி.3:20). எனவே, கலாத்தியர் 3ம் அதிகாரத்தில் கிறிஸ்தவர்கள் "ஆபிரகாமின் சந்ததியினர்" (கலா.3:29) என்று பவுல் கூறும்போது, "அவர்கள் ஆபிரகாமின் சந்ததியான கிறிஸ்துவுக்குள் (கலா.3:16) இருப்பதனால் அவர்களும் ஆபிரகாமின் சந்ததியினர்"[57] என்னும் அர்த்தத்திலேயே குறிப்பிட்டுள்ளார். உண்மையில், ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்களில், "பூமியிலுள்ள வம்சங்கள் எல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்" என்னும் வாக்குத்தத்தம் மாத்திரமே தற்கால சபைக்குள்

[54] J.F.Walvoord, "Millennial Series" in *Bibliotheca Sacra*. 108, pp. 415-417.

[55] 2012ம் ஆண்டு கணிப்பீட்டின்படி, உலக ஜனத்தொகையில் 33 சதவீதத்தினரே கிறிஸ்தவர்களாக உள்ளனர். இதில் 16 சதவீதமான ரோமன் கத்தோலிக்க சபையினரும் உள்ளடக்கப்பட்டுள்ளனர் (*The CIA World Fact Book*, 2012 Edition).

[56] கிறிஸ்தவ நாடுகளில் கிறிஸ்தவத்திற்கு எதிரான பழக்கவழக்கங்களும் சட்டங்களும் உள்ளன. ஏனைய நாடுகளில் அவர்கள் துன்புறுத்தப்படுகின்றனர்.

[57] G.D.Fee, *Galatians: Pentecostal Commentary*, p. 144.

> இயேசுகிறிஸ்து மறுபடியுமாக இவ்வுலகத்திற்கு வந்து எருசலேம் நகரிலிருந்து முழு உலகையும் ஆட்சி செய்யும் காலத்தில், உலகெங்கும் சிதறியிருக்கும் இஸ்ரவேல் மக்கள் அனைவரும் தேவன் ஆபிரகாமுக்கு வாக்களித்த தேசத்தில் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள்.

நிறைவேறுகிறது. தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்த ஏனைய வாக்குத்தத்தங்கள் தனிப்பட்ட ரீதியாக அவனுடைய வாழ்விலும், அவனுடைய வம்சத்தினரான இஸ்ரவேல் மக்களுடைய வாழ்விலுமே நிறைவேறியுள்ளன.

இயேசுகிறிஸ்து மறுபடியுமாக இவ்வுலகத்திற்கு வந்து எருசலேம் நகரிலிருந்து முழு உலகையும் ஆட்சி செய்யும் காலத்தில், உலகெங்கும் சிதறியிருக்கும் இஸ்ரவேல் மக்கள் அனைவரும் தேவன் ஆபிரகாமுக்கு வாக்களித்த தேசத்தில் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். இயேசுகிறிஸ்து இதைப்பற்றி பின்வருமாறு முன்னறிவித்துள்ளார்:

> அந்நாட்களின் உபத்திரவம் முடிந்தவுடனே, சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும், வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும். அப்பொழுது, மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள். வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார். அவர்கள், அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒரு முனை முதற்கொண்டு மறுமுனைமட்டும் நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்கள் (மத்தேயு 24:29-31).

அந்திகிறிஸ்து அழிக்கப்பட்ட பின்பே இயேசுகிறிஸ்துவின் பகிரங்க வருகையும், ஆயிர வருஷ ஆட்சியும் இருப்பதனாலேயே, "அந்நாட்களின் உபத்திரவம் முடிந்தவுடனே" என்று இவ்வேதப்பகுதி ஆரம்பமாகின்றது. மேலும், இவ்வசனங்களில் குறிப்பிடப்பட்டிருப்பது இயேசுகிறிஸ்துவின் பகிரங்க வருகை என்பதனாலேயே அவர் வருவதைப் "பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்" என்று

அவர் தெரிவித்துள்ளார். எனவே, இயேசுகிறிஸ்துவின் பகிரங்க வருகையின்போது "பூமியின் நான்கு திசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்க்கப்படும் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்" கிறிஸ்தவ சபையின் மக்களாக அல்ல, இஸ்ரவேல் மக்களாகவே உள்ளனர். நாம் ஏற்கனவே பார்த்தபடி, கிறிஸ்தவ சபையின் மக்கள் அந்திகிறிஸ் துவின் ஆட்சி ஆரம்பிக்கப்படுவதற்கும் முன்பே இயேசுகிறிஸ்துவி னால் உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்படுவார்கள். ஆனால், இயேசு கிறிஸ்து பகிரங்கமாக வரும்போது உலகெங்கும் உள்ள இஸ்ரவேல் மக்கள், தேவன் ஆபிரகாமுக்கு வாக்களித்த தேசத்தில் ஒன்றாகக் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். பழைய ஏற்பாட்டில் இதைப்பற்றி பல தீர்க்கதரிசனங்கள் உள்ளன. ஏசாயா இதைப்பற்றி முன்னறிவிக்கும் போது, தேவன் ஆபிரகாமுக்கு வாக்களித்த தேசத்தில் இருக்கும் மக்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அவ்விடத்தில் இஸ்ரவேல் மக்கள் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள் என்பதைப் பின்வருமாறு முன்னறிவித்துள் ளார்:

> அக்காலத்திலே, கர்த்தர் ஆற்றங்கரையின் விளைவுதொடங்கி எகிப்தின் நதிமட்டும் போரடிப்பார். இஸ்ரவேல் புத்திரரே, நீங்கள் ஒவ்வொருவராய்ச் சேர்க்கப்படுவீர்கள். அக்காலத்திலே பெரிய எக்காளம் ஊதப்படும். அப்பொழுது, அசீரியா தேசத்திலே சிதறடிக்கப்பட்டவர்களும், எகிப்து தேசத்திலே துரத்தி விடப்பட்டவர்களும் வந்து, எருசலேமிலுள்ள பரிசுத்த பர்வதத் திலே கர்த்தரைப் பணிந்துகொள்ளுவார்கள் (ஏசாயா 27:12-13). நான் உன் சந்ததியைக் கிழக்கிலிருந்து வரப்பண்ணி, உன்னை மேற்கிலும் இருந்து கூட்டிச் சேர்ப்பேன். நான் வடக்கை நோக்கி: கொடு என்றும், தெற்கை நோக்கி: வைத்தி ராதே என்றும் சொல்லி, தூரத்திலிருந்து என் குமாரரையும், பூமியின் கடையாந்தரத்திலிருந்து என் குமாரத்திகளையும், நான் என் மகிமைக்கென்று சிருஷ்டித்து உருவாக்கிப் படை த்து, என் நாமந்தரிக்கப்பட்ட யாவரையும் கொண்டுவா என் பேன் (ஏசாயா 43:5-7).

தேவன் ஆபிரகாமுக்கு வாக்களித்த தேசம் எகிப்தின் நதி முதல் ஐபிராத்து நதி வரையானதாய் உள்ளது (ஆதி.15:18). இயேசுகிறிஸ்து மறுபடியும் வரும்போது, இப்பிரதேசத்தில் குடியிருக்கும் மக்கள் அனைவரையும் அவர் நியாயந்தீர்ப்பார் என்பதை முன்னறிவிக்கும்

ஏசாயா, "அக்காலத்தில் கர்த்தர் ஆற்றங்கரையின் விளைவுதொடங்கி எகிப்தின் நதிமட்டும் போரடிப்பார்" என்று குறிப்பிட்டுள்ளார் (ஏசா.27:12). அதுமாத்திரமல்ல, உலகெங்கும் சிதறப்பட்டிருக்கும் இஸ்ரவேல் மக்கள் அனைவரும் இப்பிரதேசத்தில் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள் என்பதனாலேயே நான்கு திசைகளிலும் பூமியின் கடையாந்திரங்களிலுமிருந்து மக்களை வரும்படி ஏசாயாவின் மூலம் தேவன் அழைக்கின்றார் (ஏசா.43:5-7).[58] இது, விழுந்துபோன தாவீதின் கூடாரம் மறுபடியுமாக ஸ்தாபிக்கப்படும்போது நடைபெறும் என்பதையும், அதன் பின்னர் ஆபிரகாமுக்கு வாக்களிக்கப்பட்ட தேசத்தில் கூட்டிச் சேர்க்கப்படும் மக்கள் அங்கிருந்து ஒருகாலமும் அகற்றப்படுவதில்லை என்பதையும் ஆமோஸ் தீர்க்கதரிசியின் மூலம் தேவன் பின்வருமாறு அறிவித்துள்ளார்:

> அந்நாளிலே விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை நான் திரும்ப எடுப்பித்து, அதின் திறப்புகளை அடைத்து, அதில் பழுதாய்ப் போனதைச் சீர்ப்படுத்தி, பூர்வநாட்களில் இருந்ததுபோல அதை ஸ்தாபிப்பேன் என்று இதைச் செய்கிற கர்த்தர் சொல்லுகிறார். இதோ, உழுகிறவன் அறுக்கிறவனையும், திராட்சப் பழங்களை ஆலையாடுகிறவன் விதைக்கிறவனையும் தொடர்ந்துபிடித்து, பர்வதங்கள் திராட்சரசமாய் வடிகிறதும், மேடுகளெல்லாம் கரைகிறதுமான நாட்கள் வரும் என்று கர்த்தர் சொல்லுகிறார். என் ஜனமாகிய இஸ்ரவேலின் சிறையிருப்பைத் திருப்புவேன். அவர்கள் பாழான நகரங்களைக் கட்டி, அவைகளில் குடியிருந்து, திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளுடைய பழரசத்தைக் குடித்து, தோட்டங்களை உண்டாக்கி, அவைகளின் கனிகளைப் புசிப்பார்கள். அவர்களை அவர்கள் தேசத்திலே நாட்டுவேன். நான் அவர்களுக்குக் கொடுத்த தேசத்திலிருந்து அவர்கள் இனிப் பிடுங்கப்படுவதில்லையென்று உன் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றார் (ஆமோஸ் 9:12-15).

ஆமோஸ் குறிப்பிடும் "விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை மறுபடியும் ஸ்தாபிக்கும் செயல்" (ஆமோ.9:12) இயேசுகிறிஸ்து தாவீதின் சிங்காசனத்தில் இருந்து இஸ்ரவேல் மக்களையும் முழு உலகத்தையும் ஆட்சி செய்வதைப்பற்றிய முன்னறிவிப்பாகும். ஏனெனில், இவ்வச

[58] G.V.Smith, *Isaiah 40-66: The New American Commentary*, pp. 195-196.

னங்களில் "அந்நாளிலே" "நாட்கள் வரும்" என்னும் சொற்பிரயோகங்கள் எதிர்காலத்தைக் குறிப்பவைகளாக உள்ளன.[59] மேலும், "தாவீதின் கூடாரம்" அவனுடைய வீட்டை, அதாவது அவனுடைய அரச வம்சத்தைக் குறிப்பிடும் விவரணமாக உள்ளது.[60] 2சாமுவேல் 7:11,16ல் "வீடு" என்னும் சொல் தாவீதின் அரச வம்சத்தை குறிப்பிட உபயோகிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஆமோஸ்சின் காலத்தில் தாவீதின் அரச வம்சம் வீழ்ச்சியடைந்த நிலையில் இருந்ததினால் அதை வீடு என்று அழைக்கமுடியாத அளவுக்குப் பழுதடைந்திருந்தது. இதனாலேயே கூடாரம் என்னும் சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது.[61] எனவே, இத்தீர்க்கதரிசனம் தாவீதின் அரச வம்சத்தைச் சேர்ந்தவரின்

[59] B.K.Smith, *Amos Obadiah Jonah: New American Commentary*, p. 165.

[60] D.G.Peterson, *Acts: The Pillars New Testament Commentary*, p. 431. ஆதி சபையில் புறஜாதியார் சேர்க்கப்படுவதைப்பற்றிய சர்ச்சை ஏற்பட்டபோது, அதற்கு ஆதரவாகப் பேசிய யாக்கோபு, விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை மறுபடியும் ஸ்தாபிப்பதைப்பற்றிய ஆமோஸ்சின் தீர்க்கதரிசனத்தை அப்போஸ்தலர் 15:17ல் உபயோகிப்பதனால், இது இயேசுகிறிஸ்துவின் ஆயிரவருஷ ஆட்சியைப்பற்றிய தீர்க்கதரிசனம் அல்ல என்றும், சபையைப்பற்றிய முன்னறிவிப்பாகவே உள்ளதென்றும் சிலர் கருதுகின்றனர். ஆனால் ஆமோஸ்சின் வார்த்தைகள், அவர் இயேசுகிறிஸ்துவின் ஆயிரவருஷ ஆட்சியைப்பற்றியே அறிவிக்கின்றார் என்பதையே சுட்டிக்காட்டுகின்றன. அதாவது, தாவீதின் கூடாரம் பூர்வ நாட்களில் இருந்ததுபோல ஸ்தாபிக்கப்படும் என்பது (ஆமோ.9:12), தாவீதின் அரச பரம்பரையின் ஆட்சி மறுபடியும் ஏற்படுத்தப்படும் என்பதையே குறிக்கின்றது. மேலும், "தேவன் கொடுக்கும் தேசத்திலிருந்து இஸ்ரவேல் மக்கள் இனிப் பிடுங்கப்படுவதில்லை" (ஆமோ.9:15) என்பது சபைக்கு எவ்விதத்திலும் பொருத்தமற்றதாகவே உள்ளது (J.MacArthur, *The MacArthur Bible Commentary*, pp. 992,1000). உண்மையில், ஆமோஸ் 9:12-15ல் இஸ்ரவேல் மக்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் தற்கால சபையில் நிறைவேறுவதாக அப்போஸ்தலர் 15ல் யாக்கோபு கூறவில்லை. ஆமோஸ்சின் தீர்க்கதரிசனத்தைச் சுட்டிக்காட்டும் யாக்கோபு, இயேசுகிறிஸ்துவின் ஆயிர வருஷ ஆட்சியில் புறஜாதியாரும் இருப்பதனால் (ஆமோஸ் 9:11ல் ஏதோமியர் உள்ளடக்கப்பட்டுள்ளனர்), தற்போது அவர்களைச் சபையில் சேர்த்துக்கொள்வதற்கு எவ்வித தடையும் இல்லை என்பதையே விளக்கியுள்ளார் (D.R.Sunukjian, *Amos: The Bible Knowledge Commentary – Old Testament*, p. 1451). எனவே, ஆமோஸின் தீர்க்கதரிசனம் சபையில் நிறைவேறுவதாக யாக்கோபு கூறவில்லை. புறஜாதியார் சபைக்குள் சேர்க்கப்படுவதற்கு "தீர்க்கதரிசிகளுடைய வாக்கியங்கள் ஒத்திருக்கிறது" (அப். 15:15) என்பதையே அவர் இவ்வசனங்களில் சுட்டிக்காட்டியுள்ளார் (S.D.Toussaint, *Acts: The Bible Knowledge Commentary*, p. 394). அதாவது, தீர்க்கதரிசிகள் போதித்ததற்கும், புறஜாதியார் சபையில் சேர்க்கப்படுவதற்கும் இடையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்பதையே யாக்கோபு இவ்வசனங்களில் விளக்கியுள்ளார்.

[61] T.E.McComiskey, *Amos: Expositor's Bible Commentary Volume 7*, p. 329.

இயேசுகிறிஸ்து தாவீதின் சிங்காசனத்திலிருந்து உலகத்தை ஆட்சி செய்யும் காலத்தில் தேவன் ஆபிரகாமுக்கு வாக்களித்த தேசத்தில் கூட்டிச் சேர்க்கப்படும் இஸ்ரவேல் மக்களை மட்டுமல்ல, உலகின் ஏனைய பிரதேசங்களில் இருப்பவர்களையும் அவர் ஆளுகை செய்வார்.

ஆட்சிக்காலத்தைப் பற்றிய முன்னறிவிப்பாகவே உள்ளது. இயேசு கிறிஸ்து தாவீதின் வம்சத்தில் வந்தவராக இருப்பதனால் (மத்.1:1), அவர் தாவீதின் சிங்காசனத்தில் இருந்து முழு உலகையும் ஆட்சி செய்யும் காலத்தில், உலகெங்கும் இருந்து தேவன் ஆபிரகாமுக்கு வாக்களித்த தேசத்தில் கூட்டிச் சேர்க்கப்படும் இஸ்ரவேல் மக்கள், அதன்பின்னர் அத்தேசத்திலிருந்து அகற்றப்படுவதில்லை என்று ஆமோஸ் தீர்க்கதரிசியின் மூலம் தேவன் அறிவித்துள்ளார். அதாவது, "நான் அவர்களுக்குக் கொடுத்த தேசத்திலிருந்து அவர்கள் இனிப் பிடுங்கப்படுவதில்லை" (ஆமோ.9:15) என்று தேவன் கூறுவதனால், இது ஏற்கனவே இஸ்ரவேல் மக்கள் கானான் தேசத்தை சுதந்தரித்துக் கொண்டதைப்பற்றிய தீர்க்கதரிசனம் அல்ல என்பது தெளிவாகின்றது. ஏனெனில் ஏற்கனவே இஸ்ரவேல் மக்கள் அத்தேசத்திலிருந்து பல தடவைகள் துரத்தப்பட்டுள்ளனர். ஆனால், இயேசு கிறிஸ்துவின் ஆயிர வருஷ ஆட்சிக் காலத்தில், தேவன் ஆபிரகாமுக்கு வாக்களித்த தேசத்தில் கூட்டிச் சேர்க்கப்படும் மக்கள் அங்கு நிரந்தரமாகக் குடியிருப்பார்கள். அவர்களை அங்கிருந்து எவராலும் எங்கும் துரத்தமுடியாது.

இயேசுகிறிஸ்து தாவீதின் சிங்காசனத்திலிருந்து உலகத்தை ஆட்சி செய்யும் காலத்தில் தேவன் ஆபிரகாமுக்கு வாக்களித்த தேசத்தில் கூட்டிச் சேர்க்கப்படும் இஸ்ரவேல் மக்கள் மட்டுமல்ல, உலகின் ஏனைய பிரதேசங்களில் இருக்கும் மக்களும் அவருடைய ஆளுகைக்கு உட்பட்டவர்களாக இருப்பார்கள். உண்மையில், அந்திகிறிஸ்துவின் காலத்தில் தேவனால் அனுப்பப்படும் வாதைகளினால் கொல்லப்படுபவர்களும், இயேசுகிறிஸ்து இவ்வுலகத்தில் தம்முடைய ராட்சியத்தை ஸ்தாபிப்பதற்காக வரும்போது அவரை எதிர்த்துப் போரிடுவதற்காக "அர்மகெதொன்" என்னுமிடத்தில் இருக்கும் ராணுவத்தினருமே மரணமடைவார்கள் (வெளி.19:19-21). ஏனையவர்கள் உலகில் உயிருடன் இருப்பார்கள். இதனால், இவர்களும் இயேசுகிறிஸ்துவின் ஆயிர வருஷ ஆளுகைக்கு உட்பட்டவர்களாக இருப்பார்கள். அக்கா

லத்தில் இவர்கள் தேவனுடைய வார்த்தையைக் கேட்பதற்காக எருசலேம் நகரத்திற்கு வருவார்கள் என்பதை தீர்க்கதரிசியாகிய ஏசாயா பின்வருமாறு முன்னறிவித்துள்ளார்:

> கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம், பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும். எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவரு வார்கள். திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள். அவர் தமது வழிகளை நமக்குப் போதிப் பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள். ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும் (ஏசாயா 2:2-3).

கடைசி நாட்களில் நடைபெறுகின்ற சம்பவமாகக் குறிப்பிடப்பட்டுள்ள இத்தீர்க்கதரிசனம், மீகா 4:1-2லும் உள்ளது. இது, இயேசுகிறிஸ்து வின் ஆயிர வருஷ ஆட்சிக் காலத்தைப்பற்றியது என்பதை வேதா கமத்தின் ஏனைய தீர்க்கதரிசனங்கள் அறியத்தருகின்றன.[62] அக்கா லத்தில் எருசலேம் நகரத்தில் ஆலயம் கட்டப்பட்டிருக்கும் என்பதை யும், உலகின் ஏனைய பகுதிகளிலிருக்கும் மக்கள் தேவனுடைய வார்த்தையைக் கேட்பதற்காக எருசலேமுக்கு வருவார்கள் என்பதை யும் இத்தீர்க்கதரிசனம் சுட்டிக்காட்டுகிறது. இதுவரையில் இத்தகைய காரியங்கள் உலகில் நடைபெறாததினால், இவைகள் எதிர்காலத்தி லேயே நடைபெறும். நாம் ஏற்கனவே பார்த்தபடி, இயேசுகிறிஸ்துவின் ஆயிர வருஷ ஆட்சியில் எருசலேம் நகரம் ஏனைய பிரதேசங்களை விட உயரமாக்கப்படும் (சக.14:10). அவ்விடத்தில் தேவனுடைய ஆலயம் மறுபடியும் கட்டப்படும் என்பதனாலேயே, “கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம், பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு மலைகளுக்கு மேலாக உயர்த்தப்படும்'' என்று ஏசாயா குறிப்பிட்டுள்ளார் (ஏசா.2:2). இதைப்பற்றிய விரிவான தீர்க்கதரி சனம் எசேக்கியேல் 40 முதல் 46 வரையிலான அதிகாரங்களில் உள்ளது. இவ்வதிகாரங்களிலுள்ள தீர்க்கதரிசனங்கள் இதுவரையில் நிறைவேறவில்லை. இவைகளும் இயேசுகிறிஸ்துவின் ஆயிர வருஷ

[62] R.J.A.Martin, *Isaiah: The Bible Knowledge Commentary - OT*, p. 1037.

ஆட்சிக் காலத்திலேயே நிறைவேறும். இதன்படி, எருசலேம் நகரத்தில் பிரமாண்டமான ஒரு ஆலயம் கட்டப்படும்.[63] "தேவன் தம்முடைய ஜனங்களின் மத்தியில் இருக்கின்றார் என்பதற்கான அடையாளமாக இவ்வாலயம் இருக்கும்."[64] மேலும், இஸ்ரவேல் மக்களுக்கு குறிப்பிட்ட விதமான ஒரு வழிபாட்டு முறை அக்காலத்தில் இருக்கும். இவ்வழிபாட்டைப்பற்றி தீர்க்கதரிசிகள் குறிப்பிடுகின்ற விஷயங்கள் பழைய ஏற்பாட்டு வழிபாட்டில் உள்ளவைகளாக இருப்பதனால் (எசே.43:18-46:24, சக.14:16, ஏசா.56:6-8, 66:21, எரே.33:15-18), இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலியில் ரத்துசெய்யப்பட்ட பலிகள் மறுபடியும் ஆயிர வருஷ ஆட்சியில் செலுத்தப்படுவது அர்த்தமற்றது என்றும், இதனால், ஆயிர வருஷ ஆட்சியை சொல்லர்த்தமாக வியாக்கியானம் செய்ய முடியாது என்றும் சிலர் கருதுகின்றனர்.[65] ஆனால், பழைய ஏற்பாட்டுப் பலிகள் இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலிக்கு முன்னடையாளமாக இருந்ததினாலேயே அவருடைய மரணத்தின் பின்னர் கிறிஸ்தவர்கள் பலிகள் செலுத்தவில்லை. அதேசமயம், இயேசுகிறிஸ்துவின் மரணத்தை நினைவுகூருவதற்காகக் கிறிஸ்தவர்களுக்கு திருவிருந்து அறிமுகப்படுத்தப்பட்டது. இயேசுகிறிஸ்துவின் ஆயிர வருஷ ஆட்சியில், திருவிருந்துக்குப் பதிலாக, இயேசுகிறிஸ்துவின் மரணத்தை நினைவுகூருகின்ற விதத்தில் பலிகள் செலுத்தப்படும். அதாவது, இயேசுகிறிஸ்துவின் பாடுகளையும் மரணத்தையும் இஸ்ரவேல் மக்கள் புரிந்துகொள்ளும் விதத்தில் அவர்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலியை நினைவூட்டுவதற்காக, ஆயிர வருஷ ஆட்சியில் எருசலேம் நகரில் கட்டப்படும் ஆலயத்தில் பலிகள் செலுத்தப்படும்.[66] இதனால், இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலியின்

[63] J.M.Gray, *Christian Worker's Commentary*, pp. 256-266; J.D.Pentecost, *Things to Come*, p. 513. எசேக்கியேல் குறிப்பிடும் ஆலயம், யூதர்கள் பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து திரும்பிவந்த பின்னர் கட்டப்பட்டதாகச் சிலர் கருதுகின்றனர் (J.B.Taylor, *Ezekiel: Tyndale Old Testament Commentary*, pp. 251-253). ஆனால், யூதர்கள் கட்டிய ஆலயம் எசேக்கியேலின் தரிசனத்தை அடிப்படையாகக்கொண்டு கட்டப்படவில்லை. எசேக்கியேல் குறிப்பிடும் ஆலயம் யூதர்கள் கட்டியதைவிட வித்தியாசமானதாகவும் பெரியதாகவும் உள்ளது. உண்மையில், எசேக்கியேலின் தீர்க்கதரிசனம் இதுவரையில் நிறைவேறாததாகவே உள்ளது (L.E.Cooper, *Ezekiel: The New American Commentary*, p. 352; A. C.Gaebelein, *The Prophet Ezekiel*, p. 272).

[64] C.H.Dyer, *Ezekiel: The Bible Knowledge Commentary - OT*, p. 1302.

[65] A.A.Hoekema, *The Bible and the Future*, pp. 203-205.

[66] C.H.Dyer, *Ezekiel: The Bible Knowledge Commentary - OT*, p. 1305.

ஞாபகார்த்த செயலாக ஆயிர வருஷ ஆட்சிக் காலத்தின் பலிகளும் ஆலய வழிபாடுகளும் இருக்கும்.[67]

---

இயேசுகிறிஸ்து இவ்வுலகை ஆளுகை செய்யும் போது, அவருடைய மணவாட்டியாகிய சபையின் மக்களாகிய கிறிஸ்தவர்களும் அவரோடுகூட இவ்வுலகத்தை ஆளுகை செய்வார்கள்.

---

இயேசுகிறிஸ்துவின் ஆயிர வருஷ ஆட்சியில் உலகெங்கும் சிதறப்பட்டிருக்கும் இஸ்ரவேல் மக்கள், தேவன் ஆபிரகாமுக்கு வாக்களித்த தேசத்தில் கூட்டிச் சேர்க்கப்படுவதோடு, எருசலேம் நகரில் ஆலயமும் கட்டப்படும். இதனால், உலகின் ஏனைய பகுதிகளில் இருக்கும் மக்களும் தேவனுடைய வார்த்தையைக் கேட்பதற்காக எருசலேமுக்கு செல்வார்கள். ஏசாயாவும் மீகாவும் முன்னறிவித்துள்ள இவ்விஷயத்தைத் தேவன் எசேக்கியேல் தீர்க்கதரிசியின் மூலம் பின்வருமாறு அறிவித்துள்ளார்:

> நான் அவர்களோடே சமாதான உடன்படிக்கை செய்வேன். அது அவர்களுக்கு நித்திய உடன்படிக்கையாயிருக்கும். நான் அவர்களை நிலைப்படுத்தி, அவர்களை வர்த்திக்கப்பண்ணி, அவர்கள் நடுவிலே என் பரிசுத்த ஸ்தலத்தை என்றென்றைக்கும் ஸ்தாபிப்பேன். என் வாசஸ்தலம் அவர்களிடத்தில் இருக்கும், நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள். அப்படியே என் பரிசுத்த ஸ்தலம் அவர்கள் நடுவிலே என்றென்றைக்கும் இருக்கும்போது, நான் இஸ்ரவேலைப் பரிசுத்தம் பண்ணுகிற கர்த்தர் என்று ஜாதிகள் அறிந்துகொள்வார்கள் (எசேக்கியேல் 37:24-28).

இயேசுகிறிஸ்து இவ்வுலகை ஆளுகை செய்யும்போது, அவருடைய மணவாட்டியாகிய சபையின் மக்களாகிய கிறிஸ்தவர்கள் அவரோடுகூட இவ்வுலகத்தை ஆளுகை செய்வார்கள். இதைப்பற்றிய வாக்குத்தத்தம் ஏற்கனவே கிறிஸ்தவர்களாகிய நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது (2தீமோ.2:12).[68] மேலும், நாம் ஏற்கனவே பார்த்தபடி, பழைய ஏற்பாட்டுப்

---

[67] M.F.Unger, “The Temple Vision of Ezekiel” in *Bibliotheca Sacra*. 106 (1948), pp. 57-64.

[68] 2தீமோத்தேயு 2:12ல், நாம் “அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பக்தர்களும் (தானி.12:1-3), அந்திகிறிஸ்துவின் காலத்தில் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து இரத்தசாட்சிகளாக மரிப்பவர்களும், ஆயிர வருஷ ஆட்சி ஆரம்பிக்கப்படும்போது உயிர்ப்பிக்கப்பட்டு அவரோடு கூட ஆயிரம் வருஷங்கள் ஆளுகை செய்வார்கள் (வெளி.20:4).[69] இதனால்தான், உலகின் இறுதிகாலத்தைப்பற்றி முன்னறிவிக்கும் தானியேலின் தரிசனங்களிலும் அந்திகிறிஸ்துவும் அவனுடைய ராட்சியமும் அழிக்கப்பட்ட பின்னர் உலகில் ஸ்தாபிக்கப்படும் இயேசு கிறிஸ்துவின் ராட்சியத்தை "உன்னதமானவரின் பரிசுத்தவர்ன்கள் சுதந்தரித்துக்கொள்வார்கள்" (தானி.7:18) என்றும், "வானத்தின் கீழெங்குமுள்ள ராஜ்யங்களின் ராஜரீகமும் ஆளுகையும் மகத்துவமும் உன்னதமானவருடைய பரிசுத்தவான்களாகிய ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்" (தானி.7:27) என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்து இதைப்பற்றி பின்வருமாறு வாக்களித்துள்ளார்:

> நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படி அருள்செய்வேன் (வெளிப்படுத்தல் (3:21).

இயேசுகிறிஸ்துவின் சிலுவைப்பலியினால் மீட்கப்பட்ட சபை மக்கள் ராஜாக்களாக இருக்கின்றார்கள் என்று வேதாகமம் கூறினாலும் (வெளி.1:6) தற்காலத்தில் சபையில் இருக்கும் நாம் ராஜாக்களாகப் பணிபுரிவதில்லை. ஆனால், உலகிலிருந்து சபை எடுத்துக்கொள்ளப் பட்ட பின்பு நமக்கு ராஜரீக அந்தஸ்து கிடைக்கும். இதனால்தான், நாம் ஏற்கனவே பார்த்தபடி, உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட

[69] வெளிப்படுத்தல் 20:4ல், அந்திகிறிஸ்துவினுடைய ஆட்சிக் காலத்தில் "இயேசுவைப்பற்றிய சாட்சியினிமித்தமும் தேவனுடைய வசனத்தினிமித்தமும் சிரச்சேதம் பண்ணப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களையும், மிருகத்தையாவது அதின் சொரூபத்தையாவது வணங்காமலும் தங்கள் நெற்றியிலும் தங்கள் கையிலும் அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளாமலும் இருந்தவர்களையும் கண்டேன். அவர்கள் உயிர்த்துக் கிறிஸ்துவுடனேகூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள்" என்று யோவான் குறிப்பிட்டுள்ளார். தானியேல் 12:1-3ல், அந்திகிறிஸ்துவின் ஆட்சிக் காலத்தைக் குறிப்பிடும் "யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்கால மட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்" என்றும், அக்காலத்தின் பின் தானியேலின் இன மக்களான யூதர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள் என்றும் முன்னறிவிக்கப்பட்டுள்ளது.

சபை தேவனுடைய சிங்காசனத்தைச் சுற்றி இருபத்து நான்கு சிங்காசனங்களில் அமர்ந்திருக்கும் காட்சி வெளிப்படுத்தல் புத்தகத்தில் உள்ளது (வெளி.4:4, 5:9). அதுமாத்திரமல்ல, இவர்கள் "நாங்கள் பூமியிலே அரசாளுவோம் என்று புதிய பாட்டைப் பாடினார்கள்" (வெளி.5:10). இது அவர்களுடைய எதிர்கால நம்பிக்கையை வெளிப்படுத்தும் பாடலாய் உள்ளது. அதாவது, உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட பின்னர், இயேசுகிறிஸ்து தம்முடைய ராட்சியத்தை இவ்வுலகில் ஸ்தாபிக்கும்போது அவரோடு சேர்ந்து ஆளுகை செய்வோம் என்னும் நிச்சயத்துடன் அவர்கள் இவ்விதமாகப் பாடியுள்ளனர். "இயேசுகிறிஸ்துவினால் மீட்கப்பட்டவர்கள் அவரால் ஆளப்படுபவர்களாக அல்ல, அவரோடு சேர்ந்து ஆளுகை செய்பவர்களாகவே இருப்பார்கள்."[70] இதனால்தான், "ஜாதிகள்மேல் அவர்களுக்கு அதிகாரம் கொடுப்பதாக" இயேசுகிறிஸ்து வெளிப்படுத்தல் 2:26-27ல் வாக்களித்துள்ளார்.

---

இயேசுகிறிஸ்துவினால் மாத்திரமே உலகத்திற்கு சமாதானத்தைக் கொண்டுவரமுடியும். அவர் மறுபடியும் உலகத்திற்கு வரும்போது உலகிலுள்ள ராணுவங்களையும் யுத்த ஆயுதங்களையும் முழுமையாக அழிப்பதன் மூலம் உலகில் சமாதானத்தைக் கொண்டுவருவார்.

---

இயேசுகிறிஸ்துவின் ஆயிர வருஷ ஆட்சியைப்பற்றி அநேகருக்கு இருக்கும் ஒரு கேள்வி, உயிர்ப்பிக்கப்பட்ட பக்தர்களும் மறுரூபமாக்கப்பட்ட கிறிஸ்தவர்களும் எப்படி இந்த சடப்பொருள் உலகத்தில் வாழ்வார்கள் என்பதாகும். ஏனெனில், நாம் ஏற்கனவே பார்த்தபடி, இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகையின்போது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் உயிர்ப்பிக்கப்பட்டும், உலகிலிருக்கும் மெய்க்கிறிஸ்தவர்கள் மறுரூபமாக்கப்பட்டும் மகிமையின் சரீரத்தைப் பெறுவார்கள் (1கொரி.15:51-52).[71] அதாவது, இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்னர் அவருடைய சரீரம் எவ்விதமாக இருந்ததோ, அவ்விதமாகவே விசுவாசிகளின் மகிமையின் சரீரமும் இருக்கும் (1யோவா.3:2, பிலி.

[70] R.L.Thomas, *Revelation 1-7: An Exegetical Commentary*, p. 402.

[71] 1கொரிந்தியர் 15:51-52ல், "இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன். நாமெல்லாரும் நித்திியரையடைவதில்லை. ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள். நாமும் மறுரூபமாக்கப்படுவோம்" என்பதைப் பவுல் அறியத்தருகின்றார்.

3:21).[72] எனவே, இயேசுகிறிஸ்து மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்த பின்னர் மகிமையின் சரீரத்தில் எவ்வாறு நாற்பது நாட்கள் இவ்வுலகில் இருந்தாரோ, அவ்விதமாகவே, அவருடைய இரகசிய வருகையின் போது உயிர்ப்பிக்கப்படும் கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களும், உலகிலிருந்து மறுரூபமாக்கப்பட்டு எடுத்துக்கொள்ளப்படும் மெய்க்கிறிஸ்தவர்களும் (1தெச.4:16-17), அந்திகிறிஸ்துவினுடைய ஆட்சியின் முடிவில் உயிர்ப்பிக்கப்படும் இரத்தசாட்சிகளும் (வெளி.20:4), பழைய ஏற்பாட்டுப் பக்தர்களும் (தானி.12:1-2) இயேசுகிறிஸ்துவினுடைய ஆயிர வருஷ ஆட்சிக் காலத்தில் இவ்வுலகில் இருப்பார்கள். அக்காலத்தில் இயேசு கிறிஸ்து எருசலேமைத் தலைநகராகக் கொண்டு உலகத்தை ஆயிரம் வருஷங்கள் ஆட்சி செய்வார். அக்காலத்தில் அவருடைய ராட்சியம் பிரத்தியட்சமாய் இவ்வுலகத்தில் இருக்கும்.

## (3) அமைதியும் ஆனந்தமும் பிரியாமல் இருக்கும் ராட்சியம்

எருசலேமைத் தலைநகராகக்கொண்டு, இயேசுகிறிஸ்து இவ்வுலகை ஆயிரம் வருஷங்கள் ஆட்சிசெய்யும் காலத்தில் உலகில் முழுமையான சமாதானமும் சந்தோஷமும் நிறைவாகக் காணப்படும். ஏனெனில், மானிட வாழ்வில் துயரத்தையும் பிரச்சனைகளையும் கொண்டு வரும் சகலவற்றையும் இயேசுகிறிஸ்து அக்காலத்தில் முழுமையாக இவ்வுலகிலிருந்து நீக்கிவிடுவார். உலகை ஆளுகை செய்யும் ராஜாவாக இயேசுகிறிஸ்து இவ்வுலகத்திற்கு வரும்போது, அவரை அழிக்க முற்படும் அந்திகிறிஸ்துவையும் கள்ளத்தீர்க்கதரிசியையும் உயிரோடு நரகத்தில் தள்ளிவிட்டு (வெளி.19:20), இவர்கள் "அர்மகெதோன்" என்னுமிடத்தில் வைத்திருக்கும் முழு உலகத்தினது இராணுவங்க

[72] 1யோவான் 3:2ல் "பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை. ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதைப்போலவே, பிலிப்பியர் 3:21லும், அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்" என்று கூறுகிறது. எனவே, உயிர்த்தெழுதலின் பின்னர் இயேசுகிறிஸ்துவின் சரீரம் இருந்தவிதமாகவே நம்முடைய சரீரங்களும் மகிமையடைந்த பின்னர் இருக்கும்.

ளையும் அவர்களுடைய போராயுதங்களையும் ஒரு நொடிப்பொழுதில் அழித்துவிடுவார் (வெளி.19:21).[73] இதனால், இயேசுகிறிஸ்து இவ்வு லகை ஆளுகை செய்யும் காலத்தில் போரிடுவதற்கு ஆயுதங்களும் யுத்தமும் இருக்காது. சங்கீதக்காரன் இதைப்பற்றி முன்னறிவிக்கும் போது, "அவர் பூமியின் கடைமுனை மட்டும் யுத்தங்களை ஓயப்பண் ணுகிறார். வில்லை ஒடித்து ஈட்டியை முறிக்கிறார். இரதங்களை நெருப்பினால் சுட்டெரிக்கிறார்" (சங்.46:9) என்று குறிப்பிட்டுள்ளான். அதாவது, இயேசுகிறிஸ்து முழு உலகிலும் கொண்டுவரும் சமாதா னம், யுத்த ஆயுதங்களை அழிப்பதன் மூலமாக உருவாக்கப்படும் சமாதானமாக இருக்கும் என்று சங்கீதக்காரன் கூறுகிறான்.[74] சங்கீதக் காரன் முன்னறிவிக்கும் இச்சமாதானம், அதாவது மனிதரின் போராயு தங்களை அழிப்பதன் மூலமாக உலகில் கொண்டுவரப்படும் சமாதா னம், உலகின் இறுதிகாலத்தில் நடைபெறும் என்பதை ஏசாயாவும் மீகாவும் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளனர்:

> அவர் ஜாதிகளுக்குள் நியாயந்தீர்த்து, திரளான ஜனங்களைக் கடிந்துகொள்வார். அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங் களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களா கவும் அடிப்பார்கள். ஜாதிக்கு விரோதமாய் ஜாதி பட்டயம் எடுப்பதில்லை, இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை (ஏசாயா 2:4, மீகா 4:3).

"கடைசி நாட்களில்" நடைபெறும் காரியங்களையே ஏசாயாவும் மீகாவும் முன்னறிவித்துள்ளதை இத்தீர்க்கதரிசனப் பகுதியின் ஆரம்ப வசனங்கள் அறியத்தருகின்றன (ஏசா.2:2, மீகா 4:1). இது இயேசு

[73] வெளிப்படுத்தல் 19:19-21ல் "பின்பு, மிருகமும் பூமியின் ராஜாக்களும் அவர்களுடைய சேனைகளும், குதிரையின்மேல் ஏறியிருக்கிறவரோடும் அவரு டைய சேனையோடும் யுத்தம்பண்ணும்படிக்குக் கூடிவரக்கண்டேன். அப்பொழுது மிருகம் பிடிக்கப்பட்டது மிருகத்தின் முன்பாகச் செய்த அற்புதங்களால் அதின் முத்திரையைத் தரித்தவர்களையும் அதின் சொரூபத்தை வணங்கினவர்களையும் மோசம் போக்கின கள்ளத் தீர்க்கதரிசியுங்கூடப் பிடிக்கப்பட்டான். இருவரும் கந்தகம் எரிகிற அக்கினிக்கடலிலே உயிரோடே தள்ளப்பட்டார்கள். மற்றவர்கள் குதிரையின் மேல் ஏறினவருடைய வாயிலிருந்து புறப்படுகிற பட்டயத்தால் கொல்லப்பட்டார்கள். அவர்களுடைய மாம்சத்தினால் பறவைகள் யாவும் திருப்தியடைந்தன" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[74] D.Kidner, *Psalms 1-72: Tyndale Old Testament Commentary*, p. 176; J.Flanigan, *Psalms: Ritchie Old Testament Commentary*, p. 211.

கிறிஸ்துவின் ஆயிர வருஷ ஆட்சியைப்பற்றிய முன்னறிவிப்பாகும்.[75] புதிய ஏற்பாட்டில், "கடைசி நாட்கள்" என்னும் சொற்பிரயோகம் இயேசுகிறிஸ்துவின் இரண்டு வருகைகளுக்கும் இடைப்பட்ட காலத்தையே குறிப்பதனால் (அப்.2:17, 2தீமோ.3:1, எபி.1:2, யாக்.5:3, 2பேது.3:3), இது ஆயிரவருஷ ஆட்சியைப்பற்றிய குறிப்பு அல்ல என்று சிலர் கருதுகின்றனர். அதாவது, இவைகள் இயேசுகிறிஸ்துவின் இரண்டு வருகைகளுக்கும் இடைப்பட்ட சபைக் காலத்தில் தற்போது நிறைவேறுகின்றன என்பதே இவர்களுடைய தர்க்கமாகும்.[76] ஆனால், ஏசாயாவும் மீகாவும் முன்னறிவிப்பவைகள் இயேசுகிறிஸ்துவின் இரண்டு வருகைக்கும் இடைப்பட்ட சபைக் காலத்தில் நிறைவேறுகிறவைகளாக இல்லை. இவை அவருடைய ஆயிர வருஷ ஆட்சிக்கால சம்பவங்களாகவே உள்ளன.[76] ஏனெனில், இதற்கு முன் உள்ள வசனங்களில் முன்னறிவிக்கப்பட்டுள்ளவிதமாக (ஏசா.2:2-3, மீகா.4:1-3) எருசலேமில் கட்டப்படும் கர்த்தருடைய ஆலயத்திற்கு உலகின் சகல பாகங்களிலுமிருந்து தேவனையும் அவருடைய வேதத்தையும் அறிந்துகொள்வதற்கு மக்கள் வருவது சபை காலத்திற்கு எவ்விதத்திலும் பொருத்தமற்றதாகவே உள்ளது. தற்காலத்தில் உலகின் சகல பிரதேசங்களிலும் மக்கள் தேவனை அறிந்துகொள்ளக்கூடிய விதத்தில் சபைகள் உள்ளன. எனவே, இதுவரையில் நிறைவேறாதிருக்கும் இத்தீர்க்கதரிசனம் தற்காலத்தில் நிறைவேறுவதாகக் கூற முடியாது. ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தில் "கடைசி நாட்கள்" என்பது மூலமொழியில் "நாட்களின் முடிவில்" என்னும் அர்த்தமுடையது.[77] எனவே, ஏசாயாவும் மீகாவும் இவ்வுலகம் அழிக்கப்படுவதற்கு முன்பு இவ்வுலகில் கடைசியாக நடைபெறும் காரியமான இயேசுகிறிஸ்துவின் ஆயிர வருஷ ஆட்சியைப் பற்றியே முன்னறிவித்துள்ளனர். அக்காலத்தில் உலகெங்கும் முழுமையான சமாதானம் இருக்கும்.

இயேசுகிறிஸ்து ராஜாவாக இவ்வுலகத்திற்கு வரும்போது, தம்மை எதிர்ப்பவர்களை அழித்து தம்முடைய ராட்சியத்தை எருசலேம் நகரில் ஸ்தாபிப்பார் என்பதையே ஏசாயாவும் மீகாவும் முன்னறிவித்

---

75 J.MacArthur, *The MacArthur Bible Commentary*, p. 762;

76 J.N.Oswalt, *Isaiah 1-39: The New International Commentary*, pp. 116-117.

76 J.A.Martin, *Isaiah: The Bible Knowledge Commentary – Old Testament*, p. 1037; K.L.Barker, *Micah: The New American Commentary*, pp. 82-85.

77 J.Goldingay, *Isaiah: New International Biblical Commentary*, p. 42.

துள்ளனர். இத்தீர்க்கதரிசனங்களின்படி, இயேசுகிறிஸ்து எருசலேமைத் தலைநகராகக்கொண்டு முழு உலகையும் ஆளுகை செய்யும் காலத்தில் உலகில் யுத்தங்கள் எதுவும் நடைபெறுவதில்லை. இதனால், மக்கள் "தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள்" (ஏசா.2:4, மீகா.4:3). அதாவது, "அக்காலத்தில் போராயுதங்கள் யாவும் விவசாய உபகரணங்களாக மாற்றப்படும்."[78] யுத்த ஆயுதங்கள் எதுவும் அக்காலத்தில் உற்பத்தி செய்யப்படுவதில்லை. யுத்தக் கலையை எவரும் கற்பதும் இல்லை. இதனால், உலகெங்கும் முழுமையான சமாதானம் நிலவும். அக்காலத்தில், "இயேசுகிறிஸ்துவே தங்களைப் பாதுகாக்கக்கூடிய ராஜா என்பதை அறிந்துகொள்ளும்போது, மனிதர்கள் ஒருவரோடொருவர் சண்டை பிடிப்பதற்காக ஆயுதங்களை செய்யமாட்டார்கள்."[79] இயேசுகிறிஸ்துவின் ஆயிரவருஷ ஆட்சியில் உலகில் யுத்தங்கள் எதுவும் இருப்பதில்லை என்பது சகரியா 9:10ல் பின்வருமாறு முன்னறிவிக்கப்பட்டுள்ளது:[80]

> எப்பிராயீமினின்று இரதங்களையும் எருசலேமினின்று குதிரைகளையும் அற்றுப் போகப்பண்ணுவேன், யுத்த வில்லும் இல்லாமற் போகும். அவர் ஜாதிகளுக்குச் சமாதானம் கூறுவார். அவருடைய ஆளுகை ஒரு சமுத்திரந் தொடங்கி மறு சமுத்திரம் வரைக்கும், நதி தொடங்கிப் பூமியின் எல்லைகள் பரியந்தமும் செல்லும் (சகரியா 9:10).

யுத்தங்கள் இல்லாத இயேசுகிறிஸ்துவின் சமாதானமான ஆட்சி முழு உலகிலும் இருக்கும் என்பதை இவ்வசனம் அறியத்தருகிறது. இதனால்தான், சமாதானமான அவருடைய ஆளுகை "பூமியின் எல்லைகள் பரியந்தம் செல்லும்" என்று இவ்வசனத்தில் முன்னறிவிக்கப்பட்டுள்ளது. இரதங்களும் குதிரைகளும் வேதாகம கால ராணுவத்தின் முக்கியப் படைகளாக இருந்தன. இவை இல்லாமற் போகும் என்பது, ராணுவ ஆயுதங்கள் இல்லாமற் போவதைப்பற்றிய முன்னறிவிப்பாக உள்ளது. உண்மையில், இயேசுகிறிஸ்துவினால் மாத்திரமே உலகத்திற்கு சமாதானத்தைக் கொண்டுவர முடியும்.

---

78 W.MacDonald, *Believer's Bible Commentary*, p. 942.

79 G.V.Smith, *Isaiah: The New American Commentary*, p. 131.

80 F.D.Lindsey, *Zechariah: The Bible Knowledge Commentary – OT*, p. 1563.

அவர் மறுபடியும் உலகத்திற்கு வரும்போது, உலகிலுள்ள ராணுவங்களையும் யுத்த ஆயுதங்களையும் முழுமையாக அழிப்பதன் மூலம் உலகில் முழுமையான சமாதானத்தைக் கொண்டுவருவார்.

அமைதியும் ஆனந்தமும் பிரியாமல் இருக்கும் இயேசுகிறிஸ்துவின் ஆயிர வருஷ ஆட்சிக் காலத்தில் மனிதர்கள் நீண்ட ஆயுள் உள்ளவர்களாகவும் இருப்பார்கள். இவர்கள் அந்திகிறிஸ்துவின் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்தவர்களுடைய வம்சத்தினராவர். உண்மையில், இயேசுகிறிஸ்து தம்முடைய ராட்சியத்தை இவ்வுலகில் ஸ்தாபிக்கும் போது அந்திகிறிஸ்துவுடனும் கள்ளத்தீர்க்கதரிசியுடனும் சேர்ந்து இயேசுகிறிஸ்துவை அழிப்பதற்காக அர்மகெதோன் என்னுமிடத்தில் கூடியவர்களே அவரால் அழிக்கப்படுவார்கள் (வெளி.19:19-21). ஏனையவர்களில், அந்திகிறிஸ்துவின் ஆட்சிக் காலத்தில் தேவ தண்டனையாக உலகில் ஏற்பட்ட அழிவுகளில் மரிக்காதவர்கள் இயேசுகிறிஸ்துவின் ஆயிர வருஷ ஆட்சிக் காலத்தில் இவ்வுலகில் இருப்பார்கள். இவர்கள் நீண்ட ஆயுசுள்ளவர்களாக இருப்பார்கள் என்பதை ஏசாயா 65:19-23 பின்வருமாறு முன்னறிவித்துள்ளது:

> நான் எருசலேமின்மேல் களிகூர்ந்து, என் ஜனத்தின்மேல் மகிழ்ச்சியாயிருப்பேன். அழுகையின் சத்தமும், கூக்குரலின் சத்தமும் அதில் இனிக் கேட்கப்படுவதில்லை. அங்கே இனி அற்ப ஆயுசு உள்ள பாலகனும், தன் நாட்கள் பூரணமாகாத கிழவனும் உண்டாயிரார்கள். நூறு வயதுசென்று மரிக்கிறவனும் வாலிபன் என்று எண்ணப்படுவான், நூறு வயதுள்ளவனாகிய பாவியோ சபிக்கப்படுவான். வீடுகளைக் கட்டி, அவைகளில் குடியிருப்பார்கள், திராட்சத் தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனியைப் புசிப்பார்கள். அவர்கள் கட்டுகிறதும், வேறொருவர் குடியிருக்கிறதும், அவர்கள் நாட்டுகிறதும், வேறொருவர் கனி புசிக்கிறதுமாய் இருப்பதில்லை. ஏனெனில் விருட்சத்தின் நாட்களைப்போல என் ஜனத்தின் நாட்களிருக்கும். நான் தெரிந்து கொண்டவர்கள் தங்கள் கைகளின் கிரியைகளை

---

ஆயிர வருஷ ஆட்சியில் உலகில் சமாதானத்தைக் கொண்டுவரும் இயேசுகிறிஸ்து, அக்காலத்தில் மனிதர்கள் மாத்திரமல்ல, சகல உயிரினங்களும் ஒற்றுமையுடன் வாழ்கின்ற நிலையையும் உருவாக்குவார்

---

நெடுநாளாய் அநுபவிப்பார்கள். அவர்கள் விருதாவாக உழைப்ப தில்லை. அவர்கள் துன்பமுண்டாகப் பிள்ளைகளைப் பெறுவ துமில்லை. அவர்களும், அவர்களோடே கூட அவர்கள் சந்தானமும் கர்த்தராலே ஆசீர்வதிக்கப்பட்ட சந்ததியாயிருப் பார்கள் (ஏசாயா 65:19-23).

இத்தீர்க்கதரிசனத்தில், "அங்கே இனி அற்ப ஆயுசுள்ள பாலகனும், தன் நாட்கள் பூரணமாகாத கிழவனும் உண்டாயிரார்கள்" "நூறு வயது சென்று மரிக்கிறவனும் வாலிபனென்று எண்ணப்படுவான்" "விருட்சத்தின் நாட்களைப்போல என் ஜனத்தின் நாட்களிருக்கும்" என்னும் சொற்பிரயோகங்கள் இயேசுகிறிஸ்துவின் ஆயிரவருஷ ஆட்சிக் காலத்தில் இவ்வுலகில் வாழும் மக்களின் ஆயுட்காலம் நீண்டதாய் இருக்கும் என்பதை அறியத்தருகின்றன.[81] அதுமட்டுமல்ல "அழுகையின் சத்தமும், கூக்குரலின் சத்தமும் அதில் இனிக் கேட்கப்படுவதில்லை" என்பதனால், அக்காலத்தில் மக்கள் எவ்வித துயரமுமில்லாமல் சந்தோஷமாகவும் சமாதானமாகவும் வாழ்வார்கள்.

ஆயிர வருஷ ஆட்சியில் உலகில் சமாதானத்தைக் கொண்டுவரும் இயேசுகிறிஸ்து, அக்காலத்தில் மனிதர்கள் மாத்திரமல்ல, உலகி லுள்ள சகல உயிரினங்களும் ஒற்றுமையுடன் வாழ்கின்ற நிலைமை

[81] இத்தீர்க்கதரிசனம் புதிய வானமும் புதிய பூமியும் சிருஷ்டிக்கப்படுவதைப் பற்றிய அறிமுகத்துடன் ஆரம்பமாவதினால் (ஏசா.65:17-18) இது ஆயிர வருஷ ஆட்சியைப்பற்றியது அல்ல என்று நாம் எண்ணலாம். ஏனெனில், ஆயிர வருஷ ஆட்சியின் பின்பே, இப்போதிருக்கும் வானமும் பூமியும் அழி க்கப்பட்டு புதிய வானமும் புதிய பூமியும் சிருஷ்டிக்கப்படும் என்பதை வெளிப்படுத்தல் 20ம் 21ம் அதிகாரங்கள் அறியத்தருகின்றன. மேலும், வெளிப் படுத்தல் புத்தகத்தில் பரலோகமே புதிய வானம் புதிய பூமியாக சித்தரிக்கப் பட்டுள்ளது. ஆனால், ஏசாயா 65:17ல் இயேசுகிறிஸ்துவின் ஆயிர வருஷ ஆட்சி புதிய வானமும் புதிய பூமியுமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இயேசுகிறிஸ்து இவ்வுலகில் ஸ்தாபிக்கும் ராட்சியம் தற்போதைய உலகத்தைப்போல இராது என்பதை அறியத்தருவதற்காகவே இத்தகைய சொற்பிரயோகத்தை ஏசாயா உபயோகித்துள்ளார் (G.V.Smith, *Isaiah 40-66: The New American Commentary*, p. 716). மேலும், பரலோகத்தில் மானிட இனவிருத்தி இருக்காது. எனவே, மனிதரின் நீண்ட ஆயுட்காலத்தைப்பற்றி முன்னறிவிக்கும் இத்தீர்க்கதரிசனம் மனிதனின் இனப்பெருக்கத்தையும் மரணத்தையும்பற்றி கூறுவதனால் இது ஆயிர வருஷ ஆட்சியைப்பற்றிய முன்னறிவிப்பாகவே உள்ளது (J.A.Martin, *Isaiah: The Bible Knowledge Commentary – OT*, p. 1120; W.MacDonald, *Believer's Bible Commentary*, p. 989).

யையும் உருவாக்குவார். உலகில் போராயுதங்களும் யுத்தங்களும் இல்லாத அக்காலத்தில், தேவன் உலகிலுள்ள சகல உயிரினங்களு டனும் ஒரு உடன்படிக்கை செய்வார் என்று ஓசியா தீர்க்கதரிசியின் மூலம் பின்வருமாறு முன்னறிவித்துள்ளார்:

> அக்காலத்தில் நான் அவர்களுக்காகக் காட்டு மிருகங்களோடும் ஆகாயத்துப் பறவைகளோடும், பூமியிலே ஊரும் பிராணிகளோ டும் ஒரு உடன்படிக்கை பண்ணி, வில்லையும் பட்டயத்தையும் யுத்தத்தையும் தேசத்திலே இராதபடிக்கு முறித்து, அவர்களை சுகமாய் படுத்துக்கொண்டிருக்கப் பண்ணுவேன் (ஓசியா.2:18).

இவ்வசனத்தில் "அக்காலத்தில்" என்னும் சொற்பிரயோகம், உலகின் இறுதி காலத்தையே குறிக்கின்றது.[82] அக்காலத்தில் தேவன் மனிதர்க ளுக்காக ஏனைய உயிரினங்களுடன் செய்யும் உடன்படிக்கை, அவர்கள் முழுமையான சமாதானத்துடன் இவ்வுலகில் வாழ்வதற்கா கத் தேவன் செய்யும் செயலாயுள்ளது. இதன் மூலம் மனிதருக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் இடையில் உள்ள பகைமை நீக்கப்படும்.[83] தேவன் உலகத்தை சிருஷ்டித்தபோது சகல உயிரினங் களும் ஒற்றுமையுடன் வாழக்கூடிய நிலையே காணப்பட்டது. அக்கா லத்தில் சகல உயிரினங்களையும் ஆளுகை செய்யும் அதிகாரம் மனிதனுக்கு கொடுக்கப்பட்டிருந்தது (ஆதி.1:28). மனிதனுக்குத் தீங்கு செய்யக்கூடியவைகளாக அவைகள் இருக்கவில்லை. இதனால்தான் தன்னிடம் கொண்டுவரப்பட்ட சகல மிருகங்களுக்கும் பறவைகளுக் கும் பெயரிடக்கூடிய நிலையில் உலகின் முதல் மனிதனான ஆதாம் இருந்தான் (ஆதி.2:20). மேலும், ஜலப்பிரளயத்தினால் உலகம் அழிக் கப்பட்ட காலத்தில் நோவா கட்டிய பேழைக்குள் உலகின் சகல உயிரினங்களும் ஒன்றாக இருந்ததும், ஆரம்ப காலத்தில் மனிதருக் குத் தீங்கு விளைவிக்கக்கூடிய நிலையில் எந்த ஒரு உயிரினமும் இருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்துகிறது (ஆதி.6:17-22, 7:8-9, 7:13-16). ஆனால், ஜலப்பிரளயத்திற்குப் பின்னர், மனிதரைப்பற்றிய பயம் ஏனைய உயிரினங்களுக்கு ஏற்பட்டதோடு (ஆதி.9:2), உணவுக் காக ஏனைய உயிரினங்களைக் கொல்வதற்கும் மனிதனுக்கு அனு மதி கொடுக்கப்பட்டது (ஆதி.9:3).[84] இதனால், மனிதருக்கும் ஏனைய

[82] D.Stuart, *Hosea-Jonah: Word Biblical Commentary Volume 31*, p. 58.
[83] D.A.Garrett, *Hosea, Joel: The New American Commenmtary*, p. 92.

---

இயேசுகிறிஸ்து இவ்வுலகை ஆளுகை செய்யும் காலத்தில் பாவத்தின் சகல விளைவுகளில் இருந்தும் நாம் வாழும் இப்பூமி மீட்கப்படுவதனால், உலகிலிருக்கும் சகல உயிரினங்களும் ஆரம்பத்தில் இருந்த விதமாக அக்காலத்தில் ஒற்றுமையுடன் இருக்கும்.

---

உயிரினங்களுக்கும் இடையில் பகைமை ஏற்பட்டது. இத்தகைய பகையும் பாவத்தின் விளைவுகளில் ஒன்றாக உள்ளபோதிலும், நோவாவின் கால ஜலப்பிரளயத்தை முன்னறிந்தவராக அக்காலம் வரை மனிதருக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் இடையில் பகைமை ஏற்படாத நிலையில் தேவன் ஏனைய உயிரினங்களை வைத்திருந்தார். இல்லையென்றால், நோவாவினால் சகல உயிரினங்களிலும் ஒவ்வொரு ஜோடியைப் பேழைக்குள் வைத்திருந்திருக்க முடியாது. இயேசுகிறிஸ்து இவ்வுலகை ஆளுகை செய்யும் காலத்தில் பாவத்தின் சகல விளைவுகளில் இருந்தும் நாம் வாழும் இப்பூமி மீட்கப்படுவதனால், உலகிலிருக்கும் சகல உயிரினங்களும் ஆரம்பத்தில் இருந்த விதமாக அக்காலத்தில் ஒற்றுமையுடன் இருக்கும். இயேசுகிறிஸ்துவின் ஆயிர வருஷ ஆட்சியைப்பற்றி முன்னறிவிக்கும் ஏசாயா 11ம் அதிகாரத்தில் இதைப்பற்றி பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

> அப்பொழுது ஓனாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும், புலி வெள்ளாட்டுக் குட்டியோடே படுத்துக்கொள்ளும். கன்றுக்குட்டியும், பாலசிங்கமும், காளையும், ஒருமித்திருக்கும். ஒரு சிறு பையன் அவைகளை நடத்துவான். பசுவும் கரடியும் கூடிமேயும், அவைகளின் குட்டிகள் ஒருமித்துப் படுத்துக்கொள்ளும். சிங்கம் மாட்டைப்போல் வைக்கோல் தின்னும். பால் குடிக்கும் குழந்தை விரியன் பாம்பு வளையின்மேல் விளையாடும், பால் மறந்த பிள்ளை கட்டுவிரியன் புற்றிலே தன் கையை வைக்கும். என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்கு செய்வாருமில்லை கேடு செய்வாருமில்லை. சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது

---

[84] ஜலப்பிரளயத்திற்குப் பின்னர் தேவன் மனிதனை ஆசீர்வதித்தபோது, ஆதியாகமம் 9:2-3ல், "உங்களைப் பற்றிய பயமும் அச்சமும் பூமியிலுள்ள சகல மிருகங்களுக்கும், ஆகாயத்திலுள்ள சகல பறவைகளுக்கும் உண்டாயிருக்கும். பூமியிலே நடமாடுகிற யாவும், சமுத்திரத்தின் மச்சங்கள் யாவும், உங்களுக்குக் கையளிக்கப்பட்டன. நடமாடுகிற ஜீவஜந்துக்கள் யாவும், உங்களுக்கு ஆகாரமாய் இருப்பதாக. பசும் பூண்டுகளை உங்களுக்குத் தந்ததுபோல, அவைகள் எல்லாவற்றையும் உங்களுக்குத் தந்தேன்" என்று தெரிவித்துள்ளார்.

போல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும் (ஏசாயா 11:9).

உலகின் சகல உயிரினங்களிலும் தேவன் கொண்டுவரும் மாற்றத்தை இவ்வசனங்கள் முன்னறிவிக்கின்றன.[85] அதாவது, எந்த ஒரு உயிரினமும் இன்னுமொரு உயிரினத்திற்குத் தீங்கு விளைவிக்காத விதத்தில் ஒவ்வொரு உயிரினமும் மாற்றப்படும். இதனால், உலகிலுள்ள உயிரினங்கள் அனைத்தும் சமாதானத்துடன் வாழக்கூடிய நிலை இயேசு கிறிஸ்துவின் ஆயிர வருஷ ஆட்சியில் இருக்கும். இதற்குக் காரணம், பாவத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் உலகத்தையும் அதில் உள்ளவைகள் அனைத்தையும் அக்காலத்தில் இயேசுகிறிஸ்து பாவத்தின் விளைவுகளில் இருந்து முழுமையாக மீட்பதேயாகும். மனிதனுடைய பாவம் அவனை மாத்திரமல்ல, அவன் வாழும் பூமியையும் பாதித்தது. இதனால்தான், “பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்… அது உனக்கு முள்ளும் குறுக்கும் முளைப்பிக்கும்” (ஆதி.3:17-18) என்று தேவன் உலகின் முதல் மனிதனான ஆதாமிடம் தெரிவித்தார். இயேசுகிறிஸ்துவின் மீட்பின் செயல் பாவத்தின் சகல விளைவுகளுக்கும் பரிகாரமாய் இருப்பதனால் (கொலோ.1:20), அவர் ராஜாவாக இவ்வுலகத்திற்கு வரும்போது, முழு உலகத்தையும் பாவத்தின் விளைவுகள் அனைத்திலுமிருந்து முழுமையாக விடுவிப்பார். மனிதனுடைய பாவத்தினாலேயே உலகமும் அதில் உள்ளவைகளும் தேவனுடைய சாபத்திற்கு உட்பட்டதனால், மனிதனைப் பாவத்திலிருந்து மீட்கும் செயல், அவனுடைய பாவத்தினால் பாதிக்கப்பட்ட அனைத்தையும் மீட்பதாகவே உள்ளது. இதனால்தான், முழு உலகமும் இயேசுகிறிஸ்துவினால் அருளப்படும் மீட்பை எதிர்பார்த்துக் காத்திருப்பதாகப் பவுல் ரோமர் 8ம் அதிகாரத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.[86]

> தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்குச் சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்துக்கொண்டிருக்கிறது. அதேனென்றால் சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும் என்கிற

[85] G.V.Smith, *Isaiah 1-39: The New American Commentary*, p. 269.
[86] J.R.Edwards, *Romans: New International Biblical Commentary*, p. 212.

நம்பிக்கையோடே, அந்தச் சிருஷ்டியானது சுயஇஷ்டத்தினாலே அல்ல, கீழ்ப்படுத்தினவராலேயே மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கி றது. ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி, இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவவேதனைப்படு கிறது. அதுவுமல்லாமல், ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமுங்கூட நம்முடைய சரீர மீட்பாகிய புத்திர சுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம் (ரோமர் 8:19-23).

தேவனுடைய சிருஷ்டியானது, அதாவது அவரால் சிருஷ்டிக்கப்பட்ட உலகமும், மனிதரும் தூதரும் தவிர்ந்த அதில் உள்ளவைகள் அனைத்தும் தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்காக ஆவலோடு காத்துக் கொண்டிருப்பதைப் பவுல் இவ்வசனங்களில் சுட்டிக்காட்டியுள் ளார்.[87] இவ்வசனத்தில் "ஆவலோடு காத்துக்கொண்டிருத்தல்" என்ப தற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள சொல் புதிய ஏற்பாட் டில் ஏழு தடவைகள் இடம்பெறுவதோடு, சகல இடங்களிலும் இச் சொல் இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகையுடன் தொடர்புள்ள நிலையிலேயே உள்ளது (ரோ.8:19, 8:23, 8:25, 1கொரி.1:7, கலா.5:5, பிலி.3:20, எபி.9:28). தேவனுடைய புத்திரர் வெளிப்படுவது அவரு டைய வருகையின்போதே நடைபெறுவதனாலேயே, இவ்வசனத்தில் இச்சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது.[88] நாம் இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாக இருந்தாலும், நம்முடைய இத்தகைய உன்னத நிலையை உலகம் அறியாமல் உள்ளது. ஆனால், இயேசுகிறிஸ்து மறுபடியும் வரும்போது அவருக்குள் மரித்தவர்கள் உயிர்ப்பிக்கப்ப டுவதோடு, உலகிலிருக்கும் அவருடையவர்களும் உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்படுவதனால் (1தெச.4:16-17), எவர்கள் உண்மையி லேயே தேவனுடைய பிள்ளைகள் என்பது அச்சமயம் வெளிப்படும்.[89] இத்தகைய வெளிப்பாட்டுக்காக ஆவலோடு காத்திருக்கும் உலகமும் அதில் உள்ளவைகளும் தற்பொழுது "மாயைக்கு கீழ்ப்பட்டிருப்ப தாகப்" பவுல் கூறுகின்றார். மனிதனின் பாவம் காரணமாக முழு உலகமும் அதில் உள்ளவைகளும் பாதிக்கப்பட்டிருப்பதையே (ஆதி.3:17-18, 5:29) பவுல் இவ்விதமாகக் குறிப்பிட்டுள்ளார்.[90] எனினும்,

[87] R.C.Sproul, *The Gospel of God: An Exposition of Romans*, p. 139.
[88] J.A.Witmer, *Romans: The Bible Knowledge Commentary – NT*, p. 472.
[89] W.MacDonald, *Believer's Bible Commentary*, p. 1711.

இத்தகைய நிலையிலிருந்து உலகமும் அதில் உள்ளவைகளும் ஒரு நாள் விடுவிக்கப்படும் என்பதனால், "மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும் என்கிற நம்பிக்கையோடு உலகம் இருப்பதையும்" பவுல் சுட்டிக்காட்டியுள்ளார். அதேசமயம், உலகம் பிரசவவேதனை யுடன் இருப்பதாகப் பவுல் குறிப்பிட்டுள்ளார். இவ்வேதனை அழிவினால் வரும் வேதனையல்ல, புதிய ஜீவனைக் கொண்டுவருவதற்கான வேதனையாகும். மேலும், புதிய ஏற்பாட்டில் பிரசவ வேதனை மேசிய ராட்சியத்தின் வரவை எதிர்பார்த்திருக்கும் வேதனையாகவே உள் ளது (மத்.24:8, மாற்.13:8, வெளி.12:2).[91] எனவே, மேசியாவாகிய இயேசுகிறிஸ்து தம்முடைய ராட்சியத்தை இவ்வுலகில் ஸ்தாபிக்கும் காலத்தில், நாம் வாழும் இவ்வுலகம் மனிதனுடைய பாவத்தின் விளைவுகள் அனைத்திலிருந்தும் முழுமையாக விடுவிக்கப்பட்ட நிலையில் இருக்கும். இதனால், அக்காலத்தில் உலகில் முழுமை யான சமாதானமும் சந்தோஷமும் எப்பொழுதும் இருக்கும். "பாவம் இல்லாத உலகத்தில் உலகின் முதல் மனிதரான ஆதாமும் ஏவா ளும் ஏதேன் தோட்டத்தில் இருந்தவிதமான வாழ்வு இயேசுகிறிஸ்து வின் ஆயிர வருஷ ஆட்சியில் இவ்வுலகில் காணப்படும்."[92]

இயேசுகிறிஸ்துவினுடைய ஆயிர வருஷ ஆட்சிக்காலத்தில், நாம் வாழும் இவ்வுலகம் பாவத்தின் சாபத்திலிருந்து விடுவிக்கப்படுவத னால், அக்காலத்தில் பூமியின் ஆசீர்வாதங்கள் மனிதருக்கு முழுமை யாகக் கிடைக்கும். பாவத்தின் சாபத்தினால் பூமியில் முள்ளும் குறுக்கும் முளைத்தன (ஆதி.3:17-18). ஆனால், இயேசுகிறிஸ்துவின் ஆயிர வருஷ ஆட்சியில் பாவத்தின் சாபத்திலிருந்து பூமி விடுவிக்கப் படுவதனால், அக்காலத்தில் "முட்செடிக்குப் பதிலாகத் தேவதாரு விருட்சம் முளைக்கும். காஞ்சொறிக்குப் பதிலாக மிருதுச் செடி எழும்பும்" (ஏசா.55:13). இதனால், "வழமைக்கு மாறான நிலையில் அக்காலத்தில் பூமி வளமுள்ளதாக இருக்கும்."[93] தேவன் இதைப்பற்றி

பாவம் இல்லாத உலகத்தில் உலகின் முதல் மனிதரான ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்தில் இருந்தவிதமான வாழ்வு இயேசுகிறிஸ்துவின் ஆயிர வருஷ ஆட்சியில் இவ்வுலகில் காணப்படும்.

[90] R.H.Mounce, *Romans: The New American Commentary*, p. 184.
[91] J.R.Edwards, *Romans: New International Biblical Commentary*, p. 214.
[92] L.Wood, *The Bible and Future Events*, p. 160.
[93] J.A.Martin, *Isaiah: The Bible Knowledge Commentary – OT*, p. 1111

முன்னறிவிக்கும் போது ஏசாயா தீர்க்கதரிசியின் மூலம் பின்வருமாறு அறிவித்துள்ளார்:

> உயர்ந்த மேடுகளில் ஆறுகளையும், பள்ளத்தாக்குகளின் நடுவே ஊற்றுகளையும் திறந்து, வனாந்தரத்தைத் தண்ணீர் தடாகமும், வறண்ட பூமியை நீர்க்கேணிகளுமாக்கி, வனாந்த ரத்தில் கேதுரு மரங்களையும், சீத்திம் மரங்களையும், மிருதுச் செடிகளையும், ஒலிவ மரங்களையும் நட்டு, அவாந்தர வெளி யிலே தேவதாரு விருட்சங்களையும், பாய்மர விருட்சங்களை யும், புன்னை மரங்களையும் உண்டுபண்ணுவேன் (ஏசாயா 41:18-19).

தேவன் இங்கு குறிப்பிட்டுள்ள ஏழு வகையான மரங்களில் பெரும்பா லானவைகள், வழமையாக தண்ணீருள்ள வளமான பிரதேசங்களில் வளர்பவைகள். ஆனால், தேவன் இஸ்ரவேல் மக்கள் வாழும் வறண்ட பிரதேசத்தை வளமாக்கி இம்மரங்களை அங்கு வளர்ப்பதாக வாக்க ளித்துள்ளார்.[94] எனவே, இயேசுகிறிஸ்துவின் ஆயிரவருஷ ஆட்சியில் தண்ணீரில்லாத வறண்ட பிரதேசமே உலகில் இருக்காது.[95] இதனால், "வனாந்தரமும் வறண்ட நிலமும் மகிழ்ந்து, கடுவெளி களித்து புஷ்பத்தைப்போல செழிக்கும்" (ஏசா.35:1). அதாவது, வனாந்தரத்திலே தண்ணீர்களும் கடுவெளியிலே ஆறுகளும் பாய்ந்தோடும். வெட்டாந் தரை தண்ணீர்த் தடாகமாகவும், வறண்ட நிலம் நீரூற்றுகளுமாகும். வலுசர்ப்பங்கள் தாபரித்துக் கிடந்த இடங்களிலே புல்லும் கொறுக் கையும் நாணலும் உண்டாகும்" (ஏசா.35:6-7). "பாவத்தின் சாபத்திலி ருந்து பூமி மீட்கப்படும்போது, பெறுமதியான தாவரங்கள் நிலத்தை வளப்படுத்தும்."[96] உண்மையில், ஆரம்பத்தில் ஏதேன் தோட்டம் எவ்விதமாக இருந்ததோ, அவ்விதமாக இயேசுகிறிஸ்துவின் ஆட்சிக் காலத்தில் முழு உலகமும் பசுஞ்சோலையாக இருக்கும்.

அந்திகிறிஸ்துவினுடைய அழிவுக்குப் பின்னர், ஆயிரம் வருஷங்க ளுக்கு உலகில் பிரத்தியட்சமாய் இருக்கும் இயேசுகிறிஸ்துவின் ராட்சியத்தில் மக்கள் முழுமையான சமாதானத்துடனும் சந்தோஷத்

[94] J.A.Martin, *Isaiah: The Bible Knowledge Commentary – OT*, p. 1094.
[95] J.MacArthur, *The MacArthur Bible Commentary*, p. 799.
[96] J.MacArthur, *The MacArthur Bible Commentary*, p. 808.

துடனும் வாழ்வதற்கு காரணம், மானிட வாழ்வில் பாவத்தையும் துயரத்தையும் கொண்டுவரும் சாத்தான் எவ்விதத்திலும் செயல்பட முடியாதபடி அக்காலத்தில் கட்டப்பட்டிருப்பதேயாகும். இயேசுகிறிஸ்து மறுபடியுமாக இவ்வுலகத்திற்கு வரும்போது, தம்மைக் கொல்ல முற்படும் அனைவரையும் ஒரு நொடிப் பொழுதில் அழித்து, அந்திகிறிஸ்துவையும் கள்ளத் தீர்க்கதரிசியையும் நரகத்தில் தள்ளி விடுவதோடு (வெளி.19:19-21),[97] சாத்தானை ஆயிரம் வருஷங்களுக்கு பாதாளத்தில் அடைத்து வைப்பார். வெளிப்படுத்தல் 20ம் அதிகாரத்தில் யோவானுக்கு கொடுக்கப்பட்ட தரிசனத்தில் இதைப்பற்றி பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

> ஒரு தூதன் பாதாளத்தின் திறவுகோலையும் பெரிய சங்கிலியையும் தன் கையிலே பிடித்துக்கொண்டு வானத்திலிருந்திறங்கி வரக் கண்டேன். பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவுங் கட்டிவைத்து, அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும் வரைக்கும் அது ஜனங்களை மோசம் போக்காதபடிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின்மேல் முத்திரை போட்டான் (வெளிப்படுத்தல் 20:1-2)

இயேசுகிறிஸ்துவின் ஆயிர வருஷ ஆட்சியில் பிசாசு பாதாளத்தில் கட்டப்பட்டிருப்பதனால், அவனால் கொண்டுவரப்படும் எந்தவொரு பிரச்சனையும் அக்காலத்தில் உலகில் இருப்பதில்லை. ஆனால், ஆயிர வருஷ ஆட்சியின் முடிவில் சாத்தான் சிறிது காலத்திற்கு கட்டவிழ்த்து விடப்படுவான் (வெளி.20:7). எனினும், அச்சமயம் அவன் இயேசுகிறிஸ்துவை அழிப்பதற்காக உலகிலிருக்கும் மனிதர்களைத்

[97] வெளிப்படுத்தல் 19:19-21ல் இதைப்பற்றி பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது: "பின்பு, மிருகமும் பூமியின் ராஜாக்களும் அவர்களுடைய சேனைகளும், குதிரையின் மேல் ஏறியிருக்கிறவரோடும் அவருடைய சேனையோடும் யுத்தம் பண்ணும்படிக்குக் கூடிவரக்கண்டேன். அப்பொழுது மிருகம் பிடிக்கப்பட்டது. மிருகத்தின் முன்பாகச் செய்த அற்புதங்களால் அதின் முத்திரையைத் தரித்தவர்களையும் அதின் சொரூபத்தை வணங்கினவர்களையும் மோசம்போக்கின கள்ளத்தீர்க்கதரிசியுங்கூடப் பிடிக்கப்பட்டான். இருவரும் கந்தகம் எரிகிற அக்கினிக் கடலிலே உயிரோடே தள்ளப்பட்டார்கள். மற்றவர்கள் குதிரையின் மேல் ஏறினவருடைய வாயிலிருந்து புறப்படுகிற பட்டயத்தால் கொல்லப்பட்டார்கள்."

திரட்டிக்கொண்டு எருசலேமுக்கு வந்தாலும், வானத்திலிருந்து புறப்படும் அக்கினி அவர்கள் அனைவரையும் அழித்துப்போடும். பிசாசும் நரகத்துக்குத் தள்ளப்படுவான். வெளிப்படுத்தல் 20ம் அதிகாரத்தில் 7 முதல் 10 வரையிலான வசனங்களில் இதைப்பற்றி பின்வருமாறு முன்னறிவிக்கப்பட்டுள்ளது.

> அந்த ஆயிரம் வருஷம் முடியும்போது சாத்தான் தன் காவலிலிருந்து விடுதலையாகி, பூமியின் நான்கு திசைகளிலுமுள்ள ஜாதிகளாகிய கோகையும் மாகோகையும் மோசம்போக்கும்படிக்கும், அவர்களை யுத்தத்திற்குக் கூட்டிக் கொள்ளும்படிக்கும் புறப்படுவான். அவர்களுடைய தொகை கடற்கரை மணலத்தனையாயிருக்கும். அவர்கள் பூமியெங்கும் பரம்பி, பரிசுத்தவான்களுடைய பாளையத்தையும், பிரியமான நகரத்தையும் வளைந்து கொண்டார்கள். அப்பொழுது தேவனால் வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களைப் பட்சித்துப் போட்டது. மேலும் அவர்களை மோசம்போக்கின பிசாசானவன், மிருகமும் கள்ளத் தீர்க்கதரிசியுமிருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான். அவர்கள் இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள் (வெளிப்படுத்தல் 20:7-10).

மனிதரைத் தற்பொழுது மோசம்போக்கும் சாத்தான், இயேசுகிறிஸ்துவின் ஆயிர வருஷ ஆட்சியின் பின்பும் மக்களை மோசேம் போக்குவான். அச்சமயம் அவன் "பூமியின் நான்கு திசைகளிலுமுள்ள ஜாதிகளாகிய கோகையும் மாகோகையும் மோசம் போக்குவான்" என்று 8ம் வசனம் கூறுவது அநேகருக்கு குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில், இயேசுகிறிஸ்துவின் ஆயிர வருஷ ஆட்சியில் இருக்கும் இந்த ஜாதியினர் யார் என்னும் கேள்வி அநேகருடைய உள்ளத்தில் உள்ளது. வெளிப்படுத்தல் 19ம் அதிகாரத்தின் இறுதியில், இயேசுகிறிஸ்து இவ்வுலகத்திற்கு வரும்போது அவரை அழிப்பதற்காக அந்திகிறிஸ்துவோடும் கள்ளத் தீர்க்கதரிசியோடும் சேர்ந்து

---

இயேசுகிறிஸ்துவின் ஆயிர வருஷ ஆட்சியில் பிசாசு பாதாளத்தில் கட்டப்பட்டிருப்பதனால், அவனால் கொண்டுவரப்படும் எந்தவொரு பிரச்சனையும் அக்காலத்தில் உலகில் இருப்பதில்லை.

---

அர்மகெதோன் என்னும் இடத்தில் கூடுபவர்களே இயேசுகிறிஸ்துவி னால் அழிக்கப்படுவார்கள் (வெளி.19:19-21). ஏனைய மக்களில், அந்திகிறிஸ்துவின் ஆட்சிக் காலத்தில் உலகின்மீது வரும் தேவ தண்டனைகளில் மரணமடையாதவர்கள் இயேசுகிறிஸ்துவின் ஆயிர வருஷ ஆட்சிக்காலத்தில் உலகில் இருப்பார்கள். இவர்கள் மூலம் விருத்தியடையும் மக்களே இயேசுகிறிஸ்துவின் ஆயிர வருஷ ஆட்சி யின் முடிவில் உலகில் இருக்கும் ஜாதிகளாகும்.[98] இவர்களில் இயேசுகிறிஸ்துவுக்கு எதிராகப் போரிட சாத்தானோடு சேர்ந்து கொள்ளும் மக்களே வெளிப்படுத்தல் 20ம் அதிகாரத்தில் "கோகு மாகோகு" என்று குறிப்பிடப்பட்டுள்ளனர்.[99] பழைய ஏற்பாட்டில் எசேக் கியேல் 38ம் 39ம் அதிகாரங்களிலும் இவ்விரு பெயர்களும் உள்ளன. ஆனால் எசேக்கியேலின் தீர்க்கதரிசனங்களில் கோகு இஸ்ரவேலுக்கு வடக்கில் கஸ்பியன் மற்றும் கருங்கடலுக்கு வட பகுதியிலிருந்த பிரதேசங்களை ஆளும் அரசனுடைய பெயராகவும், மாகோகு அவனு டைய ஆட்சிக்குட்பட்ட பிரதேசத்தின் பெயராகவும் உள்ளது (எசே. 38:2).[100] ஆனால், வெளிப்படுத்தலில் இவ்விரு பெயர்களும் உலகின் நான்கு திசைகளிலும் உள்ள மக்களைக் குறிப்பிடும் விவரணமாய் உள்ளது.[101] எசேக்கியேலின் தீர்க்கதரிசனத்தில் கோகுவும் அவனு டைய ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களான மாகோகும் இஸ்ரவேலுக்கு எதிரானதாக இருந்ததினால், இயேசுகிறிஸ்துவின் ஆயிர வருஷ ஆட்சியின் முடிவில் அவருக்கு எதிராக வரும் மக்களுக்கு இப்பெயர் வெளிப்படுத்தல் 20ம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.[102]

இயேசுகிறிஸ்துவின் ஆயிர வருஷ ஆட்சியின் முடிவில் அவரை எதிர்ப்பவர்கள் அனைவரும் அழிக்கப்படுவதுடன், ஆதியிலிருந்தே மனிதரை மோசம்போக்கி வந்த சாத்தான் நரகத்திற்குத் தள்ளப்படு வான் (வெளி. 20:9-10). அதன்பின்னர் அதுவரையில் மரணத்திலிருந்து

[98] J.F.Walvoord, *Revelation: The Bible Knowledge Commentary - NT*, p. 981.
[99] G.R.Osborne, *Revelation: Baker Exegetical Commentary on the NT*, p. 710.
[100] எசேக்கியேல் 38:2ல் கர்த்தர் தீர்க்கதரிசியிடம், "மனுபுத்திரனே, மேசேக் தூபால் ஜாதிகளின் தலைமையான அதிபதியாகிய மாகோகு தேசத்தானான கோகுக்கு எதிராக நீ உன் முகத்தைத் திருப்பி, அவனுக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் உரைத்து.." என்று பேசத் தொடங்குகிறார்.
[101] W.MacDonald, *Believer's Bible Commentary*, p. 2378.
[102] P.Patterson, *Revelation: The New American Commentary*, p. 357; J.F.Walvoord, *Revelation: The Bible Knowledge Commentary - NT*, p. 981.

உயிர்த்தெழாதவர்கள் அனைவரும் (அதாவது, கிறிஸ்தவர்களும், உபத்திரவகாலப் பரிசுத்தவான்களும் பழைய ஏற்பாட்டுப் பக்தர்களும் தவிர்ந்த ஏனையவர்கள்) உயிர்ப்பிக்கப்பட்டு நியாயந்தீர்க்கப்ப டுவதோடு (வெளி. 20:11-15), நாம் வாழும் இந்த வானமும் பூமியும் முழுமையாக அழிக்கப்பட்டு புதிய வானமும் புதிய பூமியும் சிருஷ்டிக் கப்படும் (வெளி.21:1-22:5).



மரணத்திலிருந்து உயிரோடெழுந்த இயேசுகிறிஸ்து
மத்திய வானத்திற்கு வருவதை எதிர்பார்த்துக்
காத்திருப்பவர்களே கிறிஸ்தவர்கள்
(தோமஸ் அடெம்ஸ்)

இயேசுகிறிஸ்துவின் மறுவருகையின் நாள் நமக்கு
மறைக்கப்பட்டிருப்பதனால், நாம் ஒவ்வொரு நாளும்
அவருடைய வருகையை எதிர்பார்த்தவர்களாக
இருக்கவேண்டும் (ஒகஸ்டீன்)

நான் என்னுடைய மரணத்தை அல்ல, இயேசுகிறிஸ்துவின்
மறுவருகையையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றேன்
(கெம்பல் மோர்கன்)

முடிவுரை



# இயேசுகிறிஸ்துவின் வருகையும் நாமும்

இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகையைப்பற்றிய வேதாகம சத்தியங்களை இந்நூலின் மூலம் அறிந்து கொண்ட நாம், அவருடைய வருகையை ஆவலுடன் எதிர்பார்ப்பவர்களாகவும், அவரை சந்திக்க ஆயத்தமுள்ளவர்களாகவும் இருக்கவேண்டியது அவசியம். இயேசுகிறிஸ்து மறுபடியும் வரும்போது அவருக்குள் மரித்தவர்களும், இவ்வுலகில் அவருக்குள் வாழ்பவர்களும் மட்டுமே மகிமையின் சரீரத்துடன் அவரை மத்திய வானத்தில் சந்திப்பார்கள் என்பதனால் (1தெச.4:16-17),[1] நாம் உண்மையிலேயே இயேசுகிறிஸ்துவுக்குள் இருக்கின்றோமா என்பதை முதலில் உறுதிப்படுத்திக் கொள்ள

[1] 1தெசலோனிக்கேயர் 4:16-17ன்படி, "கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்."

வேண்டியது அவசியம். இதற்கு நாம், இயேசுகிறிஸ்துவை நம்முடைய பாவம் போக்கும் பலியாகவும் (1யோவா.2:2),[2] நம்மை இரட்சிப்பதற்காக மனிதனாக வந்த தெய்வமாகவும் (1தீமோ.3:16, 1:15)[3] ஏற்றுக்கொண்டு, அவர் காட்டும் வழியில் வாழவேண்டியது அவசியம். இல்லையென்றால் அவருடைய வருகையில் நாம் கைவிடப்படுவது நிச்சயம்.

இயேசுகிறிஸ்துவின் வருகையில் நாம் கைவிடப்பட்டால் அந்திகிறிஸ்துவின் ஆளுகையான உபத்திரவ காலத்திற்குள் சென்றுவிடுவோம். தமது வருகைக்கு ஆயத்தமாய் இருப்பவர்கள் இந்த உபத்திரவ காலத்திற்குள் சென்றுவிடாமல் அவர்களைத் தம்மோடு எடுத்துக் கொள்வதற்காக (வெளி.3:10)[4] அந்திகிறிஸ்துவின் ஆட்சி இவ்வுலகில் ஆரம்பிக்கப்படுவதற்கும் முன்பு இயேசுகிறிஸ்து பரலோகத்திலிருந்து வானத்திற்கு வருவார். எனவே, நாம் மாத்திரமல்ல, நம்முடைய உறவினர்களும் நண்பர்களும்கூட அந்திகிறிஸ்துவினுடைய ஆட்சிக்குள் சென்று உபத்திரவப்படாமல் இருப்பதற்காகவும், நித்திய காலமாக அவர்களும் நம்முடனும் இயேசுகிறிஸ்துவுடனும் இருப்பதற்கு அவர்களையும் நாம் இயேசுகிறிஸ்துவிடம் கொண்டுவரவேண்டியது அவசியம். இதற்காக நாம் தனிப்பட்டரீதியாக அவர்களுக்காக பாரத்தோடு ஜெபிக்கவேண்டும். அவர்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கும் மனநிலையை அடைவதற்காக நாம் ஜெபிப்பதோடு, இயேசுகிறிஸ்துவைப்பற்றி அவர்களுக்கு அறிவித்து அவர்களையும் நாம் தேவனை ஆராதிக்கும் ஆலயத்தின் அங்கத்தினர்களாக்க வேண்டும்.

இயேசுகிறிஸ்து முதற் தடவை இவ்வுலகத்திற்கு வந்தபோது, “நான் என் சபையைக் கட்டுவேன்” என்று தெரிவித்ததோடு (மத்.16:18),

---

[2] 1யோவான் 2:2ன்படி, “நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலி அவரே. நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்.”

[3] “தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்” என்று 1தீமோத்தேயு 3:16 கூறுகிறது. “பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது” என்பதை 1தீமோத்தேயு 1:15 அறியத்தருகிறது.

[4] “என் பொறுமையைக்குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக்கொண்டபடியினால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின் மேலெங்கும் வரப்போகிற சோதனை காலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன்” என்று இயேசுகிறிஸ்து வாக்களித்துள்ளார்.

தற்பொழுது இவ்வுலகில் தமது சபையைக் கட்டும் பணியில் ஈடுபட்டுள்ளார். இதனால்தான், சபை உருவான நாளில் இருந்து இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து இரட்சிக்கப்படுகிறவர்களைத் தேவன் சபையில் சேர்த்து வருகின்றார் (அப்.2:47).[5] தற்காலத்தில் தேவனுடைய செயல்கள் அனைத்தும் சபையை மையமாகக் கொண்டுள்ளன என்பதை கிறிஸ்தவர்களாகிய நாம் மறந்துவிடக்கூடாது. இதனால்தான், சபை கிறிஸ்துவின் சரீரமாகவும், நாம் அதன் அவயவங்களாகவும் இருப்பதாக வேதாகமம் கூறுவதோடு (1கொரி.12:27), சபையாகிய கிறிஸ்துவின் சரீரத்தின் வளர்ச்சிக்காகவே பரிசுத்த ஆவியானவரின் வரங்கள் அருளப்படுகின்றன என்பதையும் அறியத்தருகின்றது (1கொரி.12:28, எபே.4:11-13).[6] இயேசுகிறிஸ்துவும் உலகிலிருக்கும் தம்முடைய சபையை எடுத்துக்கொள்வதற்காகவே அந்திகிறிஸ்துவின் ஆட்சி இவ்வுலகில் ஆரம்பமாவதற்கும் முன்பு வானத்திற்கு வருவதனால், நாம் ஒரு சபையில் அங்கத்தினராக இருந்து, இயேசு கிறிஸ்துவை அறியாத நம்முடைய உறவினர்களையும் நண்பர்களையும் இயேசுகிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்குள் கொண்டுவரவேண்டும். இதற்காக நாமும் தெசலோனிக்கேய சபை மக்களைப்போல, "ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு ஊழியஞ் செய்வதற்கு, விக்கிரகங்களைவிட்டுத் தேவனிடத்திற்கு மனந்திரும்பி... அவர் மரித்தோரிலிருந்தெழுப்பினவரும், இனிவரும் கோபாக்கினையினின்று நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கிறவருமாயிருக்கிற அவருடைய குமாரனாகிய இயேசு பரலோகத்திலிருந்து வருவதை எதிர்பார்த்துக்கொண்டிருக்க வேண்டும் (1தெச.1:9-10).

---

[5] "இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையில் சேர்த்துக் கொண்டு வந்தார்" என்பதை அப்போஸ்தலர் 2:47 அறியத்தருகின்றது.

[6] எபேசியர் 4:11-13ல், "மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரணபுருஷராகும் வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்" என்றும், 1கொரிந்தியர் 12:28ல், "தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஆதார நூல்கள்

## இரண்டாம் வருகையைப்பற்றிய நூல்களும் ஆராய்ச்சிக் கட்டுரைகளும்

## BOOKS & ARTICLES ON SECOND COMING


Anderson, Robert. *The Coming Prince*. London: Hodder and Stoughton, 1909.

Berkhof, Louis. *The Second Coming of Christ*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1953.

Berkouwer, G.C. *The Return of Christ*. Grand Rapids: Eerdman Publishing Company, 1972.

Blackstone, William E. *Jesus is Coming*. New York: Fleming H. Revell, 1908.

Boettner, Loraine. *The Millennium*. Phillipsburg: Presbyterian and Reformed Publishing Company, 1957.

Brown, David. *Christ's Second Coming: Will it Be Premillennial?* New York: Robert Carter and Brothers, 1815.

Cameron, Robert. *Scriptural Truth About the Lord's Return*. New York: Fleming H. Revell, 1922.

Campbell, Donald K. & Townsend, Jeffrey L. ed., *The Coming Millennial Kingdom*. Grand Rapids: Kregel Publications, 1997.

Cox, William E. *Biblical Studies in Final Things*. Philadelphia: Presbyterian and Reformed Publishing Company, 1967.

Cox, William E. *An Examination of Dispensationalism*. Philadelphia: Presbyterian and Reformed Publishing Company, 1971.

Cox, William E. *Amillennialism Today*. Philadelphia: Presbyterian and Reformed Publishing Company, 1972.

Frost, Henry W. *The Second Coming of Christ*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1934.

Hoekema, Anthony A. *The Bible and Future*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1979.

Jeffrey, Grant R. *Armageddon: Appointment with Destiny*. Colorado Springs: WaterBrook Press, 1997.

Gray, James M. *Prophecy and the Lord's Return*. New York: Fleming H. Revell, 1917.

Grier, William. *The Momentous Event*. Belfast: Evangelical Bookshop, 1945.

Gundry, Stanley N. ed., *Three Views on the Millennium and Beyond*. Grand Rapids: Zondervan Publishing House, 1999.

Gundry, Stanley N. *ed., Three Views on the Rapture*. Grand Rapids: Zondervan Publishing House, 2010.

Haldeman, I.M. *The History of the Doctrine of Our Lord's Return*. New York: First Baptist Church, [n.d.].

Kelly, William. *Lectures on the Second Coming of the Lord Jesus*. London: G.Morish, [n.d.].

Ladd, George E. *The Blessed Hope*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1956.

LaClouse, Robert G. ed., *The Meaning of the Millennium*. Downers Grove: Inter Varsity Press,

LaHaye, Tim. *Understanding Bible Prophecy for Yourself*. Secunderabad: Authentic Books, 2007.

LaRondelle, "The Middle Ages within the Scope of Apocalyptic Prophecy" in *Journal of the Evangelical Theological Society*. 32 (1898), pp. 345-354.

Lurie, D.H. "A New Interpretation of Daniel's 'Sevens' and the Chronology of the Seventy Seven" in *Journal of the Evangelical Theological Society*. (1990), pp. 303-309.

Lutzer, Erwin W. *The King is Coming: Preparing to Meet Jesus*. Chicago: Moody Press, 2012.

Minear, Paul. *Christian Hope and the Second Coming*. Philadelphia: Westminster Press, 1954.

Pache, Rene. *The Return of Jesus Christ* (Condensed Edition). Chicago: Moody Press, 1955.

Pentecost, J. Dwight. *Things to Come: A Study in Biblical Eschatology*. Grand Rapids: Zondervan Publishing House, 1958.

Rees, Alexandar, *The Approaching Advent of Christ*. London: Marshall, Morgan and Scott, [n.d.].

Silver, Jesse F. *The Lord's Return*. New York: Fleming H. Revell Company, 1914.

Scroggie, W. Graham. *The Lord's Return*. London: Pickering and Inglis,

Thiessen, Henry C. *Will the Church Pass Through the Tribulation?* New York: Loizeaux Brothers, 1941.

"The Rider on the White Horse: A Study of Revelation 6:1-2" in Interpretation. 33 (1964), pp. 407-418.

Walvoord, John F. *The Return of the Lord*. Findlay: Dunham, 1955.

Walvoord, John F. *The Millennial Kingdom*. Grand Rapids: Zondervan Publishing House, 1962.

Walvoord, John F. *The Nations in Prophecy*. Grand Rapids: Zondervan Publishing House, 1967.

Walvoord, John F. *The Rapture Question*. Grand Rapids: Zondervan Publishing House, 1967.

Weber, Timothy P. *Eschatology: The Future Explored*. Wheaton: Victor Books, 1978.

Wong, D.K.K. "The First Horseman of Revelation 6" in *Bibliotheca Sacra*. 153 (1966), pp. 212-226.

Wood, Leon J. *Is the Rapture Next?* Grand Rapids: Zondervan Publishing House, 1956.

Wood, Leon J. *The Bible and Future Events*. Grand Rapids: Zondervan Publishing House, 1973.

## வேதாகம வியாக்கியான நூல்கள்
## BIBLICAL COMMENTARIES

Allen W.C. *A Critical and Exegetical Commentary on the Gospel According to Matthew*. Edinburgh: T & T Clark, 1907.

Archer, Gleason L. *Daniel: The Expositor's Bible Commentary Volume 7*. Grand Rapids: Zondervan Publishing House, 1985.

Aune, David. *Revelation: Word Biblical Commentary Volume 52*. Dallas: Word Books Publisher, 1997/98.

Barnett, Paul. *The Second Epistle to the Corinthians: The New International Commentary on the New Testament*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1997.

Baldwin, Joyce G. *Daniel: Tyndale Old Testament Commentary*. Downers Grove: Inter Varsity Press, 1978.

Barker, Kenneth L. & Bailey, Waylon. *Micah Nahum Habakkuk Zephaniah: The New American Commentary*. Nashville: Broadman & Holman Publishers, 1999.

Beckwith, Isbon T. *The Apocalypse of John: An Introduction, with a Critical and Exegetical Commentary*. New York: Macmillan,1919.

Best, Earnest. *A Commentary on the First and Second Epistle to the Thessalonians*. New York: Harper & Row, 1972.

Boutflower, C. *In and Around the Book of Daniel*. Grand Rapids: Kregel Publications, 1977.

Bruce, F.F. ed., *New International Bible Commentary*. Grand Rapids: Zondervan Publishing House, 1979.

Bullinger, E.W. *The Apocalypse*. London: Eyre and Spottiswoode, [n.d.].

Caird, G.V.A. *A Commentary on the Revelation of St.John the Divine*. New York: Harper & Row, 1966.

Carson, Don A. *Matthew: The Expository Bible Commentary Volume 8*. Grand Rapids: Zondervan Publishing House, 1984.

Charles, R.H. *The Revelation of St.John: International Critical Commentary Volumes 1 & 2*. New York: Scribner's Sons, 1920.

Chilton, David. *The Days of Vengeance: An Exposition of the Book of Revelation*. Fort Worth: Dominion Press, 1987.

Cooper, Lamar Eugene. *Ezekiel: The New American Commentary*. Nashville: Broadman & Holman Publishers, 1994.

Culver, Robert D. *Daniel and the Latter Days*. Westwood: Revell Company, 1954.

Edwards, James R. *Romans: New International Biblical Commentary*. Peabody: Hendrikson Publishers, 1992.

Edwards, James R. *The Gospel According to Mark: The Pillar New Testament Commentary*. Grand Rapids: Eerdmans Publishing Company, 2002.

Fee, Gordon D. *The First Epistle to the Corinthians: The New International Commentary on the New Testament*. Eerdmans Publishing Company, 1987.

Fee, Gordon D. *The First and Second Letters to the Thessalonians: The New International Commentary on the New Testament*. Eerdmans Publishing Company, 2009.

Fee, Gordon D. *Revelation: A New Covenant Commentary*. Cambridge: The Luttterworth Press, 2011.

Fee, Gordon D. *Galatians: Pentecostal Commentary*. Dorset: Deo Publishing, 2007.

Flanigan, J. *Psalms: Ritchie Old Testament Commentary*. Kilmarnock: John Ritchie Ltd., 2001.

Gangel, Kenneth O. *Daniel: Holman Old Testament Commentary*. Nashville: Broadman & Holman Publishers, 2001.

Garrett, Duane A. Hosea, Joel: The New American Commentary. Nashville: Broadman & Holman Publishers, 1997.

Goldingay, John E. *Daniel: Word Biblical Commentary Volume 30*. Dallas: Word Books Publisher, 1989.

Goldingay, John E. *Isaiah: New International Biblical Commentary*. Peabody: Hendrikson Publishers, 2001.

Govett, Robert. *The Apocalypse Expounded by Scripture*. London: Charles J. Thynne, 1920.

Green, Gene L. *The Letters to the Tessalonians: The Pillar New Testament Commentary*. Grand Rapids: Eerdmans Publishing Company, 2002.

Gregg, Steve. ed., *Revelation Four Views: A Parallel Commentary*. Nashville: Thomas Nelson Publishers, 1997.

Hendriksen, William. *More than Conquerors: An Interpretation of the Book of Revelation*. Grand Rapids: Baker Book House, 1982.

Hiebert, D. Edmond. *The Epistles of John: An Expositional Commentary*. Greenville: Bob Jones University Press, 1991.

Hiebert, D. Edmond. *1&2 Thessalonians*. Winona Lake: BMH Books, 96.

Ironside, H.A. *Lectures on the Book of Revelation*. New York: Loizeaux Press, [n.d.].
Jeffery, A. *The Book of Daniel: Interpreter's Bible Commentary*. Nashville: Abingdon Press, 1956.
Johnson, Alan F. *Revelation: The Expositor's Bible Commentary Volume 11*, Grand Rapids: Zondervan Publishing House, 1978.
Johnson, Alan F. *Revelation: Bible Study Commentary.* Grand Rapids: Zondervan Publishing House, 1983.
Keener, Craig S. *Revelation: The NIV Application Commentary*. Grand Rapids: Zondervan Publishing House, 2000.
Keil, C.F. *Biblical Commentary on the Book of Daniel*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1973.
KIdner, Derek. *Psalms 1-72: Tyndale Old Testament Commentary*. Leicester: Inter Varsity Press, 1973.
Kruse, Colin G. *Paul's Letter to the Romans: The Pillar New Testament Commentary*. Grand Rapids: Eerdmans Publishing Company, 2012.
Ladd, George Eldon. *A Commentary on the Revelation of John*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1972.
LaHaye, Tim & Hindson, ED. *The Popular Bible Prophecy Commentary*. Eugene: Harvest House Publishers, 2006.
Larkin, William J. *Acts: The IVP New Testament Commentary*. Downers Grove: Inter Varsity Press, 1995.
Law, Robert. *The Tests of Life: A Study of the First Epistle of St.John*. Edinburgh: T & T Clark, 1909.
Lenski, R.C.H. *The Interpretation of St.John's Revelation*. Minneapolis: Augsburg Publishing House, 1963.
Leupold, H.C. *Exposition of Daniel*. Grand Rapids: Baker Book House, 1969.
Loenertz, R.J. *The Apocalypse of Saint John*. London: Sheed and Ward, 1947.
Lucas, Ernest C. *Daniel: Apollos Old Testament Commentary*. Leicester: Apollos, 2002.
MacArthur, Jack. *Expositional Commentary on Revelation*. Eugene: Certain Sound, 1973.
MacArthur, John. *The MacArthur Bible Commentary*. Nashville: Nelson Reference & Electronic, 2005.
MacDonald, William. *Believer's Bible Commentary*. Nashville: Thomas Nelson Publishers, 1995.
Mare, W Harold. *1Corinthians: Expositor's Bible Commentary Volume 10*. Grand Rapids: Zondervan Publishing House, 1976.
Martin, D Michael. *1,2 Thessalonians: The New American Commentary*, Nashville: Broadman & Holman Publishers,1995.

McComiskey, Thomas E. *Amos: The Espositor's Bible Commentary Volume 7*. Grand Rapids: Zondervan Publishing House, 1985.
Miller, Stephen R. *Daniel: The New American Commentary*. Nashville: Broadman & Holman Publishers,1994.
Milligan, George. *St.Paul's Epistle to the Thessalonians*. London: Macmillan, 1908.
Milligan, William. *The Book of Revelation: The Expositor's Bible Volume 25*. New York: George H. Doran, 1889.
Montgomery, James A. *A Critical and Exegetical Commentary on the Book of Daniel*. Edinburgh: T & T Clark, 1979.
Morris, Henry M. *The Revelation Record: A Scientific and Devotional Commentary*. Wheaton: Tyndale House Publishers, 1983.
Morris, Leon. *The First and Second Letters to the Thessalonians: The New International Commentary on the New Testament*. Eerdmans Publishing Company, 1991.
Morris, Leon. *Hebrews: The Expositor's Bible Commentary Volume 12*. Grand Rapids: Zondervan Publishing House, 1981.
Morris, Leon. *1 and 2 Thessalonians: Tyndale New Testament Commentary*, Leicester: Inter Varsity Press,1984.
Morris, Leon. *Revelation: Tyndale New Testament Commentary*. Leicester: Inter Varsity Press, 1987.
Morris, Leon: *The Epistle to the Romans: The Pillar New Testament Commentary*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1988.
Morris, Leon. *Matthew: The Pillar New Testament Commentary*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1992.
Mounce, Robert H. *The Book of Revelation: The New International Commentary on the New Testament*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1977.
Mounce, Robert H. *Romans: The New American Commentary*. Nashville: Broadman & Holman Publishers, 2002.
Newell, William R. *The Book of Revelation: A Commentary*. Chicago: Moody Press, 1935.
Olyott, Stuart. *Dare to Stand Alone: A Commentary on the Book of Daniel*. Hertfordshire: Evangelical Press, 1982.
Osborne, Grant R. *Revelation: Baker Exegetical Commentary on the New Testament*. Grand Rapids: Baker Academic, 2002.
Oswalt, John N. *The Book of Isaiah Chapters 1-39*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1986.
Patterson, Paige. *Revelation: The New American Commentary*. Nashville: Broadman & Holman Publishers, 2012.
Peterson, David G. *The Acts of the Apostles: The Pillar New Testament Commentary*. Grand Rapids: Eerdmans Publishing Company.

Polhill, John B. *Acts: The New American Commentary*. Nashville: Broadman Press, 1992.

Rushdoony, Rousas J. *Thy Kingdom Come: Studies in Daniel and Revelation*. Fairfax: Thoburn, 1978.

Scott, James M. *2Corinthians: New International Biblical Commentary*. Peabody: Hendrickson Publishers, 1998.

Scott, Walter. *Exposition of the Revelation of Jesus Christ*. Swengel: Bible Truth Depot, [n.d.].

Slotki, J.J. *Daniel-Ezra-Nehemiah.* London: Soncino, 1978.

Smith, Billy K & Page, Frank S. *Amos Obaddiah Jonah: The New American Commentary*. Nashville: Broadman & Holman Publishers, 1995.

Smith, Gray V. *Isaiah 40-66: The New American Commentary*. Nashville: Broadman & Holman Publishers, 2009.

Smith, J.B. *A Revelation of Jesus Christ*. Scottdale: Herald, 1961.

Sproul R.C.*The Gospel of God: An Exposition of Romans*. Fearn: Christian Focus Publications, 2005.

Stein, Robert H. *Mark: Baker Exegetical Commentary on the New Testament*. Grand Rapids: Baker Academic, 2008.

Stott, John R.W. *Ephesians: God's New Society.* Downers Grove: Inter Varsity Press, 1979.

Stott, John R.W. *Romans: God's Good News for the World.* Downers Grove: Inter Varsity Press, 1994.

Stuart, Douglas. *Hosea - Jonah: Word Biblical Commentary Volume 31*. Waco: Word Books Publisher,1987.

Taylor, John B. *Ezekiel: Tyndale Old Testament Commentary*. Leicester: Inter Varsity Press, 1969.

Thomas, Robert L. *1,2 Thessalonians: The Expositor's Bible Commentary Volume 11*, Grand Rapids: Zondervan Publishing House, 1978.

Thomas, Robert L. *Revelation 1-7: An Exegetical Commentary*. Chicago: Moody Press, 1992.

Thomas, Robert L. *Revelation 8-22: An Exegetical Commentary*. Chicago: Moody Press, 1995.

Vaughan, Curtis. *1,2,3 John: Bible Study Commentary*. Grand Rapids: Zondervan Publishing House, 1970.

Walvoord, John F. *The Revelation of Jesus Christ: A Commentary.* Chicago: Moody Press, 1966.

Walvoord, John F. *Daniel: The Key to Prophetic Revelation*. Chicago: Moody Press, 1971.

Walvoord, John F. Revelation: The Bible Knowledge Commentary - New Testament, Wheaton: Victor Books, 1983.

Wanamaker, Charles A. *The Epistles to the Thessalonians*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1990.

Whitcomb, John C. *Daniel: Everyman's Bible Commentary*. Chicago: Moody Press, 1985.

Wiersbe, Warren W. *Be Ready: An Expositiry Study on 1 & 2 Thessalonians*. Wheaton: Victor Books, 1988.

Wilson, R.D. *Studies in the Book of Daniel*. Grand Rapids: Baker Book House, 1979.

Wood, Leon. *A Commentary on Daniel*. Grand Rapids: Zondervan Publishing House, 1973.

Young, Edward J. *The Prophecy of Daniel*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1949.

## ஏனைய நூல்களும் ஆய்வுக் கட்டுரைகளும்
## OTHER RELATED BOOKS AND ARTICLES

Archer, Gleason L. *A Survey of Old Testament Introduction*. Chicago: Moody Press, 1994.

Bultmann, Rudolf. *Jesus Christ and Mythology*. New York: Scribner Press, 1958.

Clouse, Robert G. ed., *The Meaning of Millennium: Four Views*. Downers Grove: Inter Varsity Press, 1977.

Couch, Mal. ed., *Dictionary of Premillennial Theology*. Grand Rapids: Kregel Publications, 1996.

Deer, Jack S. "Premillennialism in Revelation 20:4-6" in *Bibliotheca Sacra*. 537 (Jan-Mar 1978), pp. 6-61.

Dood, C.H. *The Apostolic Preaching and Its Development*.

Driver, S.R. *An Introduction to the Literature of the Old Testament*. New York: Scribners Press, 1925.

Duffield Guy P. & Van Cleave, Nathaniel M. *Foundations of Pentecostal Theology*. Los Angeles: LIFE Bible College, 1983.

Enns, Paul. *The Moody Handbook of Theology*. Chicago: Moody Press, 1989.

Erickson, Millard J. *Contemporary Options in Eschatology.* Grand Rapids: Baker Book House, 1977.

Erickson, Millard J. *Christian Theology*. Grand Rapids: Baker Book House, 1988.

Hillers, Delbert R. *Covenant: The History of a Biblical Idea*. Baltimore: The Johns Hopkins University Press, 1994.

Hodge, A.A. *Outline of Theology*. Grand Rapids: Zondervan Publishing House, 1972.

Hodge, Charles. *Systematic Theology Volume 3*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1940.

Horbury, W. "The Messianic Associations of The Son of Man" in *Journal of Theological Studies*. 36 (1985), pp. 34-35.

Hoyt, Samuel L. *The Judgement Seat of Christ*. Hyderabad: Authentic Books, 2013.

Kaufman, A.S. "New Light Upon Zion, The Plan and Precise Location of the Second Temple" in *Ariel*. No: 43, 1977.

Kaufman, A.S. "Where the Ancient Temple of Jerusalem Stood?" in *Biblical Archaeological Review*. Vol IX No 2, March/April, 1983.

Lurie, D.H. "A New Interpretation of Daniel's 'Seven' and the Chronology of the 'Seventy Sevens" in *Journal of the Evangelical Theological Society*. 33 (1990), pp. 303-309.

McClain, Alva J. *Daniel's Prophecy of the Seventy Weeks*. Grand Rapids: Zondervan Publishing House, 1940.

McClain, Alva J. *The Greatness of the Kingdom*. Grand Rapids: Zondervan Publishing House, 1959.

Mauro, P. *The Seventy Weeks and the Great Tribulation*. Swengel: Herendeen, 1944.

Morris, Leon. *The Lord from Heaven: A Study of the New Testament Teaching on the Deity and Humanity of Jesus Christ*. Leicester: Inter Varsity Press, 1995.

Ostling, R.N. "Time for a New Temple?" in *Time*. 16 October 1989, pp. 64-65.

Richards, Lawrence O. *Expository Dictionary of Bible Words*. Basingstoke: Marshall Pickering, 1988.

Rignell, L. "A Study of Isaiah 9:2-7" in *Literary Quarterly*. 7 (1995), pp. 31-35.

Rissi, M. "The Rider on the White Horse: A Study of Revelation 6:1-2" in *Interpretation*. 33 (1964), pp. 407-418.

Robertson, Archibald Thomas. *Word Pictures in the New Testament Volume 6*. Nashville: Broadman Press, 1933.

Rogers, C.L. "The Covenant with Abraham and Its Historical Setting" in *Bibliotheca Sacra*. 127 (1970), p. 252.

Rushdoony, Rousas J. *Thy Kingdom Come: Studies in Daniel and Revelation*. Fairfax: Thoburn, 1978.

Ryrie, Charles. *The Basis of Premillennial Faith*. Dubuque: ECS Ministries, 2005.

Saucy, Robert L. *A Case for Progressive Dispensationalism*. Grand Rapids: Zondervan Publishing House, 1993.

Schaff, Philip. *The Evangelical Protestant Creeds, with Translations Volume III*. Grand Rapids: Baker Book House, 1966.

Schweitzer, Albert. *The Quest of the Historical Jesus*. London: A & A Black, 1954.

Shedd, William G.T. *Dogmatic Theology Volume 3*. Grand Rapids: Zondervan Publishing House, 1971.

Swindoll, Charles R. & Zuck, Roy B. ed., *Understanding Christian Theology*. Nashville: Thomas Nelson Publishers, 2003.

Thayer, Joseph H. tr., *Greek-English Lexicon of the New Testament*. Grand Rapids: Zondervan Publishing House, 1962.

Thiessen, Henry C. *Lectures in Systematic Theology*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1979.

Thomas, Robert L. "John's Apocalyptic Outline" in *Bibliotheca Sacre*. 137 (1980), pp. 338-339.

Unger, Merril F. "The Temple Vision of Ezekiel" in *Bibliotheca*. 106 (1948), pp. 57-64.

Unger, Merril F. *Great Neglected Bible Prophecies*. Chicago: Scripture Press Book Division, 1955.

Vine, W.E. Unger, Merrill F. White, William. ed., *Vine's Expository Dictionary of Biblical Words*. Nashville: Thomas Nelson Publishers, 1985

Walvoord, John F. *Israel in Prophecy*. Grand Rapids: Zondervan Publishing House, 1962.

Walvoord, John F. & Zuck, Roy B. *The Bible Knowledge Commentary - New Testament*. Wheaton: Victor Books, 1983.

Walvoord, John F. *The Rapture Question*. Findlay: Dunham, 1957.

Walvoord, John F. *The Nations in Prophecy*. Grand Rapids: Zondervan Publishing House, 1967.

Weinfeld, M. "The Covenant of Grant in the Old Testament and in the Ancient Near East" in *Journal of the American Oriental Society*. 90 (1970).

Wong, D.K.K. "The First Horseman of Revelation 6" in *Bibliotheca Sacra*. 153 (1966), pp. 212-226.



## வேதஆராய்ச்சியாளர்
# எம்.எஸ்.வசந்தகுமாரின்
## புத்தகங்கள் கிடைக்குமிடங்கள்

### இங்கிலாந்து

தமிழ் வேதாகம ஆராய்ச்சி மையம்
8, Broadlands Avenue, Enfield, EN3 5AH, UK
தொலைபேசி 07814252077

### இந்தியா

தமிழ் வேதாகம ஆராய்ச்சி மையம்
7/170, ஐயனார் தெரு, குண்டூர் பர்மா காலனி,
ஏர்போர்ட் வீதி, திருச்சி, 620-007, தமிழ்நாடு.
தொலைபேசி வீ.ராஜ்கமல் 9942193486.

சத்திய வசனம், 9, வெங்கட்ராமன் தெரு,
சின்ன சொக்கிக்குளம் மதுரை 625 002, தமிழ்நாடு.
தொலைபேசி: பழனிவேல் ஆபிரகாம் 04522532316

### இலங்கை

சத்திய வசன புத்தக நிலையம்
120, தர்மபால மாவத்தை கொழும்பு 7
தொலைபேசி: 0114691500

இலங்கை வேதாகமக் கல்லூரி,
தபால் பெட்டி இல: 2, பேராதனை
தொலைபேசி: 08123891461.

சத்திய வார்த்தை புத்தக நிலையம்
362, நீதிமன்ற வீதி திருகோணமலை
தொலைபேசி: 0773101405, 0262224845

275/80

வேத ஆராய்ச்சியாளர்
எம்.எஸ்.வசந்தகுமாரின்
தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கு
IBC Tamil TV அல்லது Tamil Bible
Research Centre அல்லது NLM TV
என்னும் YouTube சேனல்களுக்கு
அல்லது
www.tamilbibleresearchcentre.org
என்னும் இணையதளத்திற்குச்
செல்லவும்.

# இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை

**THE SECOND COMING OF JESUS CHRIST**
**M.S. VASANTHAKUMAR**

இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகையைப்பற்றிய வேதாகமப் போதனை

இயேசுகிறிஸ்து மறுபடியும் வருவாரா?
உபத்திரவ காலத்தில் சபை உலகத்தில் இருக்குமா?
உபத்திரவ காலத்திற்கும் முன்பே சபை உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்படுமா?
அந்திகிறிஸ்துவின் ஆளுகை எப்படிப்பட்டதாய் இருக்கும்?
இயேசுகிறிஸ்து இவ்வுலகத்தை ஆயிரம் வருஷங்கள் ஆளுகை செய்வாரா?
இயேசுகிறிஸ்துவின் ஆயிர வருஷ அரசாட்சி எப்படிப்பட்டதாய் இருக்கும்?

**வேத ஆராய்ச்சியாளர் டாக்டர். எம். எஸ். வசந்தகுமார்**



1984 ஆம் ஆண்டில் ஊழியத்தை ஆரம்பித்து இலங்கை வேதாகமக் கல்லூரியில் விரிவுரையாளராகவும், சத்திய வசனம் சஞ்சிகையின் ஆசிரியராகவும் பணியாற்றிய வேத ஆராய்ச்சியாளர் டாக்டர். எம்.எஸ். வசந்தகுமார் அவர்கள், தமிழ் மொழியில் பல புத்தகங்களை எழுதியுள்ளதோடு, 2005 ஆம் ஆண்டிலிருந்து லண்டன் நகரிலுள்ள இம்மானுவேல் கிறிஸ்தவ ஐக்கிய சபையில் இறைபணியாற்றுவதோடு, வேத ஆராய்ச்சி நூல்களை எழுதிவருவதுடன், பல நாடுகளில் வேதாகமத்தைப் போதிக்கும் ஊழியத்திலும் ஈடுபட்டுள்ளார்.

**தமிழ் வேதாகம ஆராய்ச்சி மையம்**

8, Broadlands Avenue, Enfield, London, EN3 5AH.
Phone 0044 (0) 7814252077 Email: msvtbrc@googlemail.com
Web: tamilbibleresearchcentre.org | Church Web: tamilchurchuk.com

**7/170, Ayyanar Street, Gundur Burma Colony,**
**Airport Via, Tiruchirappalli - 620 007,**
**Tamil Nadu, South India**
Phone: 9942193486, Email: vrkbibleteach@yahoo.com